மனோஜ்குமார்

ஆதி வாசிகள்

பிலோ இருதயநாத்

பானு பதிப்பகம்

ஏ3/96, கைலாசபுரம்,
திருச்சிராப்பள்ளி - 620 014.
தொலைபேசி : 98422 36935

ஆதி வாசிகள்

பிலோ இருதயநாத்

வெளியீடு:

பானு பதிப்பகம்

ஏ3/96, கைலாசபுரம்,
திருச்சிராப்பள்ளி - 620 014.
தொலைபேசி : 98422 36935

AATHI VAASIGAL

Pilo Iruthayanath

First Edition	:	2007
No. of Pages	:	160
Size of Book	:	1/8 Demy
Paper used for text	:	18.6 Maplitho
Printing Type	:	12 Points
Published by	:	**Banu Pathippakam** No. A3/96, Kailasa Puram, Trichirappalli - 620 014. Phone: 98422 36935
Typeset at	:	Amaravathi Graphics, Chennai - 33.
Printed at	:	Udhayam Offset, Chennai - 600 002.
Price	:	**Rs. 100/-**

காடர்களைக் கண்ட விதம்!

இங்கே உள்ள ஒவ்வொரு கட்டுரையிலும், அந்த அந்த இடத்து மக்களின் முன்னாள் பழக்க வழக்கங்களும் இன்றைப் பழக்க வழக்கங்களும் சூழ்நிலைகளும் அப்படியே எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன. இவை வெறும் கதைகள் அல்ல; சமுதாய வளர்ச்சியையும் சரித்திரத்தையும் காலங்களை யும் நிர்ணயித்துக் கதைபோல் எழுதிய வரலாறுகளே.

சில பகுதிகளை வாசிக்கும்பொழுது வெறும் சரித்திர ஏடுகளைப் படிப்பது போன்ற உணர்ச்சிகூட ஏற்படலாம். ஆனால், மனித சமுதாய வளர்ச்சியை நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு இந்த சரித்திரக் குறிப்புக்களும் இன்றியமையாதவையே.

சரித்திரத்தைப் படிப்பதால் ஏற்படும் சலிப்பும், தத்துவத்தைக் கற்பதால் ஏற்படும் சிரமமும் இந்த நூலில் தோன்றமாட்டா. ஆயினும், இது சர்பத் அல்ல; சிலருக்கு மருந்துதான். ஆனால், அவர்களுக்கும் மருந்தின் கைப்போ காரமோ தெரியாது.

தும்பிகள் பூக்கள் தோறும் பறந்து சென்று தேனைச் சேகரித்து வைத்தால் அதைக் காடர்கள் கொண்டுவந்து எடுத்துக் குடித்து மகிழ்வதுபோல, நானும் பல காடுகளுக்குச் சென்று, பசி, தாகம் பாராமலும், காட்டுவாசிகளோடு கூழ் குடித்தும், அதனால் சில சமயம் எனக்கு நேர்ந்த வயிற்றுளைச் சலையும் பொருட்படுத்தாமல், ஊர் ஊராகச் சுற்றிக் பலவகை மக்களிடமிருந்து பல அதிசயப் பழக்க வழக்கங்களும் சிறந்த குணங்களும் பற்றிய விவரங்களாகிய தேனைச் சேகரித்துக் கொண்டுவந்து நிரைத்த பல கட்டுரைகள்தான் சேகரித்துக் கொண்டு வந்து நிரைத்த பல கட்டுரைகள்தான் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் (தமிழ்நாடு உள்படத்தான்) ஆதிகாலம் முதல் முறையான, தொடர்ச்சியான வரலாறு எழுதும் பழக்க இருந்ததில்லை. ஆங்கிலேயர் களின் தொடர்பு ஏற்பட்ட பின்னரே, இந்த வகையில் வரலாறு எழுதும் பழக்கம் தோன்றியது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். நமது நாட்டை அரசாண்ட ஆங்கிலேயர், நம் நாட்டு மக்களின் வரலாற்றை அறிய விருப்பினார்கள். அதற்குத் தக்க சரித்திர நூல்கள் இல்லாததை அறிந்தார்கள். சரித்திரச் செய்திகளைச் சிறிதளவு கொண்டுள்ள கல் வெட்டுக்களும் செப்பேடுகளும் பல இடங்களில் சிதறிக் கிடந்தன. அவைகளை தாரமாகக் கொண்டு அந்தக் காலத்தில் ஆங்கில அரசாங்கத்தாரும் அநேக பாதிரிமார்களும், நவீன நாகரிகம் அறியாமல் மலையில் மறைந்து வாழும் சில மக்களின் சமூகத்தை ஆராய்ந்ததுடன், அவர்களிடம் சீர்திருத்தங்களும் செய்யப்

புகுந்தார்கள். அங்ஙனம் புகுந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த, புரிந்த, தாங்கள் அறிந்து கொண்ட சில செய்திகளை விவரித்து ஓர் அளவுக்கு ஆங்கிலத்தில் எழுதினார்கள். ஆனால் அவர்கள் எழுதியவை சங்க நால நூல்களையும் காடர்களின் மொழிகளையும் தெரிந்துகொண்டு எழுதியவை அல்ல. ஆயினும், அவ்வளவாவது செய்தார்களே என்று நாம் நன்றி பாராட்டத்தான் வேண்டும்.

தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் வெளியாகும் பத்திரிகைகளில் இந்திய மக்களைப் பற்றியும் ஆதிவாசி களைப் பற்றியும் ஒரு கட்டுரைகூட வெளிவராததைக் கண்டு ஒரு சமயம் வருந்தினேன். ஆங்கிலத்தில் இரண்டொரு புத்தகங்கள் வெளி வந்தனவே தவிர, காட்டில் வாழும் ஆதிவாசிகளில் சில பிரிவினர்களைக், 'குற்றப் பரம்பரை யினர். (Griminal Tribles)' என்று வேறே பெயரிட்டுப் பிரித்து வைத்திருந்தார்கள். 1947-ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்தபின் இந்தச் சட்டம் ரத்தாகி விட்டது. இந்த நிலையில் நான் இந்தியக் காடு சுற்றி, அவற்றில் வாழும் ஆதிவாசிகளிடமும் பிறமக்களிடமும் பழகி, காட்டை விட்டு வீட்டை அடைந்ததும் அவர்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து, சிலப்பதிகாரம், மணிமேகலை (குரவைக் கூத்து) முல்லைப்பாட்டு, கலிங்கத்து பரணி, தொல்காப்பியம், எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய பழங்காலத்து நூல்களையும், பாரதியாரின் கவிதைகளையும், பிற நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, பல குறிப்புக்களையும் துருவித் துருவிச் சான்றுகள் கண்டு, அந்த அந்த ஆதிவாசிகளின் கருத்துக்களுக்கு மாறுபடாமல், என் வாழ்க்கைப் போராட்டத்தினிடையே கிடைத்த சிறிதளவு நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு எழுதிய கட்டுரைகளே இங்கே இடம் பெற்றிருக்கின்றன. அன்று இந்தியாவில் ஆதிவாசிகளிடமும் பழகி, அப்படி அறிந்த செய்திகளைக் கட்டுரையாக எழுத யாரும் முன் வராததைக் கண்டு கலங்கினேன். ஆனால், அன்று ஆங்கிலப் பத்திரிகைகளே அதிகம்: இந்திய மொழிப் பத்திரிகைகள் மிகமிகக் குறைவு. இந்தியாவில் பேசப்படும் எந்த மொழிப் பத்திரிகை யிலும் இதைப் போன்ற கட்டுரைகள் முதன் முதலில் வெளிவந்ததில்லை. ஆங்கிலத்தில் மட்டுமே இரண்டொன்று வந்தன.

பழைய வரலாறுகள் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டும் விளக்குப் போன்றவை. எனவே, நம் நாட்டைப் பற்றிய பலதுறை வரலாறுகளும் மிகமிக முக்கியமானவை என்பதை உணர்ந்தேன். ஆதிவாசி களைப் பற்றிய வரலாறும் அவைகளில் ஒன்றாகும்.

நான் மானிட இயல் துறை பயின்றவன் அல்ல. பட்டம் பெற்றவனும் அல்ல. ஆயினும் பழைய காட்டு மக்களைப் பற்றியும் ஆதிவாசிகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் சுமார் இருபதாண்டுகளுக்கு முன்னமே, சில காடுகளுக்குச் செல்லத் தொடங்கினேன். பஸ் வசதியும் வண்டி வசதியும் இன்று இருப்பதுபோல், அன்று இல்லை. நடந்தும், வைக்கோல் ஏற்றிச் செல்லும் லாரியிலும் மாட்டு வண்டியிலும் ஏறிச்சென்றேன். அந்தப் பழக்கம் இன்னும் என்னை விட்டு முற்றும் அகலவில்லை. இன்றும் சமயம் கிடைத்தால் லாரியில் நான் பிரயாணம் செய்வது உண்டு. ஆனால் மாலை மூன்று மணிக்கு மேல் லாரியில் பிரணாயம் செய்ய மாட்டேன்.

காடுகளுக்குச் சென்று நான் கண்டுவந்த செய்திகளை விவரித்து கட்டுரைகளாக எழுதிப் பல புகைப்படங்களுடன் பல பத்திரிகைகளுக்கு உதவிப் பிரசுரிக்க வேண்டிக் கொண்டேன். ஆதிவாசிகளிடம் பழகி நான் அடைந்த பலன்கள் ஏட்டில் அடங்க மாட்டா. 'மானிட இயலைப் பற்றித் துருவித் துருவி ஆராய்ந்து ஆயிரம் பக்கங்கள்கூட எழுதலாமே' என்று சொல்லுவார்கள். ஆனால் பட்டம் பெறவேண்டிய வர்கள் மட்டுமே அப்படி விரிவாக எழுதிய விவரங்களைப் படிக்கவேண்டும்.

ஓரளவுக்கு எல்லாப் பொதுமக்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற கருத்துடன் ஒவ்வோர் இனத்தாரைப் பற்றியும் சரித்திரச் சான்றுகள் கொடுத்து, எம் மதத்தினருக்கும் எவ்வினத்தினருக்கும் மனம் புண்படாத வண்ணம் நடு நிலையோடு எழுத விரும்பினேன். எனவே, இயன்ற வரையில் ஒவ்வோர் இடத்துக்கும் பிரயாணம் செய்து ஒரு முறைக்கு ஒன்பது முறை அந்த மக்களைக் கேட்டுச் சந்தேகங்களை நீக்கிக்கொண்டு பின்னரே, சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதிய கட்டுரைகள் இவை.

சில இடங்களில் ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறேன். அதைக் கூறியது கூறல் என்னும் குற்றமாகக் கொள்ளாது, தனித்தனியாகக் காடர்களைப் பற்றித் தெளிவுபடுத்தும் பொருட்டுக் கூறியதாகக் கொள்ள வேண்டுகிறேன்.

வரலாறுகளை ஆராய்ந்து எழுதுவது, கதைகளை எழுதுவதுபோல் எளிதான காரியமல்ல. ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து சான்றுகள் காட்டி எழுத வேண்டும். அன்றியும், 'எம்மதமும் சம்மதமே' என்ற பொதுநோக்குடன், எம்மதத்தினருக் கும் மனம் புண்டாமல், காய்தல் உவத்தல் இல்லாமல், நடுநின்று செம்பொருள் காணவேண்டும்.

'காலத்தையும் பணத்தையும் உழைப்பையும் செலவிட்டு ஏன் நாம் இந்தக் கலையைப் பழகிக் கொண்டோம். நாம் ஏன் காடுகளைச் சுற்றி இந்த விவரங்களைச் சேகரித்துப் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும்' என்று சில சமயங்களில் நான் வருந்தியதும் உண்டு. ஆனால், ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியாகும் பல பத்திரிகைகளின் பேரன்பு மிக்க ஆசிரியர்கள் காட்டிய அன்பும் செய்த உதவியுமே என் உயிரையும் பொருட் படுத்தாமல், காற்றும் நுழையாத காடுகளுக்குள் நுழையத் தைரியத்தையும் விடா முயற்சியையும் எனக்கு அளித்தன.

சில நேரங்களில், 'உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளிகளுக்குத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவிலேயே இட மில்லை' என்று நினைத்துப் பல நாட்கள் நகரத்துக்கே வராமல் காட்டில் காடர்களுடன் உழைத்துச் சாப்பிட்டதும் உண்டு.

என்னுடைய பல கட்டுரைகளை வாசிக்கத் தொடங்கிய நண்பர்களும், வாசகர்களும், என்னை, 'வடநாட்டினன்' என்றும், 'பாதிரி' என்றும் ''சிங்கள தேசத்து வேதம் போதிக்கும் குரு'' என்றும் நினைத்தாகக் கூறினார்கள். பலர் என்னைப் பற்றி, 'ஆணா? பொண்ணா' என்று கூடப் பத்திரிகைகளின் மூலம் எழுதிக் கேட்டார்கள். சிலர் நேரில், 'உங்களை நான் பெண் என்றே நினைத்திருந்தேன்!'' என்றும் கூறினார்கள்.

பல வாசகர்கள் என்னைக் காணவேண்டிய பொருள் உதவி செய்து தங்கள் ஊருக்கு வரும்படி அழைத்தார்கள். பல பள்ளிக்கூடங்களிலும்

கல்லூரி களிலும் பத்திரிகாலயங் களிலும் சங்கங்களிலும் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நானும் காட்டில் காடர்கள் உபயோகப்படுத்தும் எல்லாப் பொருள்களையும் குதிரை வண்டியில் கொண்டு போய்க் கட்டி, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும்படி பல சொற் பொழிவுகள் ஆற்றினேன்.

'இந்தியாவில் ஓர் இந்தியன் இப்படியெல்லாம் காட்டிலே திரிந்து செய்திகளைச் சேகரித்திருக்க முடியுமா!' என்பது பலருடைய சந்தேகம். காடர்கள் கொடுத்த பல காட்டுப் பொருள்களை நேரிலே காட்டி, இந்தச் சந்தேகததை நிவர்த்தி செய்தேன்.

உலகத்தில் மொழி இல்லையானால் நாகரிகம் என்பதே தோன்றியிருக்காது. ஆகையால் அறிய வேண்டிய அவர்களுடைய மொழிகளைப் பற்றியும் ஏதோ சிறிது தெரிந்து கொண்டேன். அவர்களுடைய உணவுகளை உண்டு பழகிக் கொண்டேன். காட்டில் வாழும் மக்களிடையே வழங்கும் மொழிகள் எப்படித் தேன்றின என்று அறிய நானும் அவற்றுள் சில மொழிகளைக் கற்றும் எழுதியும் வந்துள்ளேன். அவைகளில் சில மொழிகளை மட்டும் பல பத்திரிகை களில் பல கட்டுரைகளில் சேர்த்திருக்கிறேன்.

இவற்றிலுள்ள கட்டுரைகள் ஒரே சமயத்தில், ஒரே காலத்தில். ஒரே இடத்தில் உட்கார்ந்து எழுதியவை அல்ல, பல காடுகளிலும் பல மலை களிலும் பல ஊர்களிலும் இருந்துகொண்டு பல பத்திரிகைகளுக்கும் பல இதழ்களுக் கும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

'ஆதிவாசிகளின் வரலாறு' என்ற பெயருடன் வெளிவரும் இந்த நூல், கல்லூரி இளங்கலை வகுப்பு (பி.ஏ.) மாணவர்க்கும், முதுகலை வகுப்பு (எம்.ஏ.) மாணவர்கசும் துணைப்பாட நூல் ஆவதற்கு உரியது. அதே சமயத்தில் இந்தியாவின் ஆதிக்குடிகளின் வரலாற்றை அறிய விரும்பும் பொதுமக்கள் விரும்பிப் படிப்பதற்கும் தகுதி உடையது. இந்த நூல் நம் இந்திய தேசத்தில் வாழும் இரு நூற்றெழுபது லட்சம் ஆதிவாசிகளின் வரலாற்றிலே ஒரு சிறு பகுதியையா வது அறிவதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். என்னால் முடிந்தவரையில் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும்படி எழுதியிருக்கிறேன்.

மேலும், மேலும் எனக்கு ஆராய்ச்சித் துறையில் ஊக்கமளித்த உயர்திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களுக்கும், 'கதையையும், சாதாரணக் கட்டுரை களையும் எழுத வேண்டாம். ஆதிவாசிகளைப் பற்றியும் காடர்களைப் பற்றியும், காட்டில் சேகரித்த செய்திகளைப் பற்றியும் எழுதுங்கள். அத்துறையில் இன்று வரையில் வேறு யாரும் ஈடுபடவில்லை; உம்மைப்போல் ஈடுபடவும் இயலாது. சங்ககால நூல்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர் களுடைய வாழ்க்கை வரலாறுகளைப் பற்றி ஆராய்ந்து எழுதுவது நலம். 'ஆதிவாசி', 'காடர்கள்,' 'காடு' என்றால், அடுத்துப் 'பிலோ இருதயநாத்' என்ற நினைப்பே பலருக்கு இன்று உண்டாகிறது. இந்தப் பேற்றை நீர் இழந்துவிட வேண்டாம்'' என்று நான் தடம் மாறாமல் இருக்க எனக்கு எச்சரிக்கையும் யோசனையும் கூறிய உயர்திரு. சாண்டில்யன் அவர்களுக்கும், நான் சோர்வடையும்போதெல்லாம் எனக்கு ஊக்கமூட்டி உற்சாகமளித்த நண்பர் உயர் திரு. ஆர். விவேகாநந்தம்

அவர்களுக்கும், மற்றுமுள்ள எல்லா நண்பர்களுக்கும், இந்நூல் வெளியிட எனக்கு ஊக்கமளித்த கலைமகள் காரியாலயத்தாருக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன். இனிமேலும் எனக்கு ஊக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்நூலில் குற்றங் குறைகள் இருப்பின், என்னை மன்னிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

இங்ஙனம்,
பிலோ இருதயநாத்.

26, பெரிய பள்ளித்தெரு,
மயிலாப்பூர், சென்னை-28,
1962.

1

பொருளடக்கம்

கொண்ட தொரா

கஞ்சம், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களிலும் ஐதபாராத்திலும் கொண்ட தொராக்களைக் நாம் காணலாம். பொதுவாகக் கிராமப்புறங்களிலும், மலையடிவராங்களிலுமே இவர்கள் வசிக்கிறார்கள். நகரங்களுக்கு அருகிலும் சிலர் வாழ்வர். விசாகப்பட்டணத்தில் ஓர் இடத்தில் மட்டிலும் சுமார் முன்னூறு குடும்பங்கள் வசிக்கின்றன. ரங்கூனிலும் சிலர் உள்ளனராம்.

சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், பொதுவாக, 'பஞ்சபாண்டவ பரம்பரை' என்றும் இவர்கள் தங்களைக் கூறிக்கொள்கிறார்கள், சின்ன கொண்டலு, பெத்த கொண்டலு என இவர்களில் இரு பிரிவுகள் இருக்கின்றனர்.

காட்டுக் கொம்புகளைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்து அவற்றின்மேல் கோரைப்புல்லைக் கட்டுக் கட்டாக வைத்து, பார்வைக்கு அழகான குடிசைகளை இவர்கள் கட்டிக் கொண்டிருக் கின்றனர். குடிசைகளுக்கு இடையில் நிறைய இடமும் விடப்பட்டிருக் கிறது. சிலரது குடிசைகளில் மூலிகைகள் விற்பனைக்காகப் புட்டிகளும், மூங்கிற் குழாய்களும், கத்தி, கோடரி, ஈட்டி முதலிய இரும்புச் சாமான்களும் இருக்கின்றன. அம்பு, வில், மண்பாண்டங்கள் முதலியவைகளும் உள்ளன. பல மிருகங்களின் வயிற்றுப் பாகத்தைப் பைபோல் தைத்து, அதில் காய்ந்த இறைச்சியை வைத்திருக்கின்றனர். மூங்கில் அம்பால் வேட்டையாடுவார்கள்.

ஆண்கள் கறுத்த மேனியும், தடித்த உதடுகளும், முறுக்கிவிட்ட மீசையுமாகக் காணப்படுகிறார்கள். பொதுவாக இவர்களுக்கு நல்ல தேகக்கட்டு, தலையிலோ கறுத்த பரட்டை மயிர். இவர்களில் சிலர்மட்டும் தலையின் உச்சியில் சீக்கியர்களைப் போல் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்களுக்கும் கறுத்த மேனிதான். நல்ல உயரம். சிலர் தங்கள் கூந்தலைக் கட்டை விரல் அளவுக்குச் சுருட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்களைப் போலவே இவர்களும் நல்ல திடகாத்திரம் உள்ளவர்களாகவும் தைரியசாலிகளாகவும் இருக்கிறார்கள்.

சாதாரணமாக வெண்மையாக துண்டுப்புடைவை மட்டும் அணிந்து, மாறாப்பு வலது கைப்பக்கமாக வரும்படி கட்டுகிறார்கள். ரவிக்கை வகையராவை அணிவது இல்லை. நடனமாடும்போது மட்டும், பெண்கள் வரிவரியான புடைவையை அணிந்துகொள்ளு கின்றனர். பெண்களும் ஆண்களும் காதில் பெரிய வட்ட வளையம் அணிகிறார்கள். கையிலும் கைமுண்டாவிலும் பெரிய காப்புகளையும், காலில், 'கண்ணகிச்சிலம்பு' என்ற சற்றுப் பெரிய வளையத்தையும் பெண்கள் அணிந்துள்ளனர்.

சில ஆண்கள் கோவணம் கட்டிக்கொண்டு, நீண்ட கமிசோ போர்வையோ போர்த்துக்கொண்டு, தலையில் பெரிய தலைப் பாகையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் சிவப்பு வர்ணத் துணியை இடுப்பில் சுற்றிக்கொண்டு, அதில் நீண்ட கத்தியைச் செருகி வைத்திருக்கின்றனர். ஆண்களின் கொண்டையின் மத்தியில் ஒரு வளையம் வைத்திருக்கின்றனர். ஆண்களும் பெண்களும் கிராமங்களுக்குச் செல்லும்போது மட்டும் கிராமவாசிகளைப்போல் உடை அணிந்துகொள்கின்றனர்.

ஊர் மக்கள் இவர்களை, 'தொரா, தொரா' என்றே கூப்பிடு கின்றனர். சிலர், 'அண்ணா, ஐயா' என்றும், அழைக் கின்றனர். சிலர் கூலி வேலைகளும் சிலர் விவசாயமும் செய்கின்றனர். ஆண்கள் வேட்டையாடுதல், தேனெடுத்தல், பயிர்த்தொழில் செய்தல் முதலிய தொழில்களைச் செய்து வருகிறார்கள். வேட்டையாடிய மிருகத்தின் இறைச்சியை, மங்கையர்கள் பாறையின்மேல் காயவைத்து, 'உப்புக்கண்டம்' போட்டுத் தோல்பைகளில் நிரப்பி வைத்துக்கொள் வார்கள். சிலர் காட்டு மூலிகைகளைச் சேகரித்து விற்பனை செய்வதும் உண்டு.

இவர்களில் ஒரு தொழிலும் செய்யத் தெரியாதவர்கள் முன்பெல்லாம் அக்கம்பக்கத்தில் இருக்கும் கிராமங்களிலோ பட்டணங்களிலோ கூட்டம் கூட்டமாகத் திருடி வந்தார்கள். புத்தகம் எழுத விரும்பிய மேல்நாட்டார்கள் இவர்களைக் காணச் சென்றால், அவர்களைத் தப்பிதமாக நினைத்துக் கொலையும் செய்து வந்தார்கள். இக்காரணங்களால் *1896*-இல் இவர்கள், 'திருட்டுத் தொழில் புரியும் ஆதிவாசிகள்' என்ற கூட்டத்தில் சேர்க்கப் பட்டார்கள். ஆண்கள் திருடும் பொருள்களைப் பெண்கள் விற்பனை செய்வது உண்டு. ஆனால் இத்தீய பழக்கங்களெல்லாம் மறைந்து, பல்லாண்டுகளும் ஆகிவிட்டன; இன்று இவர்கள் உண்மையுள்ளவர்களாகவும் பக்தியுள்ளவர்களாகவும் மாறி வருவதாலும், இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டதாலும் இச்சட்டமே மாறிவிட்டது. ஆயினும் அன்றுபோலவே இன்றும் மதுபானம் செய்வதில் பிரியமுள்ளவர்கள் இவர்கள்.

இவர்களுக்கு வியாதி வந்தால் ஆஸ்பத்திரிக்குப் போவ தில்லை. காட்டு மூலிகைகளையே சாப்பிடுவார்கள். பிரசவமும் தாங்களே பார்த்துக்கொள்கின்றனர். ஆகையால் தங்கள் பெண்கள் ருதுவானதும் உடனே பிரசவ முறையைக் கற்றுக் கொடுத்து விடுகிறார்கள்.

பெண்கள் ருதுவாவதற்கு முன்னும் பின்னும் திருமணம் செய்வது உண்டு. இன்று இவர்களிடம் காதல் திருமணமும் நடைபெறுகிறதாம். அப்படிக் காதல் திருமணமாக நடந்தாலும், முறைப்படி காதல் செய்து முறைப்படி திருமணமும் நடத்து வார்களாம். சின்ன கொண்டலு ஒருவன், தாய் மாமனின் மகளைத் திருமணம் செய்துகொள்ள நேர்ந்தால் அவளோடு அவனுடைய அக்காள் மகளையும் மணக்கவேண்டும்.

திருமணம் நிச்சயமானவுடனே, பெண் வீட்டார் நான்கு ரூபாய்களோடு பிள்ளை வீட்டுக்கு வந்து, அதையும், திருமணப் புடைவையையும் நடுவீட்டில் வைக்கவேண்டும். இதை, 'வ்வாளிச்' சடங்கு என்பர். பின் நட்சத்திரங்களைப் பார்த்து, 'சுக்கு முஸ்டி' என்று சொல்லி முகூர்த்த நாளைக் குறித்து, அன்று தாயகம் அழைத்துச் சென்ற

பெண்ணை, மறுபடியும் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வருவார்கள். அங்கே தம்பதிகளை மஞ்சள் நீராடச்செய்து, மாமனார்கள் அளித்த கோடி வஸ்திரங்களை அணிவித்தபின் மஞ்சள்நூல் காப்புக் கட்டுவார்கள். இதன்பின் இருவரும் தீட்டுப் படவோ, கிராம எல்லையைத் தாண்டவோ கூடாது. அன்றோ அல்லது மறுநாளோ மாப்பிள்ளை, பெரியவர்களின் சொற்படி தாலி கட்டுவான். இதன் பெயர், 'சாதா மணம்' என்பது. மறுநாள் தம்பதியின் காப்புக்கட்டை நீக்கி விடுவர். பிறகு இருவரும் மஞ்சள் நீரில் குளிப்பார்கள்.

பெண் கேட்க முதன் முதலில் பையனின் பெற்றோர்கள் போகும்போது மூன்று பானை மதுபானத்தை எடுத்துச் செல்லும் பழக்கம் இவர்களில் சிலரிடை உள்ளது. பெண் வீட்டார் இக்குறிப்பை அறிந்து, மதுபானத்தை ஏற்றுக்கொள்வதும், மறுப்பதும் உண்டு. மதுபானத்தை ஏற்றுக்கொண்டதும், எல்லோருக்கும் இது சம்மதம் என்று தெரிந்துகொள்ளவேண்டியது. இந்தச் சடங்குக்கு, 'ஜொல்லா டாங்கா' என்று பெயர். பெண் வீட்டார், பிள்ளை வீட்டாருக்கு ஐந்து ரூபாய், 'மொய்ப் பணம்' கொடுக்க வேண்டும். பிள்ளை வீட்டாரோ, பெண் வீட்டாருக்குப் பன்றி இறைச்சியுடன் மூன்று விருந்துகள் நடத்த வேண்டும். (இவர்களிடை பன்றி இறைச்சி விருந்து தான் விசேஷ விருந்து என்று கருதப்படுகிறது). திருமணத்திற்கென்று வந்த மணப் பெண், வீட்டில் நடத்தும் இந்த விருந்தில், பழகினவளைப்போலவும், பொறுப்பு ஏற்றுக் கொண்டவளைப் போலவும், கலந்து கொண்டு வேலை செய்வாள். இவ்விருந்துக்குப் பின் ருதுவான பெண்ணாக இருந்தால் பிள்ளை வீட்டிலேயே அவள் தங்குவாள். இன்றேல் தாயகம் சென்றுவிடுவாள். ருதுவான பின் மறுபடியும் பன்றி இறைச்சி விருந்துடன், மாப்பிள்ளை வீட்டில் பெண்ணை விட்டுச் செல்லுவர்.

அண்ணன் இறந்து இளம் விதவையாகிய அண்ணியை மைத்துனன் திருமணம் செய்துகொள்வான். கணவனை விவாக ரத்துச் செய்து கொண்ட பின், பெண்கள் மறுவிவாகம் செய்து கொள்ளலாம். பல்லாண்டுகளுக்குப் பின் மறுவிவாகம் நடந்தாலும் கூடப் புதுக்கணவன், முதல் கணவனுக்கு ரூ. 24 கிராம அபராதம் கொடுக்க வேண்டும்.

சின்ன கொண்டலு, பெத்த கொண்டலு, ஆகிய இரு பிரிவுகளுக்கும் இடையே பெண் கொடுக்கல், வாங்கல் நடக்கத் தடையேதும் இல்லை. கூடுமான வரையில் ஒரே காட்டில் இருக்கும் குடும்பத்தாருக்குள்ளேயே இருந்துதான் தம்பதிகளைத் தேர்ந்தெடுப் பார்களாம். காட்டின் செல்வம், வெளிப்போகாமல் தடுக்கும் வழியாம் இது.

திருமணத்தன்று ஆடு, மாடு, மான், புலி, பன்றி ஆகிய வற்றில் எதையாவது தங்கள் குல தெய்வத்துக்குப் பலியிடுக் கிறார்கள். திருமணச் சடங்குகளும் பூஜையும் கிராமத் தலைவனால் நடத்தப்பட்டு, விருந்தும் முடிந்ததும், ஆண்களும், பெண்களும் கூடிக் கைப்பிடித்து வட்டமாக நின்று, நடனமாடுவார்கள். மற்ற விசேஷ நாட்களிலும் ஆண்களும் பெண்களும் கூடி நடனமாவது உண்டு.

பாண்டவர்களை மலையின் சக்தி என்று வணங்குகிறார்கள்; கால் நடைகளைக் காக்கும் தெய்வம், கிராம தேவதை, மக்கள் தெய்வம் என்ற

தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். வைசூரி, காலரா போன்ற கொடிய வியாதிகளையும் தெய்வமென்று வணங்குகிறார்கள். கிராமத்தில் நடைபெறும் மற்றத் திரு விழாக்களிலும் கலந்து கொண்டு உதவி செய்கின்றனர். இவர் களுக்குத் 'தாலு பூலம்மா' தான் குலதெய்வம். விசேஷ நாளான பௌணர்மி தினத்தில், காட்டேரிக்கும், கொண்ட தேவதைக்கும் பூஜை நடக்கும். அன்று ஆண்களும் பெண்களும் தலையில் மாட்டுக்கொம்பைத் தரித்து நடமாடுவார்கள். ஸ்ரீராம நவமியன்று எல்லோரும் சேர்ந்து கூட்டமாகக் கூடிக்கொண்டு, பத்திராசலம் கோவிலுக்குச் செல்கிறார்கள். சிலர் ஒவ்வோராண்டும் பண்டரிபுரத் திற்குச்சென்று, ஸ்ரீ பாண்டுரங்கனையும் தரிசிக்கிறார்கள்.

தொரா, முட்டதர், வர்ணபெட்டா, குலபெட்ராடு' என்று பல பெயர்களால் இவர்கள் தங்கள் தலைவனை அழைக்கின்றனர். இவர்கள் பட்சபாதமின்றி நியாயம் வழங்கவேண்டும். மற்றவர் களைப்போல் தலைவனும் உழைத்தே உண்ணுவதல் வேண்டும். தலைவன் ஏதாவது சொல்ல விரும்பினால், திருச்சங்கை ஊதியோ மேளத்தை அடித்தோ கூட்டம் கூட்டுகிறான். அத்தீர்மானம் மக்களுக்குப் பிடிக்காவிட்டால் ஏழு அல்லது எட்டுப் பெரியவர்கள் உட்கார்ந்து, பஞ்சாயத்துப் பேசி, முடிவு செய்வார்கள்.

இவர்களில் இறந்தவர்களைத் தீக்கு இரையாக்கிய பின் மூன்றாம் நாள் பன்றி இறைச்சி விருந்துடன் மதுபானத்தை அதிகமாகக் குடிப்பார்கள். இதை, 'சின்ன ரோசு' என்று கூறுகிறார்கள்.

இவர்களின் தாய்ப்பாஷை தெலுங்கு. சிலர் ஒரியாவும் பேசுகிறார்கள். இவர் பேசும் தெலுங்கு பாஷை சற்று முரடானதாக இருக்கிறது,

கையில் தம்புராவுடன்
'கொண்டம்மா தேவதா! கொண்டம்ம தேவதா;
முத்து ஜரகடகம், வேணுக ஜரகடம்,
மீகாமு தெலுசுகோ
டிங்கு-டிங்கு-டிங் டிங்கு-டிங்கு-டிங்'

என்று கூவிக்கொண்டு வரும் இவர்களைச் சென்னைத் தெருக்களிலும் பார்க்கலாம். கொண்டைத் தலையுடன் இந்தக் கோலத்துடன் இவர்களைப் பார்க்கும்போது இவர்களைப் பிச்சைக்காரர்கள் என்றே எண்ணிவிடுகிறோம். உண்மையில் இவர்கள் சில மருந்தோ பொருளோ வாங்கச் சென்னைக்கு வந்தவர்கள்தான். ஜோஸ்யம், குறி இவை செ.ல்லிப் பிழைப்பதற்காகவும் இவர்கள் வருகிறார்கள்.

2
ஏனாதியர்

உலகில் இருக்கும் எல்லா மக்களுக்கும் பண்டைக் காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் தென்னிந்தியாவில் இருக்கும் சில புராதனப் பொருள்கள், வட இந்தியாவில் இருக்கும் மலைஜாதிகளிடம் இருக்கின்றன. மேலும், ஒரியா, தெலுங்கு பேசும்படியான மக்களிடம் இருக்கும் பழக்க வழக்கங்களும், பொருள்களும்; செங்கல்பட்டு வில்லியரிடமும், நீலகிரிக் குறும்பர், ஊராளியர், இருளர் இவர்களிடமும் இருப்பதைக் காணும்போது, 'இவைகள் எப்படி இங்கே வந்தன? இவர்களுக்கும், அவர்களுக்கும் எவ்வகையில் தொடர்பு உண்டு?' என்னும் கேள்வி எழுகிறது.

இவ்விதத் தொடர்பைக் கண்டால் சில மேலை நாட்டினர் இயற்றிய நூல்களில் கண்ட செய்திகள் உண்மை என்று தோன்றும்; புல் பூண்டுகளுக்காகவோ மிருகங்களுக்காகவோ தண்ணீரைத் தேடிக்கொண்டோ மக்கள் பல ஆயிரம் மைல்கள் நடந்தோ, குதிரை, யானைகளின் மேல் சவாரி செய்தோ பல இடங்களில் பிரயாணம் செய்தனர். இப்படிப் பல இடங்களில் பரவினர். நாளடைவில் அவர்கள் பழக்கம் பலவிதமாக மாறியது, சுமார் கி.மு. 7000, 8000 ஆண்டுகளுக்குமுன் மக்களிடம் பழகியது நாய். மனிதன் முதலில் பிடித்துத் தின்னப் பழகியது மீனே. இவ்விதம் படிப்படியாக மனிதன் முன்னேற்றமடைந்தான்.

இங்ஙனம் முன்னேற்றமடைந்த மக்களில் சிலர் இன்றும் சிதறி மறைந்து, காடுகளில் வாழ்கின்றனர். இப்படி வாழ்கின்றவர்களின் எண்ணிக்கைகள், இன்று உலகில் பல கோடியாக இருக்கிறது. அதில் இந்தியாவில் சுமார் சில லட்சங்களாவது இருப்பதாக ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர். அந்த லட்சத்தில் ஒருவரே இந்த ஏனாதியர்.

இவர்கள் இன்று வாயில்பட்டி, சித்தூர் மாவட்டம், கர்னூல்: கடப்பை, கூடுர், நெல்லூர், செங்கல்பட்டு, சூளூர்ப்பேட்டை, கஸ்ரா (காசப்ப ரெட்டிப்பாளையம்) வடதென் ஆர்க்காடு, காளாஸ்தி முதலிய இடங்களில் வாழ்ந்தாலும்; அவர்கள் பண்டைக்காலத்தில் பயங்கரமான காடுகளில் மரக்களுடன் கலந்து, மக்களாக வாழ்ந்தார்கள். சில ஆராய்ச்சியாளர்கள் இவர்களையே தமிழகத்தில் வில்லியர், இருளர், என்று அழைப்பதாகக் கூறுகின்றனர், ஏனாதியர்கள் எங்கு வாழ்ந்தாலும் கூட்டமாகவே வாழ்கின்றனர்.

இவர்களுடைய குடிசைகள் மண் சுவர்கள் எழுப்பி, காட்டுக் கொம்புகளாலும், (சில மூங்கில்) ஓலைகளாலும் ஆனாவை; (பனை அல்லது தென்னை சேர்த்து அமைக்கப்பட்டவை). சிலர் சிறு சிறு தகரத் துண்டுகளை ஆணிகளினால், வாரைக் கொம்புகளுடன் சேர்த்து அடித்திருக்கிறார்கள். அதிலேயே சமைக்கும் அறையை, தனியாகத் தடுத்திருக்கின்றனர். இன்னும் சில இடங்களில் இருக்கும் ஏனாதியர் குளிருக்கும் வெயிலுக்கும் தக்கபடி தங்கள் குடிசைகளை

அமைத்துக்கொள்ளுகின்றனர். சாதாரணமாக இவர்கள் குடிசை, ஒரு பெரிய அறையளவுதான் இருக்கிறது.

இவர்கள் தம் வீட்டில் புழங்கும் சாமான்கள் பெரும்பாலும் அலுமினியப் பாண்டங்களும் மட்பாண்டங்களும்தான்.

ஒவ்வொரு குடிசையிலும் மூன்று நான்கு அகலமான உறிகள் தொங்கும். தரையில் இருக்கவேண்டிய கோழிக்குஞ்சுகளின் அவயத்தை உறியில் வைத்திருக்கின்றனர். சாதாரணமாக எல்லாச் சாமான்களும் உறியில் இருக்கின்றன. ஓசையின்றியும் சிந்தனை செய்யாமலும், நினைத்த மாத்திரத்தில், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தங்கள் குடிசைகளை மாற்றும் பழக்கம், முன்பு இவர்களிடம் இருந்ததாம். இப்பழக்கம் இன்றும் முற்றும் மறையவில்லை.

ஆண்கள் நல்ல உயரமாகவும், உடல் கட்டுடையவர் களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தலைமயிர் பரட்டையாக இருக்கிறது. கறுத்த மேனியுடையவர்கள். பண்டையில் இவர்கள் கோவணத்துடன்தான் இருந்தார்களாம். திருமணத்திற்கும் கோவணமேதான். இன்று இவர்கள் சாதாரணமாக நம்மைப்போல் வேஷ்டி அணிந்திருக்கின்றனர். நீலகிரி இருளரும், நெல்லூர், சூளூர்ப்பேட்டை ஏனாதியரும் உருவத்திலும் நிறத்திலும் தோற்றத்திலும் ஒத்திருக்கின்றனர். இவர்களுடைய முகத்திலும் தேகத்திலும் மயிர்கள் வளர்ந்திருக்கின்றன.

ஏனாதி மங்கையர்கள் மானமும் அன்பும் பரந்த முகமலர்ச்சியும் உடையவர்கள், பண்டைக்காலத்தில் தலை மயிரைச் சும்மா ஒதுக்கி விடுவார்களாம். அதற்குப்பின் கொண்டை போட்டுக்கொண்டனர். பண்டைக் காலத்தில் புடைவையைச் சற்றுத் தூக்கியே கட்டி, அதன் முந்தானையை வளைத்துப் போர்த்துக்கொண்டார்கள். ஆனால் தற்காலத்தில் வெகு சிலரே, ஜாக்கட்டு அணிந்து கொள்ளுகின்றனர். இம்மங்கையர்களில் சிலர் புடைவையை மராட்டியரைப்போல் கீழ்ப்பாச்சியாகக் கட்டிக் கொள்ளுகின்றனர். தற்காலத்தில் இவர்கள் திருமணத்திற்கும் கோடித்துணி அணிந்து, சக்திக்குத் தகுந்தாற்போல் வாழ்கின்றனர். ஆண்களும், பெண்களும் நெற்றியில் 'வைஷ்ணவ நாமம்' என்ற நாமம் இடுகிறார்கள்.

இவர்களுக்குள் பொதுவான குடும்பப் பழக்க வழக்கங்கள் சில இருக்கின்றன? 'செல்லா ஏனாதி', 'மிஞ்சி ஏனாதி' என்று இவர்களுள் இரு பிரிவினர்கள் உண்டு. இவர்கள் இயற்கையிலேயே பயந்த சுபாவம் உடையவர்கள். பண்டைக்காலத்தில் நாகரிகமான மக்களைக் கண்டால் ஓடி ஒளிந்துகொள்ளும் சுபாவம் உள்ளவர்கள். ஏனாதியில் ஆண்களும் பெண்களுக்கும் சிறு வயது முதற்கொண்டே நீந்தப் பழக்கி விடுகின்றனர். ஒவ்வொரு பழக்கத்தையும் இவர்கள், ''எங்கள் குலப்பழக்கம் என்று கூறுகின்றனர்! இவர்கள் குடும்பத்தில் 'மொட்டை அடித்தல்' என்று ஒரு சடங்கு உண்டு. இச்சடங்கில் சுமார் (பத்து வயதுக்குக் கீழுள்ளவர்களை) ஒன்றாகச் சேர்த்து மொட்டை அடிக்கும் சடங்கை, மாமன்மார்கள் சேர்ந்து, செய்வார்கள். இதனால் மொத்தத்தில் செலவும் குறையும். இச்சடங்களில் எல்லாத் தாய்மாமன்மார்களும் ஒன்றாகச் சேர்ந்து, ஒவ்வொருவரும், அவரவர்களுடைய பையன் களுடையவோ பெண்களுடையயோ தலை மயிரில் ஒரு கொத்தை, கத்தியால் அறுத்து, பச்சை மரத்தில் கட்டுவான். இந்த மாமன்

சடங்குக்குப் பின் தான், அவர்களை சவரம் செய்து, பிரியம் இருக்கும் பெற்றோர்கள் காதையும் குத்தி முடிப்பார்கள். இச்சடங்கை அவரவர் தம் சக்திக்குத் தகுந்தாற்போல் செய்கின்றனர்.

குடும்பப் பழக்கத்தின்படி பெண்கள் ருதுவானதும் எட்டு நாட்கள் வரையில், அதற்கென்று கட்டிய தனிக்குடிசையில் இருக்கச் செய்து, அக்குடிசையில் சில பச்சிலைகளையும், காட்டு மூலிகை களையும் கட்டிவைப்பார்கள். காரணம்: காற்றுக் கறுப்பு அணுகாமல் இருக்கும் என்பது. தீட்டானவளைத் தீட்டுக்கழியும் வரையில் எதிலும் சேர்ப்பத்தில்லை. வயதுக்கு வந்தவளை ஒன்பதாம் நாள், மஞ்சள் நீரால் குளிக்கச் செய்து, சக்திக்குத் தகுந்தபடியும் அந்த அந்த ஊர்களின் வழக்கப்படியும் சடங்குகள் செய்து பிட்டுச் சுற்றி வீட்டுக்கு அழைக்கின்றனர். ருதுவான பெண் நீராடும்போதே, அவள் உட்கார்ந்திருந்த குடிசையைத் தீமூட்டி, சாம்பலாக்கி, அதைத்தூரத்திலே கொண்டுபோய்க் கொட்டி விடுகின்றனர்.

இவ்விதமான சடங்குகள் செய்யும்போது, அவரவர்களுக்குப் பிரியமான எல்லா இறைச்சிகளையும் சமைப்பார்கள். அன்று விசேஷமாக அரிசி உணவைத்தான் சமைப்பார்கள்.

இவ்வித விசேஷமான நாட்களில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து தப்பட்டை, பறை முதலியவைகளை அடித்து, வட்டமாகக் கூடி நடனமாடுவார்கள். இந்த நாட்களில் வாத்தியம் வாசிக்கும் கோஷ்டியை 'மொலாளு' என்று அழைக்கின்றனர்.

ஆண்கள் வாத்தியம் வாசிக்க மங்கையர்கள் மட்டும் கைகொட்டி நடனமாடுவார்கள்.

விவசாயி, அம்பட்டன், செருப்புத் தைக்கிறவன், மேளம் அடிப்பவன், குருபூசை செய்கிறவன்--யார் யார் எப்பணி செய்தாலும் ஒருவருக்கொருவர் பெண்கொடுக்கல் வாங்கல் உண்டு. பித்தளை நகைகளைத்தான் இவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள்.

ஏனாதிப் பெண்களுக்கு, ருதுவான பின்தான் திருமணம் செய்வார்கள்; எந்த வயதிலும் திருமணம் செய்வார்கள். திருமணத்தின்போது ஆணும் பெண்ணும் மஞ்சள் தோய்த்த கோடித்துணியை அணிவது உண்டு. பால்ய விவாகம் இவர்களிடம் அதிகமாக இன்று இல்லா விட்டாலும் பண்டையில் இருந்தாகக் கூறுகின்றனர்.

பண்டைக் காலத்தில் ஏனாதிப் பெண்கள் தங்களுக்கு வேண்டிய கணவன்மார்களைத் தாங்களே தேர்ந்தெடுப்பார்களாம். அப்படித் தேர்ந்தெடுத்த ஆண்களுடன் பெண்கள் கூடித் தனித்து வாழ்வார்களாம். மலையடி வாரத்தில் இருக்கும் ஏனாதியரில் ஆண்கள், வேட்டையாடிய கொடிய மிருகங்களின் நகங்களையும், பற்களையும் கொணர்ந்து, தங்களிடம் பிரியப்படும்படியான வாலிப மங்கையர்களிடம் கொடுப்பது வழக்கம். அப்படிக் கொடுக்கும் போது ஆணின் வீரத்தைக் கண்டு அவள் உள்ளம் பூரித்து அவற்றைத் தன் கழுத்தில் அணிந்துகொள்ளுவாள். இப்படிப் பல பற்களை அணிந்த பின் இருவரும் காதலால் கட்டுண்டு. ஒன்று சேர்ந்து வாழப் பிரியப்படுவார்களாம்.

இன்னும் சிலர் நன்றாகப் பாடக்கூடியவனாகவும், பலசாலியாகவும், நடனமாடும்போது இடுப்பை நன்றாக வளைத்து ஆடக்கூடியவனாகவும் இருப்பவனைக் கவனித்துத்தேடி வரித்து, அவனுடன் வாழ்கின்றனர். இவர்களின் திருமணத்தில் வயதையும் அழகையும் கவனிப்பதில்லையாம்.

இவர்களுக்குள் இன்றும் திருமணச் சடங்குகளை இப்படித்தான் செய்யவேண்டும் என்ற திட்டங்கள் இல்லை. ஒருவருக்கே இரண்டு மூன்று மனைவியரும் உண்டு. ஆனால் மங்கையர்களோ ஒரே ஆடவனைத்தான் மணக்கவேண்டும். பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் தாம்பூலம் மாற்றித் திருமணத்திற் கென்று ஆணையும் பெண்ணையும் நிச்சயம் செய்தபின் அவர்கள் இருவருக்கும் இரண்டு உலக்கைகள் கொடுத்து நவதானியங்களுள் ஒன்றை உரலில் இட்டுக் குத்தச் சொல்லுவார்கள். சிலர் இச்சடங்கைத் திருமணத்திற்குப் பின்னும் செய்யச் சொல்லு கின்றனர். இதற்கு, 'மாற்று உலக்கை' என்பது பெயர். இதன் கருத்து, வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் இருவருடையதும்' என்பதாம்.

இப்படி உலக்கை போடும்போது, இருவர் சார்பிலும் யார் வெல்வார்கள் என்று பந்தயம் கட்டிக் கொள்வதும் உண்டு. இதில் சாதாரணமாகப் பையன் தான் தோற்றுப் போவானாம்.

கணவன் இறந்தபின் விதவை மறுபடியும் திருமணம் செய்துகொள்ளலாம். விதவைகள் தங்கள் கணவனுக்குச் செய்யவேண்டிய மரணச் சடங்குககள் யாவற்றையும் செய்தபின் மூன்று அமாவாசையோ பௌர்ணமியோ கடந்த பின்னர் அவள் மறுமணம் செய்துகொள்ளலாம். விதவைகளுக்குத் திருமணச் சடங்கு ஒரே விதமாகத்தான் நடைபெறும். திருமணத்திற்காகச் சக்திக்குத் தகுந்தாற் போல் 'செங்காலம்மா'வுக்கு உயிர்ப் பலி கொடுப்பது உண்டு. சாதாரணமாக விதவைகளை, இளம் வாலிபர்கள் தான் மறு விவாகம் செய்கின்றனர். எத்திருமணமாக இருந்தாலும், ஒரு நல்ல நாளில், தங்கள் இல்லத்தில், அவர்களுக்குள்ளாகவே குடும்பத்தில் பெரியவர்களைக் கொண்டு திருமணச் சடங்கை முடிக்கின்றனர். திருமணத்தன்று பிரியம்போல், எந்த உணவு சமைக்கவேண்டியதாக இருந்தாலும் சமைப்பார்கள்.

ஏனாதி மங்கையர்களுக்குத் திருமணமானதும் குடும்பக் கலையாகிய மருத்துவக் கலையைப் பாட்டிமார்கள் தங்கள் பேத்திகளுக்கு கற்பிக்கின்றனர். ஆபத்தான பிரசவமாக இருந்தாலும் சரி, வைத்திய சாலைக்குப் போகாமல் தாங்களே பார்த்து விடுகின்றனர். குழந்தைபிறந்து மூன்று நாட்கள் வரையில் தாய், ஈச்சங் குருத்தை ஆகாரமாகச் சாப்பிடுகிறாள். நான் காம் நாள் முதல் அரிசி உணவு சாப்பிடுகிறாள்.

பிரசவமானதும் குழந்தையின் கர்ப்ப நாடியை மருத்துவச்சி கத்தியால் அறுத்து, வேப்ப இலையை அறைத்து, அறுத்த தொப்புளில் வைத்துக் கட்டி விடுவாள். அறுத்த அக்குழந்தையின் கர்ப்ப நாடியை வேப்ப இலையில் சுற்றிக் குழந்தையின் தலைக்குக் கீழ் ஆறுநாட்கள் வரையில் சிலர் வைக்கிறார்கள். பிரசவமான வளுடைய குடிசையின் வாசற்படியில் ஒரு பையில் சில பச்சிலைகளைப் போட்டு, மந்திரம்

சொல்லி, பேய் பிசாசு உள்ளே வராமல் கட்டி வைக்கின்றனர். இதற்குக் காரணம் கேட்டதற்குத் தாயும் குழந்தையும் தீட்டாக இருப்பதால் இப்படிப் பத்து நாட்கள் கட்டி வைக்கிறார்களாம். பிரசவித்த மங்கை, பத்தாம் நாள், தன் தேகமெல்லாம் கப்ப மஞ்சள் பூசி, சில பச்சிலைகளைத் தேய்த்துக் குளிக்கிறாள். பிறகுதான் அவள் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுகிறாள்.

குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் குழந்தைக்கு ஏணை போடுகின்றனர். வியாதி வந்தால் நாட்டு மருந்தை உபயோகப் படுத்துகிறார்கள். ஏனாதியருக்கு 'யானைக்கால்' என்ற வியாதியே வருவதில்லையாம். அவ்வியாதி கண்டால் உடனே அவர்கள் சில வேர்களைச் சாப்பிடுகிறார்கள்.

ஏனாதியரில், கிராமங்களின் அருகில் இருப்பவர்கள் நம்மைப்போலவே அரிசி உணவை உட்கொள்ளுகின்றனர். மலை அடிவாரத்திலும் காடுகளிலும் இருப்பவர்கள் காட்டில் கிடைக்கும் எல்லா இறைச்சிகளையும்தின்பார்கள். வெள்ளிக்கிழமை மட்டும், பூஜை நாள் என்று எவ்விதமான இறைச்சியையும் சாப்பிடுவ தில்லை. வயல் எலியை இவர்களில் சிலர் மிகவும் பிரியமாகச் சாப்பிடுவார்களாம். ஆறு, குளம், இவைகளின் அருகில் இருக்கும் ஏனாதியர் மீன், நண்டு, இறால் முதலியவைகளைப் பிடித்துச் சாப்பிடுகிறார்கள்.

இவர்கள் கூலிக்கு நன்றாக உழைத்தாலும், பிழைப்பதற்கு வேண்டிய கூலி கிடைப்பதில்லை. மீன் பிடித்தல், கூலிவேலை செய்தல், முதலிய வேலைகளை இவர்கள் செய்கிறார்கள்.

பெண்களில் சிலர் இந்துக்களின் இல்லங்களில் பணிக் பெண்களாக இருப்பதும் உண்டு. உழவுத் தொழிலும் செய்வதுண்டு. மலை அடிவாரத்தில் இருக்கும். ஏனாதியோ, அருகே இருக்கும் காடுகளிலும் மலைகளின் மேலும் சென்று தேன் சேகரிப்பதுண்டு.

எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் சரி; பாறையாக இருந்தாலும் சரி, இவர்கள் ஒரு மூங்கிற் கொம்பின் உதவியால் ஏறித் தேனை எடுத்து விடுவர். பாறையின் அடிவாரத்தில் இருக்கும் தேனை எடுக்கவேண்டியதாக இருந்தால், பாறையின் மேலிருந்து கயிற்றேணியின். (நூலேணியின்) மூலம் இறங்குவார்கள். இப்படி இறங்கும்போது, இறங்கும் கயிற்றேணியின் கயிற்றைப்பிடிக்கப் பாறையின்மேல் அவனுடைய மச்சானையோ மனைவியையோ நிற்க வைப்பார். மற்றவர்களை அப்பணிக்கு விடுவதில்லை. பாறையின்மேல் இருப்பவர்கள், கயிற்றை விட்டால் கயிறேணியில் இறங்கும் ஆளின் உயிர் மாயமாக மறைந்துவிடும்.

இப்படிக் காட்டில் கிடைக்கும் தேன், மூலிகைகள், காட்டுப் பொருள்கள் முதலியவைகளைக் கிராமங்களுக்குக் கொண்டுவந்து விற்பார்கள். கிராமங்களில், வயல்களின் அருகில் இருக்கும் ஏனாதியரோ வயல் நண்டுகளைத் தங்கள் கைகளாலேயே பிடிப்பது உண்டு. இப்பழக்கத்தைத் தங்கள் குழந்தைகளுக்குச் சிறு வயது முதல், தகப்பனார் தன்னுடன் அழைத்துச் சென்று கற்றுக் கொடுப்பார்.

வயல் ஈரமானதாக இருக்கவேண்டும். நண்டுவளைகளைத் தங்கள் கை முட்டியால் பெரியதாகச் செய்து, அவ்வளைக் குள்ளேயே பக்க வாட்டத்தில் நண்டுவளைகள் இருக்கின்றனவா என்று கவனித்து, பிறகு

நண்டுகளில் எத்தனை இருக்கின்றன என்று தெரிந்து கொண்டு, அதில் பெரியதை முதலில் பிடிப்பார்கள். இப்படி உழைத்துப் பாடுபட்டுப் பிடித்துக்கொண்டுவந்து விற்றாலும் அதன் பலன். அவர்கள் பிழைப்பதற்கே போதாமல் இருக்கிறது.

சில இடங்களில் அடவி ஏனாதி என்பவர் சிதறிய குடும்பங் களாகத் தோப்புகளையும் வயல்களையும், பாதுகாத்துக்கொண்டு அங்கேயே குடிசை கட்டி, வாழ்கின்றனர். சிலர் நீலகிரிக் குறும்பரைப்போல் திறமையாகக் குறிசொலலிப் பிழைக்கின்றனர். தங்கள் குலத்தில் இருக்கும் குறி சொல்லும் கெட்டிக்காரனிடம் சீடனாக இருந்து கற்றுக்கொள்ளுகின்றனர். குறி சொல்லும்போது சொல்லும் குறியை நம்புவதற்காகக் காய்ந்த சிவந்த இரும்பைக் கையில் எடுத்துத்தேவதையை வணங்குவார்கள். இப்பழக்கங்கள் இன்று கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து வருகின்றன என்று ஏனாதியரில் பலர் கூறுகின்றனர்.

சிலர் செங்கல்பட்டு வில்லியர்களைப்போல், நாகப்பாம்பு களைப் பிடித்து, தோலுரித்து அவற்றைப் பதம்செய்து விற்பனை செய்கின்றனர். காடுகளிலும் மலைச்சாரலிலும் இருப்பவர்கள், தாங்கள் சாப்பிடக்கூடிய மிருகங்களாக வேட்டையாடி, அவற்றின் இறைச்சியைக் கம்பியிலோ நாரிலோ கோத்துக் காயவைத்து, மாரிகாலத்திற்கென்று பானையில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுகின்றனர். பண்டைக் காலத்தில், இவர்கள் கையில் ஆயுதம் இல்லாததால், மலைகளின்மேல் காத்திருந்து, தங்களுக்கு வேண்டிய மிருகங்கள் மலையடிவாரத்துக்கு வந்ததும், குறி பார்த்துப் பெரிய பாறைகளை வரும் மிருகங்களின்மேல் உருட்டுவார்கள். பாறையால் அடிபட்ட மிருகங்கள், விழுந்ததும், கூட்டமாக ஓடிச்சென்று அவற்றைப் பிடித்து, அதன் இறைச்சியைப் பங்கிட்டுக்கொள்ளுவார்கள்.

இங்ஙனம் சுதந்திரமாகவும் கபடற்றவர்களாகவும் வாழ்ந்துவந்த இவர்களின் காடுகள், இன்று காட்டு இலாக்காவின் மேற்பார்வையில் வந்துவிட்டன. வாழ வழியறியா இம்மக்கள், இந்த இலாகா அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து மரங்களையும், காட்டுப் பொருள்களையும் அவர்களிடம் வாங்கியும் கூலிக்கு வேலையில் அமர்ந்தும் பிழைக்கிறார்கள். காட்டில் வாழ்ந்த இம்மக்களுக்குப் பிழைக்கவும் உழைக்கவும் வழியில்லாததாலும், உழைத்தாலும் கூலி வயிற்றுக்குப் போதாக் குறையாலும், இவர்கள் கிராமங்களில் கூலிவேலைக்கும், ஆடுமாடு மேய்க்கவும் அமர்த்தப் படுகிறார்கள். புதிய கிராம வாழ்க்கை, சிலருக்குப் புதிய திருட்டுப் பழக்கத்தைத் தூண்டியது. ஆனால் இன்று இவர்களிடத் தில் இருக்கும் உண்மையைக் கண்ட சில முதலாளிகள், தங்கள் தோப்புகளையும் ஆடுமாடுகளையும் இவர்களின் மேற்பார்வையில் விட்டிருக்கிறார்கள். இவர்கள், ‘உண்மையான தொழிலாளிகள்’ என்று இன்று பலரால் பாராட்டப்படுகிறார்கள்.

ஒரு கிராமத்திலோ அவர்கள் இருக்கும் கூட்டத்திலோ சுமார் பத்து அல்லது பதினைந்து பெரியவர்கள் கூடிப் பஞ்சாயத்தாராக இருக்கிறார்கள். தங்கள் குற்றங் குறைகளைப் பஞ்சாயத்துக் கூடித் தீர்த்துவிடுகிறார்கள். ஆனால் கிராமங்களின் அருகில்

இருப்பவர்கள், இவர்களின் கட்டுப்பாடுகளுக்கும் பஞ்சாயத்துக்கும் கீழ்ப்படிவதில்லை. இன்று ஏதாவது குற்றங்கள் செய்தால் கிராமத் தலைவனிடம் போகிறார்கள்.

ஏனாதிப் பிரிவினர் எல்லோரும், 'செஞ்சு தேவதை', 'கொண்டம்மா தேவதா', 'நரசிம்ம சாமி' முதலிய தெய்வங்களை வணங்குகிறார்கள். இத்துடன், 'கன்னியம்மா', 'செஞ்சு தேவிகா', 'சப்த கன்னியா தேவிகள்' முதலிய குல தேவதைகளையும் வணங்குகிறார்கள். 'செஞ்சு நாடகமு' என்பது இவர்களுடைய குடும்ப நாடகம். இந் நாடகத்தைத் தெருக்கூத்தாக ஆடுவதில் இவர்களுக்குப் பெருமை அதிகம்.

ஆண்களும் பெண்களும் கோவிலுக்குள் போகலாம்; தேவதைகளை வணங்கலாம். திருவிழாக்கள் செய்வதற்கோ பூஜைகள் செய்வதற்கோ வெள்ளிக்கிழமைகளைத்தான் விசேஷமான நாட்களாகக் கருதுகிறார்கள்.

சங்கராந்தி, போகி, காணும் பொங்கல், யுகாதி, மாட்டுப் பொங்கல் முதலியவை இவர்களுக்குப் பெரிய விழாக்கள். அன்று பலகாரங்கள் செய்து புத்தாடை அணிந்து, ஐந்து நாள் பொங்கல் என்று கொண்டாடுவார்கள். இவ்வளவும் இருந்தும் பேய், பிசாசு, மந்திரம் சூனியம் முதலியவைகளில் இவர்களுக்கு நம்பிக்கை அதிகம் உண்டு.

ஏனாதியருக்குத் தனிப்பட்டதோர் தாய்ப் மொழி என்பது இல்லை. தமிழகத்தில் வாழும் ஏனாதியர் கொச்சைத் தமிழையும் தெலுங்கு ஜில்லாவில் வாழ்பவர்கள் 'கொச்சைத் தெலுங்கையும்' முகம்மதியர்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழும் மக்கள் 'கொச்சை உருதுவையும்' தங்கள் தாய் மொழிகளாகப் பேசியும், எழுதியும் சூழ்நிலைக்குத் தக்கபடி, தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றியும் வாழ்கின்றனர்.

3

குருவிக்காரர்

குருவிக்காரர் இல்லாத ஊரில்லை. எங்கே சென்றாலும் இவர்களைப் பார்க்கிறோம். 'குருவிக்காரர்', 'நரிக்குறவர்' என்ற பெயர்கள் குருவி பிடிப்பதாலும், நரிபிடிப்பதாலும் இவர்களுக்கு ஏற்பட்ட காரணப் பெயர்கள் என்று மட்டும் தெரிந்து கொள்கிறோமேயன்றி அவர்களுடைய வாழ்க்கை முறையை நாம் ஊன்றிக் கவனிப்பதில்லை. கவனித்தால் பல விசித்திரங்கள், விநோதமான பழக்க வழக்கங்கள் புலப்படும். அவற்றில் ஒன்று; ஆணாயினும் பெண்ணாயினும் கட்டாயம் மணிமாலை அணிய வேண்டும் என்பது; ஒரு சரம் முதல் ஆயிரம் சரம் வரை தரிக்க வேண்டும் என்பது விதியாம்.

இப்படிப் மிகப்பல சம்பிரதாயங்கள். அவற்றில் சிலவற்றை, இங்கே விவரிக்கிறேன்.

இவர்கள் என்றைக்கும் குளிக்கவே மாட்டார்கள். துணிகளையும் துவைக்கமாட்டார்கள். கிழிந்தால் புதிய துணியை அணிந்துகொண்டு பழைய துணியை அப்படியே போட்டு விடுவார்கள்.

பிறந்தது முதல் சாகும்வரையில் இவர்கள் பல் துலக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாகத் தங்கள் பல்லில் ஒருவிதக் கறுப்புப் பொடியை வைத்து நினைத்த நேரத்திலே தேய்த்து கறுப்பாக்கிக் கொள்ளுவார்கள். அப்படிப் பொடி வைத்துச் கறுப்பாக்கும் பழக்கம்கூடத்திருமணத்துக்குப் பின்தானாம்.

இவர்களில் யாருக்காவது வியாதி கண்டால். உடனே தங்கள் குருவைக்கொண்டு குல தேவதைக்கு ஒரு கருஞ் சேவல் பலி கொடுத்தால், வியாதி காற்றாய்ப் பறந்துவிடுமென நம்புகிறார்கள். எனினும் தற்காலத்தில் சிலர் பச்சிலை மருந்துகளை, உபயோகிக் கிறார்கள். அப்படி வியாதி வந்து இறந்துவிட்டால் பிணத்தைச் சூரியன் அஸ்தமிப்பதற்குள் புதைத்துவிட்டு, மற்ற இடங்களுக்குப் போகிறார்கள். புதிய இடத்திற்குப் போனபின் பன்னிரண்டாம் நாள் தேவதைக்குப் பூஜை வைத்து, பால் படைத்துக் கருமாதியும் முடித்துவிடுவார்கள். இறந்தவர்களைப்பற்றி அப்புறம் நினைப்பதே இல்லை.

பௌர்ணமி காலத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து இரவு இரண்டு மணிவரையிலும்கூட விளையடுவார்கள். பெண்கள் ஐந்து கெஜத்திற்குக் குறையாத பலவர்ணப் பாவாடை அணிந்து, ஜாக்கெட்டு போட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்கள் 'கோடாலி முடிச்சு'க் கொண்டை தான் போடுகிறார்கள். எந்தப் பூ கிடைக்கிறதோ அதைத் தலைக்கு வைத்துக் கொள்ளுவார்கள். எவ்வளவு உயர்ந்த நகைகளை அணிந்தாலும் சரி; ஒவ்வொருவர் கழுத்திலும் கறுப்பு நிறக் கீரைமணியைக் கட்டாயம் அணிய வேண்டும்.

ஆண்கள் கோவணமும், கழுத்தில் மணிகளும், தலையில் சிவப்பு மல் தலைப்பாகையும், காலில் ஒரு வெள்ளி வளையமோ அல்லது வெள்ளிச் சங்கிலியோ அணிந்திருப்பார்கள்; சிவப்பு வர்ணத் துணிகளிடம்தான் இவர்களுக்குப் பிரியம்.

நல்ல நாளிலும் திருமணத்தன்றும்கூட இதே மாதிரியான உடை அலங்காரத்துடன்தான் இருப்பார்கள். ஆனால் திருமணத்திற்கென்று தம்பதிகள் புதிய ஆடையைத் தைக்கிறார்கள்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேகத்தில் எங்குமே கத்தி படக்கூடாது. ஆனால், இது தற்காலத்திலே சிலரிடம் இல்லை. குருவிக்காரப் பெண்களும் ருது ஆவதற்கு முன்னும், பின்னும் திருமணம் நடந்ததேறுவது வழக்கம். குறத்திப் பெண் ருதுவானால் அவளைச் சற்றுத் தூரத்திலே ஐந்து முதல் ஏழு நாட்கள் தனிக் குடிசையில் இருக்கும்படி வைத்துப் பிறகு குளித்தபின் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

குருவிக்காரர் தங்கள் திருமணத்திற்கு நெருக்கிய இரத்தக் கலப்புள்ள பெண்களைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். தூரத்திலே தான் பெண் எடுத்துத் திருமணம் செய்வார்கள். மாப்பிள்ளை, பெண் தேடும் விதமே அலாதி. பெண் நடனமாடி, டின் அடிப்பாளா? என்று பார்த்துத்தான் தேர்ந்தெடுப்பார்களாம். திருமணச் செலவு முழுவதும் மாப்பிள்ளை வீட்டாருடையது. பெண்வீட்டார் ரூபாய் இருபது கொடுத்துவிட வேண்டும்.

மேலும் ருதுவான பெண்ணாக இருந்து முதல் திருமணம் செய்கிறவளாக இருந்தால், மாப்பிள்ளை முறை உள்ளவனாக

இருக்கவேண்டும். அதிலும் பெண் நன்றாக நடனமாடிச் சம்பாதிப்பவளாக இருந்தால் மாப்பிள்ளைப் போட்டிக்குக் கேட்கவேண்டியதே இல்லை. அப்படி முறை தவறித் திருமணம் நடந்தால், முறையுள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் முறையல்லாத எதிர்க்கட்சியைப் பாவாடையால் அடித்துவிடுவார்கள். இதில் ஆண்களைவிடப் பெண்களின் சண்டை மிகவும் பயங்கரமாக இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆண்கள் கூடுமான வரையில் அடங்கிப் பார்ப்பார்கள். முடியாமல் போனாலும் அல்லது பல ஆண்களை மணந்தவளாக இருந்து, அவளால் ஆண்களுக்குள் சண்டை வந்தாலும் சரி எல்லோரும் சேர்ந்து கூடிப் பேசி, அவளுடைய தலைமயிரைக் கத்தியால் அறுத்து, தங்கள் கூட்டத்திலிருந்து துரத்திவிடுவார்கள். அறுபட்ட கூந்தலைக் கொண்டவளை மற்ற எந்தக் கூட்டத்தாரும் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். பாவாடையால் அடிபட்டவர் களையும் மற்றக் குருவிக்கார ஜாதிகள் சேர்க்க மாட்டார்கள். 'பாவாடை அடி' அவர்கள் ஜாதியில் பெரிய அவமானம். இந்த வழக்கு, சுமார் மூன்று நான்கு மாதங்கள் இரவு சுமார் முதல் ஜாமம் வரை, பிரதி தினமும் வேறு கூட்டத்தின் தலைவர்களைக் கொண்டு நடக்குமாம்.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. அவன்தான் குரு, வைத்தியன், தலைவன், நீதிபதி, அபராதம் விதிப்பவன், திருமணச் சடங்குகளை நடத்துகிறவன், ஆசிரியன்; பண்டைக் காலத்தில் சேனைத்தலைவனும்கூட. குருவிக்காரத் தலைவனை அவர்கள் குருண்மோட்டோ' என்று அழைக்கின்றனர். ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் தங்கள் தலைவனைத் தேர்ந்தெடுப்பர். கட்சிச் சண்டையில், இரு கட்சிக் கூட்டத்தின் தலைவர்களையும் சேர்க்காமல், வேறு குருவிக்காரக் கூட்டத்தின் ஐந்து தலைவர்களுக்கு ஆகாரம், இடம் முதலிய வசதிகளைக் கொடுத்து, பஞ்சாயத்து நடத்துவார்கள். நியாயப்படி யார், யார் குற்றவாளிகளோ அவர்களை ஒன்றாகக் கூட்டிச் சமாதானப்படுத்திக் குற்றவாளிகளுக்கு மொத்தமாக அபராதம் விதிப்பார்கள். அபராதம் என்பது ஐந்து சேவல். (கூட்டத்திற்குத் தகுந்தபடி) படிக்கணக்கில் அரிசி, காய்கறிகள், ஐந்து சேர் இறைச்சி போன்றன. இவற்றை வாங்கிச் சண்டை நடந்த இடத்திலே இருக்கும் கூட்டத்திற்கு விருந்து நடக்கும். 'நாங்கள் எல்லோரும் சமாதானமாகிவிட்டோம்' என்று அவர்கள் சேர்ந்து கூறியபின், பஞ்சாயத்துத் தலைவர்கள் முதலில் சாப்பிடுவார்கள்.

திருமணத்திற்கு, மாப்பிள்ளை வெள்ளியாலோ பொன்னாலோ 'தாலி' செய்வதில்லை. கறுப்புக் கீரை மணியால் செய்த மூன்று சரத்தை முறுக்கி, பெண்ணின் கழுத்தில் கட்டுவார்கள். ஆனாலும் குருவிக் காரர்கள், வெள்ளி நகை களைத்தான் அதிகமாக அணிந்து கொள்ளு கிறார்கள். தாலி கட்டும்போது பூ, சாம்பிராணி, கர்ப்பூரம், பால் முதலிய வற்றை, மதுரை மீனாட்சிக்கும் பாவட்டைக்காளிக்கும் வைத்துப் பூஜைச் சடங்குகள் முடித்துப் பிறகுதான் தாலி கட்டுவார்கள். குருவிக்காரன் திருமணத்திற்குச் சுமார் முன்னூறு ருபாய் வரையில் செலவாகும்.

திருமணச் சடங்கைச் சிலர் இன்னும் சற்று நாகரிகமாகச் செய்கிறார்கள்: ருதுவாகாத மங்கையர்களை முதலிலிருந்தே முறையான

சில வாலிபர்கள், தங்கள் கூடவே பிச்சை எடுக்கவோ காடை கௌதாரி பிடிக்கவோ அழைத்துச் செல்லுகிறார்கள். அப்படி அழைத்துச் செல்பவள் ருதுவான மங்கையாகவும் இருப்பாள்; இரண்டாந்தாரம் மூன்றாந்தாரமாகவும் இருப்பாள். இப்படி ரஸ்தாக்களிலும் தோப்புகளிலும் பழகியபின் பெண்ணுக்கு மாதப் போக்கு ஏற்பட்டால் அதற்குப்பின் தாய் பிரியப்பட்டவனும் வெளியில் அவளை அனுப்புவதில்லையாம். முதன் முதலில் ருதுவான பெண்களுக்குத் திருமணமாகும்போதுதான் இவ்விதக் கட்டுத்திட்டங்கள் செய் கிறார்கள். பிறகு ஒரு நல்ல நாளைக் குறித்து, ஒரு தனி மைதானத்தில் அவள் விரும்பும் மணமகனுக்கே திருமணம் செய்துகொடுக்கிறார்கள். திருமணம் செவ்வாய் அல்லது சனிக்கிழமைகளில்தான் விசேஷமாக நடைபெறும். வெள்ளியன்று திருமணம் செய்வதில்லை. அந்தநாளைக் கடவுளுக்கென்று வைத்திருக்கிறார்கள்.

திருமணம் நடந்தபிறகு மாப்பிள்ளை வீட்டார் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசி, பருப்பு, விறகு, காய்கறிகள், இறைச்சி, இன்றும் வேண்டிய உணவுப்பொருள்கள் இவைகளை ஒரு புதிய முறத்திலே வைத்து முறைப்படி முதலில் யாரோ, அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கொடுத்ததை அவர்கள் தனித் தனியாகச் சமைத்துக் கடைசியில் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து, புதிய தம்பதிகளைக் கேலி செய்துகொண்டே சாப்பிடுவார்கள்.

மணத்திற்குப் பின் மாப்பிள்ளை இடது காலில் மட்டும் வெள்ளியாலோ இரும்பாலோ கொலுசைப் போல் செய்து அணிந்துகொள்ளுகிறான்.

குருவிக்காரியின் பிரசவத்திற்குக் குருவிக்காரிகளே மருத்துவப் பணியைப் பார்த்துவிடுகிறார்கள். தங்கள் பெண் களுக்குத் திருமணமான தும், மருத்துவத்தை வயதான குருவிக்காரி கற்றுக்கொடுத்துவிடுகிறாள். தற்காலத்தில் சிலர், தங்களால் முடியாத பிரசவமாக இருந்தால் ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு போகிறார்கள்! அப்படி ஆஸ்பத்திரியில் பிரசவமானவள், தன் குழந்தையுடன் மறுபடியும், இவர்கள் கூடாரங்களுக்கு நேராக வரமுடியாது. தங்கள் கூட்டத்தாருக்குச் சிறிது தூரத்திலே குடிசையில் தங்கி, பன்னிரண்டு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். அபராதத்தை யார் கையிலும் கொடுப்பதில்லை. அந்தத் தொகைக்கு அரிசி, பருப்பு, இறைச்சி முதலியவைகளை வாங்கித் தங்கள் கூட்டத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். எல்லோரும் தெய்வத்தின் பெயரைச் சொல்லித் தனித் தனியாகச் சமைத்த சமையலை, கூட்டமாக உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இவ்விதம் அபராதத்திற்குப் பயந்தும் தங்கள் குல தேவதைக்கு இது பிடிக்காது என்ற காரணத்தினாலும் இவர்களில் பலர். ஆபத்தான பிரசவத்தின்போதுகூட ஆஸ்பத்திரிக்குப் போவதில்லை.

குழந்தை பிறந்து, முதல் மூன்று மாதம் அல்லது வளர்பிறை வரையில் பிரசவமானவளை ஒருவரும் தொடமாட்டார்கள். அவளை அருகில் சேர்த்துக்கொள்ளவும் மாட்டார்கள். அவள் தொட்ட பாத்திரம், பொருள் எதுவாக இருந்தாலும் சரி; உடனே தூரத்திலே எறிந்து விடுகிறார்கள். கணவன் சமைத்தோ பிச்சை எடுத்தோ கிடைத்த உணவைத் தூரத்திலே நின்று, பிரசவமான தன் மனைவியின்

பாத்திரத்தில் தூக்கிப் போடவேண்டும். மூன்றாம் சடங்கு செய்து, பிறகுதான் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். குழந்தை பிறந்ததும், முதலில் மண்ணில் போடுவார்களாம். இவர்கள் நாடோடிகளாகவே குழந்தைகளை முதுகிலே போட்டவாறு அலைவதால், இவர்களுக்குத் தொட்டிலின் அவசியம் ஏற்படுவதில்லை.

குருவிக்காரி, தன் கணவனை விரும்பாவிட்டால், தன் கணவன் 'தாலி' என்று கட்டிய மூன்று சரக் கறுப்புக் கீரை மணியையும் அறுத்து எறிந்துவிடுவாள். அப்படி அறுத்து எறிவதுதான் இவர்களுக்கு விவாக ரத்து. கணவன் வேண்டா மென்று மனைவி சென்றால், பெற்ற குழந்தைகள் மட்டும் தகப்பனிடமேதான் இருக்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு இவர்களிடம் உண். இது எல்லா ஆதிவாசிகளிடமும் இருக்கும் ஒரு பழக்கம். குழந்தைகள் தகப்பனிடமே இருப்பதால் குழந்தை களுச்குத் தாய அன்பு இல்லாமல் போய்விடுகிறது.

இவர்கள் ஜாதியில் விதவையே இல்லை. மனைவி பிரியப்பட்டால் கணவன் இருக்கும்போதே, வேறு ஒருவனைத் திருமணம் செய்யலாம். ஆனால் புதிய மாப்பிள்ளை, பழைய மாப்பிள்ளைக்கு அவன் முதல் திருமணத்துக்குக் செய்த செலவு முழுவதையும் கொடுக்க வேண்டும். குருவிக்காரன் இறந்தால் மட்டும் மனைவி குறைந்தது ஆறுமாத காலத்திற்குப்பின், மறுவிவாகம் செய்து கொள்ளலாம். விதவைக்கும் முதல் மணப்பெண்ணுக்கும் திருமணச் சடங்கு ஒன்றேதான்.

வேலைக்குப் போகும்போது ஆண்கள், ஒரு திசையிலும் பெண் கள் ஒரு திசையிலும் சென்றாலும் மாலை சூரியன் அஸ்தமிப்பதற்குள் பெண்கள் தங்கள் கூட்டத்துடன் வந்து சேர்ந்துவிடவேண்டும். அப்படி வராவிட்டால் அவளை அவள் புருஷன் சேர்த்துக்கொள்ளமாட்டான்! பஞ்சாயத்து மூலம்தான் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவர்கள் வழிபடும் தெய்வங்களுள் பாவட்டைக்காளி, ஆட்டுக்கடாச்சாமி, எருமைக்கடாக்காளி, காட்டேறி, முனிமுத்தாயி, கறுப்பாயி முதலியவை முக்கியமானவை. இவர்கள் பெண்தெய்வத் திற்குத்தான் மதிப்பு அதிகம் கொடுக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. எனினும் ஆண்கள் தவிரப் பெண்கள் தெய்வத்தைத் தொடவோ பூஜை செய்யவோ கூடாது. தூரத்திலேயே இருக்கவேண்டும். குருவிக்காரர்களுக்குத் தெய்வத்திருவிழா சித்திரை மாதத்தில் நடக்கும். பிறைக்குப்பின் ஒரு நாளைக் குறிப்பார்கள். அதிக ஜன நடமாட்டம் இல்லாத தோப்புகளில் ஏழு பானைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிப் பொங்கவிடுவார்கள். ஒவ்வொரு பானையிலும் அரிசியும் தண்ணீரும் இருக்கும். மேலே இருக்கும் பானைதான் முதலில் பொங்கி வழிய ஆரம்பிக்கும். பிறகு பொங்கலை அகப்பையாலோ கரண்டியாலோ கிளறிக் கொடுத்தால், அது தேவதைக்குக் கோபத்தை உண்டாக்குமாம். ஆகையால் பொங்கும் பானையில் ஆவேசம் கொண்டவன் தன் கையையே அகப்பையைப் போல் விட்டுக் கிளறிக் கொடுக்கிறான். அவன் கைக்கு ஒன்றும் நேருவதில்லை! பொங்கலுக்குப் பின் இவன் ஓர் எருமைக் கடாவையோ ஆட்டையோ தேவதைக்காகக் கத்தியால் குத்திப் பூரிட்டு அடிக்கும் குருதியை வாயால் பிடித்துக் குடித்து ஆடுவான். இக்காட்சிகளைப் புகைப்படம் பிடிக்க விடமாட்டார்கள்.

இங்ஙனம் பலி, பொங்கல் சடங்குகள் முதலியவை செய்கிறவனை மூன்று மாதங்களுக்கு முன்னமே தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். தேர்ந்தெடுத்தபின், செய்யும் சடங்குகளுக்கு முன் மூன்று மாதங்களும், செய்தபின் மூன்று மாதங்களும், அவன் தன் மனைவியுடன் இருக்கக் கூடாது. அதை அவர்கள் கூறும்போது அச்சத்துடன் கூறுகிறார்கள்.

மற்ற மலை ஜாதிகளைப்போல் இவர்களும் எல்லாச் சடங்குகளையும் பிறைக்குப் பின்தான் செய்யத்தொடங்குகிறார்கள். அதிலும் வளர்பிறையையே இவர்கள் விசேஷமாகப் போற்று கிறார்கள். இக்கூட்டத்தார் ஓர் இடத்தில் இருக்கும்போது, அவ்விடத்திலே குழந்தையோ பெரியவர்களோ இறந்துவிட்டால் உடனே, 'இது பேய்பிடித்த நிலம்' என்று அவ்விடத்தை விட்டுச் சுமார் ஒரு பர்லாங்கு தூரம் போய்விடுவார்கள். இந்தியா முழுவதும் குறுக்கு வழியில் நடந்துபோக, இக்கூட்டத்தாரில் பலருக்கு வழி தெரியும்.

இவர்களை வட இந்தியாவிலும், இலங்கை, பர்மா, சீனா, முதலிய நாடுகளிலும்கூடக் காணலாம். ஆனால் அவ்விடங்களுக்கு எல்லாம் இவர்கள் எப்படிச் செல்கிறார்கள்? இவர்கள் யார்? முதல் முதலில் எங்கே இருந்தனர்? இவர்கள் இந்நாட்டினர்தாமா? அன்றி வேறு நாடுகளிலிருந்து வந்தவர்களா? இக்கேள்விகளுக்கு இன்னமும் தக்க விடைகள் கிடைக்கவில்லை. சரித்திர நிபுணர்களின் கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இன்று குருவிக்காரர்கள் பேசும் மொழிக்கு, இலக்கணமும் இலக்கியமும் இல்லை. பல மொழிகளைக் கலந்தும் சில வார்த்தைகளின் நடு எழுத்தை நீக்கியும் விரோதிகளுக்குத் தெரியாமல் பேசிப் பழகியதே இதற்குக் காரணம். எனினும் சற்றுச் சிந்தித்தால் விளங்காத இந்த மொழியும் விளங்கிவிடும். உதாரணத்திற்குச் சில சொற்களைக் கீழே காணலாம்;

அவர்களை நேரில் கேட்டால் இவற்றைச் சொல்ல மறுத்து விடுவார்கள். காசு கொடுத்தாலும் பூனைக்கு யானை, யானைக்குப் பூனை என்று தவறாகக் கூறுவர்.

தமிழ்	குறவர் மொழி	மற்றப் மொழியில் வருவது
மனைவி	ராண்டு அல்லது அப்பணி	அப்ணி-உர்துவில் என்னுடையது
வண்டி	பண்டி	தெலுங்கு
எஜமான்	அப்பணு கல் டோ	
மதம்	மைனோ	'மஹினா' உர்துவில்
பூனை	பிலாடி	'பில்லி' உர்து
பௌர்ணமி	சந்திர மோ	தமிழ்
சண்டை	லடாய்	உர்து

குருவிக்காரர்களைக் காணாத இடம் இல்லா விட்டாலும் அதிகமாக நெல்லூரிலும், குண்டூரிலும், வேலூரிலும் இன்று நிறையக் காணலாம். நம்மவர்கள் இவர்களை அலட்சியம் செய்வதாலும், குழந்தை அழுதால், 'நரிக்குறவா. 'வா', என்று கூறிக் குழந்தைப் பருவம் முதற்கொண்டே இவர்களை வெறுக்க ஆரம்பிப்பதாலுமே இன்றும் இவர்கள் நாடோடிகளாக இருக்கிறார்கள். மற்ற மலை ஜாதியார்களும் ஆதிவாசிகளும் எவ்வளவோ முன்னுக்கு வந்துள்ளார்கள். ஆனால் குருவிக்காரர்கள் மட்டும் மிகவும் தாழ்ந்த நிலையில் நாடோடிகளாகவே உள்ளனர்.

4

மராட்டியர்

ஒவ்வொரு வம்சத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு பிரிவுக்கும் மற்றொரு பிரிவுக்கும் பழக்க வழக்கங்களில் பல வித்தியாசங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் இவற்றைச் சரியான முறையில் புரிந்து கொள்ளாது போவதால், தவறான அபிப்பிராயங்கள் உண்டாகின்றன.

மராட்டிய வம்சத்தில் சுமார் நான்கு பிரிவுகள் இருக்கின்றன. இந்தியாவில் முதலில் கோவாவில் தோன்றிய இவர்கள் இன்று பல இடங்களில், பல பிரிவுகளாகப் பிரிந்து பல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்: (1) ரஜபுத்ரஜாதி; (2) பாவுஷார க்ஷத்திரிய மகாராஷ்டிர வம்சம்; (3) ரஜபுத்ர ராஜ் கவுண்டு; (4) மராட்டியப் பிராமணர். இப்படி மராட்டியரில் நன்கு தலைப்பிரிவுகள் இருக்கின்றன. அந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் பல கிளைப்பிரிவுகள் உண்டு. அந்த அந்தக் கிளைப் பிரிவுக்கு உள்ளேயே ஒருவருக்கொருவர் பெண் கொடுத்து வாங்கிக் கொள்வார்கள். இவர்கள் எல்லோருமே மராட்டிய மொழி பேசினாலும், தாங்கள் வசிக்கும் இடத்துக்குத் தகுந்தாற்போல் வேறு மொழிகளைப் படிக்கவும் எழுதவும் பழகியிருக்கிறார்கள்.

இப்போது இவர்கள் தஞ்சாவூர், பூனா, பம்பாய், புத்தூர் தாலூகா, குண்டபுர், மங்களூர்த் தாலூகா, நாகபுரி முதலிய பல ஊர்களில் இருக்கிறார்கள். மராட்டியரில் சிலர் சமீபத்தில் நாகபுரிலிருந்து சென்னைக்கு வந்தார்கள். இங்கிருந்து பண்டரிபுரம் போகவும், வழியிலுள்ள ஒவ்வொரு புண்ணிய ஸ்தலத்தையும் கண்டு களிக்கவும் புறப்பட்டார்கள். சென்னையில் இருந்தபோது பெரம்பூருக்கு அடுத்த மைதானத்தில் சுமார் 200 கூடாரங்களில் தங்கி இருந்தார்கள்.

இவர்கள் தங்கள் சொந்த ஊரில் நல்ல ஓட்டு விடுகளிலும், மாடி வீடுகளிலும் குடியிருக்கிறார்கள். ஊரை விட்டுப் புறப்பட்டு, வழியில் வியாபாரம் செய்துகொண்டும், அதிசயப் பிறவிகளான ஆடு மாடுகளைக் காட்டிக் கொண்டும், ஊர் ஊராய்த் திரிந்து, தாங்கள் இன்ன நாளில் சேரவேண்டுமென்று பேசி நிர்ணயித்துக்கொண்ட இடத்தில் எல்லாரும் சேர்ந்துவிடுவார்கள். அங்கே ஒரு மைதானத்தில் கூடாராம் அடித்துக்கொண்டு வசிப்பார்கள்.

ஆண்களும் பெண்களும் நன்றாக வளர்ந்து, தேகக்கட்டுனும், சிவந்த மேனியுடனும் இருக்கிறார்கள். இவர்களுள், சிலர் ராஜலட்சணமும் வீரத்தோற்றமும் வாய்ந்தவர்களாக இருக் கிறார்கள்.

மராட்டிய மங்கையர் புடைவையைக் கீழ்ப்பாய்ச்சிக் கட்டுவதுதான் வம்சப் பழக்கம். புடைவையைக் கீழ்ப்பாய்ச்சிக் கட்டி, இடது பக்கமாக மாறாப்பு அணிந்து, முக்காடும் போட்டுக் கொள்கிறார்கள். முக்காடு போட்டுக்கொள்வது மற்றவர்களுக்கு வணக்கம் செய்வதைப் போலாம். குங்குமத்தை, நெற்றியில் குறுக்கு வாட்டில் இடுகிறார்கள். ஆனால் தற்காலத்தில், திருமணம் ஆனபின் மூன்றாம் நாள் கீழ்ப்பாய்ச்சியைப் பெண்கள் நீக்கிவிட்டு,

சூழ்நிலைக்குத் தக்கவாறு புடைவையை மாற்றிக் கொள்ளு கிறார்கள். சிலர் நாகரிகமான பலவித உடைகளையும் அணிந்து கொள்கிறார்கள். கீழ்ப்பாய்ச்சிக் கட்டும் புடைவையை மராட்டி பாஷையில், 'லங்கோட்டா' என்று கூறுகிறார்கள். பழங்காலத்தில் ஆண்களும் பெண்களும் அழகாகத் தலைமயிரை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஆண்கள் மட்டும் இன்று கிராப்புச் செய்துகொண்டு அதற்கு நடுவே சிறுகுடுமி வைத்துக் கொள் கிறார்கள். மராட்டிய மங்கையர் மட்டும் ஜடையே போட்டுக் கொள்ளுகிறார்கள்.

இவர்கள் பிரசவத்தைத் தங்கள் வீட்டிலேயே பார்த்துக் கொள்ளுகிறார்கள். வெகு சிலரே ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார்கள். குழந்தை பிறந்து ஐந்தாம் அல்லது பன்னிரண்டாம் நாளில் பெயர் வைக்கிறார்கள்.

குழந்தைகளுக்குத் தொட்டில் போடுவதற்குப் பதிலாகத் தூண்வசதி இருக்கும் வீடுகளில், ஒரு தூணுக்கும் மற்றொரு தூணுக்கும் இடையில் புடைவையையோ துப்படியையோ கொண்டு ஏணை (தூளி) கட்டுகிறார்கள். முன்காலத்திலே இரண்டு கவைகளாக நான்கு கொம்புகளைக் கட்டி நிறுத்தி, அந்தக் கவைகளுக்குக் குறுக்கே நீட்டுவாக்கில் மற்றொரு கொம்பைக் கட்டி, அதில் ஏணையைத் தொங்கவிடுவார்களாம். இன்றும் பண்டரிபுரம், பூனா, நாகபுரி முதலிய இடங்களில் இப்படிப்பட்ட ஏணையைத்தான் உபயோகிக்கிறார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏணை போடும்போது ஒரே விதச் சடங்குகள்தான் செய்வார்கள்.

இவர்களில் சிலர் மாமிச உணவும், சிலர் மரக்கறி உணவும் சாப்பிடுகிறார்கள். அரிசிச் சோற்றைவிடக் கோதுமை அல்லது சோள ரொட்டிகளையே அதிகமாகப் புசிக்கிறார்கள். அமாவாசை, கிருத்திகை, சனிக்கிழமை முதலிய சில விசேஷ நாட்களில் இவர்கள் புலால் உணவு அருந்துவதில்லை. முன் காலத்தில் மராட்டியருக் கென்று தனிப்பட்ட ரகமான பொன் நகைகள் இருந்தனவாம். அவற்றுள் ஒவ்வொன்றும் அளவிலும் கனத்திலும் பெரியது. ஆனால் இப்போது அவற்றை மாற்றித் தற்காலத்துக்குத் தகுந்தாற் போல் செய்துகொள்ளுகிறார்கள்.

ஆதியில் இவர்களில் சிலர் போர் வீரர்களாக இருந்தார்கள். பரம்பரையாகத் தையல் வேலை, சாய வேலை, புடைவைகளுக்கு அச்சு அடிக்கும் வேலை, விவசாயம், வேட்டுவத் தொழில், கூலி வேலை முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். தற்காலத்தில் நல்ல கல்வி கற்று இந்தப் பிரிவுகளில் பலர் உத்தியோகங்களும் பார்க்கிறார்கள். இன்றும் இவர்களில் சில மங்கையர், வீட்டில் தங்கள் பரம்பரைப் பழக்க வழக்கப்படி தையல் வேலை செய்கிறார்கள். நாகபுரி, பூனா இங்குள்ள மராட்டியரில் சிலர் 'சாலா மிசிரி', தாதுபுஷ்டி லேகியம் இவற்றைச் செய்து வியாபாரம் செய்தும் அதிசயப் பிறவிகளான ஆடுமாடுகளுக்கு ஆறு கால்கள் என்றும் மூன்று கண்கள் என்றும் கூறி வேடிக்கைகள் காட்டியும், சிலர் 'ரெடி மேடு' துணிகளைச் சந்தைகளுக்கு அனுப்பி விற்றும் தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்கள்.

வியாதி வந்தால் பட்டணங்களில் இருப்பவர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லுகிறார்கள். ஆனால் கிராமவாசிகளும், இன்னும் சில நாடோடி மராட்டி வகுப்பினர்களும், இன்றும் பல பச்சிலைகளைத் தங்கள் குடும்ப மருந்தாக உபயோகப் படுத்துகிறார்கள்.

பெண், பெரியவள் ஆனால் சுமார் பத்து நாட்கள் தனியே இருக்கச் செய்வார்கள். அந்த நாட்களில் தினந்தோறும் குளிக்கச் செய்து ஏழாம் நாள் மட்டும் அவள் தேகமெல்லாம் மஞ்சள் தடவிப் பூ முடித்து, குழவிக்கல்லை அவள் மடியில் வைத்து, பாட்டுப் பாடி, பெண்கள் மட்டும் கூடிச் சடங்குகள் பல செய்து, வீட்டுக்குள் மேளதாளத்துடன் அழைத்துக்கொள்ளுகிறார்கள். இந்தச் சடங்கை அதிகச் செலவிலும் செய்கிறார்கள்; குறைந்த செலவிலும் செய்கிறார்கள். மராட்டிய வம்சத்திலே பெண்ணுக்கு ஐந்து வயதிலும், பையனுக்கு ஒன்பது, பத்து வயதிலும் முன்காலத்தில் திருமணம் நடைபெறுமாம். மணப் பெண்ணை அவள் தகப்பனும், மணமகனை அவன் தகப்பனும் தோளில் தூக்கிக்கொண்டு நடனமாடித் திருமணச் சடங்குகளைச் செய்து முடிப்பார்களாம். ஆனால் தற்காலத்தில் பெரியவளான சில ஆண்டுகளுக்குப் பின்னும் ஜாதகம் பார்த்துத் திருமணம் செய்வது உண்டு. முகூர்த்த நாளன்று அதிகாலையில் பெண்ணை அவள் வீட்டிலும், மாப்பிள்ளையை அவள் வீட்டிலும் மணையில் வைத்து, ஐந்து சுமங்கலிகள் கூடி, பாட்டுப் பாடி எண்ணெய் தேய்த்துத் தண்ணீர் ஊற்ற, வாசலில் மஞ்சள் துணியின்மேல் உட்கார வைப்பார்கள். குளிக்க உட்கார்ந் திருக்கும் மாப்பிள்ளையின் தலைமீது வயிறு படும்படியாகத் தாய் குனிய வேண்டும். தாயின் தலைக்குமேல் கவிழ்ந்து குனிந்து பையனின் தகப்பனார் நிற்க வேண்டும். பிறகு அந்த ஐந்து சுமங்கலிகளும் பாட்டுப் பாடி, தகப்பனின் முதுகில் ஒவ்வொரு வரும் ஒரு செம்பு தண்ணீர் ஊற்றுவார்கள். அந்தத் தண்ணீர் தாயின்மேல் விழுந்து, பிறகு பிள்ளையின்மீது விழும். இப்படிச் சுமங்கலிகள் ஊற்றிய பிறகு, பையன் போய்க் குளித்துவிட்டு வருவான். இதே சடங்கு பெண் வீட்டில் அவளுக்கும் நடைபெறும். பிறகு திருமணத்துக்குப் பெண் மஞ்சள் சேலையைக் கட்டாயமாக அணிய வேண்டும்.

ஆண்கள், திருமணத்தில் சுமார் ஏழு கஜம் நீளமுள்ள அங்கியைக் (கிறிஸ்துவக் குருமார்கள் போல்) கால்வரையில் அணிந்து, இடுப்பில் வாள் செருகிய கச்சை கட்டி, நெற்றிக்கு நேராக வரும்படி பட்டம் பதித்த தலைப்பாகை தரிப்பார்கள். பையன் நெற்றியில் பட்டம் தரித்தபின், தாய் அவனைப் பார்க்கக் கூடாது. முகூர்த்தம் நடந்த பின்பு, புதிய தம்பதிகள் இருவருடைய முகங்களையும் ஒன்றாகக் கண்ணாடியில் பார்த்துவிட்டுப் பிறகே நேரில் மணவறையில் தம்பதிகளை ஆசீர்வதிக்க வேண்டும்.

புரோகிதரைக் கூப்பிட்டு, ஓமம் வளர்த்து, மற்ற இந்துக்களைப் போலவே திருமணச் சடங்குகளைச் செய்வார்கள். திருமணம் பெண்ணின் வீட்டிலேதான் நடைபெறும். இவர் களுடைய திருமணத்துக்குப் பொன்னால் பொட்டுத்தாலி செய்கிறார்கள். அந்தத் தாலியின் வடிவை டீ கோப்பையைப் போல் செய்து, அதையும் அதனுடன் இரண்டு பொன்குண்டுகளையும் சில கறுப்புக் கீரைமணி களையும் மாங்கல்யக் கயிற்றில் கோத்து அணிந்துகொள்ளுகிறார்கள். கோப்பை வடிவத்தில் இருந்தாலும், தாலி சிறியதாகவும் அரைச் சவரன் எடை உள்ளதாகவும் இருக்கிறது.

சில மராட்டியப் பிரிவில் விதவா விவாகமும் உண்டு. சில பிரிவில் இல்லை. விதவைகளின் திருமணத்தை, முதல் திருமணம்போல் வீட்டில் நடத்தாமல் முக்கியமாகப் பெண் வீட்டாரும் பிள்ளை

வீட்டாரும் சேர்ந்து, தூரத்தில் இருக்கும் தேவாலயத்தில், மாலையில் தான் நடத்துவார்கள். விதவை மறுவிவாகம் செய்துகொள்வதாக இருந்தால், தன் புருஷன் வழியைச் சேர்ந்தவர்களையோ நெருங்கிய உறவினர்களையோ மணக்கலாகாது. அந்நியனையே மணக்க வேண்டும்.

சிலர் திருமணத்துக்கு முந்திய நாள், சூழ்நிலைக்குத் தக்கவாறு 'உயிர்ப் பலி' இடுகிறார்கள். அதைப் 'பவானி பூஜை' 'துளுஜாபுர் அம்மன் பூஜை', 'அம்பாபாய் பூஜை' என்றெல்லாம் கூறுகிறார்கள். அன்று ஊர் விருந்தும் நடனமும் உண்டு. ஆனால் திருமணத்தின் போது முதல் மூன்று நாட்கள் வரையில் எந்தவிதமான புலால் உணவும் சேர்ப்பதில்லை. திருமணம், எங்கே யாருக்கு நடந்தாலும் சரி, புரோகிதர் மூலந்தான் சடங்குகள் நடைபெறும்.

இவர்கள் சாதாரணமாக ராமனையும் பாண்டுரங்கனையும் வழிபடுகிறார்கள். சிலர் சிவனை வழிபடுவதும் உண்டு. இவர்களில் ஆண்களும் பெண்களும் தேவாலயத்துக்குள் மூலஸ்தானம் வரையில் சென்று, மூலஸ்தான மூர்த்தியை மாலையிட்டு, ஆலிங்கனம் செய்யலாம். இவர்களே பூஜையும் செய்யலாம்.

இவர்களுக்குப் புண்ணிய ஸ்தலம் பண்டரிபுரந்தான். அதற்குப் பம்பாய்க் குருடுவாடி ரெயில் நிலையத்திலிருந்து இருபத்தெட்டு மைல் கிழக்கு நோக்கிச் செல்லவேண்டும். சென்னையில் இருக்கும் மராட்டியரில் சிலர், திருவல்லிக்கேணித் திருவேட்டீசுவரன் பேட்டையில் இருக்கும் பாண்டுரங்கர் தேவாயலத்துக்கு, ஆனி மாதத்தில் 'நாகசவுதி' அன்று போய், ஒன்றாகக் கூடி ஆண்டுக்கு ஒரு முறை நடனம் ஆடுவார்கள். அந்த நடனத்தில் வாத்தியங்களும் வாசிப்பது உண்டு. பாண்டுரங்கர் பஜனையும் நடைபெறும். இந்தத் தேவாலயத்தை 1926-ஆம் ஆண்டு மராட்டியர் சொந்த முயற்சியால் கட்டியிருக்கிறார்கள். இவர்களின் தலைமைக் குலகுரு துளுஜாபுரில் இருக்கிறார்.

நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, மராட்டியரில் கிராமத்தலைவர் என்று ஒருவர் உண்டு. அவரை 'மெத்தர்' என்று அழைக்கிறார்கள். தலைவனும் குருவும் குடும்பத்திலே வயதானவர்கள் சிலரும் சேர்ந்துதான் ஒரு காரியத்தை முடிவு செய்வார்கள். குடும்பத்திலே தம்பதிகளின் சண்டைகளைச் சமாதானப்படுத்தி அவர்களை விலகாதபடி ஒன்றுசேர்ந்து விடுவார்கள். இன்றும் இந்தப் பழக்கம் சில இடங்களில் உண்டு. பெரியவர்கள் கூடி அனுபவசாலியாகப் பார்த்துத் தலைவனைத் தேர்ந்தெடுப்பார்கள்.

தங்கள் குலத்தில் ஏற்படும் ஜனன மரணங்களை முதலில் தலைவனுக்கே சொல்லுவார்கள். விருந்தில் முதல் தாம்பூலம் தலைவனுக்குத்தான்... திருமணத்தில் தலைவனுக்குக் 'கல்யாணம் கட்டளை'யாகப் பணம் கட்ட வேண்டும். தலைவனுக்குச் சில கடமைகள் உண்டு. அந்தக் கடமைகள் இன்று பட்டணங்களில் இல்லாவிட்டாலும், தலைவனுக்குத் தெரியப்படுத்தியே சில காரியங்களைச் செய்கிறார்கள்.

இன்று இவர்களுடைய பிள்ளைகள் இலவசமாகக் கல்வி கற்க அரசாங்கம் உதவி செய்கிறது.

மராட்டியரில் யாராவது மரித்தால் சிலர் சுடுவார்கள்; சிலர் புதைப்பார்கள். இறந்தவர்களைப் பாடையில் படுக்க வைத்துப் பஜனையுடன் சடங்குகள் செய்துகொண்டு போவார்கள். பத்தாம் நாள், தோட்டங்களில் கருமாதி செய்து, பிறகு வீட்டில் விருந்தும் நடத்துவார்கள். புலால் சாப்பிடுகிறவர்கள் பதினாறாம் நாள் இறைச்சி சேர்த்துக் கொள்ளுவார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான சடங்குதான்.

சிறு பிள்ளைகளாக இருந்தால் சாதாரணமாகச் சடங்குகள் நடைபெறும். ஆனால் மண வயதான பெண்ணுக்கும் ஆணுக்கும் மட்டும் வாழை மரத்தைக் கொண்டு வந்து அந்த மரத்துக்கும் பிணத்துக்கும் திருமணச் சடங்கு நடத்தி மயானத்துக்குக் கொண்டுபோகிறார்கள்.

எல்லாப் பிரிவு மராட்டியரும் சென்னையில் ஒற்றுமையாகச் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது பிராயணத்துக்கு வசதி செய்கிறது; வேறு பல பணிகளையும் நல்ல முறையில் ஆற்றி வருகிறது.

5

பில்லர்கள்

ஒவ்வொரு வம்சத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில், ஒரு பிரிவுக்கும் மற்றொரு பிரிவுக்கும் பழக்கவக்கங்களில் பல வித்தியாசங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் சரியான முறையில் புரிந்துகொள்ளாது போவதால் தவறான அபிப்பிராயங்கள் உண்டா கின்றன!

அதைப்போலவே இன்று இந்தியாவில் சுமார் இரண்டு லட்சம் ஆதிவாசிகள் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. நம் நாட்டு ஆதிவாசிகள் பலரில், 'பில்லர்களும்' ஒருவர்.

விந்திய சாத்பூரா மலைகளின் சாரலில் இம்மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றனர். ஒற்றையடிப் பாதையின் மூலமாக, பாறைகளையும், குன்றுகளையும் கடந்து சென்றால், இவர்களின் குடிசைகளைக் காணலாம். தூரத்திலிருந்து குடிசைகளைக் கண்டால் காண்கிறவர்களுக்குப் பெரிய கிண்ணம் கவிழ்த்தாற்போல் அது தோன்றும்.

குடிசைகள் அவர்களின் பிரியம் போல் சிறியனவாகவும் பெரியனவாகவும் கட்டப்பட்டிருக்கன்றன. குடிசை முழுவதும் கொம்புகளைக் கொண்டே. (சுவர், கூரை, பரண் முதலியவைகள்) கட்டப்படுகின்றன. கூரைக் கொம்புகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால், மாரியில் மழை உள்ளே பிரவேசிப்பதில்லை.

ஆண்கள் பெரிய தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு நீலகிரித் தோதவர்களைப்போல் ஒரு துப்பட்டியைப் போர்வை யாகப் போர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிறுபையன்களும் தலைப் பாகையுடன்தான் இருக்கிறார்கள். ஆண்கள் தம் காதுகளில் வெள்ளி வளையம் அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்களில் சிலர் முகத்தில்

தாடி உண்டு. சிலர் கோவணத்துடனும் இருக்கிறார்கள். சிறுவர்கள் பெரியவர்களைக் கண்டவுடன் வணங்கு வார்கள்.

பெண்கள் லம்பாடிகளைப் போல் பெரிய பாவாடை அணிவர். அப்பாவாடையின் கரைகளில் மணிகள் வைத்துத் தைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு சாண் அளவுக்கு நம் பெண்கள் தட்டைக்காப்பு அணிவதைப்போல் பட்டை பட்டையாக வெள்ளிக் காப்புகளை ஒவ்வொரு கையிலும் சுமார் பதினைந்து அல்லது இருபது வரையில் இவர்கள் அணிந்திருப்பதைப் பார்த்தால் நமக்கே, 'ஐயோ' வென்று இருக்கும்.

இவைகளும் போதாவென்று தலையிலும், நெற்றியிலும், கழுத்திலும் பெரிய பெரிய நகைகளை அணிந்திருக்கிறார்கள். ருதுவாகாத சிறுமிகளும் புடைவை கட்டிக்கொண்டு, முக்காடு போட்டுக்கொள்ளுகின்றனர். நெற்றியில் குங்குமம் இடுகிறார்கள்.

பில்லர்களுக்குள் இரத்தக் கலப்பு இல்லை. ஆண்களும், பெண்களும் தம் தாயின் வம்சத்திலே, மூன்று தலைமுறை வரையில் இரத்தக் கலப்பில் மணம் செய்வதில்லை. பிள்ளை இல்லாமல், சுவீகாரப் பிள்ளை வளர்ப்பவர்களும், இச்சட்டத்தையே கையாளுகிறார்கள். ஒருவன் அக்காளையும், தங்கையையும் திருணம் செய்யலாம்.

இரண்டு தாய்மார்கள் விதவைகளாக இருந்தால், அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் பெண்களைக் கொடுத்து திருமணம் செய்து கொள்ளக்கூட்டாது.

சிலர் பிரியப்பட்டால் தங்கள் குடும்பத்திலேயே விவாகம் செய்கிறார்கள். மணமான அன்றே பெண், மாமனார் இல்லம் செல்லவேண்டும். சாதாரணமாகப் பன்னிரண்டு வயதாக இருக்கையிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்கின்றனர்.

பையனும், பெண்ணும் காதல் புரிந்து பின் கர்ப்பவதியாக இருப்பதை அறிந்த பெற்றோர், அக்காதலர் இருவருக்கும் யாதொரு சிக்கலும் இல்லாமல் திருமணத்தைச் செய்து முடிக்கின்றனர். ஆனால் பெற்றோர்கள் சம்மத்தின் மேல் திருமணம் செய்வதைப்போல் இல்லாமல், சற்றுச் சிக்கனமாக இது நடக்கிறது. சடங்குகளில் பலமனைவியர் இருப்பதைக் கண்டேன். ஆனால் முதல் மனைவி மட்டும் கற்புள்ளவளாகவும், சிறிய பெண்ணாகவும் இருக்கவேண்டும். மூன்றாவது, நான்காவது திருமணத்துக் கெல்லாம் இளம் விதவைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

ஆதிவாசிகளாகிய இவர்களிடம் நல்ல பல நடைமுறைகள் இருப்பதைக் காணும்போது, கற்றவர்களை விடக் கல்லாதவர்களே 'நல்லவர்கள்' என்று கூறியது ஞாபகம் வருகிறது. ஆனால் கணவன் இருக்கும்போது, பல கணவரை மணம் செய்யும் பழக்கம் இப்பெண்களிடம் இல்லை.

மாப்பிள்ளையின் நண்பர்களும், உறவினர்களில் சிலரும் சேர்ந்து பெண்ணின் கிராமத்திற்குச் சென்று, அவளுடைய குணாதிசயங்களைக் கண்டு வருவார்கள். பிறகு பெண் பிடித்ததும் பெற்றோர்கள் முடிவு செய்யச் செல்வார்கள்.

நிச்சயம் முடிந்ததும், முதலில் மத்தியஸ்தர்களாக இருந்து, திருமணம் முடித்தவர்களுக்கு தலைக்கு ஒரு ரூபாய் வீதம் மாப்பிள்ளை

வீட்டார் கொடுக்கவேண்டும். இச்சடங்குக்கு அவர்கள் மொழியில் 'பாஞ்சிகாட்' என்றும், நிச்சயத்திற்கு, 'சாகை' என்றும் பெயர். பெண் பார்க்கவும், பெண் வீட்டுக்குச் செல்லவும் ஞாயிற்றுக் கிழமைகள்தான் விசேஷமான நாட்கள் என்று கருதப்படுகின்றன.

திருமண விஷயங்கள் பேசும்போது, இரு சம்பந்திகளுக்குள் மதுபானத்தை மாற்றிக்கொள்ளுகின்றனர். சம்பந்திகள் பேசும் போது, 'தார்வி'யை அருகில் வைத்தே பேசுகின்றனர்; (தார்வி - கிராமத் தலைவன்) நிச்சயம் முடிந்ததும் கொடுப்பார்கள். இதை அவர்கள் மொழியில், 'க்கீஸ்' என்பர். பிறகு நாளைக் குறித்ததும் வெள்ளித் தாலியோ மூக்குத்தியோ பொடுப்பார்கள். இதற்கு மத்தியில் பெண் வெளியில் வரக்கூடாது, திருமணத்தன்று வேஷ்டியும், தலைப்பாகையும் அணிந்து கொள்ளுவான் மாப்பிள்ளை. திருமணச்சடங்கு, மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும்ட நடைபெறம்.

பணப் புழக்கத்துக்குத் தகுந்தாற்போல் பந்தல் போட்டு, அதில் பெண்ணை உட்கார வைத்து பெண்ணின் சகோதரி, தட்டில் ஒரு மோதிரத்தை வைப்பாள். இந்தச் சடங்கை அவர்கள் மொழியில் 'சதா சடங்கு' என்பர். தம்பதிகள் பந்தலில் இருக்கும்போது பெண்ணுக்கும் பையனுக்கும் எட்டணா வெள்ளிக்காசு கொடுக்கப்படும். பிறகு ஊர்வலம் வரும்போது இன்னாரின்னார், இவ்வளவு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று ஒரு நிபந்தனை உண்டு.

எல்லா வெகுமதிகளையும் பெற்றதும், பணமும், ஆடு, மாடு, கோழி, இவற்றையும் சக்திக்குத் தகுந்தாற்போல் கொடுப்பார்கள். எல்லாவற்றையும் கிராம எல்லைவரையில் கொண்டு போய், பெண்ணை வழிகூட்டி அனுப்பும்போது எல்லையின்மேல் நின்று, 'எங்கள் கிராமப்பெண் தப்பு நடந்தை நடந்தால், உடனே எங்களிடம் கூறவேண்டும். அதற்காக நீ அவளைக் கொலை செய்தால் எங்கள் ஊர் மக்கள் உன்மேல் வஞ்சம் வைத்துக் கொள்ளுவார்கள்' என்று மாப்பிள்ளையைத் திட்டப்படுத்தி அனுப்புவார்கள்.

விதவைகளுக்குத் தம் கணவனின் இரத்தக் கலப்புள்ள சகோதரரைத் திருமணம் செய்யக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாடு உண்டு. வித்வா விகாவம் இரவில்தான் நடைபெறும். விதவா விவாகம் செய்யும் பெண், புதிய கணவன் இல்லத்தின் வாசற்படியையும் இரவில்தான் மிதிக்க வேண்டும்.

'இச்சடங்குகளை இரவில் செய்யக் காரணம் என்ன?' என்றதற்கு, 'பகலில் இவைகள் நடைபெற்றால், எங்கள் ஊரில் கொடிய பஞ்சம் உண்டாகும்' என்று பதில் கூறினார்கள். விதவை களின் தகப்பனாருக்கு இத்திருமணத்தின்போது ஒரு செலவும் இல்லையாம். விதவைகளுக்கு மூக்குத்தி இல்லை.

மனைவி வேண்டாமென்று விவாக ரத்துச் செய்யும்போது இரு கிராமத்து மக்களும் ஒன்று சேர்ந்து முடிவு செய்வார்கள். பின்பு கணவன், 'இன்று முதல் என் மனைவி. என் சகோதரி' என்று சொல்லிவிடுவான். இதைப் பஞ்சாயத்துக்காரரும் ஆமோதிப் பார்கள். விவாகரத்துச்

செய்யப்பட்டவள் மறுபடியும் ஒரு பிறைக்குப் பின், மறு விவாகம் செய்துகொள்ளலாம். அங்ஙனம் செய்யும்போது, விவாக ரத்துச் செய்த முதல் கணவனுக்குப் பணம் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை.

இவர்கள் எந்தக் காரியம் செய்தாலும் சகுனம் பார்த்தே தொடங்குகிறார்கள்.

இவர்கள் இந்துக்களைப்போல் பல திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள். விஷ்ணுவின் வம்சம் என்று தங்களை எண்ணுகின்றனர். இராமசந்திரன், பகீரதன், ஹனுமான், சூரியன் முதலியவைகளை வழிபடுகிறார்கள். சூரியனுக்குத் தேங்காயும் வெண்ணெயும் படைக்கின்றனர். இத்துடன் கிராம தேவதை, காட்டுத் தேவதை, முதலிய தெய்வங்களையும் பால், பழம், தேங்காய் முதலியவற்றைப் படைத்து வணங்குகிறார்கள்.

மகமாரி, காலரா முதலிய வியாதிகள் இவர்களை அணுகினால் உடனே அவற்றையும் இவர்கள் தெய்வங்கள் என்று வழிபடுகிறார்கள். சற்றுக் குணமானதும், காட்டு மூலிகைகளைச் சாப்பிட்டு முற்றும் குணம் பெறுகிறார்கள். தெய்வ வழிபாடுகளுக் கென்று 'தார்வி' என்ற தலைவர்கள் பணிவிடை செய்கிறார்கள்.

குழந்தைப் பேறுகாலத்தில் இவர்கள் ஆஸ்பத்திரிக்கு செல்வதே இல்லை. இவர்கள் குல மருத்துவச்சியே பிரசவம் பார்த்துவிடுகிறாள். குழந்தை பிறந்த எட்டாம் நாள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கோதுமைப் பொங்கலிட்டு, குழந்தைக்கு நாமகரணம் செய்து, மற்றச் சடங்குகளை முடிப்பார்கள்.

வண்டிகள் இல்லாத பழங்காலத்தில் துப்பாக்கி சுட்டோ மேளமடித்தோ தங்கள் கிராமத்தில் நடைபெறும் சுகதுக்கச் செய்திகளை, மற்றக் கிராமங்களுக்குத் தெரியப்படுத்தி வந்தார்களாம். மயானச்சடங்கின்போது, இறந்தது ஆணாக இருந்தால், தலை சீவி வெள்ளைத்துணியைப் போர்த்துவார்கள். பெண்களாக இருந்தால், மாங்கல்யத்திற்கு மஞ்சள் தடவி, தலைவாரி உயிருள்ளவளைப் போல் அலங்கரித்து, பூ முடித்து, பெண்கள் கூடிச் சில சடங்குகள் செய்து மயானத்திற்குக் கொண்டுபோவார்கள்.

குற்றம் செய்தவர்களைப் பஞ்சாயத்துக்கு அழைத்த உடனே அவர்களுக்குப் பெரிய பயம் உண்டாகிறது. பில்லர்கள் சாதாரண மாகப் பயந்த சுபாவம் உடையவர்கள். அந்நியரைக் கண்டால் சந்தேகப்படக்கூடியவர்கள். கிராமத்தில் வியாதி கண்டால், அந்தக் கிராமத்தையே காலி செய்துவிடுவார்கள். ஆனால் சத்தியம் தவறாதவர்கள்.

சிலர் கிழங்குகள், பழங்கள், தானியங்கள் இவற்றையே உண்பர். வேறு சிலர் ஆடு, மாடு, எருமை, மான், முதலியவற்றையும் உண்பார்கள்.

6

வில்லியர்

வில்லியர்கள் எங்கிருந்து எப்பொழுது தென்னிந்தியாவில் தோன்றினார்கள் என்பதற்குப் போதுமான சரித்திரச் சான்றுகள் இல்லை. பல இடங்களில் இவர்கள் பரவியிருக்கின்ற போதிலும் குறிப்பாகச் சித்தூர் செங்கற்பட்டு தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, நெல்லூர், குண்டூர், கம்பாக்கம் மலை முதலிய இடங்களிலேயே பெருவாரியாக வசிக்கின்றனர். சில இடங்களில் வில்லி, பூசாரி, காட்டுக்காரி என்றெல்லாம் வழங்கப்படும் இவர்கள் இருளர், வேதன், மலாயன் முதலியவர்களைப் போல் தமிழ் பேசும் வகுப்பினரே.

நாடோடி ஆதிவாசிகளாகிய இவர்கள் எவ்விடத்தில் பணியாற்ற அழைக்கப்படுகின்றனரோ அங்கே மாந்தோப்புகளில் குடிசை கட்டி வாழ்கின்றனர். இக்குடிசைகள் பனை ஓலைகளினால் நீளவாட்டத்திலும் கூடாரம்போல் முக்கோண வடிவமாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆயினும் பெரும்பாலும் அக்குடிசை களுக்கு வெளியிலும் மரத்தடியிலும்தான் இவர்கள் வசிக்க விரும்புகின்றனர்.

ஆண்களும் பெண்களும் முரடான பரட்டைத் தலைமயிரை உடையவர்கள். நல்ல தேகக் கட்டுடன் இருந்தாலும், கறுத்த மேனியை உடையவர்கள், சிலருக்குக் கீழ் உதடுகள் பெரிதாக இருக்கின்றன. பெரும்பாலும் ஆண்கள் கோவணந்தான் அணிந் திருக்கின்றனர். பெண்களில் பெரும்பாலோனர் கிழிந்த புடைவைத் துண்டுகளை மட்டும் இணைத்து அணிந்திருக்கின்றனர்.

ஆண்களும் பெண்களும் நீண்ட கூந்தலை வளர்த்துக் கோடாரி முடிச்சுப் போடுகிறார்கள். கொண்டையில் இஷ்டப்பட்ட பூக்களை வைத்துக்கொள்கின்றனர்.

குழந்தைகளை இவர்கள் தோளின்மேல் உட்கார வைத்துக் கொண்டு, ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்கு நடந்தே செல்கின்றனர். மங்கையர், பிரசவத்திற்கு வைத்தியசாலைக்குப் போவதில்லை. அவர்கள் குல மருத்துவச்சியே பிரவசத்தைப் பார்த்துவிடுகிறாள். குழந்தை பிறந்து, பண வசதி ஏற்படும்போது தான் தங்கள் குழந்தைகளுக்கு நாமகரணம் செய்கின்றனர். தொட்டில் போடுவது வழக்கம் இல்லாவிட்டாலும், துணி ஏணையை உபயோகப்படுத்துகிறார்கள். ஆண்களுக்குக் கூலி வேலைகள் தவிர மற்ற வேலைகள் கிடைப்பதில்லை. தோட்டங்களைக் காவல் காப்பதும், நண்டு பிடிப்பதும் பெரிய பச்சைத் தவளைகளைப் பிடித்து, கல்லூரிகள் போன்றவற்றுக்கு விற்பதும் இவர்களுடைய வழக்கமான தொழில்களில் சில. வலை வைத்து முயல் பிடிப்பதிலும் வல்லவர்கள் இவர்கள். வில்லிப் பெண்டிரும் கூலிவேலை செய்கிறார்கள். பெரிய மனிதர் வீடுகளிலும், வேலை செய்கின்றனர். பல பெண்கள் காட்டிலும், மலைகளின் மேலும் விறகுகளைப் பொறுக்கி, விற்பனை செய்கின்றனர். சில பெண்கள் எலி, நண்டு, பாம்பு முதலியவை களைப் பிடித்து விற்பனை செய்கின்றனர். சாதாரணமாக வெள்ளி நகைகளைத்தான் இவர்கள் அதிகமாக அணிகின்றனர்.

நரி, பாம்பு, காக்கை, பருந்து, மாடு இவைகளைத் தவிர மற்ற எல்லாப் பிராணிகளையும் உண்பார்கள் வில்லியார். விசேஷ தினங்களில் ஆண்களும் பெண்களும் கூடி வாத்தியங்கள் வாசித்து, இன்பமாக நடனமாடுவார்கள். முன்பெல்லாம் இவர்களுக்கு வியாதி வந்தால் கன்னியம்மனைப் பூஜை செய்து, உடுக்கடித்து வர வழைத்து அம்மனின் சொற்படி மூலிகைகளை மருந்து செய்து சாப்பிடுவார்களாம். அப்போது ஒரு மரத்திலிருந்து மற்றோர் மரத்துக்குக் குடிபோவார்களாம். தங்கள் சாமான்களையும் அந்த மரத்தின் கிளைகளில் செருகி வைப்பார்களாம். இப்போதும்கூட இவர்களில் ஐந்து சதவிகிதம் பேர்தான் ஆஸ்பத்திரிக்குச் செல்கின்றனர்.

வில்லிப் பெண்கள் ருதுவானால் பதினொரு நாள் வரையில் தனிக் கடிசையில் வசிக்கச் செய்து, பிறகு செல்வ நிலைக்குத் தகுந்தாற்போல் பிட்டுச் சுற்றி, ஏறச் குறைய நம்மைப் போலவே சடங்குகள் செய்து. சேர்த்துக்கொள்ளுகிறார்கள். சிலர் ருதுவான பின்னும், சிலர் முன்னும் திருமணம் செய்கிறார்கள். ருதுவான பெண் தங்கியிருந்த குடிசையைச் சடங்குகள் முடிந்தபின் எரித்துவிடுகிறார்கள்.

திருமணத்திற்கு மாப்பிள்ளை, தன் பெற்றோர்களுடன் பெண்ணில்லம் செல்லவேண்டும். பிள்ளை வீட்டார், பெண் வீட்டாருக்கு மூன்று வராகன் கொடுக்கவேண்டும். பெண்ணைக் கேட்டு முடிவு செய்தபின், எல்லோருக்கும் பிள்ளை வீட்டில்தான் திருமண விருந்து நடைபெறும். வில்லியர்களிலேயே ஒரு பெரியவரை நியமித்துத் திருமணச் சடங்கை முடித்து விடுகின்றனர். திருமணம் நடைபெறும் போது, இவர்களுக்குள்ளேயே சிலர் வாத்தியங்கள் வாசிப்பதுண்டு. இவர்களில் சிலருக்குத் தாலியே இல்லை. சிலர் மட்டும் கீரைமணியைத் தாலியாக அணிந்திருக் கின்றனர். சிலர் வெள்ளிப் பொட்டுத் தாலி அணிந்திருக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டார்தான் தாலி செய்யவேண்டும். ஒரே ஆண் பல மனைவியரைக் காப்பாற்றும் சக்தி இருந்தால் பலரை மணக்கலாம். ஆனால் பெண்கள் ஒரே ஆணைத்தான் திருமணம் செய்ய வேண்டும். கணவன் வேண்டாமென்றால் பஞ்சாயத்து மூலம் விவாகரத்துச் செய்து, அவள் மறுடியயும் மறுவிவாகம். செய்யலாம் இதைப்போல் பெண்கள் ஏழுதடவை மறு விவாகம் - மரத்தடியிலோ அல்லது குடிசையிலோ செய்யலாம். வில்லிப் பெண்களைக் கலப்பு விவாகத்திற்கும் கொடுப்பதுண்டு. பெண்களுக்குச் சகல சுதந்திரமும் கொடுக்கிறார்கள்.

ஆண்களுக்கு எப்படிப் பெண்கள் வேண்டுமோ அப்படித் தேர்ந்தெடுக்கின்றனர்.

விவாகரத்துச் செய்துகொண்டு தம்பதிகள் பிரியும்போது, அவர்கள் பெற்ற குழந்தைகள், பஞ்சாயத்தார்கள் எப்படித் தீர்மானிக்கின்றனரோ அப்படி, தாயுடனோ தகப்பனாரிடமோ இருக்கும்.

தெய்வ வழிபாட்டில் இவர்கள் மிகவும் ஈடுபாடு உள்ளவர்கள். பலவிதமான தெய்வங்களை வணங்குகிறார்கள். மூட நம்பிக்கைகள் பல உண்டு. ஆடிமாதத்தில் கன்னியம்மனுக்கு விமரிசையாகப் பூஜை போடுகிறார்கள். அன்று இவர்களில் சிலர் கூழ் வார்ப்பதுண்டு. இத்துடன் இவர்களிலர் சிலர் 'சப்த கன்னியர்கள்' என்ற தேவதைகளையும் வழிபடுகிறார்கள். சாதாரணமாகக் கன்னிமார்

கோவில்களை ஒரு நீரோடைக்குப் பக்கத்திலேதான் அமைப்பார்கள். இவர்களின் கோவில்களில் என்றும் எண்ணெய் விளக்குகள்தான் எரிப்பார்கள். அந்த அந்தத் தெய்வங்களின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தாற்போல் புலால் உணவோ சைவ உணவோ படைக்கின்றனர். எந்த உணவு படைத்தாலும், அத்துடன் தேங்காய், பழம், பூ, வெற்றிலை முதலியவைகளைச் சேர்த்துப் படைப்பார்கள். வில்லிப் பெண்களும் தங்களுடைய கோவிலுக்குள் பிரவேசிக்கலாம்.

வில்லியர்கள் இறந்தால் சில மணி நேரத்துக்குள் பாடை கட்டிப் பிணத்தை எடுத்துச் சென்று, படுத்த மாதிரியாக வைத்துப் புதைத்து விடுகின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேவித மான சடங்கைத்தான் செய்கிறார்கள். இவர்களில் தாலிகட்டும் பழக்கம் இல்லாத மங்கையர், தங்கள் கணவனின் பிணத்தின் எதிரில் தாலி கட்டிக்கொண்டு, உடனேயே அறுத்துக் கொள்ளும் வழக்கம் இன்றும் உண்டு.

இவர்களுக்குள் எவ்விதமான சிக்கல்கள் உண்டானாலும், உடனே பஞ்சாயத்துக் கூடி, குற்றத்திற்குத் தகுந்தாற்போல் அபராதம் விதிக்கின்றனர். அங்குள்ள கூட்டத்தாருக்கு ஒரு வேளையோ இரு வேளையோ விருந்தளிப்பதுதான் அபராதம். அப்படிப் பஞ்சாயத்தார் விதிக்கும் அபராதத்தை ஏற்றுக் கொள்ளா விட்டால், ஒருவரும் அக்குடும்பத்தாருடன் பேசமாட்டார்கள்.

இவர்கள் எந்த ஊர்களில் வேலை செய்தாலும் தமிழ்தான் சாதாரணமாகப் பேசுகிறார்கள். 'தமிழ் மக்கள்' என்றே தங்களைக் கூறிக்கொள்ளுகின்றனர். பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் கல்வியே இல்லை.

7

குறும்பர்

நீலகிரியில் அரக்கோடு, நீர்குண்டிக்குக் கீழேயுள்ள பாகம், கடைஓலா முதலிய இடங்களில் இவர்கள் வசிக்கின்றனர். பஸ்ஸில் கொஞ்சதூரும் சென்றபின், ஐந்தாறு மைல்கள் மேட்டிலும் பள்ளத்திலும் காட்டிலும் சோலையிலும் மேல் மூச்சுக் கீழ்மூச்சுடன் நடந்தே தான் இவர்கள் ஊருக்குப் போகவேண்டும். மலபாரில் நீலம்பூம் அட்டபாடி மலையிலும் அண்ணாமலையிலும், மைசூரிலும் இக்குறும்பரை வேறு பெயரால் அழைக்கின்றனர். இடத்திற்குத் தகுந்தாற்போல், அவர்களின் மொழி மாறுப் பட்டாலும், குறும்பர்களின் மொழி தமிழ் என்றே ஊகிக்கப் படுகிறது.

இவர்கள் வசிக்கும் இடங்களைப் பகலில் கண்டாலும் சற்று அச்சத்தைக் கொடுக்கும் என்றால், நள்ளிரவில் கேட்க வேண்டிய தில்லை. நள்ளிரவில் பல மிருகங்களின் கூக்குரலைத் தவிர வேறு ஒன்றும் இங்கே காதில் கேட்காது. அந்நியர்கள் ஓர் இரவு அவர்களின் இல்லத்திலே தங்கினால் போதும். இரவு முழுவதும் விநாடியை எண்ண

வேண்டியதுதான். ஆனால் அவர்களோ, நிம்மதியாகக் குறைட்டை விட்டுத் தூங்குவார்கள்.

காட்டில் நுழைந்து நுழைந்து போகும்போது, அவர்களின் இருப்பிடங்கள் அருகில் வந்துவிட்டன என்பதற்கு, அடையாள மாக வாழை மரங்கள் முதலில் தோன்றும். ஒவ்வொரு குடிசையின் பின்பக்கத்திலும் சுமார் ஐந்தாறு வாழை மரங்களைக் காணலாம். மூங்கில் அல்லது காட்டுக் கொம்புகளைக் கொண்டு குடிசைகளைக் கட்டி, அதன்மேல், காட்டுக் கரும்புல் என்ற ஒருவகை நீண்ட புற்களைக் கட்டுக் கட்டாக வைத்து, வளைவு வளைவாகக் கட்டு கிறார்கள். இவர்களில் சிலர் சற்று நாகரிகமாக ஓட்டு வீடுகளையும், தற்காலத்தில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆதியில் இவர்கள் அகலமான மூங்கில் குழாய்களைப் பால் கறக்கவும், இதுபோன்ற வேலைகளுக்கும், சொர புரடையைத் தேன் சேகரிக்கவும் தண்ணீர் கொண்டு வரவும் மதுபானம் ஊற்றி வைக்கவும் உபயோகப்படுத்தி வந்தார்கள். இன்றும் சிறு பாறையையே அம்மியாகவும் ஆட்டுக்கல் முதலியவைகளாகவும் உபயோகப் படுத்துகிறார்கள். சில இரும்பு ஆயுதங்களுக்கு வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் பால் குறும்பர், முள் குறும்பா, காட்டுக் கும்பர் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆண்கள் குள்ளமாகவும் கறுத்தும் இருக்கிறார்கள். தலையின் முன்பக்கம் க்ஷவரம் செய்து கொண்டு, பின் பக்கம் குடுமி வைத்திருக்கிறார்கள். இவர்கள் நன்றாக ஓடக்கூடியவர்கள்; கூர்மையான பார்வை யுள்ளவர்கள்; தூரத்திலிருக்கும் சிறிய பொருள்களையும் பார்க்கும் சக்தி இவர்களுக்கு உண்டு. பண்டைக் காலத்தில் ஆண்கள் கீழே ஒரு துண்டு கட்டிக்கொண்டு, மேலே ஒரு துண்டைப் போர்த்துக் கொண்டிருந்தார்களாம். சிலர் இன்று நம்மைப்போல் உடை அணிகின்றனர். பெண்கள் குள்ளமாகவும் கறுத்தும் இருக்கிறார்கள். பயந்த சுபாவம் உள்ளவர்கள். பெண்களில் சிலர் தம் நெற்றியில் இரண்டு அல்லது நான்கு குறுக்குக் கோடுகளைப்போல் பச்சை குத்திக்கொண்டுடிருக்கிறார்கள். அது, சிவன் பச்சை என்கின்றனர். சிலர் காதுகளில் சிறிய வளையங் களையும், சிலர் சுருட்டிய ஓலையையும் அணிந்திருக்கிறார்கள். சிலர் கழுத்தில் கறுப்பு மணிச்சரமும், சிலர் வெள்ளி நகைகளும் அணிந்திருக்கிறார்கள்.

பெண்கள் நான்கு அல்லது ஐந்து கெஜ நீளமுள்ள, பெரிய துண்டை மார்புக்குமேல் வேஷ்டி கட்டுவதைப் போல் கட்டி, பிறகு மார்பில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாகக் கயிறுகளால் இரண்டு கட்டுகள் கட்டுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் வரையில் ஒரு முழத் துண்டைத்தான் பெண்கள் இடுப்புக்குக் கீழே அணிந்திருந் தார்களாம். இன்றும் சிலர் அப்படி ஒரு முழம் துண்டுடனே இருப்பதைக் கண்டேன். ஆனால் இவர்கள் தூய உள்ளம் படைத்தவர்கள்.

இவர்கள் துஷ்ட மிருகங்கள் வாழும் காடுகளில் இருப்பதால், குண்டடிப்பட்ட துஷ்ட மிருகங்களால் சில சமயங்களில் இவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதும் உண்டு. இவர்களுடைய உதவியை முதலில் நாடாமல் இவர்கள் இருக்கும் இடங்களுக்குப் போக முடியாது.

காரணம்; பகலில் துஷ்புட மிருகங்கள் இல்லா விட்டாலும், அன்னியருடைய மனித வாடையைக் கண்டாலே இவர்கள் வளர்க்கும் எருமைகளும் மாடுகளும் நம்மைத் துரத்த ஆரம்பித்துவிடும்.

பெண்கள், குழந்தைகளை நம்மைப்போல் தூக்குவதில்லை. குழந்தையைத் துணியில் சுருட்டி, எதிர்ப்பக்கம் வயிற்றில் அணைத்துக்கொள்ளுகின்றனர். பிரசவங்களை அவர்கள் ஜாதி மருத்துவச்சிகளே பார்த்து விடுகிறார்கள். வைத்தியசாலைக்குப் போவதில்லை. பிரசவமாகிப் பத்து நாட்கள் வரையில், இவர்கள் தங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்க கூடாது. குழந்தைக்கு ஓர் ஆண்டு முடிந்த பிறகோ ஆறு மாதம் முடிந்தபிறகோ பெயர் வைப்பார்கள். குழந்தைக்குத் தாயின் முகம் தெரிந்ததும் ஏணையோ தொட்டிலோ கட்டுவது உண்டு.

சமீப காலம் வரையிலும்கூட இவர்கள் பாறைகளின் இடுக்குகளிலும், பெரிய மரத்தின் பொந்திலும் வசித்து வந்தார்கள். இப்பழக்கம் வழக்கங்கள் இன்றும் சிலருக்கு உண்டு.

சில இடங்களில் பெரிய பாறையினுள், பெரிய அறைபோல் செய்து, அதனுள் படுக்கை அறை, ஆடுகட்ட வசதி, சமைக்க வசதி முதலிய வசதிகள் இருப்பதைக் கண்டேன். பாறைக்கு வெளியில், காட்டு மரங்களால் இரவில் தீ மூட்டும் கனலையும் கண்டேன். சுமார் மூன்று, நான்கு தலைமுறையாக அக்குகைகளில் இவர்கள் வசிக்கிறார்களாம். அதனுள் ஒரே இருள் சூழ்ந்திருக்கிறது. சாதாரணமாக ஆண்கள்தான் அதிகமாக ஊருக்குள் உலாவுகிறார் களே தவிர, பெண்கள் அதிகமாக வருவதே இல்லை. நல்ல விசேஷமான நாட்களில் ஆண்களும் பெண்களும் சில ஆண்டுகளுக்கு முன்' வரையில் மதுபானம் செய்து, பௌர்ணமியில் தீமூட்டி வேடிக்கையாக நடனம் ஆடுவார்கள். குறும்பர்கள் வேடிக்கையாக நடனம் ஆடுவார்கள். குறும்பர்கள் சாதாரணமாக எல்லா இறைச்சியையும் தின்பார்கள். விஷேசமாகக் காட்டெருமையைப் பலர் சேர்ந்து கொலை செய்து, அதைப் பங்கு போட்டுக் கொள்வார்கள். அன்றிரவும் நடனமாடுவது உண்டு. 'பறை, தம்பட்டம், குழல்' இம்மூன்று வாத்தியங்களைத்தான் இவர்கள் வாசிப்பர். எப்பணியை யார் செய்தாலும், எல்லோரும் ஒரே குலம் என்று எண்ணிப் பெண் கொடுக்கல் வாங்கல் உண்டு.

இவர்கள் நடனம் ஆடுவதைக் காணச் சென்றால், காணச் சென்றவர்கள், திரும்பும்போது இவர்கள் அவர்களை வெறும் கையுடன் அனுப்புவதில்லை. பழம், தேன் ஏதாவது கொடுத்தே அனுப்புவார்கள். பொன் நகைகளைவிடப் பெண்கள் வெள்ளி நகைகளைத்தான் அதிகமாக அணிகின்றனர். கழுத்தில் அணியும் வெள்ளி நகையைக் காண மிகவும் அழகாக இருக்கும். அதன் பெயர், செரப்பணி என்பது.

பெரியவர்களுக்கோ சிறியவர்களுக்கோ வியாதி வந்தால் காட்டு மூலிகைகளைக் கொண்டு மருந்து செய்து சாப்பிடுகிறார்கள். அவர்கள் இருக்கும் இடங்களில் என்ன பொருள்கள் விளையுமோ அவைகளைப் பயிர் செய்கின்றனர். ஆண்கள் தமக்குள்ளே ஒருவருக்கொருவர் ஒடிந்த

கண்ணாடித்துண்டால் சவரம் செய்து வந்தார்களாம். ஆனால் இன்று கத்தியால் செய்து கொள்கின்றனர். அநாகரிகமாக இருந்தாலும், அவர்களின் குடிசைக்குள் நுழையும் போது, நம்முடைய பாதரட்சயை நீக்கிவிடும்படி கூறுகிறார்கள். இவர்கள் மந்திர தந்திரங்களில் கைதேர்ந்தவர்கள்.

ஆண்கள் தேன் சேகரித்தல், வேட்டையாடுதல், கிழங்கு பயிர் செய்தல், நிலம் இல்லாதார் கூலிவேலை செய்தல், கால்நடைகளை வளர்த்தல், காட்டில் விறகு வெட்டுதல், காட்டு மூலிகைகளைச் சேகரித்தல் முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். மான், கோழி, முயல், பன்றி முதலியவற்றை வேட்டையாட வேட்டை நாய்களுக்கு இவர்கள் பழக்கி வைத்துள்ளார்கள்.

நீலகிரியில் பெரிய தேன்கூடுகளைக் குறும்பரைத்தவிர மற்றவர்களால் எடுக்கவே முடியாது. இவர்க்ள் தேன்கூட்டைக் கண்டதும், உடனே தேன் எடுக்க மாட்டார்கள். தேன்கூட்டைச் சுற்றி இரு கொம்புகளால் பெருக்கல் குறிபோல் வைத்துவிடுவார்கள். இக்குறியைக் கண்டதும், வேறு குறும்பனோ அன்னியனோ அதைத் தொட மாட்டார்கள். ஏனென்றால் கொம்பு வைத்த குறும்பன் மந்திரத்தால் கொன்றுவிடுவான் என்று பயம். இரண்டு மூன்று நாட்களுக்குப் பின், தக்க முஸ்த்திப்புடன் தேன் எடுக்க வருவார்கள். தேன் எடுக்கும் முறை பல உண்டு.

இவர்கள் யானை பிடிப்பதும் உண்டு. மைசூர்க்குறும்பன் யானைக்கு முன், தீப்பந்தம் பிடித்துத் தன் தலைக்கு மேல் சுற்றிய படி, குறிப்பிட்ட இடத்தை நாடி யானையை ஓட்டுவான். அவை பயந்து ஓடும்போது, யானைக்கென்று தோண்டி வைத்திருக்கும் குழியில் அவை விழுந்துவிடும். அப்படித் தீப்பந்தம் பிடிப்பவன், ஏமாந்தால் அடுத்த விநாடி அவனை உயிருடன் காண முடியாது. யானை வேட்டைக்குச் செல்லும் சிக்காரிகள், குறும்பரின் உதவியின்றிக் காட்டில் பிரவேசிக்கவே முடியாது.

குறும்பர்கள் மீன் பிடிக்கும் விதமே ஒரு தனிக்கலை. ஓடையின் தலைப்பக்கம் சிறிது தூரத்திலே ஒருவகை விஷவேர் களைத் தண்ணீரில் கரைத்துக்கொண்டே இருப்பார்கள். அவ் வேரின் வாசனை பட்டதும் மீன்கள். குளோரோபாரம் கொடுத்து போல் மயக்கத்தால் தண்ணீர் மிதந்து, ஓடையின் சிறிதுதூரத்தில் வைத்திருக்கும் கூடையில் வந்து சேர்ந்துவிடும். சிறிது நேரத்திற்குப் பின் மயக்கம் நீங்கி, இவை துள்ள ஆரம்பிக்கும். பிறகுதான் அதைச் சமைப்பர். பெண்கள் வீட்டுத் தோட்டத்தைக் கவனித்தல், ஆடு, மாடு, கோழி இவற்றை வளர்த்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். சிலர் கூலி வேலையும் செய்கின்றனர். ஆணும், பெண்ணும் சேர்ந்து சில செல்வர்களுடைய வயல்கள் இரவில், மிருகங்களால் சேதமாகாதவாறு, காவல் காத்து, 'ஓய்! ஓபா!' வென்று குரல் கொடுத்தும் டின்னைப் பட பட வென்று அடித்து ஓசை செய்தும், வரும் மிருகங்களை ஓட்டுவார்கள். இவர்களுக் கென்று, சிறிய, பரண் அடித்த குடிசை ஒன்று ஒவ்வொரு வயலிலும் இருக்கும்.

பண்டைக் காலத்தில் இவர்கள் காட்டில் கிடைக்கும் பொருள்களைத் தின்று ஜீவித்தாலும், இன்று பலவிதத் தொழில் செய்து ஜீவிக்கின்றனர்.

பெண்கள் பெரியவர்கள் ஆனதும் தனிக் குடிசையில் எட்டு நாட்கள் வரையில் இருக்கச் செய்து எட்டாம் நாள் குளிப்பாட்டி, பூ முடித்து, ஒரு மணையின் மேலோ சதுரக்கல்லின் மேலோ, உட்கார வைத்து, அவள் பக்கத்திலே மாப்பிள்ளைபோல் உடை அணிந்த ஒரு சிறிய பையனையும் உட்காரவைப்பார்கள். பிறகு ஒரு திண்ணத்திலோ கொட்டாங்கச்சியிலோ நல்லெண்ணெய் ஊற்றி இந்தப் போலித் தம்பதிகளின் எதிரில் வைப்பார்கள். உறவினர் களும், வந்தவர்களும் இருவர் தலைகளையும் தொட்டு ஆசீர்வதிப்பார்கள். விருந்து முடிந்ததும், பெண் எப்பொழுதும் போலவே எல்லோருடனும் பழகுவாள். சாதாரணமாக மங்கையர்கள், வீட்டுக்கு விலக்கானால் மூன்று நாட்கள் வரையில் தனிக் குடிசையில் இருப்பார்கள். அவர்களுக்குத் தங்கள் கணவன் மார்தாம் ஆகாரம் சமைத்துக் கொடுக்க வேண்டும்.

பெண்கள் ருதுவான பின்தான் சாதாரண உடை அணிந்து, திருமணம் செய்கின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணத்திற்கென்று தனி வயது இல்லை. இவர்கள், திருமணத்தை இருவகையாகச் செய்கின்றனர். ஒன்று விமரிசையாக, மற்றொன்று தாம்பூலம் மாற்றுதல் என்று சுலபமாக. பண்டைக் காலத்தில் மாப்பிள்ளை ரூ. 1-4-0-ம், ஒரு ஜோடி வேஷ்டியும், பெண்ணின் தகப்பனாருக்குக் கொடுத்துப் பெண் கேட்டல் வேண்டும். இன்று ரூ. 60 -யைத் தாம்பூலத்துடன் கொடுத்துப் பையன் பெண்ணை அழைத்து வரவேண்டும். பிறகு பையன் வீட்டில் நல்ல விருந்து நடைபெறும். விருந்து முடிந்தால் திருமணம் முடிந்தது என்பது பொருள். திருமணம் என்ற தனிச் சடங்கு ஒன்றும் இல்லை. பிறகு பெண்ணும் பையனும் தனித்து வாழ்வார்கள். குழந்தை பிறந்தால் இருவரும் சேர்ந்து அக்குழந்தையை வளர்க்கவேண்டும். தாலி என்ற நாமமே இங்கே இல்லை. ஒரு பெண் சுமங்கலியா என்று பார்த்தவுடன் தெரிந்து கொள்வது சிரமம். சிறு பெண்கள் கழுத்தில் மணி அணிந்திருப்பதைப்போல், திருமணமான பின்னும் மணிகள்தான் அணிந்திருக்கின்றனர்.

நீலகிரிக் குறும்பர்களிடம் ஒரே பெண்ணைப் பல சகோதரர்கள் மனைவியாகக் கொள்ளும் பழக்கம் சாதாரணமாக இருந்ததுடன், ஒருவன் மனைவி மற்றக் குறும்பர்களுக்கு மனைவியாக இருப்பதையும், அந்தக் குறும்ப சகோதரர்கள் பண்டைக் காலத்தில் தடை செய்யாமல் இருந்தார்களாம். ஆனால் இந்தப் பழக்கம் இன்று இல்லை. இன்று மனைவி, கணவன், மக்கள், குடும்பம், என்றெல்லாம் ஓர் ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளுகின்றனர்.

விவாகரத்துச் செய்தவளை, மறுவிவாகம் செய்கிறவன் அவளுடைய முதல் கணவனுக்கு ரூ. 60-ம், முதல் கணவனுடைய தகப்பனாருக்கு ரூ.60-ம் கொடுக்க வேண்டும். விதவையைத் திருமணம்

செய்கிறவனுக்கு இந்த நிபந்தனைகள் இல்லை. விதவைக்கும் திருமணச் சடங்கு முன் சொன்னபடிதான். ஆண்கள் ஒரு மனைவிக்கு மேல் திருமணம் செய்யக்கூடாது என்ற பழக்கம் இன்று உண்டு. ஆனால் பெண் பிரியப்பட்டால் தன் கணவனை விட்டு விலகி, மற்ற ஆண்களிடம் கூடி வாழப் பெண்ணின் பெற்றோர்களே அனுமதிக்கின்றனர்.

திருமணம் வீட்டில், பிறைக்கு முன் ஒரு நல்ல நாளில் நடைபெறும். தம்பதிகளை முதலில் மாமியும், மாமனாரும் ஆசீர்வதிப்பர். பிறகு பெண்ணின் பெற்றோர்கள் ஆசி கூறுவார்கள். பெண்கள் விவாகரத்துச் செய்து, பிறந்தகம் செல்லும்போது, குழந்தைகளையும் கூடவே அழைத்துச் செல்லுகிறார்கள். அநேகமாகப் பெண்ணின் மாமனே பெண்ணை மணக்கிறான். திருமணத்தன்று மரக்கறி உணவுதான் சமைப்பார்கள்.

பண்டைக் காலத்தில் பயிர் செய்வதற்கு முன், அரிய தேவனுக்கு ஆடு பலி கொடுத்து, பிறகுதான் பயிர் செய்வார்கள். ஆனால் இன்று எதை விதைத்தாலும் விதைப்பதற்கு முன் அரிசிப் பொங்கலிட்டு பூசை செய்கிறார்கள். வியாதி வந்தால் சிலர் மூலிகைகள் சாப்பிடுவார்கள்; சிலர் தேவதைக்கு சிலர் மூலிகைகள் சாப்பிடுவார்கள்; சிலர் தேவதைக்கு உயிர்ப்பலி கொடுப்பார்கள். இவர்களுக்குக் குலதெய்வம் ஈர் ஒடியா என்பது. பெண்கள் இந்தக் கோவிலுக்குள் பிரவேசிக்கக் கூடாது. பூஜை போடவோ கடவுளை வணங்கவோ செவ்வாய்க் கிழமைதான் விசேஷமான நாள். அன்று பால், பழம், தேங்காய் முதலியவற்றைப் படைத்து வணங்கு வார்கள். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் முதல் செவ்வாய்க் கிழமையில் ஒரு பூசாரி, மூன்று துணைவர்களுடன் எட்டு நாட்கள் வரையில் காட்டிலேயே, மங்கையர்களின் முகத்தைப் பாராமல் இருக்கவேண்டும். ஒன்பதாம் நாள் காலையில் சூரியன் உதித்ததும் பூசை செய்யும் இடத்திற்குப் போகவேண்டும். குறிப்பிட்ட பாறையை நாடிச் சென்றதும், பாறையின் வெளியில் ஒரு பக்கம் புலியும், மற்றொரு பக்கம் நாகமும் அவை படுத்திருக்குமாம். இவர்கள் தூரத்தில் வருவதைக் கண்டு, அவை இரண்டும் நீங்கி விடுமாம். பின்பு பாறைக்குள் பிரவேசிப்பர். அங்கே தங்கள் மூதாதையர்கள் வைத்த மண்பாண்டம் ஒன்றில் தண்ணீர் இருக்குமாம். அதன் பக்கத்திலே அணாநான்கு காணிக்கை போடவேண்டும். பிறகு அவர்கள் மொழியில் பூஜை செய்து, வெளியில் வரவேண்டும். இதைத்தான் ஆண்டு பூஜை என்று கூறுகின்றனர். பேய், பிசாசு, மந்திரம், சூனியம் முதலியவகைளில் இவர்களுக்கு நம்பிக்கை உண்டு.

குறும்பர்கள் தங்கள் தலைவனை, முதலி என்று அழைக் கின்றனர். தலைவனுக்கு ஆண்டுதோறம் அணா நான்கு கொடுக்க வேண்டும். தலைவன் குடும்பத்தார் ஒருவர்பின் ஒருவராகப் பரம்பரை வரிசையில் தலைவன் பதவிக்கு வருகிறார்கள். மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை. அவர்கள் இருக்கும் வட்டாரத்தில் யாராவது குற்றம் செய்தால், நியாயம் விசாரித்து அபராதம் அணா நான்கை, எட்டு நாள் தவணையில் பண்டைக் காலத்தில் கட்ட வேண்டும். இன்று சமாதானப்படுத்தி ரூ. 1--4--0 அபராதம் விதித்து, அதைச் செலவு செய்து, காபி காய்ச்சி

எல்லோரும் குடிப்பார்கள். ஒரு காட்டில் இருப்பவர், பக்கத்துக் காட்டில் இருக்கும் குடும்பத்தில் பெண் கேட்கவேண்டுமென்றால், முதலில் இரண்டு காட்டிலும் பஞ்சாயத்துப் பேசி, முடிவு செய்த பின்தான் பெண்கேட்க வருவதும் போவதும் நடக்கும்.

குறும்பரில் சிலர் இறந்தால் மூன்றாம் நாள் எரிப்பதும் உண்டு, புதைப்பதும் உண்டு. கணவன் இறந்தால் மனைவி, தன் காதிலிருக்கும் நகையையும், தன் வலதுபுறத் தலைமயிரையும் எடுத்து முடிபோட்டு, இறந்த தன் கணவனின் நெஞ்சில் வைக்கவேண்டும். இதுதான் குறும்ப மங்கைக்குத் தாலி எடுப்புச் சடங்கு. மனைவி இறந்தால், கணவன் தன் காதில் இருக்கும் நகையை எடுத்து, இறந்த தன் மனைவியின் நெஞ்சில் வைத்து விட்டு, மொட்டை அடித்துக்கொள்கிறான். இதுதான் கணவனுக்குத் 'தாலி எடுப்புச்' சடங்கு. படுத்த மாதிரியாகவே பிணத்தைப் புதைப்பார்கள்.

நீலகிரியில் வாழும் ஆதிவாசிகளாகிய இருளரில் யாராவது இறந்தால், குறும்பரில் ஒருவன், எதிர்ப்பக்கம் மட்டும் சவரம் செய்யவேண்டும் என்ற குடும்ப சம்பிரதாயம் இன்றும் உண்டு. ஆனால் இதற்குச் சரியான சரித்திரச் சான்றுகள் இல்லை. நல்லவர்கள் இறந்தபின் தேவர்களாகவும், பாவிகள் இறந்தபின் பேய்களாகவும் வருவார்கள் என்ற நம்பிக்கை இவர்களிடம் இன்றும் உண்டு.

தமிழ்நாட்டுக் குறும்பர் பேசுவது தமிழ். மலபாரில் இருப்பவர்கள் மலையாளம், மைசூரில் இருப்பவர்கள் கன்னடம்; இப்படி இடத்திற்குத் தகுந்தாற்போல் மொழிகள் மாறினாலும், இவர்கள் தமிழ் மக்களே என்று கருதப்படுகிறது. ஆனால் தமிழ், தமிழனுக்கும், மலையாளம் மலையாளிக்கும், கன்னடம் கன்னடியருக்கும் இவர்கள் பேசும்போது விளங்காது. ஏனென்றால் இவர்கள் மற்ற மொழிகளின் வார்த்தைகளைச் சற்று மாற்றி, பொருள் வேறுபட வேகமாகப் பேசுகிறார்கள். தாங்கள் பேசுவதை விரோதிகள் உணரா வண்ணம் பண்டைய மக்கள் செய்ததோர் சூழ்ச்சி இது.

8

நீலகிரியில் வாழும் தோதுவர்

நீலகிரி என்றதும் நம்மனக் கண் முன், தோதுவர்களும், கோத்தர்களும், படகர்களும் வராமல் இல்லை.

நீலகிரி, கடல் மட்டத்திற்கு மேல் 7758 அடி உயரத்தில் உள்ளது. அதன் தலைநகரம் உதகை; உதகையை ஆங்கிலத்தில் 'ஊட்டி' என்று அழைக்கின்றனர்,

தோதுவர்கள் நீலகிரியைச் சுற்றிலும் சுமார் எண்பது மந்துகளில் குடி இருக்கின்றனர். (மந்து அவர்கள் குடிசை கட்டிக் கொண்டிருக்கும் இடத்துக்குப் பெயர் ஒவ்வொரு மந்திலும் சுமார் ஐந்து, ஆறு குடிசைகள்தான் இருக்கின்றன.

மலைகளின் உச்சியிலும், சோலைகளின் நடுவிலும் கானகத்தின் மத்தியிலும் குடி இருக்கும் இவர்களின் மந்துகளைத் தேடிப்பிடிப்பது வெகு கஷ்டம்.

சில இடங்களில் மலைச் சரிவுகளின் மூலமாகச் செல்லும் ஒடுக்கமான, ஒற்றையடிப் பாதைகள் வழியாகவும் ஒடுங்கிக் கிடக்கும் பள்ளத்தாக்குகளின் வழியாகவும் போகவேண்டும். உச்சியிலிருந்து பார்த்தால் எங்கும் பசுமை தவழ்ந்திருக்கும் மலைச் சரிவுகளை ஒரு புறம் காணலாம். மற்றொருபுறம் பசுமை என்பது மருந்துக்குக் கூடக் காண முடியாத பாறைகளும் குன்றுகளும் கண்ணில்படும். நல்ல குளிர்காற்றுச் சில்லென்று, ஆளை அடித்துத் தள்ளுவதுபோல் வீசும். ஆகாயத்தில் தூசி ஒன்றும் இருக்காது. வெகுதூரம் வரையில் பார்க்கலாம். எனவே தூரத்தில் இருக்கிற பொருள்கள், அருகில் இருப்பதாக எண்ணி, ஏமாற நேரும்.

தூரத்திலிருந்து இவர்களின் மந்துகளைக் கண்டால் கறுப்பான பாறைகள் கவிழ்ந்தாற்போல் தோன்றும். ஒரு மந்துக்கும் மற்றொரு மந்துக்கும் இடையே சுமார் எட்டு அல்லது பத்து மைல் தூரம் இருக்கும். அதைப்போல் நீலகிரி முழுவதும், குண்டு தூள் மந்து, தாடி சோர மந்து, மால் கோல் மந்து, காட்டேரி மந்து, கண்ணகி மந்து, நீர்க்காசி மந்து, முதலிய எண்பது மந்துகள் இருக்கின்றன.

தோதுவர்கள் நீலகிரியில் மட்டும் வாழ்வதாகக் கூறப்படு கிறது. சில கிறித்தவப் பாதிரிமார்களின் உதவியால் தோதுவர்களில் சிலர் இங்கிலாந்து வரையில் போய் வந்துள்ளார்கள். உதகைக்குச் சேல்லவேண்டுமானால் மார்ச்சுமாதம் முதல் மே மாதம் வரையில் உதகையில் தங்கிச் சுற்றிக் காணப் பஸ் மார்க்கமே சிறந்தது; தோதுவர்களைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் திரு. கோபிநாத் தாஸ் எழுதிய புத்தகத்தைப்படிப்பது மிகச் சிறந்தது.

தோதுவர்களின் குடிசைகள், வளைவாகக் கட்டி இருப்பதற்கும், நுழையும் இடம் சிறியதாக இருப்பதற்கும் காரணம். ‘கடவுள் வானவில்லை வளைவாக வைத்திருக்கிறார். வளைவான பெரிய மலைகளில் மக்கள் வாழச் சிறிய குகைகளை உண்டாக்கி இருக்கிறார். ஆகையால் நாங்களும், வளைவாகவும் சிறியதாகவும் உள்ளே நுழைந்து போகும் இடம் ஏற்படுத்தி இருக்கிறோம்’ என்று கூறினார்கள்.

குடிசைக்குள் குழந்தைகளைப்போல் ஒரு விநாடிக்குள் தவழ்ந்து போகவும், வரவும், அவர்களால் முடியும். ஆனால் நாம் நுழைந்து போகவேண்டும் என்றால் சுமார். பத்து விநாடி நேரம் ஆகிறது.

தோதுவர்களின் குடிசைக்குள் நுழைந்து, பழகியும் அவர்களின் சாம்பார் சாப்பாடு சாப்பிட்டு ரசித்தும் பார்த்தால்தான் பல விஷயங்களை அறியலாகும். குடிசைக்குள் பொருள்களை ஒழுங்காகவும், பாத்திரங்களை அழகாகவும், பளபளப்பாகவும் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் வைத்திருப்பதுபோல் வைத்திருக்கிறார்கள். பண்டைக் காலத்துப் பூ வேலை தீட்டிய தம்ளர்கள் சிலவற்றைச் கடைபோல் வைத்திருப்பதையும் காணலாம்.

குடிசைகள் யாவும் கிழக்கு நோக்கியே கட்டப்பட்டிருக் கின்றன. குடிசையின் உயரம் முப்பது அடி; அகலம் பதினேழு அடி. சிலர் குடிசைக் கதவுக்குப் பதிலாகப் பாறையை வைப்பதும் உண்டு.

குடிசைக்குள் வலது பக்கத்தில் பத்தடி நீளமும், ஐந்தடி அகலமும் கொண்ட பெரிய திண்ணை ஒன்றைச் சுமார் மூன்றடி உயரத்தில் கட்டியிருக்கிறார்கள். குடும்பத்தில் உள்ள எல்லோரும் திண்ணை யின் அகலத்தில் படுக்கும்போது, பெட்டிகளையும் படுக்கை களையும் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய சாமான்களையும், கோடரி, தடி முதலியவைகளையும் தலைப்பக்கத்தில் வரிசையாக வைத்துக் கொள்ளுகின்றனர். திண்ணையின் மேல் ஓலைப் பாயும், அதன் மேல் கம்பளமும் விரித்திருக்கின்றனர்.

தங்கள் குடைகளை குடிசையின் வாரையில் செருகி வைத்திருக்கின்றனர்.

திண்ணைக்கு எதிர்ப்பக்கத்தில் வரிசையாகவும், தொடர் புள்ளனவாகவும் மூன்று கிளைஅடுப்புகள் இருக்கின்றன. ஓர் அடுப்பில் வெந்நீர் காய்ந்துகொண்டே இருக்கும். மற்ற இரு அடுப்புகளிலும் சமையலுக்கு வேண்டிய பணிகள் நடைபெறும். வரிசை அடுப்புக்கு மேல், காட்டு நார்களைக் கொண்டு, உறி உறியாகக் கட்டி, அதில் காட்டு விறகுகளைப் பிளந்து அழகாகவும் ஒழுங்காகவும் சுமை சுமையாகவும் தொங்கவிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக நான்கு அறைகளில் வைக்கக் கூடிய சாமான்களை, அவர்கள் ஒரே குடிசையில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். தோதுவர்கள் எல்லோருமே சிறு வயது முதல் பழகியதன் காரணமாக தங்கள் பொருள்களை ஒரே விதமாகக் குடிசைக்குள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். குடிசைக்குள் நுழையும் போது எதிர்ப்பக்கத்தில் நான்கு அல்லது ஐந்து பரண்கள் கட்டி, அதன்மேல் வரிசை வரிசையாகவும் அழகாகவும் தங்களுடைய வெங்கலச் சமையல் பாத்திரங்களை அடுக்கி வைத்திருக்கின்றனர். அதற்கு முன்பக்கத்தில் சுமார் ஏழு, எட்டு உறிகள் தனித்தனியாகக் கட்டி அதில் ஒவ்வொருவருடைய உண்கலத்தையும் வைக்கின்றனர். உண்கலத்தைப் பூமியின்மேல் வைத்தால், பூமா தேவியின் மேல் எச்சில் கலத்தை வைப்பதாகுமாம். சாப்பிடும்போது பாய், மணை, பலகை, முதலியவைகளின் மேல் உண்கலத்தை வைத்துதான் ஊண் அருந்துகின்றனர். பரணின் அடியில் இருக்கும் சிறிய திண்ணையின் மேல் பல மூங்கிற் பாத்திரங்களில் உப்பு, தயிர், பால் முதலியவை களை நிரப்பி வைத்திருக்கின்றனர். அவ்விதம் ஒரு குடிசையில் இருந்ததோர் மூங்கிற் பாத்திரத்தின் அகலம் சுமார் பதினான்கு அங்குலம் இருந்தது. மண் பாண்டங்களையும் கல்பாத்திரங் களையும் புழங்குகிறார்கள். கோரைப் புல்லையும் பிரம்புகளையும் ஓட மூங்கிலையும் பலகை களையும் கொண்டு, அவர்களே அவர்களின் குடிசைகளை இன்று பலகணி வைத்துக்கட்டுவதால், குடிசைக்குள் இருளாக இல்லாமல் வெளிச்சமாக இருக்கிறது. மேலும், அவர்களின் குடிசைகளை. 'ஆர்ச் - குடிசை' என்று அழைக்கின்றனர். அன்னியரை உபசரிக்கக் குடிசையின் வெளியில் இருபக்கங்களிலும். இரு திண்ணைகள் இருக்கின்றன. இவர்களிடம் சற்றுப் பழகிவிட்டால் நம்மை, 'அண்ணாச்சி அண்ணாச்சி!' என்று அழைப்பார்கள். குடிசையின் உள், பல மூங்கிற் கொம்புகளின் நுனியில் எருமைக் கொம்புகளைப்போல், கம்பியை வளைத்து, சுமார் ஐம்பதுக்கு மேல் ஒவ்வொரு குடிசையின் வாரையிலும் செருகி வைத்திருக்கின்றனர்.

''எங்களிடம் வளர்ந்த எருமைகள் இறந்தாலும் சரி, அல்லது மயானச்சாவுக்குக் கோடரியால் அடிபட்டுச் செத்தாலும் சரி, இவை இறந்த எருமைகளின் ஞாபகச் சின்னங்கள்'' என்று கூறினார்கள்.

பண்டைக் காலத்திலும், இன்றும் சிலர் எருமைக்குப் புல் வேண்டி, இடம் விட்டு இடம் மாறுகின்றனர்.

குடிசைக்குள் நெல் குத்த ஒரு கல் உரலைத் தரையோடு தரையாகப் புதைத்திருக்கிறார்கள். அதில் குழந்தைகளும் காலை வைக்கக்கூடாது.

தற்காலத்தில் அரசாங்கம் சுகாதார வசதிப்படி வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கின்றனர். ஆனால், அவர்கள், 'குளிர்தாங்க எங்கள் குடிசைகள்தான் வசதி' என்று கூறுகின்றனர். வாரம் ஒருமுறை சாணத்தால் வீட்டை மெழுகிச் சுத்தம் செய்கின்றனர். நாகரிகம் அடைந்தால் நம்மவரின் வீடுகளிலேயே வாழப் பழகிவிடுவார்கள் போலும்.

தோதுவ ஆண்கள் சுமார் ஐந்தடி முதல், ஆறடிவரையில் உயரமாக வளர்ந்திருக்கின்றனர். தாடியும் அடர்ந்த தலைமயிரும், மீசையும் ரோமங்கள் வளர்ந்த மார்பும் உடலும் உடையவர்கள். பண்டைக் காலத்தில், இவர்கள் க்ஷவரம் செய்துகொள்ள மாட்டார்கள். ஆண்களும் பெண்களும் செருப்பே அணிந்துகொள்வ தில்லை.

பெண்களும் ஐந்தடி முதல், ஐந்தரையடி வரையில் வளர்ந்திருக்கிறார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் நீண்ட முகமும் எடுப்பான மூக்கும் இருக்கின்றன. இவர்களைக் காலைக் கதிரவனின் உதயத்தில் கண்டால் இவர்களின் முகம் பொன்போல் மிளிர்வதைக் காணலாம். பெண்கள் கையிலும் காலிலும் அடர்த்தியான ரோமம் உடையவர்கள்.

சாதாரணமாக எல்லா நாட்களிலும், பெரிய முண்டுதான் ஆண்களும் பெண்களும் அணிந்துகொள்ளுகின்றனர். ஒரு மந்திலிருந்து, மற்றொரு மந்துக்குச் செல்லும் போதும், முக்கியமான நாட்களிலும், கறுப்பு, சிவப்பு, ஊதா, நீலம், பச்சை முதலிய வர்ணம் இட்டுக் கெட்டியான நூலால் அவர்களே நெய்த முரட்டு, பெரிய துப்பட்டியில், பூ வேலை பின்னிய, 'பூத்துக்குளி' என்று வழங்கும் போர்வைகளை ஆண்களும் பெண்களும் அணிந்து செல்லு கின்றனர். இவற்றை அவர்களுக்குள் மாற்றிக் கொண்டு அணிவதும் உண்டு.

பெண்கள் பூத்துக்குளியை அணிந்தாலும், நம் மங்கையர்கள், புடைவைக்குள் பாவாடை கட்டுவதைப்போல் இப்பெண் மணிகளும், 'தார்பை' என்ற ஒரு துண்டை மார்பை மறைக்கும்படி, அக்குள் வரையில் கட்டி அதன்மேல் பூத்துக்குளியைப் பாதம் மறைக்கும்படி, போர்த்துக்கொள்வார்கள்.

சாதாரணமாய் ஆண்கள் கையில் கோலும் விரலில் மோதிரமும் உடையவர்கள். காரணம்: பண்டைக் காலத்தில் இவர்கள் எருமையை ஓட்டியவர்கள். எவ்வளவு குளிராக இருந்தாலும் இவர்கள் அன்றும் இன்றும் கம்பள ஆடை அணிவ தில்லை. தோதவ ஆண்கள் எல்லோரும், 'குமண்' என்று அவர்கள் மொழியில் கூறும்படியான, 'கோவணம்' கட்டாமல் குடிசையின் வாசற்படி தாண்டங் கூடாதாம்;

தோதவ மங்கையர்கள் எல்லோரும் வெண்ணெயையோ நெய்யையோ தங்கள் தலையில் தடவி, தங்களுடைய கூந்தலை விரல்

பருமனுக்கு அழகாகச் சுருட்டிச் சுருட்டித் தொங்க விட்டிருக்கின்றனர். அதைக்காணும்போது எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது என்பதை ஏட்டில் வர்ணிக்க இயலாது; இப் பெண்மணிகள் வெண்ணெயைத் தலையில் தடவித் தங்கள் கூந்தலை அழகு செய்துகொள்வதும், வெண்ணெயைச் சில ஆண்களும் பெண்களும் தேகத்தில் பூசிக்கொள்ளும் பழக்கமும் இக்குடும்பத்தாருக்குத் தொன்று தொட்டு இருந்துவருகிறதாம். நாமும் டிசம்பர் மாதத்தில் உதகைக்கு சென்றால், உதடுகளும், உடலில் சில பாகங்களும் வெடிப்பதைத் தடுக்க வெண்ணெய் பூசிக்கொள்வது உண்டு.

அன்று மட்டும் அல்லாமல் இன்றும் சில சர்ம வியாதி களுக்குத் தமிழ் வைத்தியர்கள் உடம்பில் வெண்ணெய் தேய்த்துக் குளிக்கும்படி கூறுகின்றனர். அன்றும் இன்றும் உடம்பில் பூசப்பட்ட அந்த வெண்ணெய், இக்கால நாகரிகத்தில் ஸ்நோ (Snow) என்று கூறப்படுகிறது. மங்கையர்கள் இயற்கையிலேயே நாணம் உள்ளவர்கள். மங்கையர் களின் உடலில் முதலில் ஒரு விதப் பச்சிலையைத் தடவி, பிறகு அதன் மேல் தங்களுக்கு வேண்டிய அழகுள்ள வடிவத்தைத் தோள்முழுவதும், கை, கால், முதுகின் பாதி அளவுக்குப் பச்சை குத்திக் கொள்ளுகின்றனர். சில பெண்களுக்கு நெற்றியிலும் பச்சை குத்தப்பட்டிருக்கிறது. 'நகையில்லா அழகிகள்' என்று இவர்களைக் கூறலாம். வெளியில் சென்றால் மட்டும் இவர்கள் பூத்துக்குளியைப் போர்த்துக் கொண்டு இடது பக்கத்துத் தோளின் மேல், மாராப்பு வரும்படி மடித்துச் செருகிக்கொள்ளுகின்றனர்.

தோதவ மங்கையர்கள் தங்கள் கணவன்மார்களை, 'என் ஆள்' என்று அழைப்பதன் காரணம், அவன் 'ஆண்மை உள்ளவன்' என்ற பொருளில் ஆகும். தங்களை இன்பமூட்டும் ஆண்களைத்தான் இவர்கள் மணக்கின்றனர். இவர்கள் அணியும் பூத்துக்குளி என்னும் முரடான துப்பட்டிகளைக் கோவை, சேலம் ஜில்லாக்களைச் சேர்ந்த கைக்கோளர்களும் தேவாங்கச் செட்டிகளும் நெய்து இவர்களிடம் விற்றுவிடுவார்கள். வாங்கிய துப்பட்டியில் தோதுவர்கள் வர்ணப் பூ வேலைப்பாடுகள் செய்து, அதைப் 'பூத்துக்குளி' என்று வழங்குகின்றனர்.

சில மங்கையர்கள் கையில் வெள்ளிக் காப்பும் கைமுட்டியில், கடகமும், கழுத்தில் மணியும் அணிந்திருக்கின்றனர். இவர்கள் சாதாரணமாக நம்மவரைப்போல்தான் சமைக்கின்றனர். காலை ஒன்பது மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் சாப்பிடுகின்றனர்.

தோதுவப் பெண்களும், ஆண்களும் அணியும் கொண்டைக்கு, 'மட்டிகேள்' என்று பெயர்; அதைப்பார்த்தால் கொண்டை போலவே இராது. சாதாரணமாக இவர்கள் கொண்டை போடுவதில்லை. போட்டாலும் பூ வைப்பதில்லை. இவர்கள் சம்பிரதாயப்படி, தங்களுக்கு மகவு பிறந்ததும், தரையிலோ கோணிப்பையின் மேலோ அதைப்படுக்க வைக்கின்றனர்.

குழந்தை பிறந்து மூன்று அமாவாசைகள் கழிந்தபின், முதலில் மேற்கில் தோன்றும் பிறையைக் கண்டு, மறுநாள் காலையில் குழந்தைக்கு நீராட்டி. கோவிலுக்கு எடுத்துச் சென்று. பிறகு வீட்டுக்கு வந்த பின், கிழக்குப் பக்கம் உட்கார்ந்த தாத்தாவின் மடியில் குழந்தையைக் கிழக்குப் பக்கமாப் படுக்கவைத்து, முதன் முதலாகத்

தாத்தாவின் வாயால் பெயரைச் சொல்லி, பெயரின் கடைசியில், 'தோடா' என்று உச்சரித்து, 'நாமகரணம்' செய்வார்கள். அப்பெயரை எல்லோரும் சொல்லி, நடனமாடிய பின் அரிசி, பருப்பு, பால் முதலிவைகளைக் கொண்ட விருந்து நடைபெறும்.

பிறகு தாயிடம் குழந்தையைக் கொடுக்க, அவள் பூத்துக்குளியுடன் சேர்த்து அதைத்தூக்குவதைக் காணலாம். குழந்தைகளுக்குத் தொட்டிலோ ஏணையோ கட்டும் பழக்கம் இல்லையாம். ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் சுமார் ஏழு வயதுவரையில் எல்லாச் சடங்குகளும் ஒரே விதமாகத்தான் இருக்கும். ஒரே மந்திலோ குடும்பத்திலோ குழந்தைகளே இல்லாவிட்டால், மற்ற மந்திலிருந்தோ உறவினர்களிடமிருந்தோ தங்களுக்கு விருப்பமான குழந்தைகள் எடுத்து வளர்ப்பதும் உண்டு. அப்படி எடுத்து வளர்க்கும் குழந்தைகளுக்கு எல்லாச் சொத்துரிமை களும் உண்டு.

ருதுவான பெண்களைத் தனிக் குடிசை கட்டி, சற்றுத் தூரத்தில் வைத்திருப்பார்கள்: இரவில் தனிமையில் குடிசையில் இருக்கப் பயப்படும் பெண்களுக்குப் பாட்டியோ தாயாரோ துணைக்குப் படுப்பது உண்டு. குடிசையில் இருக்கும் வரை, பெற்றோர்கள் சாப்பிடும் ஆகாரமே அவளுக்குக் கொடுக்கப்படும். தனிக் குடிசையில் இருக்கும் நாட்கள் வரையில், அவள் தரையில்தான் படுத்து உறங்கவேண்டும். பெண் ருதுவான நாளிலிருந்து தொடர்ந்து வரும் அமாவாசைக்குப்பின், முதல் வளர்பிறையன்று, அவளைக் குளிக்கச் செய்து, பூசாரியால் பூஜை செய்வித்து, மந்துக்கு வெளியில் நிற்க வைத்து, கர்ப்பூரத்தை மட்டும் சுற்றி, தீட்டுக் கழித்து, விருந்துடன் பெண்ணை அழைத்துக் கொள்வார்கள்.

இச்சடங்குகளை மங்கையர்களே கூடிச் செய்வார்கள். சாதாரண காலங்களில் வீட்டுக்கு விலக்கான பெண் தங்கள் குடிசையின் வெளித் திண்ணையில் ஒரு பக்கமாக ஒதுங்கி உட்கார்ந் திருப்பாள். இவளுக்காக மற்றவர்கள் சமையல் செய்வார்கள். இரவில் உதகையின் வெளியில் குளிராக இருப்பதால் குடிசைக்குள் கதவின் அருகில் படுத்து உறங்கவேண்டும். பண்டிகை நாட்களிலும். கோவில் விசேஷங்களிலும், குழந்தைகளுக்கு நாமகரணம் செய்யும்போது ஆண்கள் மட்டும், பூத்துக்குளி அணிந்து வட்டமாக நின்று, நான்குவித நடனம் ஆடுவது உண்டு. நடனம் ஆடும்போது, எவ்விதமான வாத்தியங்களும் வாசிப்பதில்லை. பண்டைக் காலத்தில், 'கேஞ்ஸ் மரம்' என்ற காட்டு மரத்தைக் கொண்டு நெருப்பு உண்டாக்கி வந்தனர். இன்றும் பூசை செய்வதற்கும் வீட்டு விசேஷங்களுக்கும் இத்தீயைத்தான் உபயோகப்படுத்துகின்றனர். மற்ற விஷயங்களுக்கு இன்று இருக்கும் தீப்பெட்டியை உபயோகப் படுத்துகின்றனர். இன்றும் இரவில் நெய் விளக்கைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால், இன்று சிலர் மட்டும் நல்ல விலைக்கு நெய்யை விற்று, எண்ணெய் விளக்கு உபயோகப் படுத்துகின்றனர். ஆணும் பெண்ணும் அன்று முதல் இன்றுவரை நெற்றியில் சந்தனப்பொட்டு இடுவது உண்டு. ஆண்கள் மற்ற மந்திலிருந்து வந்தாலும் சரி, தங்கள் மந்தில் இருந்தாலும் சரி, வயதில் பெரியவர்களைக் கண்டால், பெண்கள் அவர்களிடம் வந்து, மண்டியிட்டு வணங்க, அவர்கள் தங்கள் காலைத்தூக்கி, வணங்கிய

மங்கையின் நெற்றியில் வைப்பார்கள். இது அவர் களுடைய விசேஷ வணக்கமான, 'கால்மேல் புகுத்தி' - யாகும். 'காலை மேலே வைத்து' என்று இது பொருள்படும்.

பெண்கள் ருதுவாவதற்கு முன்னும் பின்னும் திருமணம் செய்யும் பழக்கம் உண்டு. பெண்களின் அழகைக் கண்டு திருமணம் செய்வதும் உண்டு. இன்று சாதாரணமாகப் பதினைந்து வயதுக்கு மேல்தான் திருமணம் செய்கின்றனர். பௌர்ணமி எந்த நாளில் வந்தாலும் சரி; அன்று திருமணம் செய்கின்றனர். திருமணத்திற்கு முன் தம்பதிகள் பேசக் கூடாதாம். ஆனால் இன்று சிலரிடம் காதல் திருமணமும் பெரியவர்களின் மூலம் நடைபெறுகின்றது. நம்மைவிட இவர்கள் பெண்களுக்கு நிறையச் சுதந்தரம் கொடுத் திருக்கிறார்கள்.

தோதுவப் பெண்களை மற்ற ஜாதியார் திருமணம் செய்வதும் உண்டாம். வசதி உள்ள ஆண்கள் இரண்டு மூன்று திருமணங்களும் செய்வது உண்டு. திருமணங்கள் இல்லாமல் சிலர், பல மங்கையர்களைத் தங்கள் ஆதரவில் என்று ஒரே மங்கையை மூன்று அல்லது ஐந்து சகோதரமார்கள் திருமணம் செய்வதும் பண்டைக் காலத்தில் இருந்தாம். கடந்த ஆண்டிலும் இருந்ததாகக் கூறினார் ஒரு தோதுவர். இதற்குக் காரணம் இவர்களில் பண்டைக் காலத்தில் ஒருத்தியை அண்ணன் திருமணம் செய்தால் அவள் அவனுடைய சகோதரர்கள் நான்கு, ஐந்து பேருக்கும் மனைவியாகவேதான் இருக்கவேண்டும். குடிசைக்குள் ஒரு சகோதரன் அவளிடம் பேசிக்கொண்டிருந்தால், அவனுடைய தடியை வெளியிலே சாத்திவைத்திருப்பானாம். அப்பொழுது மற்றொரு சகோதரன் உள்ளே நுழைய மாட்டானாம். இதற்குக் காரணம் கேட்டதற்கு, ''நாங்கள் பஞ்ச பாண்டவர் வம்சம். நாங்கள் பஞ்சபாண்டவரை வணங்குகிறோம். இங்கிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் அர்ஜுனன் குகை இன்றும் இருக்கிறது. நாங்கள் அவர்களைப் பின்பற்றி நடக்கிறோம். மேலும் பண்டைக் காலத்தில் எங்களுக்கு முக்கியமான சொத்தாக ஆயிரக்கண்கான ஏக்கர் நிலங்களும் ஆயிரக் கணக்கான எருமைகளும் இருந்தன. நாங்கள் தனித்தனியாகத் திருமணம் செய்துகொண்டால் எருமைகளும் நிலங்களும் சிதறுண்டு பிரிந்து போவதுடன். சகோதரர்களில் யாராவது இறந்தால், அந்தச் சொத்தும் கவனிப்பாரின்றி நாசமாகும். அண்ணன் மனைவி தம்பியின் மேல் கோள் சொல்லியும் குடும்பத்தில் ஒற்றுமை இன்மை உண்டாகும். சொத்தும் நாசமாகும். சகோதர்களுக்குள் பிரிவினை ஏற்பட்டால் அன்னியர்களின் எதிரில், தோள்வலி போம். எனவே ஒற்றுமையைப் பலப்படுத்து வதற்கும் நாங்கள் பஞ்ச பாண்டவர் வம்சம் ஆதலாலும், இப்படிப் பண்டைக் காலத்தில் ஒருத்தியைப் பலர் திருமணம் செய்தார்கள். ஆனால் இப்பழக்கம் இன்றும் அடியோடு மறைந்துவிட்டது என்று கூறுவதற்கில்லை'' என்று விளக்கினார்.

பெண்கள் திருமணத்திற்கு முன் கர்ப்பம் தரித்தால் அவளை யாரால் இது ஏற்பட்டதோ அவனுக்கே, பஞ்சாயத்து மூலம், மந்துக்கு முன்னால் பௌர்ணமி அன்று திருமணம் செய்து கொடுப்பார்கள்.

சாதாரணமாய்த் திருமணத்தன்று மரக்கறிச் சமையலே சமைப்பார்கள். ஆனால் பெண்ணையோ பையனையோ கன்னியா தானமாகக் கொடுக்கும் பழக்கம் இல்லையாம். ஆனாலும், சிறு வயது

முதல் பையனை வளர்த்துத் தன் பெண்ணைக் கொடுக்கும் பழக்கமும் உண்டு என்று கூறுகின்றனர். திருமணத்தன்று மந்தைச் சுற்றிக் கூடத் தம்பதிகள் பவனி வருவதில்லை. ஆனால், மற்ற மந்தில் இருக்கும் பெண்களும் ஆண்களும் திருமணத்தில் கலந்து, இன்பம் கொண்டாடி நடனம் ஆடுவார்கள்.

மணமகள் பஞ்சாயத்தார் முன்னிலையில், கேஞ்ஸ் செடியைப் பெண்ணிடம் கொடுப்பதுதான் தாலி கட்டுவதைப் போலாம். இச்செடியை அவள் கையில் ஏந்திக் கொண்டு, தாங்கள் வாழப் போகும் குடிசைக்கு முன்னால் வருவாள். நம்மில் திருமணமான பின், தம்பதிகள் வாழும் வீட்டுக்கு முதலில் வந்ததும், நாம் ஆலத்தி சுற்றுகிறோம்; பால் காய்ச்சுகிறோம், இங்கே பெரியவர்கள் ஒரு வெங்கலச் செம்பில் தண்ணீரும், பூவும் வைத்திருப்பார்கள். அதை மணமகள் வணக்கமாகக் குனிந்து எடுத்துக்கொண்டு, முதலில் குடிசைக்குள் நுழைய வேண்டும். பிறகு சுத்தமான இடத்தில் அதை வைப்பார்கள். இத்துடன் அரைக் கல்யாணம் முடிந்தது. அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். இக்கல்யாணம் நடந்த பின் அவள் மறுபடியும், கர்ப்பம் தரித்து, ஐந்து மாதக் கர்ப்பவதியாக இருக்கும்போது. நாகமரத்தடியில் நெய்விளக்கு வைத்து, அவளை அம்மரத்தை மும்முறை வலம் வரச் செய்து மறுபடியும், அவள் மரத்தடியில் உட்கார்ந்ததும்--பூசை செய்வார்கள். பிறகு கணவன் 'புவுதூர்' என்ற செடியின் குச்சியை வளைத்துக் கர்ப்பவதியின் கையில் கொடுப்பான். அவள் அந்த வளைந்த கொம்புடன் நாக மரத்தடியில் இருக்கும் விளக்கைத் தரிசனம் செய்து, விளக்கின் அருகில் சுமார் ஒரு பூஜைச் சடங்குகள் முடிந்ததும், அவள் வீட்டுக்கு வருவாள். பிறகு தங்கள் மந்தில் இருக்கும் எல்லோருக்கும் விருந்து நடைபெறும். இத்துடன் முழுத் திருமணமும் முடிந்தது என்பதாம். இச்சடங்குகளுக்குப் பின் சில மாதங்கள் கடந்து, முதல் பிரசவத்திற் கென்று பெண் தாயகம் செல்வதில்லை. எந்தப் பிரசவத்திற்கும் பெண்கள் தாயகம் செல்வதே இல்லை.

பண்டைக் காலத்தில் இவர்களின் வம்சத்தில் பெண்ணுக்கு மூன்று வயதுத் தொடக்கத்திலும் பையனுக்கு வயது தொடங்கும் போதும் பால்யவிவாகம் செய்துவிடுவார்கள். பால்ய தம்பதி களுக்குச் சிக்கனமாக விவாகம் செய்துவிடுவார்கள். விவாகம் செய்த பின் பையனும் பெண்ணும் தங்கள் தங்கள் மந்துக்குச் செல்வார்கள். பெண் ருதுவானதும் இரண்டு மந்திலும் விருந்துகள் நடைபெறும். பையன், பெண்ணைப் பெரியவர்களானதும், தங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால், முதலில் யார் வேண்டாம் என்று கூறுகின்றனரோ அவர்கள் பால்ய விவாகச் செலவை எதிர்க்கட்சிக்கு, கிராமப் பஞ்சாயத்து மூலம் கொடுத்து விவாகரத்துச் செய்துகொள்ள வேண்டும். விவாகரத்து முடிந்ததும் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம். விவாகரத்துச் செய்யாமல், மறுமணம் செய்துகொள்ளக் கூடாது.

காதல் திருமணத்தை இவர்கள் போற்றுகிறார்கள். காதல் உண்டாகி, கர்ப்பவதியாவதற்கு முன் திருமணத்தின் பாதிச் சடங்களைப் பகலில் மந்திலேயே செய்து முடிப்பார்கள். முறை இல்லாதவனையும் மற்றொரு மந்தில் இருப்பவனையும் திருமணம் ஆன மங்கையையும் கூடக் காதல் செய்து திருமணம் செய்யலாம். பெரியவர்கள் கூடித்தான்

இந்தத் திருமணமும் நடைபெறும். ஒருவனே சகோதரிகள் இருவர் மூவரையும் காதல்செய்து திருமணம் செய்துகொள்ளலாம். இன்னும் சற்றுத்தூரத்தில் மலையின்மேல் முதலில் எங்கேயாவது ஓடிப் போவார்கள். சுமார் ஒரு வாரம் மறைந்திருந்து, பின்பே மந்துக்கு வருவார்கள். பெண்ணுக்குக் கர்ப்பம் தரித்ததும் திருமணம் நடைபெறுமாம். 'இப்படி ஓடிப் போவதுதான் எங்கள் தெய்வங்களுக்கு விருப்பம்; எங்கள் குடும்ப வழக்கமும்கூட. அப்பொழுதுதான் இல்வாழ்க்கை இன்பமாக இருக்கும்' என்கின்றனர் அவர்கள். இன்னும் சில இடங்களில் மற்றொரு முறையாகவும் திருமணம் நடைபெறுகிறது.

பெண்ணை அலங்கரித்துப் பையன் இல்லத்தில் இரவு முதல்ஜாமத்தில் அழைத்துவந்து விட்டுவிட்டுப் போவார்கள். பிறகு கர்ப்பம் தரித்ததும் கல்யாணச் சடங்குகள் நடைபெறும். இதற்கு மத்தியில் அவரவர் குடும்ப வசதிக்குத் தகுந்தபடி பல சடங்குகள் செய்வார்கள். எந்தவிதமான திருமணமாக இருந்தாலும் சரி; இரு பெற்றோர்களும் தம்பதிகளைக் காலால் ஆசீர்வாதம் செய்வார்கள். பெண் வீட்டார், அப்பொழுது தங்களால் இயன்ற எருமைகளைச் சீதனமாகக் கொடுப்பார்கள். சாதாரணமாகத் திருமணத்திற்கு மண்டபமும் பந்தலும் கட்டுவதில்லை. திருமணம் பெண் இல்லத்தில்தான் நடைபெறும்.

விதவைகள் விரும்பினால், விரும்பும் வாலிபனை, விரும்பும் காலத்தில் மணக்கலாம். மறுமணம் ஆகும் வரையில் விதவைகள் பொட்டு வைக்கக் கூடாது. விதவைகளுக்கும் பகலில் எல்லோரை யும் போலவேதான் திருமணம் நடைபெறும்.

விதவைகள் தாங்கள் ஈன்ற குழந்தைகளைத் தங்களிடமே வைத்துக்கொள்வர். விவாகரத்துச் செய்து, தாயகம் செல்லும்போது மட்டும், மகவுகள் தந்தையிடமே இருக்கவேண்டும். ஆனால் தாய், தன் குழந்தைகளைப் பார்க்கலாம். தம்பதிகளுக்குள் குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட்டால், கணவன் மனைவியைத் திட்டுவதோ அடிப்பதோ கூடாது. கணவனே தன் மனைவியை அழைத்துச் சென்று தன் தாயின் இல்லத்தில் விட்டுவிட்டு, விஷயத்தையும் விளக்கிவிட்டு வர வேண்டும். பிறகு பெற்றோரிடம் பெண்ணும், 'எனக்கு அந்தக் கணவன் வேண்டாம்' என்று சொன்னபின், பெண் தன் தாயின் இல்லத்தில் இருந்து கொண்டுவந்த பொருள்களை எல்லாம், கணவனோ மனைவியோ கொண்டு வந்து விடுவார்கள். பிறகு பஞ்சாயத்தார் விவாகரத்துச் செய்வார்கள். அவள் விரும்பினால் மறுமணம், விரும்பும் நாளில் செய்துகொள்ளலாம்; அல்லது தன் கணவனிடமே சென்றாலும் செல்லலாம். தற்காலத்தில் ரிஜிஸ்டர் திருமணமும் இங்கே வந்திருக்கிறது.

ஆதிவாசிகளைக் கொடிய வியாதிகளும், தீராத வியாதிகளும் அண்டுவதில்லை. காய்ச்சல், மலேரியா வியாதிகள் மட்டும்தான் இவர்களுக்கு வருகின்றன. இன்று மலேரியாவும் அதிகமாக வராதபடி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அவர்களிடம் யானைக்கால், குஷ்டம், க்ஷயரோகம், விரைவாதம், கண் தெரியாமை முதலிய வியாதிகள் இல்லவே இல்லை. சாதாரண வியாதிகளுக்கு அன்றும் இன்றும் பச்சிலை மூலிகைகளையே கையாளுகின்றனர். இன்று சிலர் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள்.

மங்கையர்கள் பிரசவத்திற்கு ஆஸ்பத்திரிக்குப் போவ தில்லை. அவர்களுள் மருத்துவப் பணியில் கை தேர்ந்தவர்களே, அவர்களுடைய கணவனை வைத்துக் கொண்டு பிரசவத்தைக் கவனித்துவிடுகின்றனர். பிரசவம் சிரமமாக இருந்தால், ஏதோ மூன்றுவிதப் பச்சிலைகளை அரைத்து ஓர் உள்ளங்கை யளவு குடிக்கக் கொடுத்தால், உடனே பிரசவம் இலேசாகி விடுகிறதாம். ஆனால் அப்பச்சிலைகள் எவை என்று மட்டும் தெரியவில்லை. பிரசவத்திற்குப் பின், காட்டுக் குறுமிளகு ரசம், அரிசிச் சாப்பாடு, இவை சுமார் பத்து நாட்கள் வரையில் கொடுக்கப்படும். குழந்தைக்கு எவ்விதமான பிணியும் வராமல் இருக்கத் தாய் சுமார் ஐந்து மாதங்கள் வரையில் பத்தியமாகவே கஷாயம் சாப்பிடுவார்களாம்.

மரிக்கும் தருவாயில் இருக்கும்போது, அவர்களின் வாயில் பொன் துண்டு ஒன்று வைத்துப் பாலும் ஊற்றுவார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சிறு பொன்துண்டு வைத்திருப்பார்கள். பொன் துண்டை வாயில் போடுதவால், பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை முதலியவைகள் நீங்குமாம். இறந்தவர்களை இரண்டு நாட்கள் வரையில், தங்கள் உறவினர்கள் எல்லோரும் வரும் வரையில் வைத்திருப்பார்கள். இறந்தவர்கள் உபயோகப்படுத்திய துணி, சாமான்கள் எல்லாவற்றையும் பிணத்தின் அருகில் வைப்பார்கள். மட்டமான மரத்தால் சிக்கனமாகக் கட்டில் செய்து, அதில் சுத்தம் செய்த பிரேதத்தை படுக்க வைப்பார்கள். கணவன் இறந்துவிட்டால் மனைவியைப் பிணம் போகும் திசைக்கு எதிர்த்திசையில் அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள். பிறகுதான் பிரேதம் போகிறது.

கடைசியில் எல்லாவற்றையும் மயானத்தில் தீக்கு இரையாக்கி விடுகின்றனர் சிலர். இன்னும் சிலர் பிணத்துடன் உப்பையும் கொட்டிப் புதைப்பார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஈமச்சடங்கை ஒரே விதமாகத்தான் செய்கின்றனர். ஆனால் பெண்ணுக்கு மட்டும், பூத்துக் குளி, நகைகள், வீட்டில் அவள் உபயோகப்படுத்திய சாமான்கள் முதலியவைகளை வைத்துச் சிலர் சுடுவார்கள். சிலர் புதைப்பார்கள். பிணத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லும்போது, மார்வார் நாட்டு மக்களைப் போல், முகத்தை நன்றாகத் துணியால் மூடி, நேராகப்படுக்க வைத்துக் கட்டிலைப் பாடையைப் போல் கட்டி, எடுத்துச் சென்று மயானத்தில் சுடுவார்கள், அல்லது புதைப்பார்கள். பிணத்தைப் புதைத்த அல்லது சுட்ட அன்றோ அல்லது அடுத்த ஆண்டோ செய்யும் தோதவர்களின் மற்றொரு ஈமச் சடங்கில் இரண்டு வகை உண்டு.

1. அதை அவர்கள் பெரிய பண்டிகையைப்போல் கொண்டாடுகிறார்கள். இறந்த தினத்தன்றோ மறுநாளோ செய்யும் சடங்கு, 'பச்சைச் சாவு'. அதற்கு அடுத்த பௌர்ணமியன்றே அல்லது அதற்கு அடுத்த ஆண்டோ செய்யும் சடங்கு, 'பால் சாவு' அல்லது 'காய்ந்த சாவு' எனப்படுகிறது. இறந்தவர்களை எரித்து விட்டு நகம், தலைமயிர், மண்டை ஓடு முதலியவற்றைப் பத்திரப்படுத்திச் சில மாதங்களுக்குப் பின் அவற்றை வைத்துக்கொண்டு, 'பால் சாவு' அல்லது 'காய்ந்த சாவு' என்று சடங்குகள் செய்கிறார்கள்.

பச்சைக் சாவில், எடுத்த நகம், மயிர் முதலியவைகளை நெருங்கிய பெண் பந்துக்களே பாதுகாக்க வேண்டும். சில சமயங்களில் கணவனுடைய பால் சாவுக்காக விரதம் இருக்கும் பெண்கள், ருசியுள்ள

பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது. நாளுக்கு ஒரு வேளைதான் சாப்பிடவேண்டும். இந்தக் கடுமையான விரதம் பல மாதங்களுக்கு நீடிப்பதும் உண்டு. பால் சாவுச் சடங்கு முடிந்ததும், இறந்தவனுடைய சாமான்கள், அவன் தன் வாழ்க்கை யில் உபயோகப்படுத்திய சில முக்கியமான பொருள்கள் எல்லாவற்றையும் ஒரு பெரிய பானையில் இட்டோ துணியில் மூட்டை கட்டியோ புதைத்து விடுவார்கள்.

புதைத்த இடத்தைப் பெரிய நீண்ட பாறையால் மூடிவிடுவார்கள்.

ஒருவன் இறந்தபின், 'பச்சைச் சாவும்', 'பால்சாவும்' கழிந்துவிட்டால் அவனுடைய ஆத்மா ஒரு நூல் பாலத்தின் வழியாகத் தெய்வத்திடம் போய்ச் சேருமாம். பாவிகளாக இருந்தால் நூல் அறுந்து இருளான பாதாலத்தில் போய்ச் சேருமாம். பாவம் தீரும் வரையில் இருந்து பின்பு தெய்வத்தை அடைடி.மாம்.

ஒரே மந்தில் பல 'பால் சாவு' அல்லது காய்ந்த சாவு' ஒன்றாகக் கூடுமானால், எல்லாவற்றையும் மந்துப் பூசாரி' ஒரே நாளில் மொத்தமாக வைத்துக்கொள்ளுவார். இவ்விதமான சந்தர்ப்பத்தில் பல எருமைகளைப் பலியிடுவார்கள். ஒவ்வொரு துக்கமடைந்த குடும்பத்தினரும் குறைந்தது இரண்டு எருமைகளாவது கொடுப் பார்கள். இதற்குப் புதியதாகப் பெரிய பந்தல் போடுவார்கள். தோதுவர்கள் புதிய வெள்ளை ஆடையாகிய பூத்துக்குளியை அணிந்து கூட்டமாகக் கூடுவார்கள். தோதுவப் பெண்கள் குளித்து விட்டுத் தலைக்கு வெண்ணெய் தடவித் தங்களுடைய கூந்தலைப் புதியதாகச் சுருட்டிச் சுருட்டி விட்டிருப்பார்கள். எல்லாத் தோதுவப் பெண்களும் இச்சடங்குக்குப் பெரிய பெரிய வர்ணக்குடை பிடித்துக்கொண்டு தங்களால் இயன்ற ஆகாரத்தைத் தலையின் மேல் கூடையில் வைத்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்துக்கு வருவார்கள். ஆனால் தோதுவர்களுடைய தலைவருக்கு மாத்திரம், பிரம்பால் கூடை செய்து பட்டை பட்டையாகப் பல வர்ணங்கள் பூசி, அதில் ஆகாரத்தை எடுத்துத் தோளின்மேல் வைத்து அழகாக ஆடிக்கொண்டு வருவார்கள்.

தோதுவப் பெண்கள் தலைவனுக்குப் பண்டங்கள் கொண்டுவரும் காலத்தில் மேளமும், பாட்டும் வானத்தையேப் பிளந்துவிடும்படி முழங்கும். ஒவ்வோரு தோதுவப் பெண்ணும் இறந்தவனுடைய குடிசைக்கு எதிரிலும், தலைவனுக்கு எதிரிலும் இறந்தவனுடைய ஆடைகளையும் தலைப்பாகையையும் வைத்து மரியாதை செய்வான். இப்படி நடனமாடும் போது, அக்கூட்டத்தில் ஒருத்தி ஒரு வார்த்தை சொல்லுவார்கள். அப்பொழுது மேளங்களை முழக்குவார்கள். தோதுவர்கள் ஆடிப்பாடி ஆரவாரிப்பார்கள்.

இந்த ஆடல் பாடல் முடிந்ததும் இறந்தவனுக்காக எருமைகளைக் கழுவிச் சுத்தம் செய்து அவற்றின் கொம்புகளுக்கு வெண்ணெயைத் தடவிப் பூஜை செய்து, பிறகு மரணமடைந்தவன் செல்வம் படைத்த தோதுவனாக இருந்தால் மயானத்தில் சுமார் நான்கு எருமைகளைப் பிணத்தின் தலைப் பக்கத்தில் நிற்க வைத்து, அவற்றின் நெற்றியில் கோடரியால் அடித்துக் கொன்று, மயானத்தில்படுக்க வைத்துச் சடங்குகள் செய்வார்கள்.

சடங்குகள் முடிந்ததும் - தோதுவர்கள் ஊன் உண்ண மாட்டார்கள் - வெட்டிய எருமைகளை யாருக்கு வேண்டுமோ அவர்களுக்குக்

கொடுத்தது போக, மீதியை மயானத்திலேயே புதைத்துவிடுவார்கள். பிணத்தைப் படுக்கவைத்துச் சடங்குகள் செய்வார்கள். பின்பு பிணத்தைச் சுற்றி, மயான நடனமாடி, நாகமரத்தின் விறகை மட்டும் பிணத்தின் மேல் அடுக்கி, அத்துடன் ஒரு சிறு துண்டு சந்தனக் கட்டையையும் வைத்து, தீக்கடை கோலால், தீமூட்டி எரிப்பார்கள். அன்றோ அல்லது மறுநாளோ தோண்டி, தண்ணீரை அதில் ஊற்றிய பின் சாம்பலை அதில் கொட்டி மூடுவார்கள். மூடின பின் குழிக்கு மேல் ஒரு கல்லை நாட்டி, 'நடுகல்' என்று சொல்லி, ஒரு புதிய மட்பானையை நடுகல்லின் மேல் உடைத்த பின், அக்கல்லை எல்லோரும் விழுந்து, விழுந்து வணங்கி விட்டு, திரும்பிப் பார்க்காமல் மயானத்திலிருந்து அவரவர்களின் மந்துகளுக்குச் சென்று, குளித்த பின் குடிசைக்குள் நுழைய வேண்டும்.

ஓர் அமாவாசை கழித்து, மரணம் அடைந்தவர்களுக்குக் 'கேடர் வித்யிள் (கருமாதி)' செய்வதும் உண்டு. இரண்டு எருமை களைப் பலி கொடுத்து, எல்லோரும் கூடி, முதலிலேயே இறந்தவர் களிடமிருந்து எடுத்து வைத்திருந்த தலை மயிரை, அவர்கள் உபயோகப்படுத்திய பூத்துக்குளிக்குள் வைத்து, மயானத்தில் அப்படியே எரித்து விடவேண்டும். இதற்கு 'பர்ஸ் சாவ்' என்று பெயர். இச்சடங்கு செய்யும்போது. சாமைப்பொறியை வீட்டில் செய்து, மயானத்திற்குக் கொண்டு போய், மயானத்தில் கூடி இருப்பவர்களுக்குப் பொறி ஒரு படியும் (சென்னை அரைப் படி) ஓர் அச்சு வெல்லமும் கொடுப்பார்கள். கணவன் இறந்தால் மனைவி மயானத்தில் பூத்துக்குளியால் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டும். மனைவி ஒரு மாத காலம் வரையில் முக்காடு போட்டுக் கொண்டிருக்கவேண்டும். கருமாதி செய்த பிறகு இதை எடுத்து விடலாம். மற்ற நாட்களில் முக்காடு போடக்கூடாது. மனைவி இறந்தால் கணவன் மயானத்திற்குப் போகலாம். மேற்கண்ட சடங்குகள் போல் செய்து கணவனும் ஒரு மாதம் வரையில் ஒரு துண்டுத்துணியால் முக்காடு அணிந்திருக்க வேண்டும். திருமணமாகாத குழந்தைகளும் வாலிபர்களும் மரித்தால், பெண்ணுக்கு ஆணோ, ஆணுக்குப் பெண்ணோ, இதைப்போல் முக்காட்டுச் சடங்கு செய்யவேண்டும். ஆனால் எல்லாச் சடங்குகளையும் செய்த பின் அவர்கள் மட்டும் அன்றே மயானத்தில் முக்காட்டை நீக்கிவிட வேண்டும்.

மயானச் சடங்களில், தாய் மாமன் இறந்தால் மட்டும், அவனுடைய சகோதரியின் பிள்ளைகள் யாவரும் மொட்டை யடித்துக்கொள்ள வேண்டும். ஈமச் சடங்கில் தாயும் தகப்பனும் மரணமடைந்தால் மட்டும் முதல் மகன் அரிசிச் சோறும், பாலும் பிணம் சுடும் வரையில் சாப்பிடக் கூடாது சாமைச்சோறுதான் சாப்பிட வேண்டும்.

தோதுவர்கள் வாழும் ஊர் ஒவ்வொன்றுக்கும் தனித் தலைவன் உண்டு. ஊர்த் தலைவனை, 'பியின் இட்பா' என்று அவர்களின் மொழியில் அழைக்கின்றனர். ஊர்மக்கள் சேர்ந்து வயதானவராகவும் அனுபவம் உள்ளவராகவும் பார்த்துத் தலைவனைத் தேர்ந்தெடுப் பார்கள். ஒரு மந்தில் பஞ்சாயத்துக் கூடும்போது அந்த மந்தில் உள்ள வயதானவர்கள் எல்லோரும் பஞ்சாயத்து அங்கத்தினராக, வட்டமாக உட்கார்ந்து குற்றங்களை யும், கிராம விவகாரங்களையும், பஞ்சாயத்து

மூலம் வாதாடி, குற்றவாளிக்கு ஓர் எருமை அபராதத் தண்டனையோ ரூபாய்கள் அபராதத் தண்டனையோ விதிப்பது உண்டு. எருமையும், ரூபாயும் கொடுக்க இயலாதவர்கள், எல்லோருடைய முன்னிலையிலும் மன்னிப்புக் கேட்க வேண்டும். பூசாரி விரும்பினால் பஞ்சாயத்தில் கலந்துகொள்ளலாம். கொலை, களவு, சண்டைகள் ஒன்றும் இவர்களுக்குள் நடைபெறுவதில்லை. பெண்கள் விஷயமாகத்தான் கிராமத்தில் சிக்கல்கள் உண்டாவது உண்டு. திருமணம் ஆகாத மங்கையோ கணவனை ரத்துச் செய்யாதவளோ கற்புத் தவறினால் அவளுக்குக் கொஞ்சம் ரூபாய்கள் அபராதம் விதிப்பது உண்டு. கிராமப் பஞ்சாயத்திற்கு, 'நேய்ம்' என்று தொதுவமொழியில் பெயர். இச்சொல், 'நியாயம்' என்ற தமிழின் திரிபாக இருக்கலாம்.

ஆண்களும் பெண்களும் நாளொன்றுக்குச் சுமார்முப்பது மைல் சலிப்பின்றி நடக்கும் ஆற்றல் உடையவர்கள். இவர்கள் ஓர் இடத்தில் நிரந்தரமாகக் குடிஇருப்பதில்லை. ஏனென்றால், எருமைகளுக்குப் புல்கிடைக்கா விட்டால், நீலகிரியிலேயே புல் கிடைக்கும் இடத்தைத் தேடிச் சுற்றிக்கொண்டிருப்பார்கள். தோதுவர்களுக்குச் சொத்து எருமைகள்தானாம். மந்தில் ஆயிரக் கணக்கான எருமைகளை வளர்த்துப் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளை மலிவான விலைக்கு உதகையின் கடைவீதியில் விற்பனை செய்து, தங்களுக்கு வேண்டிய பொருள்களை இன்று வாங்குகிறார்கள். பண்டைக் காலத்தில் கிழங்குகள், பால், பழம் முதலியவைகள்தான் ஆகாரமாம். இன்று தோதுவர்களின் எருமைகள் கட்டி வைக்கும் பட்டிக்கு 'டி' என்று பெயர். ஆனால், எருமைகள், கன்று போடும் சமயம் பார்த்து அதற்கு என்றிருக்கும் 'குஷ்' என்ற தனி இடத்திற்குக் கொண்டு செல்கின்றனர். நாம் எப்படி, வீட்டு விலக்குக்கும் பிரசவத்திற்கும் தனியிடம் ஒதுக்கி வைக்கின்றோமோ அதைப்போல் தனி இடத்தில் எருமைகளையும் இவர்கள் வைக்கிறார்கள். கடவுள், மனிதன், எருமை இவற்றைத் தவிர உலகில் மதிப்புடைய வேறு ஒன்றும் இல்லை; எவருக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்ற நம்பிக்கை இன்றும் பலருக்கு இருக்கிறது.

பெண்கள் அன்றுமுதல், இன்று வரையில் பால் பாத்திரங்கள் துலக்குவது, குடும்பத்தைக் கவனிப்பது, முதலிய வேலைகளைச் செய்கின்றனர். ஓய்வு நேரத்தில், 'பூத்துக் குளி' என்னும் துப்பட்டிக்கு அழகாகக் கரை பின்னுதல் முதலியவைகளைக் கவனிக்கின்றனர்.

இவர்கள் காட்டு விலங்குகளை வேட்டை யாடுவதும் இல்லை; உண்பதும் இல்லை. ஆண்களுக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்தால் தேன் சேகரித்துச் சேமித்து வைக்கின்றனர். பெண்கள் தங்கள் 'ஆள்' சேகரித்த ஆகாரப் பொருள்களில் ஒரு பகுதியை மாரிகாலத்திற்கு என்று சேமித்து வைத்துக்கொள்ளுகின்றனர். ஆண்களோ நிகழ்காலத்தில் வாழ்கிறார்கள். மது கிடைத்தால் நன்றாகக் குடிப்பார்களாம். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறை நன்றாக ஆகாரம் சாப்பிடுவார்கள்! இவர்களுக்குத் திங்கட்கிழமைதான் விசேஷமான நாள். அன்று குளித்துப் பூஜை செய்வார்கள். ஊரில் சந்தை முதலியவைகள் அன்று நடைபெறும். அன்று விடுமுறை நாள்.

ஒவ்வொரு மந்துக்கும் ஒரு பூசாரியும் தலைவனும் உண்டு. ஆண்களும் பெண்களும் காலையில் எழுந்ததும் கை, கால் முகம்

முதலியவற்றைக் கழுவிக் காலைக் கடனை முடித்துக்கொண்டு, 'சூரிய வணக்கம்' செய்யும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறதாம். இதைக் 'கைமுக்தி' என்று அவர்களின் மொழியில் கூறுகின்றனர்.

'சூரிய வணக்கம்' முதல் முதலில் எந்நாட்டில் எக்காலத்தில் தோன்றியது என்பதற்கு, இன்றும் சரியான சரித்திரச் சான்றுகள் கிடைக்கவில்லை. அது எல்லா மதத்தினர்களிடத்திலும் அன்றும் இன்றும் இருந்து வருகிறது என்பதற்கு மட்டும் பல சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன.

ரிக்வேதம் தோன்றுவதற்கு முன்னால், கல் தோன்றி மண் தோன்றாத வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகமிக முற்பட்ட பழங்காலந் தொட்டே, சூரிய வணக்கம் உலகின் கண் பல பாகங்களிலும், இருந்திருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

காஷ்மீரத்தில் உள்ள மார்த்தாண்டம் கோவிலும் (699. A.D.) பூரியிலிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள, சூரியனார் கோவிலும் (1238-64) சூரிய பகவானுக்காகக் கட்டப்பட்டவை. போர்ச்சுகீசியப் பிரயாணி ஒருவர், 'அக்பர் சூரிய வணக்கம் செய்தார்' என்று கூறியுள்ளார். க்ஷத்திரிய வம்சத்தினரும் சூரிய வணக்கம் செய்வார்கள். பைபிளில், யூத வம்சத்தார்கள் சூரியனை வணங்கியதாகப் பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் தீர்க்க தரிசனம் கூறுகிறது. இப்படிப் பல செய்திகள் தெரிவதால் எந்நாட்டில், என்று, 'சூரிய வணக்கம்' முதன் முதலாக உண்டானது என்று கூறுவதற்கில்லை. தோதுவர்கள், பல தெய்வங்களை வழிபட்டு, பல கதைகளைக் கூறினாலும் பஞ்ச பாண்டவர்களை அதிகமாக வணங்குகிறார்கள்.

பண்டைக் காலத்தில் ஒரு கல் வைத்து வணங்கிய இடமே இப்போது, 'ஒத்தைக்கால் மந்து' (உதக மந்து) என்று ஆய்விட்டது. இன்றும், இவர்களின் பெரிய கோவிலுக்குள் ஒரு கல்லே இருக்கிறது. கோவிலின் உச்சியிலும் ஒரு பெரிய கல்லை வைத்திருப்பதைக் காணலாம். இவர்கள் பஞ்சபாண்டவர் வம்சம் என்று கூறுவதற்குச் சான்றாக, கோத்தகிரியில், பஞ்சபாண்டவர் குகை ஒன்று இன்றும் இருக்கிறது.

இவர்கள் தெய்வத்திற்கென்று தலைவாழையிலையில் பால், தயிர், வெண்ணெய் முதலியவைகளைப் படைப்பார்கள். இவர்கள் பூசைக்கும், பாலில் கலப்பதற்கும் தண்ணீர் எடுக்கும் இடத்திற்கு, 'பாலி நீபா' என்று பெயர். இவ்விடத்தில் மற்றவர்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது, மற்றக் குடும்ப வேளைகளுக்குத் தண்ணீர் எடுக்க 'அர்ஸ் நீபா' என்ற இடம் ஒன்றை ஒதுக்கி இருக்கின்றனர். எருமைகளைத் தெய்வமாக வழிபடுவதால், எருமைகள் போகும் பாதையில் பெண்கள் போகக் கூடாது. பால் சேகரிக்கும் பெண்கள் மட்டும், அப்பாதையில் குறிப்பிட்ட நேரத்தில் பால் சேகரிக்க மட்டும் போகலாம். அப்பாதையை, 'கால் வல்' என்று அழைக்கின்றனர். 'கால் வழி' என்ற தமிழின் திரிபாக இது இருக்கலாம். 'மூக்குறிச்சி, தேக்குறிச்சி' என்றும் தெய்வங்களையும் இவர்கள் வழிபடுகிறார்கள். அதைப்பற்றிப் பல கதைகளும் உண்டு. எக்காரணங்களைக் கொண்டும், எவ்விதமான ஆபத்து ஏற்படும் நிலையிலும் பெண்கள் - முகம்மதிய மங்கையர்களைப் போல் - கோவிலின் எல்லைக்குள் போகக் கூடாது. கோவிலுக்கு வேண்டிய

பணிகளை ஆண்களே செய்கின்றனர். பிரதி தினமும் காலையில் பூசை செய்யப்படும். விசேஷமான நாட்களில் பூசை செய்து விருந்தும் நடனமும் நடைபெறும். அப்பொழுது சிலருக்கு ஆவேசம் வந்து, நடக்கப்போகும் சில விஷயங்களைக் கூறி, அதற்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும், மற்றத் தோதுவர் களுக்குப் புரியாத மொழியில் பேசுவார்கள். ஆனால் ஆவேசம் இருக்கையிலேயே, அதை விளக்கும்படி கேட்டு அவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை தெய்வத் திருவிழா இங்கே நடைபெறும். மற்ற இந்துத் திருவிழாக்களையும் இவர்கள் கொண்டாடுவது உண்டு.

பேய், மந்திரம், சூனியம், கண்படுதல் முதலியவைகளில் இவர்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு. 'கணர் வழுவதா' என்று துணி, சாப்பாடு, பணம், உடல் அமைப்பு, நகை முதலியவைகளைக் காட்டிக் 'கண் விழும்' என்று சைகை காட்டுவார்கள்.

கோவில் சடங்குகளுக் கென்று கோவில் உண்டியில் பிரியப்பட்டவர்கள், பிரியப்பட்ட நாட்களில், பிரியப்பட்ட பணத்தைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். ஆனால் கோவிலுக்கு என்று எவ்விதமான உயிர்ப் பலியும் கொடுப்ப தில்லை. எருமைகள் கோவில் எல்லைக்குள் போகாதபடி, பாறைகளைக் கொண்டு சுவரும், வாசற்படியும் கட்டியிருக் கின்றனர். ஆனால், கெட்ட தேவதைகளுக் கென்று ஆண்டுகளுக்கு ஒருமுறை எருமைப் பலி கொடுக்கின்றனர். பாம்புக் கடிக்கு மந்திரம் உண்டு. எருமைகளைத் தாக்கும் புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் தங்கள் எல்லைக்குள் வராதவண்ணம் மந்திரத்தால் இவர்கள் கட்டுக் கட்டுகிறார்கள்.

இவர்கள் பேசும் மொழிக்குத் 'தொதவ பாஸ்' என்று பெயர். அம்மொழிக்கு இலக்கணமும், இலக்கியமும் இல்லை. அவர்கள் உச்சரிக்கும் சில வார்த்தைகளை எழுதமுடியாது. அவர்கள் பாட்டை எந்த மொழியிலும் எழுதமுடியாது. ஆனால், 'டேப்ரிகார்டு' எடுக்கலாம்.

பலர் இவர்களைப் பல பாகங்களிலிருந்து காணவருவதால், பலர் பேசும் மொழிகளை, இவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளுகின்றாக்கள். சிலர் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதவும், வாசிக்கவும் பழகி யிருக்கிறார்கள். உலகிலேயே தோதுவர்கள் ஒரு தனி ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று மேலை நாட்டினர்களாலும், மற்றவர்களாலும் கூறப் பட்டிருப்பதால், இவர்களைப் போன்றவர் உலகில் இல்லை என்றே கூறலாம்.

இவர்கள் மொழியில் கிழமைகள் தனியாக இருக்கின்றன.

கிழமைகள்:

தமிழ்		தொதுவ மொழியில்
திங்கள்	..	துவ்வும்
செவ்வாய்	..	ஆம்
புதன்	..	புதுவும்
வியாழன்	..	தாம்மு
வெள்ளி	..	பில்ட்டி
சனி	..	தன்னி
ஞாயிறு	..	ஆஸ்சும்

மொழிகள்:

	தமிழ்		தொதுவ மொழியில்
1.	எருமை	..	ஈர்
2.	ஆனைக்கால்	..	ஆண்கோ
3.	ஈரம்	..	சீத்
4.	எலி	..	ஹிஸ்
5.	ஏழை	..	ஏளி
6.	கடவுள்	..	தேர்வ்
7.	காகம்	..	காக் இ
8.	குடிசை	..	குட்ல்
9.	கை	..	கை
10.	தும்மல்	..	திப்பித்
11.	தொடை	..	தொடர்
12.	மருந்து	..	மத்து

நூற்றுக் கணக்கான இவர்களின் மொழிச் சொற்களை இங்கே எழுத முடியாது. பண்டைக் காலத்தில் தோதுவர்களுக்கும், கோத்தர் களுக்கும் நீலகிரி சொந்தமாக இருந்த ஒரு காரணத்தால், அரசாங்கம் இவர்களிடமிருந்து, நிலத்திற்கோ, வீட்டுக்கோ, வயல்களுக்கோ எவ்வித வரியும் இன்றுவரை வாங்குவதில்லை. இன்று படிப்படியாக இவர்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்து, இலவச விடுதியும் வீடும் குழந்தைகளுக்குக் கல்வி ஞானமும் ஊட்டி வருகிறார்கள்.

9

நான் பழகிய கோத்தர்

தேவர்களைப் போலவே நீலகிரியைச் சேர்ந்த பழங்குடி மக்கள் கோத்தர், குறும்பர் என்பது அநேகருக்குத் தெரியாது.

நீலகிரியில் உள்ள அக்காலில்தான் கோத்தர்கள் கூட்டமாக வசிக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்திலேயே கோத்தர்கள் வசிக்கும் இடங்கள் மொத்தம் ஏழு கிராமங்கள். அவற்றின் பெயர்களையும், அவர்களின் மொழியிலேதான் அமைந்திருக்கிறார்கள்.

1. அக்கால் கோத்தகிரி, 2. கீழ்க் கோத்தகிரி, 3. திருச்சிகடி கோத்தகிரி, 4. கொல்லிமலைக் கோத்த கிரி, 5. குந்தைக் கோத்தகிரி, 6. கோலூர்க் கோத்தகிரி, 7. வைனாடுக் கோத்தகிரி என்று கோத்தர் ஊர்களுக்கெல்லாம் முடிவில் 'கோத்தகிரி' என்று வருவதற்குக் காரணம் என்ன? என்று கேட்டேன்.

''நாங்கள் பூர்வ காலத்தில் கோத்தகிரியில் தான் வசித்தோம். சந்ததிகள் அதிகமாக ஆகப் பல ஊர்களில் பரவினோம். தோதவர் களைப் போலும், படகர்களைப் போலும் எங்களை முதலில் ஆங்கிலேயர்களும் மற்றவர்களும் கண்டுபிடிக்கவில்லை. ஏனென்றால் கோத்தகிரி, ரயில் நிலையத்திலிருந்து சுமார் இருபது மைல் மேற்குப்பக்கத்தில் இருப்பதாலும், ரயில், பஸ், வண்டிகள் முதலிய போக்குவரவு சாதனம் குறைந்திருப்பதாலும், ரயில் வண்டி ஓடுவதற்கும் இன்னும் இயற்கை

இடம் அளிக்காததாலும், சமீபத்தில்தான் பஸ் போக்குவரவு ஏற்பட்டதாலும், அதிக நாட்கள் வரையில் நாங்கள் தனித்தே இருந்தோம்'' என்று கூறினார்கள்.

சுற்றிலும் சோலைகளும், மலைகளும் சூழ்ந்த இடம். நீர்வீழ்ச்சிகளின் ஓசைகள் காதில் விழும். இவ்வளவு இயற்கையின் மத்தியிலே கோத்தர்களின் ஊரான 'அக்கால்' அமைந்திருக்கிறது. இவர்கள் தங்களைக் கோத்தர் என்றும், தோதவர்களையும் குறும்பர்களையும் தங்கள் சகோதரர்கள் என்றும், ஒரு தாயின் மக்கள் என்றும் கூறிக்கொள்ளுகிறார்கள்.

இவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பது தெரியவில்லை. தொன்றுதொட்டு நீலகிரியில் வசிப்பவர் என்றும் கூறுவதற் கில்லை. எக்காரணம் பற்றியோ இவர்கள் மலைகளையும் அருவிகளையும் தாண்டித் தனித்துக் கோத்தகிரிக்கு வந்தனர் போலும்.

முற்காலத்தில் இந்த ஜாதியார்கள் கோத்தகிரியில் அதிகமாக வசித்ததால், அவர்கள் வசித்த இடத்துக்குக் 'கோத்தகிரி' என்று பெயர் வழங்கலாயிற்று.

நெருங்கிப் பழகிய பிறகும் மங்கையர்களின் முக அடையாளம் கண்டுபிடிப்பது சற்றுச் சிரமம். சிறுமிகள் முதல் பெரியவர்களாக வளர்ந்த ஸ்திரீகள் வரையில் கோத்த மங்கையர்களின் முகத்தில் வடிவு, வட்டமாகவும் அழகாகவும் பரந்தும் இருக்கிறது. கபடமற்ற மனத்தை இவர்களின் முகங்கள் காட்டுகின்றன.

ஆண்கள் சாதாரணமாக நம்மைப் போலவேதான் இருக்கிறார்கள். அவர்கள், பண்டிகைக் காலங்களிலும் சரி, விசேஷமான நாட்களிலும் சரி, தங்கள் பண்டைக் கால வழக்கப்படிதான் உடை தரித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் சில ஆண்டுகளாகத்தான், ஆண்கள் மட்டும் நம்மைப்போல் பல வகையான உடைகளைக் கலந்து அணிந்துகொள்ளுகிறார்கள். ஆனால், அன்றும் இன்றும் பூசாரி மட்டும் பண்டை வழக்கப்படி, 'பூத்துக்குளி' தான் அணிதல் வேண்டும் என்ற சட்டம் இன்றும் உண்டு.

பூத்துக்குளியை அதிகச் செலவுசெய்து நெய்ய வேண்டி இருப்பதால் இப்பொழுதெல்லாம் பூசாரி மேல்துண்டுடனும் வேஷ்டியுடனும் தான் இருக்கிறார். கல்லுருகப் பெய்தாலும் சரி, புல்லெரியக் காய்ந்தாலும் சரி; பூசாரி வெள்ளைத் துண்டைவிட வேறொன்றும் அணிவதோ போர்த்துக்கொள்வதோ இல்லை.

கோத்தர்கள் காலையில் தண்ணீரில் குளிப்பர், ஆண்கள் எல்லோரும் கோவிலுக்குச் செல்லுகிறார்கள். பூசாரி தூபம் போட்டபின் பூசை செய்யப்படுகிறது. பிறகு யாருக்காவது தெய்வ அருள் வருகிறது. அருள் வந்தவர் நெருப்பைக் கையில் அள்ளுகிறார். பிறகு தெய்வத்தின் பெயரால் சுமார் நான்கு அல்லது ஐந்து குண்டு எடையுள்ள உண்டைக் கல் ஒன்றை வலது கையின் நடு விரல் ஒன்றாலேயே தூக்கித் தோளின் பக்கவாட்டமாகப் பின்புறம் போட்டுவிடுகிறார். அருள் வந்தவர் தூக்கிய அந்த உருண்டைக் கல்லை என் முழுப்பலத்தைப் கொண்டும் தரையில் உருட்டவே முடியவில்லை. அன்று முதல் அருள் வந்து கல்லைத் தூக்கிய வருக்குப் 'பூசாரி' என்ற பட்டம் கொடுத்துவிடுகிறார்கள். பூசாரி கிராப் வைத்துக்கொள்ளக் கூடாது.

குடுமிதான் வைத்துக்கொள்ள வேண்டும். பூசாரி, என்றும் சுத்தமாக இருக்கவேண்டும். பூசாரியின் மனைவி இறந்தால், அன்று முதல், 'பூசாரி' என்ற பட்டம் நீங்கிவிடும். புதிய பூசாரியை ஏற்படுத்தி விடுவார்கள். மனைவி இறந்த பூசாரி மறுமணம் செய்துகொள்ளக் கூடாது. பூசாரி, என்றும் குடும்பத்துடன்தான் இருத்தல் வேண்டும். தெய்வத்திற்குப் பிரசாதம் வைப்பதும், காட்டு வாழை இலையில்தான் வைக்கிறார் பூசாரி. ஆண்களும் பெண்களும் அணியும் துப்பட்டி ஆடையைத் தோதவர்கள் 'புதுக்குளி' என்றும், கோத்தர்கள், 'பூத்துக்குளி' அல்லது 'வராடு' (கோத்த மொழி) என்றும் கூறுகின்றனர். தம்பதி களுக்கு இது தவிர எவ்வித ஆடையையும் உபயோகப்படுத்தக் கூடாது.

இம்மங்கையர்களின் தோற்றங்களையும், உயரங்களையும் கண்டால் இர்வகள் பர்மா, சீனா, மங்கோலியா முதலிய நாடுகளி லிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிதறுண்டு வந்திருக்க வேண்டு மென்று சிந்திக்கவேண்டி வருகிறது. ஏனென்றால் மங்கையர்கள் உயரத்தில் மட்டமாகவும், பரந்த முகத்தோற்றத்தை உடையவர் களாகவும் இருக்கிறார்கள். சுமார் நாலரை அடி உயரத்தில் ஒரே அளவாக இருக்கிறார்கள். இவர்கள் சிவந்த மேனியும், கறுத்த கூந்தலும் உடையவர்கள். கறுத்த முகமே இல்லை. கோத்தப் பெண்கள் ருதுவாவதற்கு முன் பெற்றோர்கள் திருமணத்திற்கென்று ஓர் ஆளை நிச்சயம் செய்துவிடுகிறார்கள்.

பெண்கள் ருதுவானால் நம்மைப்போலவே, சக்திக்குத் தகுந்தாற்போல் சாதாரணச் சடங்குகள் செய்து தேகசுத்தம் செய்து 'மண்டுவ்'வுடன் வீட்டுக்கு அழைத்துக் கொள்ளுகிறார்கள். அது வரையில் ஊருக்குச் சற்றுத் தூரத்திலே தனிக் குடிசையில்தான் இருக்கவேண்டும். பெண்கள் வெண்ணெய் தடவித் தங்கள் கூந்தலைச் சுருட்டி அழகாக வைத்துக்கொள்ளுகிறார்கள். மங்கையர்கள் 'மண்டுவ்' தவிர தங்கள் தலையில் எவ்விதக் காட்டுப் பூக்களையோ, நாட்டுப் பூக்களையோ அணிவதில்லை.

இவர்கள், 'மண்டுவ்' என்ற ஒருவகைச் செடியைக் கட்டாகக் கட்டித் தலைக்கு அளவாக அதை இரு பக்கங்களிலும் வெட்டி, அதைக் கூந்தலின் அடியிலிருந்து சுருட்டிக் கடைசியில் தலையின் முடிவில் சேர்த்து, நீண்ட வெள்ளிக் கொண்டை ஊசியினால் குத்தி உறுதிப் படுத்துகிறார்கள். வெள்ளி, பித்தளை, இரும்பு, செம்பு இவற்றால் செய்த கொண்டை ஊசிகள் உபயோகிக்கிறார்கள். இக்கொண்டையை அவர்கள் மொழியில் 'கொஞ்ஜி கோட்' என்று கூறுகின்றனர். இக்கொண்டை, சாதாரணமாக ஒரு வாரம் வரையில் கலைந்து போகாமல் இருக்கும். பெண்கள் வீட்டு விலக்குக் காலங்களில் 'மண்டுவ்' அணிவதில்லை. அந்நாட்களில் வீட்டுக் குள்ளும் வருவதில்லை. நம்மவர்போலவே கோத்த ஆண்களும் கொண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆனால் அக் கொண்டையை ஒரு கறுப்புக் கயிற்றால் சுற்றிக் கட்டுகிறார்கள். அக்கயிற்றின் முனையில் சிறு கோலி அளவு ஓர் உருண்டையை, வெள்ளியால் செய்து தொங்க விட்டிருக்கிறார்கள். அக்கோலி உருண்டைக்குள் கொஞ்சம் வெள்ளி, பொன், பித்தளை, இரும்பு, செம்பு, உருத்திராட்சக் காய் முதலியவைகளை வைத்துப் பூஜை செய்த பின் பூசாரி

கொடுப்பார். அக்கயிற்றால் ஆண்கள் தங்கள் கொண்டையைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

இக்கொண்டையும் இக்கயிறும் பதினெட்டு வயது வந்த பின்னரேதான் ஆண்களுக்குப் பூசாரியால் சடங்குகள் செய்து கொடுக்கப்படும். நாகரிகப்படி இன்று 'கிராப்' வைத்துக்கொண்ட சிலர் கோவிலுக்குப் போவதாக இருந்தாலும் சரி, மத சம்பந்தமான சடங்குகளைச் செய்யும்போது சரி, அக்கயிற்றைக் கழுத்திலாவது சுற்றிக்கொண்டுதான் அக்காரியங்களுக்குப் பிரவேசிக்க வேண்டும்.

இவர்கள் வெகு தூரம் போகும்போதும் அல்லது மலையின் மேல் ஏறும்பொழுதும் தங்கள் குழந்தைகளைத் தோளின்மேல் உட்கார வைத்துக்கொள்ளுகிறார்கள்.

கோத்தர்கள் தங்களுக்கு வேண்டிய பெண்ணை இன்று வரையில் தங்கள் ஜாதியிலேதான் தேர்ந்தெடுத்துக் கொள்ளு கிறார்கள். தங்கள் ஏழு ஊருக்குள் முறைப்படியோ காதலாகவோ பெண்ணைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இன்று வரையில் பெண்ணுக்கோ ஆணுக்கோ கலப்புத் திருமணம் ஆனதில்லை. காதல் திருமணமாக இருந்தாலும் சரி, பண்டைச் சம்பிரதாயத்தின்படிதான் ஊர் ஜனங்கள் சூழத் திருமணம் நடைபெறுகின்றது.

பெண்களும் ஆண்களும் சந்தர்ப்பம்போல் அவர்களின் சக்திக்குத் தக்கவாறு சௌகரியம்போல் எந்த வயதிலும் திருமணம் செய்துகொள்ளலாம். திருமணத்திற்கும், தங்கள் சக்திக்குத் தகுந்த சடங்குகளைச் செய்து கொள்ளுகிறார்கள்.

பணக்காரர்களாக இருந்தால் பெண் வீட்டார் எருமை, பசு, கோழி, ஆடு, மரச்சாமான்கள் நிலம் முதலியவற்றைக் கொடுப்பது வழக்கம். அதுவும் அல்லாமல், பெண் வீட்டாரோ மாப்பிள்ளை வீட்டாரோ 'சீதனம்' கொடுப்பமு உண்டு.

பெண்கள், திருமணத்திற்குப் பின் கால் பெருவிரலில் வெள்ளியால் செய்த 'காலாழி' அணிந்து கொள்ளுகிறார்கள். திருமணத்திற்கு நம்மைப்போலவே தாலி செய்து பூசாரியின் மூலம் மாப்பிள்ளையால் சடங்குகள் செய்து பெண்ணுக்குக் கட்டு கிறார்கள். தாலியின் தோற்றம் அவரவர் சக்திக்கு ஏற்றவாறும், அவரவர் குடும்ப சம்பிரதாயத்தின்படியும் இருக்கும். கோத்த மங்கையர்கள் எல்லோருமே சாதாரணமாகக் கைதேர்ந்த மருத்துவச்சிகளாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வாலிபப் பெண்ணுக்கும் மருத்துவப் பணியைச் சொல்லிக்கொடுத்து விடுகிறார்கள். பிள்ளைப்பேற்றுக் காலங்களில் இம்மங்கையர்கள் ஆஸ்பத்திரிக்குப் போவதோ, நர்ஸ் முதலியவர் களைக் கூப்பிட்டுப் பார்ப்பதோ இல்லை. தொன்றுதொட்டு, பரம்பரையான வழகத்தையே இன்றும் கையாண்டு வருகிறார்கள்.

படித்த சில கோத்தர்கள் மட்டும் இன்றும் பிள்ளைப்பேறு ஆபத்தானதாக இருந்தால், அச்சமயத்தில் மட்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறார்கள். அவ்விதமான சந்தர்ப்பங்களில் ஒன்பது மாதக் கர்ப்பவதியாக இருந்தாலும் சரி; நெருக்கடியான நேரமாக இருந்தாலும்

சரி; மூன்று மைல் நடந்தோ அல்லது டோலியாலும் சரி; மூன்று மைல் நடந்தோ அல்லது டோலியால் தூக்கியோதான் பிரசவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரவேண்டும். வண்டியோ பஸ்ஸோ காரோ அவர்களுடைய ஊராகிய அக்காலுக்குச் செல்ல முடியாது.

குழந்தை பிறந்து இத்தனை நாட்களுக்குப் பின் தான் பெயர் கொடுப்பது என்ற ஒரு பழக்கமோ வழக்கமோ, இல்லை. ஏனென்றால் குழந்தை பிறந்து அடுத்த வரும் முதல் வளர்பிறையில் பெயர் கொடுப்பது வழக்கம். அதாவது இரண்டாம் தேதி குழந்தை பிறந்து ஐந்து அல்லது இருபது நாட்களுக்குப் பின் மேற்கில் பிறை தோன்றினால் ஊரார் பிறை பார்த்த பிறகு மறு நாள் குழந்தைக்குப் பெயர் கொடுப்பது வழக்கம். அன்று அந்த ஊரார் எல்லோருக்கும் சக்திக்குத் தக்கவாறு விருந்து நடைபெறும். அன்று எல்லா வாத்தியங்களையும் வாசித்துச் சந்தோஷமாக நடனம் ஆடுகிறார்கள்.

மத சம்பந்தமான விஷயங்களிலும் சரி, ஆசார விஷயங் களிலும் சரி, பண்டிகைகள் கொண்டாடுவதிலும் சரி, பண்டிகை களுக்குத் தேதிகள் குறிப்பிடுவதிலும் சரி இவர்கள் பிறையைப் பார்த்துதான் கணக்குச் செய்து கொள்ளுகிறார்கள். இவ்விதம் பிறையைக் கண்டு கணக்கிடும் வழக்கத்தைக் கண்டதும், ‘இவர்கள் மெக்காமெடினா முதலிய இடங்களிலிருந்தோ எகிப்து முதலிய இடங்களிலிருந்தோ மத்திய ஆசியா மொகலாய வம்சத்தி லிருந்தோ பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிதறுண்டு வந்திருப்பார்களா?’ என்று சிந்திக்க நேர்ந்தது. எதற்கெடுத்தாலும் பிறை கண்ட பின்தான் தங்கள் மதசம்பந்தமான சடங்குகளுக்குத் தேதியை இவர்கள் குறிப்பிடு கிறார்கள். பிறையைக் கொண்டே மாதங்களையும் நாட்களையும் கணக்கிடுகிறார்கள்.

இவர்கள் தங்கள் கைக் குழந்தைகளை நம்மைப் போலவே அழகான மரத் தொட்டிலில் தூங்க வைப்பது வழக்கம். சிலர் பிரம்பால் செய்த தொட்டிலையும் உபயோகிக்கிறார்கள்.

ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் தொட்டில் போடுவதிலும். நகை முதலியவை போடுவதிலும் யாதொரு வித்தியாசமோ தனிச் சடங்கோ இல்லை. கோத்த ஆண்கள் பண்டைக் காலத்தில் பாறைகளை உருக்கி, அதிலிருந்து இரும் பெடுத்து எல்லா ஆயுதங்களையும் செய்துகொண்டார்கள். பண்டைக் காலத்தில் இவர்கள் காட்டில் வசித்தமையால், இக்கோத்தர்களில் பல தொழில் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். தட்டார், கொல்லர், கருமார், வண்ணார், குயவர், நெசவாளி, வேளாளர், பால் கறந்து வெண்ணெய் நெய் முதலியவை செய்கிறவர் என்று பல தொழிலாளிகள் எப்பணி செய்தாலும், எல்லோரும் கோத்தர் குலமென்று கருதி வருகிறார்கள். இன்றும் இவர்கள் வாத்தியங்கள் வாசிப்பதிலும் வாய்ப்பாட்டுப் பாடுவதிலும் தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நம் நாட்டில் எப்படி எல்லாத் தொழில் செய்கிறவர்களும் இருக்கிறார்களோ அப்படியே கோத்தர்களிலும் எல்லா வேலை செய்கிறவர்களும் உண்டு.

பண்டைக் காலத்தில் ஆண்களில் சிலர் வேட்டையாடி, அப்பொருள்களைப் பங்கிட்டுக்கொள்வதும் உண்டு. அப்பழக்கம் இன்றும் ஓரளவு இருக்கிறது.

வீட்டிலும் தங்களுடைய சொந்த வயல்களிலும் தோட்டங்களிலும் காலை முதல் மாலை வரையில் கோத்த மங்கையர் வேலை செய்கிறார்கள். குடும்பத்திற்கு வேண்டிய பலவிதமான தானியங்களை இன்றும் அவர்களே பயிர் செய்துகொள்ளுகின்றனர். தற்காலத்தில் வீட்டிலுள்ள சில மங்கையர்கள், நூல் நூற்பது 'லேசு' பின்னுவது, பானை செய்வது, வர்ணம் பூசுவது முதலிய பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ருதுவான பெண்களும் மணமான மங்கையர்களும் சாதாரணமாகத் தங்கள் ஊருக்குள்ளேயே தனிமையில் உலாவிக்கொண்டு வேலை முதலியவைகள் செய்யலாம். ஊருக்கு வெளியில் போவதாக இருந்தால் பெரியவர்களின் துணையின்றிப் போகக் கூடாது. கோத்த மங்கையர்கள் எங்கே சென்றாலும், இருவராகவே செல்லவேண்டும்.

இவர்களின் கோவில்கள் தகரத்தால் மேய்ந்த குடிசைகள் போல் இருக்கின்றன. சாம்பிராணித் தூபத்தைத்தான் இவர்கள், 'சக்தி' என்று கூறுகிறார்கள். இவர்கள் வழிபடும் தெய்வத்திற்குச் 'சம்மட்டீச்வரன்' என்று பெயர்.

'மங்கையர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கலாமா?'' ஆண்டுக்கு ஒருமுறை, கோடி வஸ்திரம் அணிந்து புதிய 'மண்டுவ்'வைத் தலையில் அணிந்துகொண்டு கோவிலுக்குள் இவர்கள் பிரவேசிக்கலாம். பூசாரி கொடுக்கும் விபூதி முதலியவை களை வாங்கிக்கொள்ளலாம்.

கோத்தர்களுக்குத் திங்கட்கிழமை, சனிக்கிழமை இவ்விரண்டும் நாட்களும் விசேஷமான நாட்கள். அன்றைக்குக் குளித்துச் சுத்தமாக இருப்பார்கள். திங்கட்கிழமையை விடுமுறை நாளாகக் கருதுகிறார்கள். அன்றைக்கு ஒருவரும் வேலைக்குப் போக மாட்டார்கள்.

'கூடல் மாதத்தில் முதல் பிறைக்கு எங்கள் ஜாதியார் எல்லோருக்கும் பண்டிகை தொடங்கும்' என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

'கூடல்' மாதம் என்றதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகையால் 'கூடல்' மாதம் என்றால் என்ன!' என்று கேட்டேன்.

'முகம்மதிய மாதங்களைப் போலவும், தமிழ் மாதங்களைப் போலவும், மலையாள மாதங்களைப் போலவும், கிறிஸ்தவர் மாதங்களைப் போலவும் எங்களுக்கும் வாரங்களும் மாதங்களும் தனியாக இருக்கின்றன. 'கூடல்' மாதம் என்றால் ஜனவரி மாதம்' என்று விளக்கினார்.

வாரங்களையும் மாதங்களையும் அவர்கள் மொழியில் சொல்லும்படி கேட்டேன்.

வாரங்கள்:

ஞாயிற்றுக்கிழமை: 'ஆச்வார்ம்'; திங்கட்கிழமை; 'தோ வார்ம்'; செவ்வாய்கிழமை: 'அங்கல் வார்ம்' புதன்கிழமை: 'புது வார்ம்'; வியாழக்கிழமை: 'துக்குளு வார்ம்': வெள்ளிக்கிழமை: 'வெயிலி வார்ம்': சனிக்கிழமை: 'சைதன்ய வார்ம்': என்று விளக்கினார்.

மாதங்கள்:

(1) கூடல் (2) ஆலாணி (3) நல்லாணி (4) ஆணி (5) ஆடி (6) ஆதர் (7) ஆவணி (8) பெரட்டாதி (9) தொட்திவிளி (10) கிர்தீவிளி (11) தை (12) பெம்மட்டி' என்றும் கூறினார்கள்.

இம்மாதங்களைத் தமிழ் மாதங்கள் தொடங்கும் அன்றே தொடங்கவேண்டும். கூடல் மாதத்தில் பிறையைக் கண்டதும் இவர்களுக்குத் திருவிழா தொடங்கும். இதை அறிய இவர்கள் பண்டைக் காலத்தில் ஓர் அடையாளம் வைத்திருந்தார்களாம்.

கூடல் மாதத்தில் பண்டிகை முடிந்த பின் அடுத்த மாதத்திலிருந்து தொடர்ந்துவரும் ஒவ்வொரு பிறைக்கும் பூசாரி எல்லோரிடமும் இருந்து வசூலித்த ஒரே ஒரு வெள்ளிக் கால் ரூபாயை கோவிலில் இருக்கும் உண்டியில் போடுவது வழக்கமாம். அப்படிப் பன்னிரண்டு கால் ரூபாய்கள் சேர்ந்ததும், பன்னிரண்டு பிறைகள் முடிந்தது என்று அந்தக் கடைசிப் பிறையாகிய கூடல் முடிந்தது என்று அந்தக் கடைசிப் பிறையாகிய கூடல்மாதப் பிறையில் திருவிழா நடத்துவார்களாம். இப்பழக்க வழக்கங்கள் இன்றும் உண்டு. அவர்கள் கூறும் கோத்த மாதங்களில் சில மாதங்கள் தமிழ் மாதங்களாகவே இருக்கின்றன.

பேய், பிசாசு, மந்திரம் முதலியவற்றின்மேல் இவர்களுக்குப் பண்டைக் காலத்தில் அசாத்திய நம்பிக்கை இருந்தது. யாரேனும் ஒருவர் இறந்துவிட்டாலும் கூட, 'பிசாசு அடித்துவிட்டது' என்று சொல்லும் ஒரு மூட நம்பிக்கை அன்று இருந்தது. ஆனால் இன்று அவ்விதமான மூடநம்பிக்கைகள் அதிகம் இல்லை.

தேவதைகளுக்கு விசேஷமான நாட்களில் தூபம் போட்டுப் படைக்கும்போது, இக்கூட்டத்தாரில் யாருக்காவது தெய்வம் வந்து ஆடுவது இன்றும் வழக்கம். அவர்களுடைய தெய்வங்களுக்குப் பால், சாமை அரிசி, நெய், உப்பு, கசல் தானியம் முதலியவைகளைச் சேர்த்து, மங்கையர்கள் தேக சுத்தத்துடன் குளித்துக் கோடி வஸ்திரம் அணிந்து - புதிய பானையில் பொங்கல் இடுவார்கள். இப் பொங்கலைத் தெய்வத்திற்கு படைத்தபின் ஊரார் சாப்பிடுவார்கள்.

இவர்களும் தோதவர்களும், குறம்பர்களும் பேசுவது ஒரே மொழி. அதற்குக் 'கோவ் பாஷை' என்று பெயர்.

ஆனால் இம்மூவரும் பேசும்போது நம் தமிழில் எப்படித் தஞ்சையிலும் திருநெல்வேலியிலும் சென்னையிலும் தமிழ் வித்தியாசப்படுகிறதோ அப்படி வித்தியாசப்படும்,

இவர்கள் தங்களுக்குள் இப்படிப் பேசிக்கொள்ளு கிறார்களோ தவிர மற்றவர்களிடம் பேசும்போதும் கடிதம் எழுதும்போதும் தமிழைத்தான் உபயோகிக்கிறார்கள்.

திக்கற்ற விதவைகளுக்கும், இளம் விதவைகளுக்கும் என்று ஒரு திட்டம் வகுத்து வைத்திருக்கிறார்கள்: கோத்த விதவைகள் இளம் வயதுடையவர்களாக இருந்தால், கணவன்மார்களுக்கு ஈமச் சடங்குகள் முடித்து, மூன்றாவது பிறை கண்டபின், அம்மங்கைக்குப் பிரியம் இருந்தால் இரண்டாந்தாரமாக யாரையாவது திருமணம் செய்துகொள்ளலாம்; ஆனால் பூசாரியின் மனைவி மட்டும் மறுமணம். செய்துகொள்ளக் கூடாது. பூசாரியின் மனைவி இளம்

வயதுடையவளாகவும், பிழைக்கும் வழியற்றவளாகவும் இருந்தால், அந்த ஊரார் எல்லோரும் ஒருமனப்பட்டு அவளுக்கு எருமையோ நிலமோ அவள் பிழைக்கவேண்டிய அளவுக்கு உதவி செய்வர். அன்றுமுதல் அவள் உலகில் பாடுபட்டே ஜீவனம் செய்தல் வேண்டும். இது ஜாதிக் கட்டுப்பாடு. எவ்வளவு உயர்ந்த நோக்கம், எவ்வளவு அழகான ஏற்பாடு! கோத்த மங்கையர்கள் பிரியப்பட்டுத் திருமணம் செய்துகொள்ளும்போது, அவர்களுக்குத் திருமணச் சடங்குகளெல்லாம் ஒரே மாதிரிதான். ஆனால் முதல் கணவனுடைய குழந்தைகள் மட்டும் முதல் கணவனுடைய பெற்றோர்களிடமோ அவனுடைய உறவினர்களின் ஆதரவிலே தான் இருக்கவேண்டும். குழந்தைகள் தங்கள் தாயினிடம் வரலாம், சாப்பிடலாம், போகலாம். ஆனால் குழந்தைகளை வளர்க்க வேண்டுமே என்ற முழுப்பொறுப்போ கவலையோ தாய்க்கு இல்லை.

குல தேவதைக்கு ஏதாது உயிர்ப் பலி கொடுக்கும் பழக்கம் உண்டா?

எவ்வித விசேஷமான நாட்களிலும் சரி; குடும்ப சம்பிரதாயமாக இருந்தாலும் சரி; அவர்கள் ஜாதியிலே அன்றுமுதல் இன்றுவரையில் உயிர்ப் பலியே இல்லை. கம்பட்டி தேவனுக்கும் தேவதைக்கும் சாம்பிராணித் தூபம் தவிர வேறு எவ்விதமான படைப்பும் கூடாது. மேலும் அவர்கள் தேவதைக்குத் தூபம் போடுவதற்கும் கடையிலே சாம்பிராணி வாங்க மாட்டார்கள். அவர்கள் ஊரிலிருந்து சுமார் பத்து அல்லது பதினைந்துமைல் தூரம் சென்று, குறிப்பிட்ட சில மரங்களை வெட்டிவிட்டு வந்து விடுவர். பிறகு வடிந்து கட்டியாகப் பிசின்போல் இருக்கும். அதைக் கொண்டு வந்து தேவதைக்குத்தூபம் போடுவார்கள். இதுவே மட்டிப்பால்.

கோத்தர்கள் எல்லோருமே நாகரிகம் அடைந்து விட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. இவர்களில் சிலர் இன்றும் அநாகரிக மாகவும். வெளியாரிடம் அதிகப்படி பேசாமலும் இருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் மட்டும், தங்கள் ஜாதியார்கள் இடமே தினக்கூலிக்கு வேலை செய்வதும் உண்டு. கோத்தர்களுக்குப் பணிவிடை செய்யவும், ஆடுமாடுகளை மேய்க்கவும் கீழ்த் தேசத்திலிருந்து வந்து ஆட்களை வீட்டோடு வைத்துக்கொள்ளு கிறார்கள். செஞ்சியிலிருந்து வந்த ஒரு குடும்பத்தை அங்கே கண்டேன்.

மேற்கூறிய ஏழு கோத்த ஊர்களிலும் மொத்த ஜனத்தொகை சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்படாமல் இருக்கும். ஒவ்வோர் ஊரிலும் தனித்தனியாக ஒரு பூசாரியோ இரண்டு பூயாரியோ உண்டு. ஓர் ஊர்த் தலைவனும் உண்டு. தலைவனைக் கோத்த மொழியில், 'கோத்த காரு' என்று அழைக்கின்றார்கள், அதாவது நாட்டாண்மைக்காரர்' என்று நாம் கூறவில்லையா? அது போல.

வாழ்க்கையில் ஒழுங்குள்ளவனாகவும், மற்றவர்களிடம் பேசும்போது நேர்மையுடன் பேசுகிறவனாகவும் உலக அனுபவம் உள்ளவனாகவும், இடுக்கண் வருங்கால் நகைக்கக் கூடியவனாக வும், சிக்கலான விஷயங்களில் நியாயம் கூறும் தன்மை உள்ளவ னாகவும், வயதிலே சற்று வாலிபனாகவும் இருப்பவனைப் பார்த்துத் தலைவனைத் தேர்ந்தெடுப்பார்கள். தலைவனை தேர்ந் தெடுக்கும்போது

மற்றவர்களைக் கேட்டோ அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பியோ, முக தாட்சண்யத்திற்காகவோ தலைவனைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்.

ஊரில் ஏதாவது சச்சரவு நடந்தால் உடனே தலைவர், பூசாரி மற்றும் சில பெரியவர்கள் இவர்கள் சேர்ந்து வட்டமாக உட்கார்ந்து, பேசி, குற்றம் செய்தவர்களுக்கு நியாயமான அபராதமோ தண்டனையோ கொடுப்பார்கள். சிறைத்தண்டனையோ மரண தண்டனையோ இல்லை.

குற்றம் செய்தவர்களுடைய வீட்டிற்கு, அந்த ஊர்க் கோத்தர்கள் ஒருவரும் நெருப்புக் கொடுக்க மாட்டார்கள். அக் குடும்பத்தாரோடு வேறு ஆண்களும் பெண்களும் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார்கள். இதைவிட நரகவேதனை ஒன்றுமே இல்லை. இத்தண்டனைகள் சாதாரணமாக எல்லா மலைவாசிகளிடமும் காட்டு வாசிகளிடமும் இருக்கின்றன. நெருப்பு வேண்டியதாக இருந்தாலும் கரி, உப்பு, பீடி. சுருட்டி முதலியவை வேண்டியதாக இருந்தாலும் சரி; பத்து மைல், இருபது மைல் ஊருக்குள் வரவேண்டும். அப்படி ஊருக்குள் வருவதாக இருந்தால் வழியில் காடுகளைத் தனியாகத்தான் கடக்கவேண்டும். இவர்களில் ஆண்களோ பெண்களோ தனியாகப் போகும் பழக்கமே இல்லை. வழியில் விலங்குகளால் ஆபத்து ஏற்படலாம். ஆகையால் இது எவ்வளவு பெரிய தண்டனை என்பதை நீங்களே யோசிக்கலாம். சாதாரணமாக இத்தண்டனை இரண்டொரு நாட்களுக்குமேல் நீடிக்காது. அதற்குள் குற்றவாளி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவான்.

இவர்களின் தலைவன்தான் தங்கள் ஊரில் நடைபெறும் சகல விஷயங்களுக்கும் சகல சடங்குகளுக்கும் பொறுப்பாளி.

சென்னை, பம்பாய், கல்கத்தா, பத்திராசலம் முதலிய ஊர்களுக்குச் செல்ல இவர்களுக்கு மிகவும் பிரியம். ஆனால் நேரமுமில்லை; நாளும் இல்லை. கோத்த ஆண்கள் இரண்டு, மூன்று திருமணங்கள் வரையில் செய்யலாம். ஆனால் முதல் மனைவியரின் சம்மதத்தைக் கேட்டுத்தான் மறுமணம் செய்யவேண்டும். இவர்கள் தங்கள் மங்கையர்களை மிகவும் கௌரவமாக நடத்துகிறார்கள்.

ஒரு மங்கை, தான் பிரியப்பட்டால், தன் கணவனை விலக்கிவிட்டு, மற்றோர் ஆடவனை மறுமணம் செய்யலாம். என்கின்ற சுதந்திரம் இன்றும் உண்டு. ஆனால் இதைப்போல் ஈனபுத்தி இன்று வரையில், ஒரு மங்கையினிடமும் ஏற்பட்ட தில்லையாம். அப்படித் தம்பதிகளைப் பிரிக்க வேண்டு மென்று ஏற்பட்டால் கூட்டம் கூடி விசாரித்து, கூடுமானவரையில் ஒன்றாகச் சேர்த்துவிடுகிறார்கள். யார்மேல் குற்றமோ அவர்களுக்கு, நல்ல வார்த்தைகள் கூறி, சமாதானம் செய்துவிடுகிறார்கள். முடியாத காரியமாக இருந்தால், விலக்கி விடுகிறார்கள். ஆனால் பூசாரியின் மனைவி, தன் புருஷன் வேண்டா மென்று எண்ணினால், இச்சடங்கு மட்டும் அவளுக்கோ அவனுக்கோ இல்லை.

மனைவி இறந்த பூசாரியும் உடனே துறவு பூண்டு, உலகத்தை வெறுத்துவிடுவது வழக்கம். இப்பழக்கம், இத்தெய்வபக்தி இங்கே இன்றும் உண்டு. சில மலை ஜாதியார்களிடம், மணப்பெண்ணும் பையனும் ஒரே காட்டில் இருக்கவேண்டுமென்ற வழக்கம் இன்றும் இருக்கிறது. அப்படிப்பட்ட வழக்கம் இவர்களுக்கு இல்லை. கோத்தர் ஊராகிய இந்த ஏழு ஊர்களிலும் பெண்கொடுக்கல் வாங்கல்

செய்யலாம். மேற்கண்ட ஏழு ஊர்களிலும் இவர்களுக்குள் தொடர்பு உண்டு. ஒரு கோத்தர் ஊரில் ஒரு விசஷேமானால் ஏழு ஊர்களில் இருப்பவர்களிலும் சிலராவது வந்து அந்த விசேஷத்தில் சேர்ந்து கொள்ளுகிறார்கள்.

கோத்தர்கள் சாதாரண நாட்களிலும் மதுபானம் செய்யும் பழக்கம் உண்டு. ஆனால் திருமணத்தன்றோ, தங்கள் ஊர்க் 'காப்பு'க் கட்டும் நாட்களிலோ இன்னும் மற்ற விசேஷமான நாட்களிலோ மதுபானம் செய்யும் பழக்கமே இல்லை. திருமணத்தன்று கோத்தர்கள் சைவச்சாப்பாடுதான் செய்கிறார்கள். திருமணத்திற்கு மூன்றாம் நாள்தான் மாமிச ஆகாரம் சேர்ப்பார்கள். ஆனால் பூசாரியின் வீட்டில் என்றுமே மரக்கறிப் பதார்த்தங்கள்தான் சமைக்கவேண்டும். பூசாரியின் வீட்டில் மாமிச உணவுப் பழக்கம் முதலில் இருந்தாலும், பூசாரியாகத் தேர்ந்தெடுத்தபின் மாமிசச் சாப்பாடே கூடாது. இது கோத்தர்களின் சட்டம்.

கோத்தர்கள் எல்லா ஆகாரங்களையும் உண்பார்கள். ஆனால் நண்டு, இறா முதலியவைகளைச் சாப்பிடமாட்டார்கள். இப்பொழுது சிலர்மட்டும் பிரியப்பட்டால், சகலத்தையும் சாப்பிடு வார்களாம். அதையும் அவர்கள் தங்கள் ஊராருக்குத் தெரியாமல், ரகசியமாகச் சாப்பிடுவார்களாம். ஆனால் திங்கள், சனிக்கிழமை களிலும், பண்டிகைக் காலத்திலும் எவ்விதமான மாமிசமும் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்.

நல்ல நாளிலும் சரி, திருமணம், பண்டிகைக் காலங்களிலும் சரி, வாத்தியங்கள் முழங்கின நடன உடையை அணிந்துகொண்டு, இரண்டு அல்லது மூன்று ஆண்கள் வட்டமாக நின்று நடனம் ஆடுவார்கள்.

பெரிய விசேஷங்களில் மங்கையர்கள் மட்டும் இரவிலோ பகலிலோ குறிப்பிட்ட புனிதமான மைதானத்தில் நடனமாடு கிறார்கள்.

புனிதமான மைதானம் என்பது கோவிலுக்குப் பக்கத்திலோ சற்றுத் தூரத்திலோ, சுற்றிலும் மைல் கற்களைப்போல் கல் வைத்து, புற்கள் வளர்ந்து ஓரிடம். அதில்தான் ஊர் விவகாரங்களுக்குப் பஞ்சாயத்துக் கூடிப்பேசுவார்; தெய்வத் திருவிழாக்களைப்பற்றிப் பேசுவர், திருமணச் சடங்குகள் முதலியவைகளைப் பேசுவர். அந்த மைதானத்தில் பாதரட்சையுடன் போகக்கூடாது. தேக சுத்தம் இல்லாத மாந்தர்களும் மைதானத்தை மிதிக்கக்கூடாது. 'தெய்வத்தின் துணையைக் கொண்டு ஒரு காரியம் பேசி முடிப்போம்' என்ற நல்ல நம்பிக்கையால் அநத மைதானத்தைத் 'தெய்வ மைதானம்' என்று சுத்தமாக வைத்துள்ளார்கள். பெண்கள் தெய்வத்திற்கும், ஜாதி வழிபாட்டின் படியும் நடனம் ஆடுவது அந்த மைதானத்தில்தான். கோத்தர்கள் எல்லோரமே வாத்தியங்கள் வாசிக்கிறார்கள். வாத்தியங்கள் மாட்டுத் தோலால் ஆனது. எப்படி மங்கையர்கள் எல்லோரும் மருத்துவப் பணியைக் கற்றுக் கொள்ளுகிறார்களோ அப்படியே கோத்த ஆண் களிலும் கூடுமான வரையில் எல்லோரும், எல்லா வேலைகளையும் வித்தைகளையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். வாத்தியம் வாசிக்கும்போது மட்டும் அவர்களை, 'வாத்திய கோஷ்டிகள்' என்று அவர்கள் மொழியில் அழைக்கின்றனர். அவர்களின் வாத்தியங்களில் சில பின்வருபவை. கோணத்தாரையைக் 'கொம்பு' என்றும், சேமக்கலத்தைச் 'செங்கட்டல்'

என்றும், பெரிய (பேண்டு) மேளத்தை 'நாகாஜி' என்றும், தபேலாவைப் 'பறை' என்றும், நாகசுரத்தைக் 'கொள்ளு' என்றும், சாவுமேளத்தைத் 'தப்பிட்டை' என்றும் ஜாலர்த் தாளத்தைக் 'கைசல்' என்றும் கோத்தர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாத்தியங்களை வாசிக்கும்போது உற்சாகத்துடன் வாசிக்கிறார்கள். நாம் வாழ்க்கையை நடத்துவதற்கு எப்படி எல்லாத் தொழில் செய்கிறவர்களுடைய உதவியும் வேண்டுமோ அதைப் போலவே கோத்தர்களிலும் எல்லா வேலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், நம்மைப்போல் தொழிலைக் குறித்து வண்ணான், தட்டான், அம்பட்டன் என்று எக்காரணத்தை முன்னிட்டும் பிரிப்பதில்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நீலகிரியிலே மறைந்து வசித்த இவர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களைத் தாங்களே செய்து கொள்ளப் பிரயாசைப் பட்டிருக்கிறார்கள். ஆகையால் எல்லாத் தொழிலிலும் இவர்கள் கைத்தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

எத்தொழில் செய்தாலும் சரி, அவர்களுக்குள் பெண் கொடுக்கல் வாங்கலில் வித்தியாசமின்றிக் கோத்தர்களாகவே தோன்றுகிறார்கள். எப்பணி செய்தாலும் கோத்தர்கள் ஒற்றுமை யாகவும் சந்தோஷமாகவும் செய்கிறார்கள்.

இவர்களின் இல்லங்களில் வெள்ளியாலும், வெண் கலத்தாலும் செய்த பாத்திரங்களைத்தான் அதிகமாகப் புழங்குகிறார்கள்.

கோத்த மங்கையர்கள், தோதவ, படக மங்கையர்களைப் போல் வெள்ளியால் செய்த நகைகளைத்தான் அதிகமாக உபயோகப் படுத்துகிறார்கள்.

காலில் பெரிய காப்பு, கைமுட்டியில் பெரிய வெள்ளி வளையம், கால் விரல்களிலும் காதிலும் கழுத்திலும் வெள்ளியால் செய்த நகைகள் இவைகளைத்தான் சிறியதாகச் செய்து மணிமணியாக அணிந்து கொள்ளுகிறார்கள்.

கோத்தர்கள் மயானச் சடங்குகளை இரண்டு விதமாகச் செய்கிறார்கள். ஒன்று சுடுவது, மற்றொன்று புதைப்பது. குழந்தைக்குப் பூசாரியின் சடங்குப்படி பெயர் வைக்காமல் இருந்தால் புதைப்பது என்றும், பெயர் வைத்துவிட்டால் சுடுவது என்றும் பழக்கம். பண்டைக்காலங்களில் சுமார் ஏழு அல்லது எட்டு நாட்கள் விரையில் உப்பை வைத்துக் கட்டியும், பலவிதப் பச்சிலைகளைப் பிணத்தின்மேல் தடவியும் பிணத்தை வைத்திருப்பார்களாம். பல மலைகளைத் தாண்டித் தூரத்திலே இருக்கும் உறவினர்கள் வரவும் தெரியப்படுத்தவும் வேண்டு மல்லவா?. ஆனால் இன்று நீலகிரி ஜில்லா முழுவதிலும் பஸ் போக்குவரவு இருப்பதால், இப்பொழுதுதெல்லாம் இரண்டொரு நாட்களுக்கு மேல் பிணத்தை வைத்திருப்பதில்லை.

மங்கையர்களுக்கும் ஆண்களுக்கும் ஈமச்சடங்குகள் கோத்தர்களுக்குள் வித்தியாசப்படுகிறது. ஆண்களுக்குச் செய்யும் சடங்குகளில் சில பெண்களுக்கு இல்லை. பெண்களுகுச் செய்யும் சடங்குகளில் சில ஆண்களுக்கு இல்லை.

திருமணமான கோத்த ஆண்மகனுக்கு உயிர் பிரியும் தருணத்தில் அவனுடைய வாயில் ஒரு சிறிய தங்கத்துண்டைப் போடுகிறார்கள். பண்டைக் காலத்திலே படக்கப் பாயோ ஜமக்காளமோ இல்லாததால்,

இவர்கள் மிருகத்தின் தோலின்மீது படுத்துக்கொண்டிருந்தார்களாம். இது பண்டைக்கால வழக்கங்களில் ஒன்று. பண்டைக் காலத்தில் தோலில் படுத்ததால் இன்றும் இவர்கள் பண்டைச் சம்பிரதாயத்தின்படி கோத்தர்கள் உயிர் விட்டதும் சுத்தம் செய்த பாயின்மீதோ, ஜமக்காளத்தின் மேலோ படுக்கவைக்கும்போது, ஒரு மிருகத்தின் தோல் துண்டை வெட்டிப் பாயின்மேல் வைத்து அதன் மேல்தான் பிணத்தைப்படுக்க வைக்கிறார்கள்.

இறந்தவனுக்கு முறைப்படி யார் தலைப்பாகை கட்ட வேண்டுமோ அவர்கள்தான் தலைப்பாகை கட்டவேண்டும். பிறகு கோடி வஸ்திரத்தால் முறைப்படி அலங்கரிக்க வேண்டும். ஏழு ஊரிலிருந்தும் கூடுமானவரையில் உறவினர்கள் வந்து மேளதானம் வாசித்துக்கொணடிருப்பார்கள். நகாரி என்ற மேளத்தை முதலில் அடிக்கிறார்கள். பிணத்தை வெளியில் தூக்கும்போது, அவன் குடும்பத்தில் யாரானாலும் சரி, ஒரு மங்கை சாணியை ஒரு சின்ன உருண்டையாகச் செய்து அதில் மூன்று பொழுதே வீட்டை மெழுகுகிறார்கள். சவத்தை வெளியில் உள்ள அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் வைக்க வேண்டும், பிறகு இறந்தவனுடைய சாமான்களான, வாய்ச்சி (மரம் செதுக்குவது) கோடரி, உளி, கூடை இரண்டு, இரண்டு கூடை காஞ்சிப் பொரி, கீரைப் பொரி இரண்டொரு அச்சுப் பனைவெல்லாம் இவைகளைச் சவக்கட்டிலின் அடியில் வைக்கிறார்கள். இத்துடன் தனியாக மூங்கில் புல்லாங்குழல் ஒன்றும், (பச்சிலை ஒன்றில் புகையிலை வைத்துச் சுட்டிச் சுருட்டுப்போல் செய்த) 'பச்சிலைச் சுருட்டு' ஒன்றும் வைக்கிறார்கள்.

இறந்தவனுடைய மனைவி தலையை விரித்துப் போட்டுக் கொண்டு கோடித்துணி அணிந்துகொள்கிறாள். கணவனை அடக்கம் செய்யும் வரையில் மரித்தவர்களின் இல்லத்தில் திமூட்டுதல் கூடாது. பெண்ணின் தாயகத்தில் இருந்துதான், காபியோ ஆகாரமோ கொடுக்க வேண்டும். 'வெக்கி'ச் செடியால் இறந்தவர் தேகம் முழுவதையும் தேய்த்து வெந்நீரால் ஸ்நானம் செய்வித்துச் சுத்தம் செய்வார்கள்.

'வெக்கி' என்பது ஒருவகைக் காட்டுச் செடி. இதைப் பண்டைக் காலத்திலே சோப்புப்போல் உபயோகப்படுத்தி வந்தார்கள். இன்றும் இதைச் சிலர் தலைக்குத் தேய்த்துக் குளிக்கிறார்கள். சோப்புப்போலவே நுரை கிளம்பி இது தேகத்தைச் சுத்தம் செய்கிறது.

பிணத்துக்கு நிழலுக்காகத் தேவர் கட்டுகிறார்கள். அத்தேரின் உயரம் சுமார் ஐம்பது அடி இருக்கிறது. சவம் எரிப்பதற்காக ஆண் ஒவ்வொருவரும் ஒரு பெரிய கட்டு விறகும், மங்கையர்கள் ஆளுக்கு ஒரு சுமை காட்டுச் சுள்ளியும் சுடுகாட்டில் முன் இரவே வைத்துவிடுகிறார்கள்.

மரித்தவின் இல்லாளை, அவள் சகோதரன் அல்லது தயாதிகள் இருவர் சேர்ந்து, மயானம் வரையில் தூக்கிச் செல்லுகிறார்கள். அவளுக்குத் தாலி அறுக்கும் சடங்குகளை அவளுடைய சகோதர்களோ தூக்கிவந்த தயாகிகளோ செய்யவேண்டும். மேளவாத்தியத்துடன் பிணத்தையும், தேரையும், மரித்த கணவனின் மனைவியயும் தூக்கி கொண்டு, ஒரு புதிய மண் பாத்திரத்தில் நெருப்புடன் (உண்டாக்கிய புதிய நெருப்பு) பிணம் சுடும் இடத்திற்குப் பத்து கெஜ தூரத்திலே தாலி

எடுக்கும் சடங்குகள் செய்கிறார்கள். தாலி எடுக்கும் சடங்குகள் செய்கிறார்கள். தாலி எடுக்கும் சடங்குகள் முடிந்ததும் மனைவியைத் தன்னுடைய வீட்டிற்கு அனுப்பிவிட்டு முக்கியமானவர்கள் மட்டும் பூசாரியுடன் மறுபடியும் பத்துக்கெஜ தூரம் மயானத்திற்கு சவத்தைக் கொண்டு சென்று, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து கால், கை விரல்களை நன்றாகக் கழுவி, கத்தியால் கை கால்களின் நகங்களை அறுத்தபின் தகனம் செய்கிறார்கள்.

மறுநாள் காலையில் மயானத்திற்கு நெருங்கிய உறவினர்களில் ஐந்துபேர் சென்று தீயைத் தண்ணீரால் அணைத்து, பிணத்தின் எலும்பை எல்லாம் எடுத்து, ஒரு புதிய பானையில் போட்டு அங்கேயே பூஜைச் சடங்குகள் செய்து, எலும்புகளுக்குப் பசும் பால் ஊற்றிப் பக்கத்திலே இருக்கும் ஆற்றில் விட்டு விடுகிறார்ள். பிறகு தங்கள் ஊராருக்கும், வெளி இடங்களில் இருந்துவந்த கோத்த உறவினர்களுக்கும் பெரிய விருந்து நடக்கிறது.

விருந்துக்கு வேண்டிய அரிசியை ஊரில் உள்ள ஒவ்வோர் இல்லத்திற்கும் இவ்வளவு என்று கணக்குப் போட்டு வாங்கி மொத்தமாகச் சமைப்பார்கள். குழம்பு வகைக்கு மட்டும் சாவு வீட்டாரேதான் செலவு செய்து கொள்ளவேண்டும். இத்துடன் கருமாதியும் முடிந்து விட்டது. மனைவி மறுபடியும் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்து, புதிய துணி மாற்றிக்கொண்டு, தலையில் சுத்தமான நெய் தடவி, மண்டுவ் அணிந்து, நகைகளை மறுபடியும் அணிந்துகொள்ளுகிறாள். அவள் விரும்பினால் மறுபடியும் சில பிறைகளுக்குப் பின் மறு மணம் செய்துகொள்ளலாம்.

மருமகன் இறந்தால் மேற்கண்ட சடங்களைச் செய்து, அத்துடன் பத்து அல்லது இருபது ரூபாய் சாவுச் செலவுக்கும், எருமை ஒன்றும் மாமனார் வீட்டார் கொடுக்கவேண்டும். அப்படியே தன் மகளுக்கும் பசு ஒன்று தானம் கொடுக்கவேண்டும். கோத்த மங்கையர்கள் இறந்தால், பிணத்தைக் கட்டிலின் மேல்படுக்க வைத்து விடுகிறார்கள். பின்பு அக்கட்டிலின் அடியின் மூன்று கூடையில் மூன்று அச்சுப் பனைவெல்லமும் ஆதியில் உபயோகித்துக்கொண்டிருந்த பட்டாணி, கடலை, கோதுமைப் பணியாரம், சாமை அரிசி, ஒரு படி காஞ்சிப் பொரி, கீரைப் பொரி, புதிய நாணல், துடைப்பம், புதிய முறம், ஓர் அரிவாள் அவளே உபயோகித்த ஒரு வாய்க் கொத்தி, ஓர் உலக்கை, அகப்கை, களி கிளறும் துடுப்பு, எடுக்கும் சட்டுவம், பிரம்பால் செய்த ஒரு மணிபர்ஸ். செம்பால் இரும்பால் எடுத்து, பிரம்பு மணிபர்ஸில் போட்டுச் சவத்துடன் வைத்துவிடுகிறார்கள்.

பண்டைக் காலத்தில் 'படி' இல்லாததால், மூங்கிலைக் கணுவுக்குப் பக்கத்திலே அறுத்தப் படி செய்து அரிசி, கோதுமை, கோதுமை முதலியவைகளை அளக்க அதை உபயோகப்படுத்தி வந்தார்களாம். இன்றும் அந்த மூங்கில் படியின் மத்தியில் வெள்ளித் தகடு கட்டிப்பெண் சவத்துடன் வைக்கிறார்கள். ஆதியில் தண்ணீர் கொண்டுவரச் சுரைக்காயின் ஓட்டை உபயோகித்து வந்ததால், இன்றும் அதையும் மூன்று துவாரம் செய்து நெய் வார்த்துப் பிணத்தின் பக்கத்திலே வைக்கிறார்கள். மற்ற ஈமச் சவத்திற்கும் நாற்பது, ஐம்பது அடி உயரமுள்ள பாடையைக் காவடிபோல் கட்டுகிறார்கள். பூக்களால் நல்ல

அலங்காரம் செய்கிறார்கள். பாடையின் உச்சியில் பிள்ளையார் குடையைப்போல் சிறிய ஓலைக்குடைகளைக் கட்டிவிடுகிறார்கள்.

ஒரு விதமான கூடையிலே நவதான்யங்களைக் கொட்டிப் பாடைக்கு முன்னாலே எடுத்துக்கொண்டு போவார்கள். இந்த 'மயானக் கூடை' அல்லது 'சாவுக் கூடை'யைக் காட்டுப் பூக்களால் அலங்கரித்திருப்பார்கள்.

மயானத்தில் பாடை, மயானக் கூடை எல்லாவற்றையும் தீயில் சாம்பலாக்குகிறார்கள்.

சொத்துள்ளவர்கள், ஏழை விதவைகளுக்கு எருமையோ பசுவோ சக்திக்கு தக்கவாறு கொடுத்து உதவுறொர்கள்.

கோத்தக் குடும்பத்தில் மகனோ மகளோ திருமணமாகாமல் இறந்தால் மரணச் சடங்குகளைப் பெற்றோர்களேதான் செய்ய வேண்டும். ஆனால் சிக்கனமாகச் செய்துவிடுகிறார்கள்.

அவர்களுக்குள் எவ்விதமான வியாதி வந்தாலும் சரி, (கட்டி முதலியவையும்) அவர்களே பச்சை மூலிகைகளால் குணப்படுத்துக் கிறார்கள். தற்காலத்திலும் வெகு சிலரே நம்மைப்போல் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள்.

பண்டைக் காலத்திலே கோத்தர்களே தங்கள் குடிசைகளைக் கட்டிக்கொண்டார்கள். குடிசை என்றதும் பனை ஓலையோ தென்னை ஓலையோ குருவிக்காரர்கள், லம்பாடிகளைப்போல் தகரக் குடிசையோ என்று நினைக்கலாம். நீலகிரி முதலிய மலைநாடுகளில் தென்னமரமோ, பனைமரமோ இல்லை. ஆகையால் அங்குள்ள மலைவாசிகள், தங்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு 'கண்க்' என்று அவர்கள் மொழியில் கூறும். 'காட்டுப் புல்' அல்லது 'வீட்டுப் புல்' என்ற ஒருவகைப்புல்லால் காட்டுக் கொம்புகளைக் கொண்டு குடிடை கட்டிக்கொள்ளுகிறார்கள். இன்றும் அவ்விதமான குடிசைகள், அங்கொண்றும் இங் கொன்றுமாக இருக்கின்றன. மற்ற இடங்களெல்லாம் ஓட்டு வீடும் மச்சு வீடுகளுமாகத் தான் இருக்கின்றன.

இவர்கள் அன்றும் சரி, இன்றும் சரி, சாமை, காஞ்சி, கோதுமை, கேழ்வரகு, கீரை வகைகள், கடுகு, உருளைக் கிழங்கு இவைகளையும் இன்னும் பலவிதமான காய்கறி வகைகளையும் பயிர் செய்கிறார்கள்.

ஆனால் எப்பயிர் செய்தாலும் முதல் பயிரில், முதல் அறுவடை செய்ததும் அதில் ஒரு சிறு பகுதியைத் தெய்வத்திற் கென்று படைக்கிறார்கள். இப்படிப் படைக்கும் பழக்கம் சுமார் 4000 ஆண்களுக்கு முன் எல்லோரிடத்திலும் இருந்ததாகத் தெரிகிறது.

ஏழு ஊர்களிலும் இன்றுவரையில் கொலைக்குற்றமே நடந்ததில்லை. அந்நியர்களைக் கொலைசெய்தான் என்ற அவதூறான வார்த்தையும் இதுவரையில் கோத்தர் ஜாதியில் இல்லை, 'கடவுள் படைத்தவனை, மனிதன் கொலை செய்வது பெரிய பாவம்' என்பர்.

கோத்த மங்கையர்கள் பிற ஆண்களிடம் சகோதரி பாவனையில் சகஜமாகப் பழகுகிறார்கள். ஆனால் ஆணோ பெண்ணோ இன்று வரையில் அன்னிய இனத்தாரோடு கலப்பு விவாகம் செய்துகொண்டதே இல்லை.

அவர்கள் ஊருக்குள் எவ்விதமான வகைச் சொற்களையும் உபயோகிக்கக்கூடாது. அப்படி ஆண்கள் தவறி உபயோகித்து விட்டால், அவனைப் பெண்களும் மங்கையர்களும் கேவலமாக நினைத்து, அவனிடம் அதிகமாகப் பேச்சு வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

சாதாரணமாக நீலகிரித் தெருக்களிலும் குழாயினிடத்திலும் சண்டை உண்டாகத்தான் உண்டாகிறது. ஆனால் நியாயத்தைச் சொல்லிச் சண்டை செய்கிறார்களே தவிர வசைச் சொற்களை உபயோகிப்பதில்லை.

கோத்தர்கள் மொழியில் பள்ளிக்கூடத்தைப் 'பள்கூட்' என்றும் கோவிலை 'குடி' என்றும் பத்திரிகை யைப் 'பட்டோல்' என்றும் கடயை 'அங்காடி' என்றும் அரிசியை 'அக்கி' என்றும் கடவுளைத் 'தேர்ல்' என்றும் வழங்குகிறார்கள்.

கோத்தர்கள் பழனிஆண்டவர்மேல்
பாடும் பாட்டு

(இந்துஸ்தானி மெட்டு: ''ஹம்தர்துகா அப்சானா'')

1. பழனி வெட்டத்தில் ஒள்ளுவோனே,... எதெமி
பாடெல்லுமெ, தீராகெ,
பாடெல்லுமே... தீராகெ..., பச்செ
பய்ல் எல்லுமே தாரீகெ,
அனாதாடெ, ஒள்ளுவே மெ...,
ஆதரவெ, நீதாகே... (பழனி)

2. மையில் உதாககெ நீ, அத்திவோனே...
மாயக்கார சோமெ.
மனசோடே நீ வாகே...
மரதிலாரே மெ ஆமெ...
மனமாரெ நீ தாகெ...
மாயக்கார வேல்ய்யா.

3. பட்ட நாமம் இட்டுப் போரே...
பரதேசாடே ஓட்டெ,
பண்டார வேசமோ இட்டுட்டு
காவிடெ தூக்கிரெ ஓட்டே,
பழனி வெட்டத்தி ஒள்ளுவேனே...
பார்வை, நோச்சு வோனெ.

10

ஊராளியர்

நீலகிரியில் பலவித ஆதிவாசிகள் இருக்கிறார்கள். வண்டிகளிலோ நடந்தோ செல்லமுடியாத நீலகிரி மலையுச்சியிலும் இருண்ட காடுகளிலும் கொடிய வியாதிகளினாலும், கொடிய மிருகங்களினாலும் பல இன்னல்கள் உண்டாகக்கூடிய இடங்களிலும் இன்றும் அவர்களில் சிலர் வாழ்கின்றனர். சற்றுச் சிரமத்தைப் பாராமல் இந்த இடங்களுக்குச் சென்றால் பல சிறந்த விஷயங்களையும் மூலிகைகளையும் அவர்களுடைய அன்பையும் நாம் பெறலாம்.

ஏறக்குறைய நீலகிரி முழுவதிலும் இந்த ஊராளியர், ஒவ்வோர் ஊரில் இரண்டு, மூன்று குடும்பங்களாக வாழ்கின்றனர். குறிப்பாக எப்பனாடு, கல்லம்பாளையம், நாகாடா, நெரமொக்கே, கோத்தமூக்கு, அரக்கோடு, குஞ்சபனை, கோழிக்கொரை, செம்மநாரே முதலிய இடங்களில் இவர்கள் வசிக்கிறார்கள். இந்த ஊராளி ஜாதியைச் சேர்ந்தவர்களே கோவைக்கு அருகில் இருளர் என்றும், தமிழகத்தில் மற்றும் சில இடங்களில் வில்லியர் என்றும் வேறு பெயர்களுடன் வாழ்கின்றனர். இவ்விதம் வெவ்வேறு பெயர் பெற்றிருந்தாலும், பல்வேறு தொழில்கள் செய்தாலும் எல்லோரும் ஒரே ஜாதி என்ற மனப்பான்மையுடன் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

இவர்களுடைய குடிசைகள் சேர்ந்தாற்போல் இருப்ப தில்லை; குறைந்து ஐம்பது அடிக்கு ஒன்று வீதம் பரவியே இருக்கின்றன. காட்டுப் புற்கள், காட்டுக் கொம்புகள், கொடும்பைக் கொடி முதலிய வற்றாலேயே இக்குடிசைகள் அழகாகக் கட்டப்படுகின்றன. ஊராளியர் குடிசைகள் இடத்திற்கு இடம் சற்றே மாறுப்பட்டிருக்கின்றன. எனினும் எந்தக் குடிசைக்குள்ளும் குனிந்துதான் செல்லவேண்டும். ஆனால் இதிலிருந்தோ, இவர்கள் மண் பாண்டங்களையே அதிகமாக உபயோகிப்பதிலிருந்தோ, இவர்கள் ஏழைகளென்று சொல்லிவிடுவற் கில்லை.

சாதாரணமாக ஆணும், பெண்ணும் குள்ளமாகவும் பரட்டைத் தலையாகவும் கறுத்தும் (சிலர்) சரியானபடி ஆடையின்றியும் இருக்கின்றனர். பெண்கள் முந்தானைக்குப் பதிலாக, மார்பிலிருந்து நீண்டதோர் துப்பட்டியையோ துணியையோ கட்டி, அது முழங்காலுக்குக் கீழ் வரையிலும் வரும்படி அணிந்திருக்கிறார்கள். ஆண்கள் நம்மைப்போல் கலந்து ஆடைகளை அணிந்துகொள்ளு கிறார்கள். விசேஷ நாட்களிலும் இதுவேதான்.

ஆண்களும் பெண்களும் சாதாரணக் கொண்டையே போட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால், ஆண்கள் மட்டும் முன்னால் பிறைச்சந்திரனைப்போல் க்ஷவரம் செய்து, பின்பக்கத்தில் வட்டமாக மயிர் வைத்துக் கொண்டை போட்டுக்கொள்ளு கின்றனர். சாதாரணமாகப் பெண்கள் சிவப்பு வர்ணப் பூக்களையே, அதிகமாக வைத்துக்கொள்கிறார்கள். நான் கண்ட வரையில் இவர்களில் பலர் வெள்ளி நகைகளையே பிரியமாக அணிகிறார்கள்.

ஆண்களும் பெண்களும் தேயிலைத் தோட்டங்களில் கூடி வேலை செய்கிறார்கள். சிலர் சுற்றுப்புறங்களிலுள்ள நிலங்களில் தங்கள் கால்நடைகளை விருத்திசெய்து கொண்டும், அங்கே பயிராகக்கூடிய பழவர்க்கங்களைச் சாகுபடி செய்தும், சிலர் தங்கள் சொந்தத் தோட்டங்களைக் குத்தகைக்கு விட்டும், சிலர் நாகப்பாம்புகள் பிடித்தல், மலைத்தேன் சேகரித்தல், காட்டு மூலிகைகள் சேகரித்தல் முதலியவைகளில் ஈடுபடும், சில பெண்களும் ஆண்களும் மூங்கிற்பாய், முறம், கோரைப்பாய் முடைதல் போன்ற தொழில்களைச் செய்தும் ஜீவிக்கின்றனர்.

இவர்கள் ராகி, அரிசி முதலியவற்றைச் சமைத்தோ பலகாரமாகய்ச் செய்தோ உட்கொள்கிறார்கள். பன்னி பூனை, தேரை, கரடி, குரங்கு முதலிய பிராணிகளின் மாமிசத்தைத் தவிர மற்றவைகளைப் பிரியப்பட்டவர்கள் சமைத்துப் புசிப்பார்கள். முற்காலத்தில் சிலர் மதுபானம் செய்வது உண்டாம்.

சில விசேஷ நாட்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பக்க வாத்தியங்களுடன் (வாத்தியங்களுக்கெல்லாம் தமிழ்ப் பெயர்களையே சூட்டியுள்ளார்கள்.) வட்டமாக நின்று, நடனமாடுகிறார்கள்.

இவற்றில் காதல் நடனங்களும் உண்டு. அப்போது பாடப்படும் பாட்டுக்களில் இரண்டைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

1. காட்டவரைக் காயோ
அல அல மலிகைக் காய்;
சூறை விடுகோ.
அல அல மலிகைக் காய்;

நெல்லி திம்பா நலிமே,
அலஅல மலிகை;
நெல்லிக்காய் சூறை,
அலஅல மலிகை.

2. ஆணுபிள்ளை புட்டினா
ராம பாவ ஜோ;
பெண்பிள்ளை புட்டினா
ராம பா ஜோ;

கோத்தி மொக்கை, ஆணுமக்க கலசிங்
கார, நொடிரோ,
ஐயாவே கலாசிங் காரணோடிரோ.

இக்காதல் நடனங்களை ஆடும்போது தேகத்தை நன்றாக வளைத்து ஆடும் இவர்கள், நடனக்கலையில் தேர்ச்சி பெற்றவர் களைப்போல் தோன்றுகிறார்கள்.

பண்டைக் காலத்தில் இவர்கள் மருத்துவ முறைகளைத் தங்களுக்குள்ளேயே, வயதான மங்கையர்களைக் கொண்டு கையாண்டு

வந்தார்கள். இன்றும் இது குடும்பக் கலையாகக் கருதப்படுகிறது. ஆனால் சில இடங்களில் மட்டும், சிலர் ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்புகிறார்கள். குழந்தை பிறந்து எட்டாவது நாள் பெற்றோர்கள் பிரியப்பட்ட பெயரை வைப்பார் கள். குழந்தைகளைத் துணி ஏணையில்தான் படுக்கவைப்பார்கள்.

ஊராளியர்களுக்கு வியாதி வந்தால் கடவுளுக்குக் காணிக்கை கட்டித் தங்களிடம் இருக்கும் பச்சிலை மருந்துகளைச் சாப்பிடு கிறார்கள். முக்கியமாக க்ஷயம், சோகை, ஓடிமா வீக்கம், விஷஜுரம், மலேரியா முதலிய நோய்களுக்கு இவர்கள் ஆளாகிறார்கள். வியாதி கண்டால் பண்டைக் காலத்தில் கட்டையையோ சிக்கிமுக்கிக் கல்லையோ உபயோகித்துத் தீ உண்டாக்கிப் பூஜை செய்வார்கள். ஆனால் தற்காலத்தில் தீப்பெட்டியை உபயோகப்படுத்துகிறார்கள்.

இவர்களுக்கு வியாதி வந்தாலும் குருவினிடத்தில் பூஜை செய்து காணிக்கை செலுத்த ஏற்பாடுகள் செய்கிறார்கள். சில சமங்களில் குருவே குறி சொல்வதும் உண்டு. அப்படி அவர்களை நாடிக் குறி கேட்கும்போது கேட்பவர்களுக்கு நம்பிக்கை உண்டாகக் குறி சொல்வதற்கு முன்னால், எரியும் தீக்கனலைக் கையில் எடுப்பார்கள். அப்பொழுது ''என் முன்னோர் பொங்கும் அரிசிப் பானையில் கையை விட்டுத் திராவிக் கொடுப்பார்கள்'' என்று சொல்லிக்கொண்டே தீக்கனலை எடுப்பார்கள்.

பெண்கள் ருதுவானபின் பெற்றோர்களின் மூலம், தங்களுக்குப் பிரியப்பட்ட மாப்பிள்ளையைத் தேடித் திருமணம் செய்கிறார்கள். திருமணத்திற்குக் கோடித்துணி எடுப்பதும் உண்டு. பெரியவர்கள் பஞ்சாயத்துப் பேசி, பெண்ணை மணக்கோலத்துடன் பிள்ளை இல்லத்துக்குக் கூட்டி அனுப்புவார்கள். திருமணத்திற் கென்று தாலி ஒன்றும் சிலர் கட்டுவதில்லை. சிலர் நம்மைப் போல் தாலி கட்டுகிறார்கள். கோவைக்கு அருகில் வாழும் ஊராளியரோ, பூக்களை ஓர் உயரமான கல்லின் மேல் வைத்துப் பூஜை செய்து, 'சுபம் என்றால் வலப்பக்கம் விழட்டும், இல்லையேல் இடப்பக்கம் விழட்டும்' என்பார்கள். (இதற்குப் 'பூ வைத்துக் கேட்டல்' என்று பெயர்). இன்னும் சில இடங்களில் இருக்கும் இதே ஜாதியினரில் திருமணத்திற்குமுன் 'கூடிவாழி' என்ற முறைப்படி பிள்ளையும் பெண்ணும் தங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் காட்டில் மறைந்து வாழ்வார்கள். பெற்றோர்கள் கண்டுபிடித்த பின், பஞ்சாயத்தார்கள் மூலம் கூடிப்பேசி, உறுதிப்படுத்தி, பெண் வீட்டார் கொடுத்த பணமும், காட்டை விட்டும் வீட்டை விட்டும் போனதால் விதிக்கப்பட்ட அபராதமும் சேர்த்து வசூலித்து, அதே பெண்ணை அவனுக்கே திருமணம் செய்து கொடுப்பார்கள்.

திருமணத்தன்று மரக்கறியைத்தான் சமைப்பார்கள். சிலர் ராமனுக்குக் பூஜை போடுவார்கள். மறுநாள் கோவிலுக்குச் சென்று கும்பிட்டு வருவதும் உண்டு.

மனைவி மரித்தாலோ, விவாகரத்துச் செய்துகொண்டாலோ அன்றி ஆண்கள் மறுமணம் புரியலாகாது. விதவைகளும் விவாகரத்துச் செய்துகொண்ட மங்கையரும் விரும்பினால் ஓராண்டு கழித்து மறுபடி விவாகம் செய்துகொள்ளலாம். மங்கையர் விவாகரத்துச் செய்து கொண்டு தாயகம் செல்லும்போது, தங்கள் குழந்தைகளைத் தங்கள் கணவனின் உறவினர்களிடம்தான் விட்டு விடுகிறார்கள்; தாயுடன்

குழந்தைகளும் செல்லக்கூடாது. அன்னிய புருஷரை இம்மங்கையர் மணம் புரியார்.

ஆண்களும் பெண்களும் கோவிலுக்குள் பிரவேசிக்கலாம். இவர்கள் பிரியப்பட்ட பல தெய்வங்களை வழிபட்டாலும் விசேஷமாக ராமரையும் சிவலிங்கத்தையும் சில வியாதிகளுக்குக் காரணமாகக் கருதும் மற்றும் சில தெய்வங்களையும் வணங்குகிறார்கள்.

புதன் கிழமையும் வியாழக்கிழமையும்தான் தெய்வத்தை வணங்க முக்கிய நாட்களாம். இவர்கள் தை மாதத்தில் பிறைக்கும் பின் 'தை நோன்பை' மிகவும் விசேஷமாக அனுசரிக்கிறார்கள். 'வையாசித் திருவிழா' என்பது அவரவர் வளர்க்கும் கால்நடை களுக்கு 'உப்பு நீர்' ஊற்றுவதாகும். இந்நாட்களில் தெய்வங்களுக்குப் பல தின்பண்டங்கள் படைப்பதும் உண்டு.

ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் 'எஜமானன்' அல்லது 'தலைவன்' உண்டு. எல்லோரும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பர். எஜமானை ஊரார், 'அண்ணன்' என்று அழைப்பார்கள். ஊரில் குற்றங்கள் நடந்தால், ஊரார் கூடி, எஜமானனுக்கு முன்னால் குற்றவாளிக்குச் சக்திக்குத் தகுந்தபடி அபராதம் விதிப்பார்கள். 'எஜமானன்' வீடு, ஊரில் சற்று எடுப்பான ஓர் இடத்தில் அமைந்திருக்கும்.

இவர்கள் வம்சத்தில் யாராவது இறந்த செய்தியைப் பக்கத்தில் இருக்கும் 'நீலகிரிக் குறும்பன்' என்ற ஜாதியார் கேட்டதும் ஒரு குறும்பன மற்றொரு குறும்பனுக்குச் க்ஷவரம் செய்யும் பழக்கம் இன்றும் உண்டு. இப்பழக்கம் எப்படி ஆரம்பமாகிப் பரம்பரையாக அனுசரிக்கப்பட்டு வருகிறது என்பதற்குச் சரியான ஆதாரங்கள் தெரியவில்லை.

பிணங்களை (தூரத்திலே இருக்கும் உறவினர்கள் கால் நடையாக வந்து சேரும்வரையில்) இரண்டு, மூன்று நாட்கள் வரையில் வைத்திருக்கிறார்கள். பின்பு, இறந்தவர்களை உட்கார வைத்தபடியே, ஒரு குறிப்பிட்ட இடத்தில் புதைத்துவிடுவார்கள். பிறகு சக்திக்குத் தகுந்தாற் போல், குறிப்பிட்ட நாளில் இறந்தவர்களுக்காகக் கருமாதியும் செய்து முடித்துவிடுவார்கள்.

இவர்கள் எல்லாப் மொழிகளையும் கலந்து வேகமாகப் பேசுகிறார்கள். அதில் தமிழைத்தான் அதிகமாகக் கலந்து பேசுகிறார்கள். பேசும்போது பொருள் விளங்குவது சற்றுக் கடினம் தான். ஆனால் இலக்கிய இலக்கணங்களுக்குத் தமிழைத்தான் உபயோகப் படுத்துகிறார்கள். சில இடங்களில் தங்கள் பிள்ளை களைப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர் சில ஊராளியர்.

முற்றும்

காடு கொடுத்த ஏடு

(பழங்குடி மக்களைப் பற்றிய செய்திகளின் கோவை)

காடர்களைக் கண்ட விதம்

காட்டில் வாழும் மக்களுடன் பழகிவந்த சமயங்களின் நான் பல காடர்களிடம் காட்டில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் கதை வடிவத்தில் தனித்தனியாக எழுதிப் பல பத்திரிகைகளில் கொடுத்ததுண்டு. அங்ஙனம் கொடுத்த செய்திகளைத் தனித் தனியாகத் தொகுத்து நூலாக்கினேன்.

இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரை யிலும், அந்த அந்த மக்களின் பழக்க வழக்கங்கள், சூழ்நிலைகள் இவை அப்படியே எடுத்துக் காட்டப்பட்டிருக் கின்றன. இவை வெறும் கதைகளல்ல. சமுதாய வளர்ச்சியையும் சரித்திரத்தையும் காலங்களையும் நிர்ணயித்து, கதை உருவத்திலே எழுதப்பட்ட கட்டுரைகள். சில இடங்களை வாசிக்கும்போது சரித்திர ஏடுகளைப் படிப்பதைப் போன்ற உணர்ச்சி கூட ஏற்படலாம். சரித்திரத்தையும் மனித சமுதாய வளர்ச்சியும் தெரிந்துகொள்வதற்கு இவை இன்றியமையாதவை. சரித்திரத்தைப் படிப்பதால் ஏற்படும் சலிப்பும் தத்துவத்தைக் கற்பதால் ஏற்படும் சிரமமும் இதில் தோன்றா.

இந்தியாவில் ஆதிகாலம் முதல் முறையான, தொடர்ச்சியான வரலாறு எழுதும் பழக்கம் இருந்ததில்லை. ஆங்கிலேயர்களின் தொடர்பு எற்பட்டபின்னரே மேற்கூறிய வகையில் வரலாறு எழுதும் முறை தோன்றியது என்பதை நாம் நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும். நமது நாட்டை அரசாண்ட ஆங்கிலேயர், நம் நாட்டு மக்களின் வரலாற்றை அறிய விரும்பினார்கள். அதற்குத் தக்க சரித்திர நூல்கள் இல்லாததை அறிந்தார்கள். சரித்திரச் செய்திகளைச் சிறிதளவு கொண்டுள்ள கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பற்பல இடங்களில் சிதறிக்கிடந்தன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு அக்காலத்தில் ஆங்கில அரசியலாரும் பல பாதிரிமார்களும் மாக்களாக மலையில் மறைந்து வாழும், மக்களின் சமூகத்தில் சீர்திருத்தங்கள் செய்யப் புகுந்தார்கள். அங்ஙனம் புகுந்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த, புரிந்த, தாங்கள் அறிந்து கொண்ட சில செய்திகளைப் பற்றி ஓர் அளவுக்கு ஆங்கிலத்தில் எழுதினார்கள். ஆனால் அவர்கள் எழுதியவை சங்ககால நூல்களையும் காடர்களின் மொழிகளையும் தெரிந்துகொண்டு எழுதியவை அல்ல. ஆயினும் அதாவது செய்தார்களே என்று நாம் நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இந்திய மொழிகளில் ஆதிவாசிகளைப்பற்றி ஒரு கட்டுரைகூடப் பத்திரிகையில் வெளிவராததைக் கண்டு அன்று வருந்தினேன். ஆனால் ஆங்கிலத்தில் புத்தகம் வெளிவந்ததே யொழிய காட்டில் வாழும் மக்களைப்பற்றி அன்ற அரசாண்ட மேலை நாட்டினர்களும், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்வரை எவ்விதமான அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் இந்த ஆதிவாசிகளிடையே சமூக சேவை செய்வதற்கு முன்வந்த மக்களும், சங்கங்களும் அன்று கிடையா.

போதாக் குறைக்குக் காட்டில் வாழும் ஆதிவாசிகளில் சில பிரிவினர்களை, 'குற்றப் பரம்பரையினர் (Criminal Tribes)' என்று பிரித்து வைத்திருந்தார்கள். 1947-ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்தபின், இச்சட்டம் நீக்கப்பட்டு விட்டது. அந்த நிலையில் நான் இந்தியக் காடுகளில் வாழும் ஆதிவாசிகளிடமும் பிறமக்களிடமும் பழிக் காட்டை விட்டு வீட்டை அடைந்ததும் அவர்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து பழங்காலத் தமிழ் நூல்களையும் பழங்குடி மக்களைப் பற்றிய செய்திகள் அங்கங்கே வந்துள்ள பிற நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதிய கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

வரலாறுகளை ஆராய்ந்து எழுதுவது கதைகளை எழுதுவதுபோல் எளிதான காரியமன்று. ஒவ்வொன்றையும் துருவித்துருவிப் பார்த்துச் சான்றுகள் காட்டி எழுதவேண்டும். அன்றியும், 'எம்மதமும் சம்மதமே' என்று எந்த மதத்தினருக்கும் மனம் புண்படாமல் காய்தல் உவத்தல் இல்லாமல் நடுநின்று செம்பொருள் காணவேண்டும்.

என்னுடைய வாழ்க்கைப் போராட்டத்தினிடையே கிடைத்த குறைந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு காட்டிலும் மலைகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்த காலத்தில் என்னால் இயன்ற வரையில் எனது சிற்றறிவுக் கெட்டிய வரையில் இதனை எழுதி முடித்தேன்.

இந்நூல் நம் இந்திய தேசத்தில் வாழும் இரு நூற்றெழுபது லட்சம் ஆதிவாசிகளின் வரலாற்றின் ஒரு பகுதியை அறிவதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். என்னால் முடிந்தவரை எல்லோரும் புரிந்துகொள்ளும்படி எழுதியிருக்கிறேன். எனக்கு மேன்மேலும் ஆராய்ச்சித் துறையில் ஊக்கம் அளித்த பத்திரிகைகளின் சொந்தக்காரருக்கு ஆசிரியருக்கு வேறு பல அறிஞர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி. இந்நூல் வெளியிட எனக்கு ஊக்கமளித்த கலைமகள் பதிப்பகத்தாருக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிலோ இருதயநாத்

26. பெரியபள்ளித் தெரு
மயிலாப்பூர்; சென்னை: 28
20-4-63

11. மல்லா எல்கா

எங்கள் பக்கத்து விறகுக்கடை அண்ணாச்சிக்குச் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் வாடிக்கைக்காரன்.

இந்த ஆண்டு சுமார் நாலாயிரத்து எண்ணூறு மைல்கள் பிரயாணம் செய்துவிட்டு வந்திருந்தேன் நான். அண்ணாச்சி என்னை அமர்த்திக்கொண்டு காட்டு ஜனங்களைப் பற்றிக் கேட்டார்.

என் பிரயாண அனுபவத்தில் என் மனத்தைத் தொட்ட சம்பவம் ஒன்று கோவை மலைக்காட்டுக்குப் பக்கத்திலே நடந்தது. அதைப்பற்றி நான் கூறிக்கொண்டு வந்தபோது அண்ணாச்சியின் கடையிலிருந்து ஒரு புதிய கூலியாள் அடிக்கடி என்னையே கவனித்துக் கொண்டிருந்தான்.

அங்குள்ளவர்கள் பேசும் மொழி நமக்குப் புரியாவிட்டாலும் தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதையும் எடுத்துக் காட்டினேன்.

நான் மொழியாராய்ச்சி நடத்தியபோது அவர் கடையிலிருந்த அந்தக் கூலியாள் இன்னும் நெருங்கி வந்து என் வாயையே பார்த்துக்கொண்டிருந்தான் ஆவலோடு.

அவன் கவனிப்பதைப் பார்த்த அண்ணாச்சி, ''டேய் மசி! வேலையைப் பார்'' என்று சைகை காட்டினார். அவர் கை காட்டிய விதத்தைக் கண்ட நான், ''இந்த ஊமையை எங்கே பிடித்தீர்கள் அண்ணாச்சி?'' என்று கேட்டேன்.

''இவனா! இவன் சரியான ஒரு காட்டுமிராண்டி. எந்த மொழியும் பேசத் தெரியாது. ஆனால் ஊமை அல்ல. நன்றாகக் கட்டை உடைக்கிறான். மரம் ஏறுவதிலும் ஓடுவதிலும் மிகவும் கெட்டிக்காரன். எதையும் மறைக்கவும் திருடவும், வேண்டும் என்று கேட்டு வாங்கவும் தெரியாதவன். மிக நல்லவன். பயந்த சுபாவம் உள்ளவன். என்னவோ மசி என்றுதான் கூப்பிடுகிறேன்'' என்று கூறினார் அண்ணாச்சி.

அண்ணாச்சி தொடர்ந்தார்.

''ஆர்க்காட்டு ரோடில் போய்க்கொண்டிருந்தது எங்கள் லாரி. ஜன நடமாட்டமே இல்லை. முன் நாள் நல்ல மழை பெய்ததால், ரஸ்தா முழுவதும் ஆங்காங்கே பல சதுப்பு இடங்கள் காணப்பட்டன. அந்த லாரியில் நானும் என்னுடன் இரண்டு கூலியாட்களும் இருந்தோம். அந்த ரஸ்தாவில் சிறிது தூரத்தில் பைத்தியம்போல் ஓர் உருவம் தள்ளாடிக் கொண்டு நடந்து வந்தது. அது சடக்கென்று தரையில் விழுவதற்கும் எங்கள் லாரி அந்த ஆசாமியின் அருகில் செல்வதற்கும் சரியாக இருந்தது. இறங்கிப் போய் அவனைப் புரட்டிப் பார்த்தோம். முகம் வாடி, நாக்கு வறண்டு இருந்தது. அவன்தான் இவன்.''

''பசி மயக்கமோ என்னவோ?'' என்றேன் நான்.

''ஆமாம். நாங்கள் கொஞ்சம் ஆகாரமும் தண்ணீரும் கொடுத்தோம். கண்களைத் திறந்தான். அப்புறம்தான் மெல்ல இவனை எங்கள் லாரியில் ஏற்றிக்கொண்டு சென்றோம். நாங்கள் இரண்டு நாட்கள் எங்கள் சவுக்குத் தோப்பில் இருந்தோம். அதை ஒரு பெரிய காடு என்றே கூறலாம். சுமார் பதினைந்து மைல் சுற்றளவு உடையது.''

''அப்படியா? அப்புறம்?''

''அந்தத் தோப்பைக் கண்டதும் இவனுக்கு மிகவும் குஷியாக இருந்தது. ஆகாரம் சாப்பிட்டதால் இவனுக்குச் சற்றுப் பலம் வந்தாற்போல் தோன்றியது. இவனே கூலியாட்களிடம் கோடரியை வாங்கி விறகு வெட்ட ஆரம்பித்தான். விறகு உடைப்பதிலும் மரம் ஏறுவதிலும் மிகவும் சமர்த்தனாக இருப்பதைக் கண்டு, இவனை லாரியில் என் விறகுத் தொட்டிக்கு அழைத்து வந்தேன். கடந்த இரண்டு மாதங்களாக இங்கேதான் இருக்கிறான்'' என்ற மசி வந்து சேர்ந்த மர்மத்தைச் சொன்னார் அண்ணாச்சி.

அவனுடைய கதையைக் கேட்ட பின், என் சிந்தனை மூன்று மாதங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தியது.

கோவையைச் சுற்றிலும் இருக்கும் மலைகளில் பல இனமக்கள் வாழ்கிறார்கள். கோவையில் பல மாதங்கள் தங்கி, ஆனைமலை, திம்மம், சேர்வாணி மலை முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு, கடைசியில் ஒரு பெரிய காட்டு மலைப்பாங்கான இடத்தில் சில நாட்கள் தங்கியிருந்தேன்.

அங்கே சில மலைச் சாதியாரிடம் எனக்கு அப்போது பலரசமான செய்திகள் கிடைத்தன. அந்தக் காட்டு மனிதர்களைக் கண்டால் காட்டு மிருகங்களும் பயந்து ஓடுகின்றன.

அக்காட்டில் திருமணம் செய்வதாக இருந்தால், ஒரு வரிசையில் ஆண்களும் மற்றொரு வரிசையில் பெண்களும் நிற்பார்கள். பிறகு பெண்கள் ஓடும்போது, எந்த ஆணின் கையில் எந்தப் பெண் கிடைக்கிறாளோ அவளே அவனுடைய மனைவி என்பது ஒருமுறை.

மற்றொன்று, பெண் தன் காதலனுக்குச் சில விளையாட்டு களைக் கட்டளையிடுவாள். அதில் எதுவும் சிக்காமலும் தோற்றுப் போகாமலும் காதலன் இருக்க வேண்டும்.

இன்னொரு வகை: காதலியும் காதலனும் ஒரு மேடான இடத்திலிருந்து உருண்டு வருவது உண்டு. அங்ஙனம் உருளும் போது மூக்குடன் மூக்குப் படும்படி, அவன் செய்ய வேண்டும். அப்படிக் காதலனின் மூக்கின்மேல் இருக்கும் கறுப்பு மை, பெண்ணின் மூக்கில் பட்டதும் காதலன் உடனே காதலியை எடுத்து அணைத்துக்கொள்கிறான்.

நான் சென்றிருந்த வேளையில் இப்படிப்பட்ட விளையாட்டுகள் நடந்துகொண்டிருந்தன அங்கே. பார்த்துக் கொண்டிருந்ததில், நாள் மறைவதையே நான் மறந்துபோனேன்.

அப்போது அங்கே நான் உள்பட எல்லோரும் இன்பமாக இருந்தோம். ஆனால் ஒரு கிழவி மட்டும் வாடிய முகத்துடனும் அதே சமயம் ஆத்திரத்துடனும் யாரையோ பழிவாங்க வழி தேடுகிறவள் போலவும் காணப்பட்டாள். அவளை அனுதாபத்தோடு நெருங்கியபோது கோபமாகவே பேசினாள்.

அவள் நடத்தை எனக்கு மர்மமாக இருந்தது. திடீரென்று அந்தக் கிழவி மற்றொரு வாலிப மங்கையைக் கண்டதும் சரம் சரமாகத் திட்ட ஆரம்பித்தாள். திட்டு வாங்கிய அந்தப் பெண்ணும் கிழவியைக் கண்டதும் சற்று மறைந்து பதுங்கி நடக்க ஆரம்பித்தாள். அந்தக் கிழவியைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் உந்தித் தள்ளியது என்னை.

மறைந்து சென்ற வாலிப மங்கையை அணுகினேன். என்னை நோக்கிக் காட்டு மொழியில் அவள் கூறியது இதுதான்:

"என்னுடைய கதையைச் சொன்னால், நீங்களும் வருந்துவீர்கள். என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டு மென்று, 'மல்லா' என்பவனும் 'கள்ளா' என்பவனும் சேர்ந்து ஆசை வைத்தார்கள். நான் கள்ளாவின் மேல்தான் ஆசை வைத்தேன். அவனைத்தான் கட்டிக்கொள்ள விரும்பினேன். ஆனால் நாங்கள் விரும்பியபடி உடனே திருமணம்

செய்யக் கூடாது. எங்கள் மலை ஜாதி முறைப்படி நான் வைத்த விளையாட்டுக்களில் மல்லாவும் கள்ளாவும் போட்டியிட்டார்கள். ஆனால் அவற்றில் எல்லாம் மல்லாவே ஜயமடைந்தாலும், 'நீ ஜயிக்கவில்லை' என்றே சொல்லி அவனை ஏமாற்றி வந்தேன்.''

''மல்லா சும்மாவிட்டிருக்க மாட்டானே!'' என்று தூண்டினேன் நான்.

''ஆமாம். என் நடத்தையிலும் என் போக்கிலும் சந்தேகித்த மல்லா என்னை மறைந்திருந்து கவனிக்கத் தொடங்கினான். அதோ தெரிகிறதே, அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு பெரிய காடு இருக்கிறது. அந்தக் காட்டியல் நானும் கள்ளாவும் தனித்துப் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு நாங்கள் எப்படித் தூங்கினோம் என்பது எங்களுக்குத் தெரியாது. ஏதோ ஓசை கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். நான் கள்ளாவின்மேல் சாய்ந்திருப்பதையும் கள்ளா என் மடியில் படுத்துத் தூங்குவதையும் எவ்வளவு நேரமாக மல்லா பார்க்கிறானோ எனக்குத் தெரியாது. அரிவாளைக் கையில் வைத்துக்கொண்டு, கள்ளாவையே அவன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் என் உடல் நடுங்கியது. கள்ளாவும் எழுந்தால் என்ன நடக்குமோ? நான் மல்லாவைப் பார்த்து, 'என்னை வெட்டு; கள்ளாவை ஒன்றும் செய்யவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டேன்.''

''மல்லா என்ன செய்தான்?'' திகிலோடு கேட்டேன் நான்.

''என்னை வெட்டு என்று நான் சைகை காட்டியதும், மல்லா என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மறைந்தான். அன்று மறைந்தவன்தான், இன்று வரையில் காணோம். அவனுடைய மறைவால், அவனுடைய தாயாருக்கு உண்டான ஒருவிதப் பைத்தியம் இன்னும் மாறவில்லை. என்னால்தான் மல்லா மறைந்தான் என்ற எண்ணத்தால், எவ்வகையிலாவது என்னைக் கொலை செய்துவிடுவதாகச் சொல்லுகிறாள்'' என்று உடல் நடுங்கக் கூறிய அவள், ''மல்லாவை எங்கே கண்டாலும் 'அழைத்துவந்தால், ஏதாவது பஞ்சாயத்தில் முடிவு செய்து, நல்ல பெண்ணைத் தேடித் திருமணம் செய்து வைக்கலாம். நானும் என் வாழ்க்கையில் பயமின்றி வாழலாம்'' என்றாள் மசிணி.

மசிணி என்பது அவர்களின் குலதேவதையின் பெயர்.

அந்த மசிணிக்கும் இந்த மசிக்கும் ஏதாவது சம்பந்த மிருக்குமோ?

நான் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை என்னைத் தேடிக்கொண்டு நிஜமாகவே வீட்டுக்கு வந்துவிட்டான் அந்த மசி.

''என்ன வேண்டும் மசி? வா உள்ளே'' என்று வீட்டினுள் அழைத்துச் சென்றேன் அவனை.

அவன் மலங்க மலங்க விழித்தபடி மேலும் கீழும் பார்த்துக் கொண்டே ஒரு பக்கமாய்க் குறுகிப் போய் உட்கார்ந்து குர்ரென்று என் முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

திட்டமிட்டபடி செயலாற்ற முனைந்தேன் நான்.

நான் நேரில் சென்று எடத்த காட்டு ஜாதிகளில் புகைப்பட ஆல்பத்தை அவனிடம் கொடுத்தேன்.

ஆல்பத்தைக் கொடுத்ததும், எல்லாப் படங்களையும் புரட்டிக்கொண்டே வந்தவன் ஒருசில படங்கள் வந்தபோது அப்படியே நிலைகுத்திப்போய்ப் பார்வையை நட்டான். அவன் முகம் மலர்ந்தது.

அந்த படங்களைக் கவனித்தேன் நான். அத்தனையும் கோவை மாவட்டத்தில் எடுத்த படங்கள்!

என் மகளை அழைத்தேன்.

''பிரேமா! தெருப்பக்கத்திலுள்ள நம்முடைய பலகணியின் அருகில் நின்று, 'மல்லா எல்கா? மல்லா எல்கா?' (எல்கா - எங்கே), என்று உரக்கக் கூப்பிடு'' என்று அனுப்பி வைத்தேன்.

பிரேமாவும் ஜாடையாகத் தெருப்பக்கம் சென்றாள். நான் கூறியதை விட மிகவும் சமர்த்தாகவே கூவினாள்.

அதைக் கேட்டதும் என் ஆல்பத்தைத் தரையில் எறிந்து விட்டு, ''ஓவ்!'' என்று வெளியில் ஓடினான் மசி.

நானும் அவனுடன் வெளியில் ஓடினேன். தெருவில் சுற்றும் முற்றும் பார்த்து ஏமாற்றமடைந்த அவன், ஓ வென்று குந்தையைப்போல் அழுதான்.

அவனை ஆசுவாசப் படுத்தி, அவன் அருகில் அமர்ந்து கொண்டேன். ''மசி, உன் பெயர் என்ன? உன் ஊர் எது? உன் பெயர் மல்லாதானே? நீ எப்படி இவ்வளவு தூரம் வந்தாய்?''

சிறிது நேரம் மௌனமாக இருந்தவன் பிறகு, தன் பெயர் மல்லாதான் என்று ஒப்புக்கொண்டு விவரித்தான்.

''ஒருநாள் மசிணியையும் கள்ளாவையும் எங்கள் பாடியில் வெகுநேரமாகக் காணோம். மசிணியைப் பார்க்காமல் சிறிது நேரம் கூட என்னால் இருக்க முடியவில்லை. அரை மனத்துடன் அரிவாளை எடுத்துக்கொண்டு விறகு வெட்டக் காட்டுக்குச் சென்றேன். அங்கு நான் கண்ட காட்சிகளை இன்று நினைத்தாலும் என் வயிறு பற்றி எரிக்கிறது. கையில் இருந்த அரிவாளால் கள்ளாவை வெட்டப் போனேன். 'தூங்கும்போது வெட்டக் கூடாது' என்று எங்கள் காட்டுக் குலதெய்வம் கூறுவதால், நான் காத்திருந்தேன்.''

''மேலே சொல்லு, மசிணியின் முன்னால் அரிவாளை எறிந்துவிட்டு வந்ததுகூட எனக்குத் தெரியும். இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?'' என்றேன் நான்.

''அவள் சந்தோஷமாக இருக்கட்டும்: நான் ஊரை விட்டுப் போகத் தீர்மானித்தேன். நடந்தே வந்தேன். பல இரவுகள் மரத்தின்மேல் தூங்கினேன். பல இரவுகள் வழியிலிருக்கும் குடிசைகளின் அருகில் படுத்துத் தூங்கினேன்.

கடைசியில் ரயில் வண்டியை வந்து பிடித்தேன். ஏதோ ஓர் ஊரை அடைந்தேன். எங்கே போனாலும் வீடுகளாகவே இருந்தன. பளபளப்பான பாதையில் சென்றேன். எங்கே போய் யாரை என்ன கேட்பது என்று தெரியவில்லை. என்ன காரணமோ, அந்தப் பாதையில் நடக்க நடக்க என் பாதங்கள் வீங்கிவிட்டன. பசி மயக்கத்தால் அந்தப் பாதையில் படுத்துக் கொண்டேன். விழித்த போது இந்தக் கட்டைத் தொட்டி முதலாளியும் மற்றக் கூலியாட் களும் வெளியில் இருந்தார்கள்''

என்று தன்னுடைய கதையைக் காட்டு மொழியில் சொன்னான் மசி என்ற மல்லா.

அன்று முதல் மல்லா அடிக்கடி எங்கள் இல்லத்திற்கு வருவான்.

''அடுத்த மாதம் நான் கோவைக்குப் போகிறேன். நீயும் வரவேண்டும். உன்னுடைய பாடிக்கு உன்னை அழைத்துச் செல்லுகிறேன்'' என்று கூறினேன்.

ஆனால் நான் ஊருக்குப் போகு முன் மல்லாவைச் சென்னையிலேயே காணோம்.

கோவைக்குச் சென்று, அவனுடைய மலைக்காட்டைத் தேடிக்கொண்டு பாடிக்குச் சென்றேன்.

பாடிக்குச் சென்றதும், மலர்ந்த முகத்துடன் மசிணி என்னை எதிர் நோக்கி வந்தாள். அவளுடைய மகிழ்ச்சியைக் கண்டதும், 'மல்லா வந்து விட்டான்போல் இருக்கிறது' என்று நினைத்தேன்.

''அண்ணா! எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது. நான் தைரியமாக வாழ்கிறேன்.'' -மசிணி சலாம் கூறினாள்.

''என்ன மசிணி, மல்லா வந்துவிட்டானா?'' என்று கேட்டேன்.

''இல்லை! மல்லாவும் மறைந்தான். மல்லாவின் தாயார்க் கிழவியும் மலையிலிருந்து உருண்டு விழுந்து செத்துவிட்டாள். பாவம்!'' என்று கூறினாள் மசிணி.

அந்தத் தாயின், 'மல்லா எல்கா?' என்ற கூக்குரல் இப்போதும் என் நெஞ்சில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

12

மத்து மராலே

தென் இந்தியாவில் உள்ள பூர்விகக் குடிமக்களில் 'கசவர்' என்று ஓர் ஜாதியினர் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி அநேகமாக யாருக்கும் அதிகமாகத் தெரியாது. இந்தியாவிலேயே மிகவும் குறைந்த ஜனத் தொகையை உடைய இனமக்கள் இவர்கள். நாற்பது கோடி மக்கள் வாழும் நமது இந்தியாவில் கசவர்களின் எண்ணிக்கை வெறும் 423 பேர்கள் தான் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இவர்கள் மலையடிவாரத்தில் சதுப்பு நிலங்களில் வாழுகிறார்கள். மலேரியா என்ற கொடிய நோயின் உற்பத்தி ஸ்தானமான இந்தச் சதுப்பு நிலங்களை அடுத்து வாழும் கசவர்களின் காரியம் என்னவென்பதை அறிந்தால் இன்னும் வியப்பாக இருக்கும். யானைகளின் கழிவுப்பொருள்களைச் சேகரிப்பதுதான் இவர்களின் வேலை. இந்தக் கழிவுப் பொருளுக்கு நல்ல கிராக்கி. ஆகவே அடிக்கடி இதை ஏற்றிச் செல்ல லாரிகள் இந்தப் பிராந்தியத்துக்கு முக்கியமாக, இந்தக் கசவர்களைத் தேடிச் செல்லும். யானைகள் இறந்துவிட்டால் அதைக் காட்டிலாகா அதிகாரிகளிடம் தெரிவிப்பதுகூட இந்தக் கசவர்களின் கடமைதானாம்.

இந்தக் கசவர்களைச் சந்தித்து அவர்களின் பழக்க வழங்களை அறிந்து வரவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது எனக்கு. ஆனால் உதகையில் இவர்கள் எந்தப் பிராந்தியத்தில் வாழ்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. எப்படியும் அவர்களின் இருப்பிடத்தை அறிந்து, போய்ப் பார்த்துவிடுவது என்ற உறுதியுடன் பலரிடம் விசாரித்து ஒரு மாதிரியாக அவர்கள் வாழும் பகுதியை நிச்சயப்படுத்திக் கொண்டேன். மறுநாளே யானைகளும் மலைப்பாம்புகளும் வாழும் பயங்கரமான காட்டுப் பிரதேசத்தில் வாழும் கசவர்களைக் கண்டு அளவளாவக் கிளம்பி விட்டேன்.

பஸ் உதகையைக் கடந்து மைசூர் செல்லும் வழியில் வளைந்து வளைந்து ஊர்ந்துகொண்டிருந்தது. நான் போய்ச் சேர வேண்டிய இடம் 'மசிணிகுடி'. அங்கு மாலை ஏழு மணிக்குத் தான் போய்ச் சேரமுடியும் என்று பஸ் பிரயாணி ஒருவர் குறிப்பிட்டார். உதகையிலிருந்து முப்பதாவது மைலில் பஸ் மாறிக் காட்டு ரோடு மார்க்கமாக வேறு பஸ்ஸில் பதினைந்து மைல் பிரயாணம் செய்து மசிணி குடிசை அடைய வேண்டும். ஏதோ ஓர் அசட்டுத் தைரியத்தில் கிளம்பிவிட்டேன். பிரயாணத்தின் போது பலர் பலவிதமாக அந்தப் பிரதேசத்துப் பயங்கரத்தைப் பற்றி விவரிக்கவே எனக்கு நடுக்கமாக இருந்தது.

இத்தனை பேர்களில் ஒருவர் மட்டும் தைரியம் கூறினார். 'பஸ் ஏழு மணிக்கு மசிணிகுடி போகும். காட்டிலாகா அதிகாரியின் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது. அவர் ரொம்ப நல்லவர். அவருடைய உதவி உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்; தைரியமாகப் போங்கள்'' என்றார் அவர்.

பஸ் மாறியபோது மாலை நேரம். சூரியன் மலைவாயில் வர்ண விசித்திரங்களைக் காட்டிக் கொண்டிருந்தான். மைசூர் செல்லும் பாதையிலிருந்து நான் பிரயாணம் செய்த பஸ் வலது பக்கம் திரும்பிச் சென்றது. பாதையின் இரு மருங்கிலும் பயங்கரமான அடர்ந்த காடு. விதம்விதமான மரங்கள் வானளாவி நின்றன. இடை இடையே அரசாங்கத்தாரின் முந்திரி மரத்தோட்டங்களும் காட்சி யளித்தன. மான்களும் மலையாடுகளும் பஸ்ஸைக் கண்டு துள்ளி யோடிக் காட்டில் சென்று மறைந்தன. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தக் கானகத்தில் கனத்த இருள் சூழ்ந்துகொண்டது. இருண்ட காட்டுக்குள்ளிருந்து விதம் விதமான ஒலிகள் கிளம்பின. நரிகள் ஊளையிட்டன. பஸ் ஆடி அசைந்துகொண்டு சென்றது.

எப்படியோ, இரவு ஏழு மணியளவில் பஸ் மசிணிகுடியை அடைந்தது. கண்டக்டர், 'அதோ தெரியுதே அதுதான், காட்டிலாகா அதிகாரி வீடு' என்று கையைக் காட்டிவிட்டு பஸ்ஸுக்கு 'ரைட்' கொடுத்துக்கொண்டு போய்விட்டான். அவன் எந்தத் திசையில் கையைக் காட்டினான்; எதைக்குறித்து அதோ என்று சொன்னான் என்பதொன்றுமே எனக்குப் புரியவில்லை. என்னைச்சுற்றிலும் இருள். எதையுமே என்னால் காண முடியவில்லை. நெஞ்சோ பாலத்தில் செல்லும் ரயில் வண்டியைப் போலத் தாளமிட்டது. கால்கள் அடி பெயர மறுத்தன. கொஞ்சதூரம் தட்டுத் தடுமாறிக்கொண்டு சென்றதுமே ஒரு வேலியும் அதையடுத்து ஒரு போர்டும் தென்பட்டன. நெருப்புக்குச்சியின் உதவியால் அந்தப் போர்டிலுள்ள எழுத்தை வாசித்தபோது நான் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அதுதான் காட்டிலாகா அதிகாரியின் வீடு.

''சார்... சார்...'' என்ற குரல் கொடுத்தேன். ஒரு சோலையின் நடுவே அவர் வீடு இருந்ததால் சற்று உரக்க அதுவும் பலமுறை கூப்பிடவேண்டியிருந்தது. கடைசியில் ''யாரது-?'' என்ற குரல் கேட்டது.

''நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன்'' என்று கூறுவதற்குள் குரலுக்கு உடையவரே என் அருகில் கையில் ஒரு லாந்தருடன் வந்துவிட்டார். நான் வந்திருக்கும் காரியத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, ''இன்றிரவைக் கழிக்க ஏதாவது வசதி செய்து தரவேணும். நாளைக் காலையில் நான் யானைக் காட்டில் வாழும் கசவரைக் காணச் சென்று விடுவேன்'' என்றேன்.

அவரும் என்னை அழைத்துக்கொண்டு சென்றார். தமது காரியாலயத்தில் வேலை செய்வோருக்காகக் கட்டிப் போட்டிருக்கும் விடுதிகளில் ஒன்றில் எனக்கு வசதி செய்து கொடுத்தார்.

அன்றிரவு...! அதைப்பற்றி இங்கு எழுதினால் வளரும். இரவு நான் தூங்கவில்லை. மூட்டைப் பூச்சிகளோடு போராடிக் கொண்டிருந்தேன் என்று மட்டும் சொன்னால் போதுமல்லவா?

கசவர் வாழும் யானைக் காட்டுக்குச் செல்ல எவ்விதப் போக்குவரத்து வசதியும் கிடையாது. யானையின் கழிவுகளை ஏற்றிக்கொண்டு வர ஒரு லாரி காட்டினுள் செல்லுமாம். இது ஒன்றுதான் கசவரின் இருப்பிடத்திற்கு என்னை அழைத்துச் செல்லும் ஒரே தூதன் என்று தீர்மானித்தேன். அந்த லாரிச் சொந்தக் காரரிடம் சென்று, அன்று யானையின் கழிவுப் பொருள்களை ஏற்றிவரக் காட்டுக்குள் லாரி செல்லும்போது என்னையும் ஏற்றிச் செல்லவேண்டுமென்ற கேட்டுக் கொண்டேன். அவரும் அதற்கு இணங்கினார். லாரி கிளம்பத் தயாராக இருந்தது. அடிக்கடி கழிவுப் பொருள்களைச் சுமந்து வரும் அந்த லாரியின் அருகே செல்ல முடியாமல் நாற்றம் வயிற்றைக் குமட்டியது. வாசனை ஏற்றிய கைக்குட்டையால் மூக்கை அழுத்தி மூடிக்கொண்டு லாரியில் ஏறி உட்கார்ந்தேன்.

லாரி டிரைவர் நிரம்பச் சரளமான பேர்வழி. வழிநெடுக யானைகளின் அட்டூழியங்களையும் சாகசங்களையும் பற்றிக் கதை கதையாகச் சொல்லிக்கொண்டே வந்தார். எத்தனையோ அபூர்வமான காட்சிகள். ஏழுமைல்கள் காட்டினுள் பிரயாணம் செய்து கடைசியாகக் கசவர்களின் குடிசையருகே பஸ் நின்றது.

கசவர்களோடு நான் இரண்டு நாட்கள் தங்கி இருந்தேன். அவர்களின் பழக்க வழக்கம், நடையுடை பாவனைகளையெல்லாம் அறிந்துகொள்ள அந்த இரண்டு நாட்கள் போதுமானவையாக இல்லை. இருந்தாலும் அதற்குமேல் அங்கு என்னால் தங்க முடியவில் கசவச்சிகள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு போகும் முறையைக் கண்டபோது பர்மாவின் 'பதாங்' ஜாதியினர் தங்கள் குழந்தைகளைத் தூக்கிச் செல்லும் நினைவுக்கு வந்தது.

மறுநாள் ஒரு கசவனுடன் அந்தக் கட்டைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். வெகுநேரம் சுற்றிவிட்டுக் கடைசியில் ஓர் இடத்தில் வந்து உட்கார்ந்தோம். உட்கார்ந்த இடம் ஏதோ ஒரு மரத்தனி தடித்த வேர் மாதிரி இருந்தது. நான் கையோடு கொண்டு போயிருந்த ரொட்டியையும் பழத்தையும் என்னோடு வந்த கசவனுக்குக் கொடுத்தேன். கசவன் தன் கையில் எப்போதும் ஒரு கத்தியை

வைத்திருந்தான். நான் கொடுத்த ஆகாரத்தை வாங்கிக்கொள்ளக் கையிலிருந்த கத்தியை நாங்கள் உட்கார்ந்திருந்த மரத்தின் வேரில் குத்தி நிறுத்தினான்.

இருவருக்கும் நல்ல பசி. சுவைத்துச் சாப்பிடலானோம். தற்செயலாக அந்தக் கசவன் பக்கம் திரும்பிய நான் திகைத்துப் போனேன். அவன் குத்தி வைத்திருந்த கத்தியிலிருந்து ரத்தம் ஓடி வருவதைக் கண்டேன்.

''இது என்ன? ரத்த மரமா இது?'' என்று கேட்டுக் கொண்டே அவனுக்கு அந்தக் காட்சியைச் சுட்டிக்காட்டினேன்.

அதைக் கண்ட அவன் முகத்தில் பீதி படர்ந்தது. குபீரென்று துள்ளிக் குதித்து எழுந்திருந்தான், 'மத்து மராலே!' என்று கூறிக் கொண்டே ஓட ஆரம்பித்தான். அவன் சொன்ன வார்த்தைகள் எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஏதோ ஆபத்து என்பதை மட்டும் உணர்ந்துகொண்டேன். வாயில் ரொட்டித் துண்டைக் கவ்விய படியே நானும் அவனைப் பின்தொடர்ந்து ஓடினேன்.

வெகுதூரம் சென்றதும், ''மத்த மராலே என்றால் என்ன?'' என்று கேட்டேன்.

மூச்சு வாங்க அவன் ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு, அங்கே உட்கார்ந்திருந்தது மரத்தின் வேரில் இல்லை; மலைப் பாம்பின் மேல்தான் அமர்ந்திருந்தோம் என்பதை விளக்கினான்.

என் உடல் நடுங்கியது. மரங்களைப் இலைச் சருகுகளால் மூடப்பட்டு இப்படித்தான் மலைப் பாம்புகள் கிடக்குமாம். இப்படி உள்ள மலைப் பாம்புகளைப் பார்த்தால் அதன் தலை வால் எங்கே என்று தெரியாததால் அதன் உடலுக்கு நேர் எதிர்ப் பக்கமாகத்தான் ஓட வேண்டுமாம். இல்லாவிட்டால் மலைப்பாம்பின் பிடிக்குள் சிக்கி நேரிடுமாம். 'மலைப் பாம்புகள் ஓடாது. பிடித்தால் விடாது' என்று பல விஷயங்களைப் பற்றி விளக்கினான் அந்த கசவன். அன்று முழுவதும் மலைப் பாம்பு ஆசனத்தில் உட்கார்ந்திருந்ததை எண்ண எண்ண உடல் சிலிர்த்தது.

யானையின் கழிவுகள் ஏற்றிக்கொண்டு மசிணி குடிக்குத் திரும்பும் லாரிக்காகக் காத்திருந்து அதில் ஏறிக்கொண்டு பஸ் நிலையத்தை வந்தடைந்ததும் வயிற்றைப் புரட்டிக்கொண்டு வந்து வாந்தியெடுத்தேன். யானை லத்திகளின் நறுமணமும் கசவர் கொடுத்த கசப்புக் காஞ்சியுமே குமட்டலுக்குக் காரணம்.

13

புலியைப் பலி கொண்ட குரங்குகள்

ஒரு சமயம் கசவர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக நான் அவர்களிடையே சிலகாலம் தங்கும்படியாக நேர்ந்தது. இந்தக் கசவர்களின் எனக்கு எத்தனையோ ரசமான கதைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு நாள் காட்டில் விறகு வெட்டச் சென்ற ஒரு கசவன் குடியிருப்பை நோக்கி ஓடி வந்தான். உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த எங்கள் அருகில் வந்து, ''வாங்க, வாங்க. ஓடியாங்க! ஓர் அதிசயமான காட்சி. இதைப்போல் நான் பார்த்ததே இல்லை'' என்றான்.

வியப்புடன் அவனைப் பின்தொடர்ந்து சென்றோம். அடர்ந்த கானகத்தின் வழியே அவன் எங்களை அழைத்துச் சென்றான். புதர்களையும் பாறைகளையும் கடந்து நென்ற நாங்கள் 'கீச் கீச்' என்ற குரங்குகளின் கூச்சலைக் கேட்டோம். '' அதோ பாருங்கள்'' என்று ஒரு காட்சியைக் காட்டினான் அந்தக் கசவன்.

இருநூறு முந்நூறு குரங்குள் இருக்கும். எல்லாம் சத்தமிட்ட படி கும்பலாகக் கூடியிருந்தன. எங்களுக்கு ஒன்றும் விளங்க வில்லை. எங்கள் குழப்பத்தைக் கண்ட அந்தக் கசவன், ''நான் விறகு பொறுக்க வந்தபோது இங்கே இத்தனை குரங்குகளும் இத்தனை கூச்சலும் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றும் மாகத்தான் சில குரங்கள் தென்பட்டன. அடி வயிற்றில் ஒட்டிப் பிடித்துக்கொண் டிருக்கும் குட்டியோடு சாவதானமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு தாய்க் குரங்கின் வேகம் திடீரென்று அதிகரித்தது. ஏன் இத்தனை வேகமாக மரத்துக்கு மரம் தாவுகிறது என்று எண்ணிய நான், பீதியைத் தரும் எதையோ அது கண்டிருக்கவேண்டும் என்று தீர்மானித்தேன்'' என்றான். மேலும் தொடர்ந்தான்.

''அப்போது தாய்க் குரங்கு ஓடும் வேகத்தைத் தாங்க முடியாத குட்டியின் தளர்ந்துவிட்டது போலும். குட்டி தரையில் பொத் தென்று விழுந்துவிட்டது. விழுந்த அதிர்ச்சியில் அது இறந்தும் போய்விட்டது.

''குட்டி கீழே விழுந்த அதே சமயத்தில் ஒரு புதர் மறைவி லிருந்து பயங்கரமான புலி ஒன்று வெளிப்பட்டுக் கீழே விழுந்த குரங்குக் குட்டியை மோந்து பார்த்தது. அவ்வளவுதான்; அதைச் சாப்பிட அது முயற்சிகூடப் பண்ணவில்லை. உடனே எங்கிருந்து தான் அத்தனை குரங்குள் வந்தனவோ தெரியாது. 'கீச் மூச் கீச்' என்று இருநூறு முந்நூறு குரங்குகள் தபதபவென்று நான்கு பக்கங்களி லிருந்தும் புலியைத் தாக்க ஆரம்பித்தன. புலிதான் அந்தக் குரங்குக் குட்டியைக் கொன்றுவிட்டது என்று குரங்குகள் நினைத்துவிட்டன போலும். திடீரென்று தன்மீது குரங்குக் கூட்டம் பாயந்து தாக்கவே புலியும் ஒரு விநாடி செய்வதறியாது திகைத்தது. குரங்குகள் புலியை எதிர்த்துத் திக்குமுக்காட வைக்கும் இந்த அதிசயத்தை நானும் மரக்கிளையில் பதுங்கியபடியே பார்க்கலானேன்.

''புலி உறுமிற்று. வாலைத் தரையில் அடித்தது. பாய்ச்சல் காட்டியது. ஆனால் குரங்குகளோ கொஞ்சமும் அஞ்சவில்லை. மெல்ல மெல்லப் புலியைச் சூழ்ந்து அமைந்துள்ள வட்டத்தை இறுக்கிக்கொண்டே குரங்குகள் புலியின் அருகே வரலாயின. புலி தப்பிச் செல்ல முயன்றது. குரங்கு அரணைப் பிளந்துகொண்டு புலியினால் வெளியேற முடியவில்லை. எல்லாக் குரங்குகளும் ஏககாலத்தில் புலியைத் தாக்க ஆரம்பித்தன. கடுமையான போர். புலியின்மீது குரங்குகள் தாவி விழுந்து பிடுங்கின. குரங்குகளின் கூச்சல்; உறுமல்; காடே கிடுகிடுக்கும்படியான சத்தம். புலியின் வீராவேசமான தாக்குதலுக்கு இலக்காகிப் பல குரங்குகள் மாண்டன. ஆனால் இறக்கும் ஒரு குரங்குக்கு நாலு குரங்குள் ஓடிவந்து ஈடு செய்தன. தங்கள் இனத்தான்

இறப்பதைக் காணக் காண அவைகளுக்கு ஆவேசம் அதிகமாகி விட்டது. அதோ பாருங்கள்'' என்று காட்டினான் கசவன். அப்போதுதான் அந்தக் குரங்கக் கூட்டத்தின் நடுவே தள்ளாடியபடி நிற்கும் புலியை நாங்கள் கண்டோம்.

அந்தக் கசவன் கூறியது உண்மை என்பதை அந்தப் புலியின் நிலை நிருபித்துக்கொண்டிருந்தது. மூர்க்கத்துக்குப் பெயர் போன புலி, யானையையே தாக்கிக் கொல்லும் புலி தன் வலிவிழந்து தள்ளாடித் தடுமாறிக்கொண்டிருந்தது. அதன் உடலின் பல இடங்களிலிருந்து ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. புலியின் இரண்டு கண்களையும் குரங்குகள் தாக்கி அதனால் பார்க்க முடியாதபடி அதைக் குருடாக்கி விட்டன. எந்தத் திசையிலிருந்து எப்படிக் குரங்குகள் தாக்குகின்றன. என்பதைப் புலியினால் உணர முடியவில்லை. அந்த நிலையில் புலியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. புலியைச் சுற்றி அதன் தாக்குதலுக்கு இலக்காகி இறந்த குரங்குள் விழுந்து கிடந்தன. ஆனால் வெற்றி என்னவோ குரங்கு களுக்குத்தான். நிற்கமாட்டாமல் புலி தரையில் படுத்தபடியே ஈனமான குரலில் உறுமிக்கொண்டிருந்தது. அதுவும் சிறிது நேரம்தான். கொஞ்சநேரத்தில் அதன் தலை தொங்கிவிட்டது. சலனமற்று விழுந்து கிடந்த புலியைச் சுற்றி இருப்பது முப்பது குரங்குகள் வெகுநேரம் வரை பாராக் காப்பது போலச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தன. சண்டையிட்ட குரங்குகள் சற்றுத் தூரம் சென்று ஏதோ பச்சிலைகளைத் தின்றுவிட்டு வந்து காவல் காக்கும் குரங்குகளை அனுப்பிவிட்டு, 'டூட்டி' மாற்றிக்கொண்டன.

புலியைக் கொன்றதுகூட எங்களுக்கு ஆச்சரியமாகப் படவில்லை. இறந்த புலிக்கு அவை மாறி மாறிக் காவல் காத்து நின்றதை எண்ணி எண்ணி வியந்தவாறு குடிசைக்குத் திரும்பி னோம். கானகத்தின் தன்னிகரில்லாத வீரன் புலி. ஆனால் அதுவும்கூடச் சில சமயங்களில் இப்படிச் கேவலம் குரங்குகளிடம் பலியாவதுண்டு என்பதைக் கேட்டால் நம்ப முடியாது. கண்கூடாகப் பார்த்த பிறகு நம்பாமல், அதை எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

14

நல்லூரா பீ...ர்...லா!

திருவண்ணாமலையிலிருந்து பஸ்ஸில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். சோலைகளும் மலைகளும் மரங்களும் அடர்ந்ததோர் இடத்தில் பஸ் வரும்பொழுது, அந்த இயற்கையான காட்சி என் உள்ளத்திற்கு இன்பத்தைக் கொடுத்தது.

அருகிலிருந்த ஒரு சோலையிலிருந்து ஒன்றும் புரியாத ஒரு மொழியில், யாரோ சிலர் சண்டை போடும் குரல் கேட்டது. பஸ் அருகில் வரவர, அது 'குருவிக்காரர்களின் கூட்டம்' என்று பஸ்ஸில் உள்ளவர்கள் தெரிந்துகொண்டோம்.

பஸ் அருகே கொஞ்ச நேரம் நின்றதால் அந்தக் குருவிக்காரர் களின் கூட்டத்தில் எனக்குத் தெரிந்த சில குருவிக்காரர்கள் இருக்கிறார்கள்

என்பதைத் தெரிந்துகொண்டேன். அங்கு அன்று சண்டைசெய்யும் பெண்களில், சென்னையில் எனக்குத் தெரிந்திருந்த ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் கண்ணீருடன் சண்டை செய்யும் காட்சி என் உள்ளத்தை உருக்கியது.

சில ஆண்டுகளுக்கு முன் நான் அவளைச் சென்னையில் கண்டபோது இருந்த அவளது ரூபலாவண்ணியமான முகம் அன்றில்லை. அவள் தன் கையில் பிடித்த கத்தியுடன் ஓர் ஆணின்மேல் பாய்வதைக் கண்டதும், ''நல்லூரா பீ...ர்...லா!'' (நல்லூரா இங்கே வா) என்று அழைத்துக்கொண்டே, பஸ்ஸிலிருந்து கையைக் காட்டினேன்.

நான், குருவிக்காரர்கள் பேசும் மொழியில் அவளை அழைத்ததால் அவள் சட்டெனப் புரிந்துகொண்டாள். என் பக்கம் திரும்பிய நல்லூரா என்னைக் கண்டதும், ''லோ-ணா' (ஓ ஆண்ணா) என்று ஓலமிட்டு ஆழ ஆரம்பித்தாள்.

குருவிக்காரர்களின் தொடர்பு சுமார் பத்தாண்டுகளுக்கு மேல் எனக்கு உண்டு, ஆனால் நல்லூராவின் தொடர்போ எனக்குக் கடந்த ஐந்தாண்டுகளாகத்தான் உண்டு. அவள் அழகுள்ளவளாக இருந்ததால் எல்லா ஆண்களும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முயற்சி செய்தார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஒரு நாள், லேஸ் லோய் என்னும் குருவிக்காரன் ஒருவன் ஆறு அணாவுக்குப் பிரியாணி வாங்கித் தரும்படி என்னிடம் பிடிவாதம் செய்தான். அவனுடன் ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் வேறு யாரும் இல்லை. நம் கதாநாயகியான இந்த நல்லூராவேதான். உடனே நான் விஷயத்தைப் புரிந்து கொண்டேன். ''லேஸ் லோய்! இவளை நீ காதலிக்கிறாயா?'' என்று கேட்டேன். அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக நின்றான.

மறுநாள் காலை அவர்கள் இருவரும் என் வீட்டுக்கு வந்தார்கள்.

''எங்களுக்கு நேற்று இரவு அறைக் கல்யாணம் முடிந்து விட்டது. நல்லூராவைத் திருமண உடையுடன் புகைப்படம் பிடிக்க வேண்டும்'' என்று கூறினான் லேஸ்.

''சரி!'' என்று நல்லூராவைத் திருமண உடையுடன் புகைப்படம் பிடித்தேன். இச்சம்பவத்திற்குப் பின் சுமார் இரண்டாண்டுகள் வரை நான் அவர்களைக் காணவில்லை. இன்றுதான் நல்லூராவை இந்தச் சோலையில் கண்டேன்.

''என்ன நல்லூரா? விஷயம் என்னவென்ற சொல்லேன்?'' என்று கேட்டேன்

''இரண்டு நாட்களுக்கு முன் நாங்கள் திருவண்ணா மலையிலிருந்து பிரயாணமானோம். அப்போது இருள் சூழ்ந்திருந்தது. எங்கள் கூட்டத்திலேயே சிலர் முன்னும் பின்னுமாகவும், தாய்மார்கள் கொஞ்சம் உட்கார்ந்து உட்கார்ந்தும் நடந்து வந்தார்கள். இரண்டு நாட்களாக நடந்து வந்ததால் எனக்கு நேற்றிரவு கால்கள் வலித்தன. நான் ஒரு மரத்தடியில் கொஞ்சம் படுத்தேன். அப்படியே தூங்கிவிட்டேன். என்னிடம் மற்ற ஆண்கள் பிரியமாக இருக்கிறார்கள் என்று இந்தப் பெண்களுக்கெல்லாம் பொறாமை! ஆகையால் நான் தூங்குவதைப் பார்த்து எல்லாப் பெண்களும் என்னை விட்டு விட்டு வந்துவிட்டார்கள். நான் எழுந்து

பார்த்தேன். ஒரே இருளாக இருந்ததால், நடந்து வரப் பயந்து, அங்கேயே படுத்துக்கொண்டேன். இன்று காலையில்தான் இங்கு வந்தேன். என்மீது சந்தேகப்பட்டு என் கையால் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தூக்கச் சொல்கிறார்கள்'' என்றாள் நல்லூரா.

அருகிலிருந்த பஞ்சாயத்துக்காரர்களும், ''காய்ச்சிய இரும்பை எடுப்பதான் அவளிடமிருந்து சந்தேகத்தைப் போக்கும். அதுதான் எங்கள் பெண்குல வழக்கம்'' என்று கூறினார்கள்.

எல்லா விஷயங்களும் தெரிந்துகொண்டேன். ஆனால் அன்று, 'பிரியாணி' வாங்கிக் கொடுத்த லேஸ் லோயை அன்று அக்கூடத்தில் காணோம். நல்லூரா மற்றொருவனைத் தன் கணவன் என்று காட்டினாள். அவனோ எனக்குப் புதியவன். நான் எப்படி அவளைச் சமாதானப்படுத்துவது? என்னால் கூடுமான வரையில் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் நல்லூராவைப் பற்றிக் கூறினேன். அவர்கள் ஒன்றும் கேட்பதாக இல்லை.

''சரி நல்லூரா, நீதான் அவர்கள் சொல்வதைப் போல் இரும்பைத் தூக்கிவிடு. உனக்கு மனத்தில் ஒன்றுமில்லை என்றால், நீ ஏன் பயப்பட வேண்டும்? நீ இரும்பைத் தூக்கினால், அது உனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? நானும் அதைப் பலரிடம் கூறுவேன்'' என்று சொல்லிக்கொண்டே அவளருகில் சென்றேன். என் வார்த்தைகளைக் கேட்டவுடன் அவள் அந்தப் பழுக்கக் காய்ச்சின இரும்பைத் தன் கையில் தூக்கிப் பஞ்சாயத்துக் கூட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்து மறுபடியும் அந்த இரும்பைத் தீயில் எறிந்துவிட்டாள். பஞ்சாயத்தார்களின் மனம் சமாதானம் அடைந்தது.

இச்சம்பவம் நடந்து சுமார் ஐந்து மாதங்களுக்குப் பிறகு, சமீபத்தில் நல்லூராவைச் சென்னையில் பார்த்தேன். அவளிடம், ''எங்கே உன் கணவன்?'' என்று கேட்டேன். அவள் சொன்ன ஒரு துக்கமான செய்தியைக் கேட்டு என் மனம் திடுக்கிட்டது.

''எங்கள் குலப் பெண்களைக் காய்ச்சின இரும்பைத் தூக்கச் சொல்லி எங்கள் கற்பைச் சோதித்தால், எங்கள் குலப்பெண் தெய்வம் அந்த ஆண்களைக் கொலை செய்துவிடும். அங்ஙனம் என் கணவரும் இறந்துவிடுவாரோ என்று நினைத்துத்தான் நான் அன்று அவ்வளவு தூரம் வாதாடினேன். என் கணவர் போன மாதம் இறந்துவிட்டார். எனக்கு இனித் திருமணமே வேண்டாம்'' என்று கூறிக், கண்ணீர் சிந்திவிட்டு என்னை நிமிர்ந்து பார்க்காமலே நடந்து சென்று விட்டாள்.

அவள் நிலைமையை உணர்ந்தும் என் கண்களும் உள்ளமும் கலங்கத்தான் கலங்கின.

15

பிடித்தது மோப்பம் எடுத்தது ஓட்டம்

மைசூரில் சில மாணவர்களின் அழைப்புக்கு இசைந்து சில மாதங்களுக்கு முன் அங்கே சென்றிருந்தேன்.

அப்பொழுது மைசூரிலிருந்து-உதகைக்கு நூறு மைல் என்றும், பஸ்ஸிலேயே போகலாமென்றும், அதில் சுமார் எழுபது மைல், 'பாண்டிபூர்' காட்டின் வழியாகப் பஸ் ஓடுகிறது என்று கேள்விப்பட்டேன். அதைக் கேட்டதும், 'எழுபது மைல் காட்டின் காட்சிகளையாவது கண் குளிரக் காணலாமே!' என்ற எண்ணம் உண்டாயிற்று. பிறகு வழிகாட்டியுடன் பிரயாணம் தொடங்கி னேன். ஆனால் அந்தக் காட்டுப் பிரதேசத்தில் கால் நடையாகச் சென்று, சில விஷயங்களைக் காணவேண்டும் என்ற அவா ஏற்பட்டது.

ஒவ்வோரிடத்திற்கும், ஒவ்வொரு விஷயத்திற்கும் தனித் தனியாக முதலில் ஒரு வழிகாட்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வழிகாட்டி சமர்த்தனாக இல்லாவிட்டால், நாம் எடுத்துக்கொண்ட காரியம் முற்றும் தோல்வி அடையும், பணமும் நேரமும் வீணாவதுடன் மட்டுமல்ல, நமக்கு காட்டில் ஆபத்து ஏற்படும்.

வழி தெரியாமலே பல மைல் காட்டினுள் சென்றுவிட்டால் இரவில் மரத்தின்மேல் தூங்க நேரிடும். அந்தக் காட்டில் வாழும் மக்களின் மொழி தெரிந்தவனாகவும் ஆபத்தில் கைவிடாத வனாகவும், தைரியமும் ஊக்கமும் நம்பிக்கையும் உள்ளவனாக வும், காட்டு விஷயங்களில் அனுபவமுள்ளவனாகவும் வழிகாட்டி இருக்க வேண்டும்.

மைசூரில் எனக்கு நல்ல வழிகாட்டி கிடைத்தான். இருவரும் பஸ்ஸில் பிரயாணமானோம். பஸ் மைசூரை விட்டதும், ஆனந்தமாகத்தான் பறந்து சென்றது. நேரம் போவதே தெரியாமல் இருந்தது. ஏனென்றால் ஒரு சரியான புளிமூட்டை மனிதர் பஸ்ஸில் வந்து உட்கார்ந்தார். அவர் புளிமூட்டை மட்டுமல்ல. அவருடைய தொப்பையும் பஞ்சு மூட்டையைப் போல் இரண்டாகப் பிரிந்திருந்தது. பஸ் ஓடும்போது அந்த இரண்டு தொப்பைகளும் மேலும் கீழும் நடனம் செய்தன. அந்தக் காட்சிகளைக் கண்ட பலர், பல செய்திகளைப் பேசிப் பேசி, விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பஸ் ஓடிக்கொண்டே இருந்தது. 'காட் ரோட்' என்ற பலகையைக் கண்டதும், என் உள்ளத்தில் ஒருவித மனச்சோர்வு ஏற்பட்டது. 'நாம் குறித்த இடத்திற்குப் போவதற்குள் இருட்டிவிடும் போல் இருக்கிறதே'' என்ற என் உள்ளத்தில் திகில் குடிகொண்டது.

மைசூரை விட்டுப் பஸ்ஸும் சுமார் நாற்பது மைல்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் அடர்த்தியான காடுகள் வளர்ந்திருந்தன. அந்தக் காட்டில் யானைக் கூட்டங்களும், புலி, கரடி, மான் குரங்கு முதலியவைகளும் அதிகமாக இருந்தன.

குரங்குகளைக் கண்டதும் பஸ் ஓட்டி சற்று நிதானமாக ஓட்ட ஆரம்பித்தார்கள். வாய் கறுத்த பெரிய குரங்குளின் கூட்டம் ஒன்று வந்து,

பஸ்ஸைச் சூழ்ந்துகொண்டது. அவரவர்களின் கரங்களில் கிடைத்ததைக் குரங்குகளுக்கு எறிந்தார்கள்.

சிறியோர் முதல் பெரியோர் வரையில் மிகவும் குதூகலத்துடன்தான் அந்தக் காட்சிகளைக் கண்டார்கள். திடீரென்று, ''என்னுடைய கால் பூட்ஸைக் காணோமே!'' என்று ஒருவர் கூறினார். தேடினோம், காணோம். சிறிது நேரத்திற்கெல்லாம் அது மரத்தில் இருப்பதைக் கண்டோம். பஸ்ஸும் புறப்பட்டது. அதுவும் பாண்டிபூர் காட்டின் எல்லையை வந்து அடைந்தது. நானும் வழிகாட்டியும் இறங்கினோம்.

அன்றிரவு பாண்டிபூர் காட்டில் நண்பருடைய இல்லத்தில் தங்கினோம். மறுநாள் காலையில் நானும் நண்பரும் வண்டிப் பாட்டையில் சிறிது தூரம் மாட்டு வண்டியில் சென்றோம். மாட்டு வண்டியில் சென்ற பிரயாணம் எனக்குப் போதும் போதுமென்று ஆகிவிட்டது. ஆகையால் வண்டியில் இருந்து இறங்கி ஒற்றையடிப் பாதையின் மூலம் நடந்தோம். நானும் நண்பரும் பேசிக்கொண்டே ஆனந்தமாகச் சென்றோம்.

இங்ஙனம் பேச்சில் ஈடுபட்டிருந்தோமே ஒழிய, நாங்கள் எவ்வளவு தூரம் போகிறோம் என்பதை முற்றும் மறந்தோம்.

எங்களுடன் குறும்பர்கள் இருவர் வந்தார்கள். அவர்களில் ஒருவர் திடீரென்று, மூச்சை இழுத்துப் பிடித்தான். உடனே அதைக் கவனித்த நான், ''என்னப்பா! மோப்பம் பிடிக்கிறாய்?'' என்று கேட்டேன். இங்ஙனம் காட்டில் காடர்களுடன் பிரயாணம் செய்யும் போது, திடீரென்று மோப்பம் பிடித்தால் நான் மிகவும் ஜாக்கிரதை யாக இருப்பது வழக்கம். நான் குறும்பனைக் கேட்டதும், ''ஒன்றுமில்லை; என்னவோ இரத்த வாடை வீசுகிறது. அதற்காகத் தான் மோப்பம் பிடித்தேன்'' என்றான் அவன்.

அப்பொழுதுான் என் நண்பரும், ''காட்டில் வெகுதூரம் வந்துவிட்டோம்'' என்று கூறினார். ''சரி, நாங்கள் இங்கேயே இருக்கிறோம். நீ அந்த மரத்தின் மேல் ஏறி, நான்கு பக்கங்களிலும் பார். ஏதாவது உன் கண்களில் பட்டால் உடனே சைகை காட்டினால் போதும். நாங்களும் மரத்தில் பாய்கிறோம்'' என்றேன் நான்.

மரத்தில் ஏறிய குறும்பன் நான்கு பக்கங்களிலும் பார்த்தான். நாங்கள் நிற்கும் இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் எதையோ கண்டவன்போல், ஓசை செய்யாமல் மரத்திலிருந்து இறங்கினான். காதோடு காதாய், குறும்பன் எதையோ நண்பரிடம் கூறினான்.

அவ்வளவுதான்! நண்பர் முதலிலும் அதற்குப் பின்னால் நானும் எனக்குப் பின்னால் இரு குரும்பர்களும் ஓட ஆரம்பித்தோம்.

புதர்களின் மேல் இருக்கும் முள் எங்கள் மேல் உராய்ந்து கிழிக்காமல் எங்கள் கையிலிருந்த தடியைப் புதர்களுக்குக் குறுக்காகப் பிடித்துக்கொண்டோம். கண்ணை மூடிக்கொண்டு, வந்த வழியாகவே புதர்களிலும் செடிகளிலும் புகுந்து புகுந்து ஓடினார் நண்பர். அவருக்குப் பின்னால் நாங்களும் தொடர்ந்து ஓடினோம். புதர்களின் இடையே ஓடியதால் இரண்டு பக்கங்களின் சட்டைகளும் கிழிந்துவிட்டன. வெகு தூரம் ஓடிவந்து விட்டோம். பிறகு சாலை தெரிந்ததும் சற்று நடக்க ஆரம்பித்தோம்.

"நாம் இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில், ஒரு புலி ஒரு மாட்டை அடித்து, குதியைக் குடித்துக்கொண்டிருந்ததாம். அந்தக் குருதியின் வாடையில்தான் நாம் வருவதையும் புலி மோப்பம் பிடிக்காமல் இருந்தது போலும்!" என்று கூறினார் நண்பர்.

"நீங்கள் இந்தச் செய்தியை அங்கேயே சொல்லி இருந்தால் எனக்கு ஓடக் காலே வந்திருக்காது!" என்றேன்.

"அதற்காகத்தான் நான் அங்கே சொல்ல மறந்துவிட்டேன். ஓடி வருவதே நலம்!" என்று கூறினார்.

வேட்டைக்கென்று காட்டுக்குச் சென்றிருந்தால் அதற்கு வேண்டிய முஸ்தீபுகளுடன் சென்றிருப்போம். ஆனால் நாங்கள் அன்று சென்றது இயற்கையின் காட்சிகளைக் கண்டு களிக்க. ஆனால் வெகு தூரம் காட்டினுள் அன்று பேச்சுவாக்கில் நடந்து சென்று விட்டோம்.

நண்பரும் நாங்களும் அன்று நன்றாக ஓய்வு எடுத்தோம். அன்றிரவு அந்தக் காட்டில் வாழும் குறும்பர்களின் பாடியில் ஒரு குழந்தைக்கு நாமகரணம் செய்தார்கள். ஆகையால் அன்றிரவு குறும்பப் பெண்கள் கூடி நடனம் ஆடினர். அந்தக் காட்சிதான் எத்தனை நன்றாகயிருந்தது!

அந்தக் குதூகலத்தில் சுமார் ஐந்து வயதுச் சிறுவர்கள் முதல் கிழவர்கள் வரையில் கலந்துகொண்டார்கள். இந்தக் காட்சிகளைப் போன்வற்றில் பல சந்தர்ப்பத்தில் பல இடங்களில் கலந்து கொண்டாலும், எனக்கு ஒவ்வொரு காட்டிலும் நடப்பவை புதியனவாகவேதான் தோன்றுகின்றன. புதிய இன்பங்களை என் உள்ளம் அடைகிறது. நீங்கள் கிராமங்களுக்கு மலைப் பிரதேசத்திற்குப் பிரயாணம் செய்தால் இது விளங்கும்.

16

காட்டெருமைப் போர்

ஆனைமலையில் வாழும் பழங்குடி மக்களில் ஓர் இனத்தவருக்கு முதுகர் (முதுவர் என்றும் சிலர் கூறுவார்கள்) என்று பெயர். விரோதிகளை நாட்டை விட்டு விரட்டும்போது தங்களுடைய உடைமைகளை முதுகின்மீது சுமந்துகொண்டு ஓடி வந்ததால் இவர்களுக்கு முதுகர் என்று பெயர் ஏற்பட்டதாம். இவர்களின் பழக்கம் வழக்கங்களை ஆராய்ச் சில நாட்கள் ஆனைமலையில் தங்கினேன். யசோதரன் எனக்கு நண்பனானான்.

அவன் ஒரு முதுகர் இனத்தவன். பார்ப்பதற்குப் புல் தடுக்கிப் பயில்வான் போல்தான் இருப்பான். ஆனால் அவனது தைரியத்தை யும் திறமையையும் அளவிட முடியாது. ஆனைமலையின் ஒவ்வோர் அங்குல இடத்தைப் பற்றியும் அவனுக்குத் தெரியும். ஆனைமலையில் யாருக்கு என்ன காரியம் ஆகவேண்டியிருந்தாலும் யசோதரனைத்தான் தேடி வருவார்கள்.

யானைமலையில் எனக்கு வழிகாட்டியாக வாய்த்தான் யசோதரன். காட்டு மிருகங்களைப் பற்றி, முக்கியமாக யானை களைப் பற்றி, அவன்

சொன்ன திடுக்கிடும்படியான செய்திகளைக் கேட்கக் கேட்க மயிர்க்குச்செடுக்கும்படியாக இருந்தது.

காட்டெருமைகளைப் புகைப்படம் எடுக்க விரும்பினேன். அதை யசோதரனிடம் தெரிவித்தபோது அவன் என்னை அழைத்துக் கொண்டு கிளம்பினான். காட்டுக்குள் சுமார் ஒரு மைல் சென்றதும் தூரத்தில் காட்டெருமைகளின் கூட்டத்தைக் கண்டோம்.

''அது இந்த வழியாகத்தான் வரும். நாம் ஒரு மரத்தின் மீது ஏறிக் காத்திருக்கலாம்'' என்று கூறினான் யசோதரன்.

நான் அவன் கூறியபடி அருகிலிருந்த ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். யசோதரன் ஒரு பெரிய பாறையின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். காட்டெருமைகளின் பலத்தையும் அவற்றின் குண விசேங்களையும் பற்றி எனக்கு விளக்கிக் கொண்டே உட்கார்ந்திருந்தான் யசோதரன். யானைக் கூட்டங்களையாவது ஒரு வகையில் நம்பலாம். இந்தக் காட்டெருமைகளை நம்பவே கூடாது. ரொம்ப மூர்க்கக் குணமுடையவை. மரத்தின்மீது ஏறி இதனிட மிருந்து தப்ப நினைத்தாலும்கூட இதுவிடாது. மரத்தைத் தன் உறுதியான தலையினாலும் கொம்புகளினாலும் இடித்து இடித்துப் பிளந்த கீழே சாய்ந்து விடும் என்று அவன் சொன்னபோது என் உடல் என்னையும் மீறி நடுங்கியது.

யாசோதரன் ஏதோ காரியமாகத் தான் உட்காரந்திருந்த பாறையிலிருந்து கீழே குதித்து நின்றுகொண்டிருந்தான். அவன் நிற்பது எனக்குத் தெரிந்தது. அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது.

திடீரென்று நான் ஏறிக்கொண்டிருந்த மரத்துக்குப் பத்தடி தூரத்திலிருந்து புதரிலிருந்துஒரு காட்டெருமை சடக்கென்று வெளிப்பட்டது. இத்தனை நேரம் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் போல மரத்தை நோக்கி வெகு வேகமாகச் சீறிக்கொண்டு வந்தது. நான் வெலவெலத்துப் போனேன். என்னையறியாமல் என் வாய், ''ஐயோ! ஐயோ!'' என்று ஓலமிட்டுக் கூவியது.

என் கூச்சலைக் கேட்ட யசோதரன் பாறைமீது தாவி ஏறி நின்றான். இதற்குள் எருமைக்கடா என் மரத்தைச் சமீபித்து விட்டது. யசோதரன் ஒருவிதமாக, 'ஓவ் ஓவ்!' என்று கத்தினான். அந்தக் கூச்சலைக் கேட்ட எருமை என்மீதிருந்த குறியைவிட்டுக் குரல் வந்த திசையை நோக்கித் திரும்பியது. யசோதரன் பாறை மீதிருந்து கீழே குதித்து அதன் கவனத்தைத் தன்மீது திருப்பிக்கொண்டு ஓடினான். மறுவிநாடி எருமை அவனைத் துரத்திக்கொண்டு நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. அது ஓடிய வேகமும் ஓடும்போது புழுதியை வாரி இறைத்துச் சென்றதையும் இப்போது நினைத்தாலும் என் உடல் சிலிர்க்கிறது.

துரத்தி வரும் எருமைக்குப் போக்குக் காட்டிக்கொண்டே யசோதரன் வளைந்த வளைந்து ஓடினான். பூமி அதிரும்படி தனது வலுவான குளம்புகளால் நிலத்தைக் கீறிக்கொண்டு எருமை அவனைத் தூரத்திக்கொண்டு தொடர்ந்து ஓடியது. சில விநாடிகளில் அவர்கள் என் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார்கள். என் உடல் நடுக்கம் தீரவில்லை. யசோதரனும் எருமையும் ஓடிய திசையைப் பார்த்துக்கொண்டே மரத்தின் மீது நின்றுகொண்டிருந்தேன். கீழே

இறங்கப் பயமாக இருந்தது. நேரமோ ஆகிக்கொண்டிருந்தது. சூரியன் மலை வாயில் விழும் தருணமும் நெருங்கிக் கொண்டிருந்தது. பிரமை பிடித்துப் போய் உட்காருந்திருந்த எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. யசோதரன் இல்லாமல் எனக்குத் தங்குமிடத்துக்குத் திரும்பிச் செல்ல வழி தெரியாது. முயற்சி செய்யலாமென்றாலும் இருளில் தனியே இறங்கி நடக்க நடுக்கமாக இருந்தது.

இப்படித் தவிப்போடு கிளையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த போது வெகு தூரத்தில் யாரோ வருவது மங்கிய மாலை நேரத்தில் தெரிந்தது? பரபரப்புடன் 'பைனாகுல' ரை எடுத்துப் பார்த்தேன். என் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையை இல்லை. வந்து கொண்டிருந்தது யசோதரன்தான். ஆனந்த மிகுதியால் ஆரவாரமிட்டு அவனை அழைத்தேன். ஆயாசத்தோடு ஆடியசைந்து வந்து கொண் டிருந்த அவன் என் குரலுக்குக் கையசைத்தான். அவன் உடலெல்லாம் புழுதி. ஆனால் காயம் ஏதும் இல்லாதிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும் கொண்டேன்.

வேறு ஒருவனாக இருந்தால் காட்டு எருமையோடு போராடிவிட்டு அப்படியே ஊருக்குள் சென்றிருப்பான். என்னை நினைவு வைத்துக்கொண்டு எனக்காக வழியெல்லாம் நடந்த என்னைத் தேடி வந்த யசோதரனுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியாமல் உணர்ச்சி வசப்பட்டுப் போனேன். அவன் மரத்தடிக்கு வந்ததும்தான் நான் கீழே இறங்கினேன். அப்படியே அவனைக் கட்டிக்கொண்டேன். பேச முடியாமல் திக்குமுக்காடி னேன் சில விநாடிகள். ''யசோதரா! என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன் நான். எனக்காக நீ செய்த இந்த...'' இதற்குமேல் பேச முடிய வில்லை என்னால்.

ஆனால் யசோதரன் கபடமற்றுச் சிரித்தான். ''கடவுள் உங்களை மரத்தில் ஏறும்படி செய்தாரே. அதற்காக அவரைப் போற்றிப் புழுங்கள். நாம் இரண்டு பேருமே மரத்தின் மீதிருந் திருந்தால் இன்றைக்கு உங்களைக் காப்பாற்றியிருக்க முடியாது. காட்டெருமைகளை மரத்தின் மீதுள்ளவர்களைக் கண்டுவிட்டால் பிறகு அந்த மரத்தை விட்டே போகா. சில சமயங்களில் மாற்றி மாற்றி முறை போட்டுக்கொண்டு அந்த மரத்தைக் காவல் காக்கும். அத்தனை ரோசமும் பழி தீர்க்கும் குணமும் கொண்டவை காட்டெருமைகள்'' என்று எருமைகளின் குணாதிசயங்களைப் பற்றி அவன் வழியெல்லாம் விவரித்துக் கொண்டே வர ரஸ்தாவை நோக்கி நடக்க வானோம்.

இருப்பிடம் சென்று பசி ஆறிய பிறகு படுக்குமுன் யசோதரனிடம் காட்டெருமையிடமிருந்து தப்பிய விவரத்தைக் கேட்டேன். அவனும் விவரித்தான். ''இந்தக் காட்டில் நான் போகாத இடமே இல்லை. இந்த வயதில் எத்தனையோ அபாயங்களில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். ஆனால் இன்று போல் என்றுமே நான் அவதிப்பட்டதில்லை. அந்தப் பயங்கரச் சண்டையைப் பார்த்தப் படம் எடுக்க நீங்கள் இல்லையே என்று எத்தனை வேதனைப் பட்டேன், தெரியுமா?'' என்றபோது நான் தவிப்போடு, ''என்ன, நீ காட்டெருமையோடு போராடினாயா?' என்றேன்.

யசோதரன் சிரித்தான். ''நான் அதோடு போராடியிருந்தால் இப்போது இப்படி உங்களிடம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க முடியுமா? உடலெல்லாம் கிழிக்கப்பட்டு நான் இறந்து போய் வெகு நேரம் ஆகியிருக்க வேண்டுமே. உங்களிடமிருந்து எருமையின் கவனத்தைத் திருப்பிக்கொண்டு ஓடினேனா? எருமை என் அருகில் மிகச் சமீபத்தில் வந்துவிட்டது. இன்று அதன் கொம்புகளுக்கு இரையாகிச் சாகத்தான் போகிறோம் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அப்போது சிறிது தூரத்தில் ஒரு கிளை தாழ்வாக எவ்விப் பற்றிக் கொள்ளும்படியிருந்தது. அந்தக் கிளையைப் பற்றித் தாவி மரத்திலாவது ஏறிக்கொள்ளலாம் என்று எவ்வினேன். ஆனால் அந்தக் கிளைக்கு மேல் கிளையில் நான் கண்ட காட்சி என் ரத்தத்தை உறையச் செய்து விட்டது. ''ஐயோ! அம்மா!'' என்று என்னை யறியாமல் வாய் கூவியது. அங்கு நான் கண்ட காட்சி என்ன, தெரியுமா? நெருப்புத் துண்டங்களைப் போல் பளபளக்கும் கண்களோடு ஒரு சிறுத்தைப்புலி வாயைப் பிளந்துகொண்டு என்னை எதிர்பார்த்தது. என்மீது பாய்வதற்குத் தயாராக இருந்தது. நான் தாவியதும் அதுவும் என் மீது பாய்ந்துவிட்டது.

''அவ்வளவுதான். ''ஐயோ! என்று அலறிக்கொண்டே நான் கிளையைப் பற்றியிருந்த பிடியை உதறிக்கொண்டு கீழே விழுந்தேன். அதோடு என் வாழ்வு முடிந்தது என்றே நினைத்து விட்டேன். ஆனால் கண் விழித்துப் பார்த்தபோது நான் இறக்க விலை என்ற எண்ணம் உண்டானதும் துள்ளி எழுந்தேன். பயங்கர மான உறுமலும் சீறலும் கேட்டுத் திடுக்கிட்டேன். சற்றுத் தூரத்தில் சிறுத்தையும் காட்டெருமையும் பயங்கரமாகப் போராடிக் கொண்டிருந்தன. என்மீது பாய்ந்த சிறுத்தை என்னைத் துரத்தி வந்த காட்டெருமை மீது பாய்ந்துவிட்டது போலும்! கடவுளின் கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரிந்தேன். அந்த இரண்டு மிருகங்களும் எப்படிப் போரிட்டன. அப்பப்பா! ஒன்றுக் கொன்று சளைக்கவில்லை. காட்டெருமையின் உடலெல்லாம் ஒரே குருதி வெள்ளம். அங்கங்கே சதை பிய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது.

''அதேபோல் சிறுத்தையின் உடலெங்கும் ரத்தம். எருமையின் கொம்பு அதன் பல இடங்களில் பதிந்திருந்தது. இவைகளின் போராட்டத்தைக் காண நான் ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டேன்.

''கடைசியில் காட்டெருமைக்குத்தான் வெற்றி. அதன் கொம்பில் சிறுத்தை தொங்கிக்கொண்டிருந்தது. தன் எதிரியைக் கொம்பில் குத்திக்கொண்டு கம்பீரமாகச் சுற்று முற்றும் பார்த்தது. இன்றும் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பதுபோல் இருந்தது அந்தப் பார்வை. பிறகு நிதானமாக ராஜ நடை போட்டு, ஆனால் தளர்ந்து தள்ளாடியபடியே புதரில் சென்று மறைந்து விட்டது. அது வெகுதூரம் சென்ற பிறகு தான் நான் என் மறைவிடத் திலிருந்து வெளிப்பட்டு உங்களைத் தேடி வந்தேன்'' என்றான் யசோதரன்.

காட்டெருமையின் படத்தைக் காமிராவுக்குள் அடைக்க முடியவில்லை. ஆனால் அதன் கம்பீரமான் தோற்றம் சிறுத்தை யோடு போராடி வெற்றி வாகை சூடிய அந்தக் காட்சி அப்படியே என் மனப் பெட்டகத்தில் அழியாத ஓவியமாகப் பதிந்துவிட்டது.

17

பகாசுரன் மலை

நீலகரியிலிருக்கும் 'பகாசுரன் மலை'க்குப் போக வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நாட்களாக என் உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனால் அவ்வெண்ணம் அடிக்கடி கைவிடப்பட்டது. காரணம் பழைய காலத்தில் ஆங்கிலேயருடன் வேட்டைக்குச் சென்ற சிக்காரிகளும் ஆயாமார்களாலும் சமையல் வேலை செய்த பல 'பொட்லர்'களாலும் கூறப்பட்ட பல விதமான பொய் வதந்தியே.

''பகாசுரன் மலைக்கு நானும் என் துரையும் பல ஆண்டு களுக்கு முன் சென்றோம். அப்பப்பா! அந்தப் பயங்கரத்தை என்னவென்று கூறுவது, நடந்துகொண்டேயிருந்தோம். உடனே பெரிய பெரிய வண்டுகள் எங்களைப் பகாரசுன் மலைக்குப் போகாத வண்ணம் கடிக்க ஆரம்பித்தன. ஒவ்வொரு வண்டும் சுமார் வாத்து முட்டை அளவு இருக்கிறது. நானும் துரையும் ஓடி வந்து விட்டோம்.''-இப்படி ஒரு சிக்காரி கூறினார்.

''நான் பகாசுரன் மலையில் பகாசுரனுடைய கால் ஒரு மலையில் பதிந்திருப்பதைக் கண்டேன்'' என்று கூறினான் ஒரு பொட்லர்.

இவைகளையெல்லாம் கேட்ட பிறகு பகாசுரன் மலைக்குப் போக ஒரு பக்கத்தில் பயமும் மற்றொரு பக்கத்தில் பகாசுரன் மலையைச் சரியானபடி பார்த்தவர்களேயில்லை என்ற ஒரு தைரியமும் ஏற்பட்டன.

ஆகையால் நானும் நீலகரித் கோத்தகிரியில் வாழும் திருமோசஸ் அவர்களும் சமீபத்தில் கோத்தகரியிலிருந்து குன்னூர் வழியாகச் சென்று, ''நான்செச்சு' எஸ்டேட்டில் வேலை செய்யும் திரு. இரங்கசாமி அவர்களின் இல்லத்தில் தங்கினோம். மறுநாள் காலையில் பகாசுரன் மலைக்குப் பல நண்பர்கள் எங்களுடன் லாரியில் பிரயாணமானார்கள். லாரியும் மலையடிவாரத்தில் போய் நின்றது.

மரத்தில் வண்டுகளின் ரீங்காரம் தவிர மற்ற ஓசைகள் கேட்கவில்லை. எல்லோரையும் மேலும் கீழும் நான்கு பக்கங் களிலும் பார்த்துக்கொண்டே மலை ஏறி நடக்கும்படி கேட்டுக் கொண்டேன். மலையின் உச்சிக்குப் போகப் பாழடைந்த படிகள் இருந்தன. மேல் படியை அடைந்ததும் இரு சுவர்கள் தெரிந்தன. அவை நாங்கள் சென்ற மேல் படியின் இருபக்கத்திலும் வளைந்து சென்றன.

வழியில் ஒரு சிறு சோலையைக் கண்டோம். அதனுள் நுழைந்து போக வேண்டும். இரண்டாவது கோட்டைச் சுவர் போல், முதலில் பார்த்த சுற்றுச்சுவரே நாங்கள் நுழைந்து வந்த சோலைக்கு மறு பக்கத்தில் தெரிந்தது. இதைப் போலவே ஏழு சிறு சோலைகளுக்குள் நுழைந்து நுழைந்து சென்றோம். ஒரே கோட்டைச் சுவர்தான் வளைந்து வளைந்தும் சுற்றிச் சுற்றியும் வருவதால் ஏழு கோட்டைச் சுவராகக் காட்சி அளிக்கிறது.

கொஞ்சம் இளைப்பாறிய பின் மலையைச் சுற்றிலும் உள்ள வற்றையும் சுவர்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தோம். மலையின் உச்சியில் வட்டமாகச் சிறுசிறு பாறைகளைக் கொண்டு சுவர்

கட்டியிருக்கின்றனர். சுவரில் சிறுசிறு துவாரங்கள் காணப் படுகின்றன. அவற்றின் மூலம் மேலிருந்த கீழேதான் பார்க்கலாம். தரை மார்க்கமாக விரோதிகள் வருகிறார்களா என்று பார்ப்பதற்கே அவை உபயோகப்படுகின்றன. அப்படி வரும் விரோதிகளைத் துப்பாக்கியால் சுடவும் முடியும்.

இந்தக் கோட்டைக்கு மத்தியில் மண்ணால் கட்டிய பல அறைகள் இடிந்துபோய்க் காணப்படுகின்றன. அந்த அறைகள் பாம்புப் புற்றுகளும் புதர்களும் மண்டிப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கின்றன.

மலை உச்சியிலிருக்கும் ஒரு பெரிய பாறை ஏறி நின்று பார்ப்பதற்கு வசதியாக இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அதன் மேல் ஏறி நின்று பார்த்தால் மேட்டுப்பாளையம், கோவை, தனநாயக்கன் கோட்டை, (இன்று பவானி நீர்த்தேக்கம்) சத்திய மங்கலம் முதலிய மூன்று பக்கங்களில் இருக்கும் ஊர்களை நன்றாகப் பார்க்கலாம்.

இங்ஙனம் நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, திடீரென்று எங்களுடன் அன்று வந்த லாரி டிரைவர் சற்றுத் தூரம் போய் வந்தவர், தம் நண்பரிடம் மெதுவாக ஏதோ சொன்னார். நான் அவர் பேசியதையும் சைகையையும் அவருடைய முகத்தையும் ஒரே நேரத்தில் கவனித்தேன்.

என்ன விஷயம் என்று விசாரித்ததும் அவர் என்னை அழைத்துக்கொண்டு போய், ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார். என் உடல் முழுவதும் வேர்த்துவிட்டது. பேச என் நா இடம் கொடுக்க வில்லை. நான் தைரியத்தைக் கைவிடாமல், அங்கே கண்டதை எங்கள் கூட்டத்தில் முக்கியமான திரு. இரங்கசாமி அவர்களிடம் மட்டும் கூறினேன். பிறகு எல்லோரையும் அழைத்துக்கொண்டு வேகமாகக் கீழே வந்து சேர்ந்தோம்.

கீழே வந்ததும் மற்றவர்கள், 'உச்சியில் என்ன பார்த்தீர்கள்?'' என்று என்னைக் கேட்டார்கள்.

''உச்சியில் டிரைவர் காட்டிய இடத்துக்குக் கீழே ஒரு பெரிய பள்ளம் இருந்தது. அந்த இடத்தில் புதர்களுக்கு வெளியில் ஒரு பெரிய புலி வாயைத் திறந்துகொண்டு படுத்திருந்தது. அதன் வாயின் அகலம் சுமார் ஓரடி இருககும். அதனுடைய கோரைப் பற்களில் இறைச்சிகள் மாட்டிக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. அந்த இறைச்சிகளை ஈக்கள் மொய்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. புலி ஏதோ ஒரு விலங்கின் குருதியைக் குடித்த மயக்கத்தில் இருந்ததால், அது நாம் வந்ததைக் கவனிக்கவில்லை. அது மிகவும் பாதாளத்தில் இருப்பதால் நம்முடைய வாடையை மோப்பம் பிடிக்கவில்லை. வேகமாகக் கீழே வந்துவிட்டோம்'' என்று கூறினேன்.

இதைக் கேட்டதும் உடனே சிலரைப் பயம் பிடித்துக் கொண்டது. இதை மாத்திரம் நான் மலை உச்சியில் கூறி இருந்தால், அந்தக் கூட்டத்தில் சிலரைத் தூக்கிக்கொண்டு தான் கீழே இறங்கி வந்திருக்க வேண்டும்.

''சரி! இந்தக் கோட்டையைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?'' என்ற எல்லோரும் என்னிடம் கேட்டார்கள்.

''பகாசுரனுக்கும் இந்தக் கோட்டைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. சேரன் செங்குட்டுவன் கண்ணகி தேவிக்குச் சிலை அமைக்க

நான்கு விதப் படைகளுடன் இமயம் சென்றான். செல்லும்போது அவன் படைகளுடன் நீலகிரியில் சில காலம் தங்கினான். அப்பொழுது நீலகிரியில் வாழ்ந்த கொங்குநாட்டு மக்களாகிய பழங்குடிகள் (குறும்பர்கள், தொதுவர்கள், கோத்தர்கள்) சேரன் செங்குட்டுவனுக்குக் குரவைக் கூத்து ஆடினார்கள் என்று சிலப்பதிகாரம் - கால்கோள் காதையில் கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் சேரன் நீலகிரியில் பாடி தங்கிய இடத்தில் கோட்டையை அமைத்துக்கொண்டான். நீலகிரியை விட்டுப் பிரயாணமானதும் 'சேரம் பாடி' வழியாகச் சென்றனாம். இன்றும் அந்த இடத்தில் பல சின்னங்கள் இருக்கின்றன. 'சேரன், பாடி - தங்கிய இடம்' என்ற பெயர் மருவிச் 'சேரம் பாடி' யாக வழங்குகிறது. ஆகையால் இந்தக் கோட்டை சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்டது. ஆனால் இதற்குப் பகாசுரன் கோட்டை என்று எப்படிப் பெயர் வந்தது என்ற ஒரு கேள்வி உண்டாகிறது அல்லவா?

இந்தப் பகாசுரன் கோட்டையை மலைச் சரிவிலும் பாறை களின் சரிவிலும் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கோட்டையைக் கண்டால் சுவர்கள் வழுக்கி விழுந்து விடும் போல் தோன்றுகின்றன. ஆகையால் பிற்காலத்தில் இந்தக் கோட்டையைப் பார்வை யிட்டவர்கள், ''அடே அப்பா! இந்தக் கோட்டையை இந்த ஆபத்தான சரிவில் நின்று, கட்டியவன் பகாசுரனாகத் தான் இருக்க வேண்டும்''-என்று வியந்த கூறி இருக்க வேண்டும். இதுவே நாளடைவில் திரிந்து 'பகாசுரன் கோட்டை' யாகி இருக்க வேண்டும். பிறகு அதை உறுதிப்படுத்துவது போலப் பல கதைகள் தோன்றி யிருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

18

நாய் கற்பித்த பாடம்

பஸ்ஸில் சுமார் முந்நூறு மைல்கள் 'ஏக்தம்மில்' பிரயாணம் செய்ய முடியும். ஆனால் அப்படி ஒரேயடியாகப் பிரயாணம் செய்தால், போகுமிடங்களில் யோசனையுடன் விஷயங்களைச் சேகரிக்க, என் மூளை வேலை செய்ய வேண்டும் அல்லவா? ஆகையால், கொஞ்சம் இளைப்பாறியபின் தான் மீதிப் பாதிப் பிரயாணத்தையும் செய்வேன்.

அதைப் போலவே அன்று மைசூரிலிருந்து சென்று, கூடலூரில் ஒரு நண்பர் இல்லத்தில் தங்கினேன். மறுநாள் காலையில் சுல்தான் பத்திரி, தேவர்சோலை முதலிய இடங்களுக்குச் சென்றேன். தேவர்சோலையில், என்னை நீண்ட நாட்களாக அழைக்கும் நண்பர் திரு. ரூப்சிங் என்பவருடைய இல்லத்தில் தங்கினேன். இவர் ஒரு சிறந்த வேட்டைக்காரர். இவரிடம் கன்றுக்குட்டியைப் போன்ற ஒரு வேட்டை நாய் உண்டு. திரு. ரூப்சிங் வேட்டைக்குச் செல்லும்போது, அந்த நாயும் அவருடன் செல்லும். அந்த நாயின் உடலையும் அதனுடைய குணத்தையும் கண்ட நான், ''இந்த நாயை எங்கிருந்து கொண்டுவந்தீர்கள்'' என்று கேட்டேன்.

''அது ஒரு பெரிய கதை. நாயின் குடும்பத்தைச் சேர்ந்த முந்நூறு நாய்கள் ஒருவரிடத்தில் இருக்கின்றன. அவர் ஒரு செல்வந்தர். இந்த

நாயை அவர்தான் எனக்குக் கொடுத்தார். அவர் ஒரு நல்ல வேட்டைக்காரர் மட்டுமல்ல. நாய்களை வளர்ப்பதில் அவருக்கு அளவுகடந்த ஆசை. நாய்களைக் கவனிப்பதற்கு மட்டும் சுமார் இருபது ஆட்களுக்கு மேல் வைத்திருக்கிறார். இரவில் அந்தச் செல்வந்தர் தம் பங்களாவில் எந்தக் கதவையும் மூடுவதேயில்லை. எந்த எந்தக் கதவுகளின் மூலம் அந்தச் செல்வந்தர் இல்லத்திற் குள்ளும் காம்பவுண்டுக்குள்ளும் அன்னியர் வரலாமோ அங்கே யெல்லாம் நான்கு நாய்கள் காவல் புரியும். இரவு ஏழு மணிக்குத் தம் காவல் நாய்களைச் செல்வந்தர் தடவிக் கொடுப்பார். செல்வந்தர் தடவிக் கொடுத்த பின், நாயை வளர்க்கும் வேலைக்காரனும்கூட எந்த வழியாகவும் உள்ளே வர முடியாது.

''மறுநாள் காலையில் செல்வந்தரோ அல்லது அவருடைய மனைவியோ தூங்கி எழுந்து வந்த மறுபடியும் நாயைத் தடவிக் கொடுத்த பிறகுதான் வேலைக்காரர்கள் உள்ளே வருவார்கள். வரவும் முடியும். இரவில் எந்தத் திருடனும் மற்ற எந்தக் கொடிய மிருகமும் உள்ளே வர முடியாது. அப்படி வந்தால், முந்நூறு நாய்களும் ஒன்றாகச் சேர்ந்துவடுமாம். அப்படிக் கொடிய மிருகத்தைத் துரத்திக்கொண்டு போகும்போது, வீட்டில் காவல் காக்கும் நாய்கள் மட்டும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்த இடத்தைவிட்டு அகலா. இவ்விதமான முந்நூறு நாய்களையும் இவ்விதமான பழக்கங்களையும் நீர் எங்குமே கண்டிருக்க மாட்டீர்.

''அந்தத் தம்பதிகள் ஆளுக்கு ஒரு துப்பாக்கியுடன் காட்டுக்கு வேட்டையாடச் செல்லும்போது, தம்முடைய இரண்டு வயதுக் குழந்தையையும் எடுத்துச் செல்வார்கள். காட்டில் எங்கேயாவது ஒரு மரக்கிளையில் ஏணை கட்டிக் குழந்தையை அதில் தூங்கவைத்து விடுவார்கள். பிறகு, திசைக்கு இரண்டு நாய்கள் வீதம் நான்கு திசைகளிலும் எட்டு நாய்களைக் குழந்தைக்குக் காவல் வைத்து விட்டு, மற்ற நாய்களுடன் அவர்கள் இருவரும் வேட்டைக்குப் போவார்கள். குழந்தையின் பெற்றோர்கள் வருவதற்குமுன் குழந்தை எழுந்து அழுதால், உடனே ஏணையுடன் தொங்க வைத்திருக்கும் மற்றொரு கயிற்றைப் பிடித்து இப்படியும் அப்படியும் இழுத்து ஆட்டிவிடுமாம் அவற்றுள் ஒரு நாய்.

''வேட்டையாடிக் கொண்டு வந்தவைகளில் பாதிக்கு மேல், தாங்கள் வளர்க்கும் நாய்களுக்குப் போடுவார்கள். அந்தச் செல்வந்தரிடமிருந்து கிடைத்த நாய்தான் இது.

ஆனால், இந்த நாயை நான் வேட்டைக்கு மற்றொரு விதமாகப் பழக்கி வைத்துள்ளேன்'' என்று கூறினார் ரூப்சிங்.

நான் அவர் இல்லத்தில் இருந்தபோது, திரு. ரூப்சிங்கின் உயிர் நண்பர் திரு. ஜெயசீலன் என்பவர் அங்கே வந்து புலி வேட்டைக்குப் போவதாகவும், ஆகவே, புலி வேட்டையில் மிகவும் தந்திரமான ரூப்சிங்கின் நாயை ஒரு நாளைக்குக் கொடுக்கும்படியும் கேட்டார்.

புலி வேட்டைக்குத் திரு. ஜெயசீலன் போவதைக் கேள்விப் பட்டவுடன், நானும் திரு. ஜெயசீலன் வருவதாகக் கூறினேன். ஆனால், திரு. ரூப்சிங், ''வேண்டாம், நான் போகும் போது வாரும். புலியை வேட்டையாடப் புலியின் குணத்தை முழுவதும் தெரிந்துகொண்டவர்

ஒருவருமில்லை. எது எது எப்படி எப்படி இருக்குமோ யாருக்குத் தெரியும்'' என்றார்.

''நீலகிரிப் பகுதியின் 'மேன் ஈட்டர் (Maneater)' இல்லை என்று சிக்காரிகள் நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், மைசூரியிலிருந்து 'மேன் ஈட்டர்' ஒரே இரவில் நூறு மைல்கள் பிரயாணம் செய்து, நீலகிரிக்கும் வருவதுண்டு'' என்றும் அவர் கூறினார். நான். திரு. ஜெயசீலனுடன் அன்று வேட்டைக்குப் போகவில்லை.

''நீங்கள் என் நாயைக் கொண்டுபோவதில் எனக்கொன்றும் தடையில்லை. ஆனால், நான் சொல்வதைப்போல் மட்டும் தயவுசெய்து மறக்காமல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், வீணாக நாய் இறந்துவிடும். காட்டினுள் நாயைக் கட்டி அழைத்துச் செல்லும்போது, நாய் முன்னால் போய்க் கொண்டேயிருக்கும். அப்படிப் போகும்போது, புலியையோ கரடியையோ மற்ற மிருகங்களையோ மோப்பம் பிடித்த உடனே நாய் உங்களைச் சுற்றிவரும். அப்போது இந்த நாயை அவிழ்த்து விட்டு விடுங்கள். அவிழ்த்துவிட்டதும், நாய் உமக்கு முன்னால் சுமார் இருபது அல்லது முப்பது அடியில், போய்க்கொண்டே இருக்கும். நாய் மோப்பம் பிடித்த பிராணியைக் கண்டதும் அதே இடத்தில் கீழே உட்கார்ந்து மெதுவாக நகர்ந்து போக ஆரம்பிக்கும். உடனே நீங்களும் அதன் பின்னால், நடந்து போக வேண்டும். ஓர் அளவுக்கு நாய் எதிரியின் அருகில் போனதும், மேலே போகாமல் நின்றுவிடும். அப்போது நீங்கள் உடனே உங்கள் துப்பாக்கியால் ஆகாயத்தைப் பார்த்துச்சுட வேண்டும். புலி ஒரு விநாடி திரும்பியதும், நாய் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அதனுடைய தொண்டையைப் பிடித்துக் கொள்ளும். புலி நாயைக் கண்டபடி உதறினாலும் நாய் தான் பிடித்த பிடியைவிடாது. கடைசியில் புலிக்கு மூச்சுத் திணற ஆரம்பிக்கும் பொழுது, நீங்கள் புலியைச் சுட வேண்டும். அந்த நிலையில் உடனே புலி சுருண்டு கீழே விழுந்துவிடும். நீங்கள் சுட்ட பிறகுதான் நாய் தன் பிடியை விடும். அதுவரையில் நாய் புலியின் கழுத்தை விடாது. தயவு செய்து இவைகளையெல்லாம் ஒழுங்காகச்செய்ய வேண்டும்'' என்று ரூப்சிங் திரு. ஜெயசீலனிடம் கூறினார்.

ஜெயசீலனும் 'சரி' என்று கூறி, ரூப்சிங்கின் நாயைத் தம்முடன் அழைத்துக்கொண்டு போனார். அன்று மாலை சுமார் ஐந்து அல்லது ஆறுமணியிருக்கும். காலையில் போனவர் இன்னும் வரவில்லையே என்ற சிந்தனையிலும், நானும் ரூப்சிங்கும் உட்கார்ந்துகொண்டிருந்தோம். சிறிது தூரத்தில் ஜெயசீலன் மூச்சுவாங்க ஓடிவருவது தெரிந்தது. ஆனால் நாயைக் காணோம்.

''மிஸ்டர் ரூப்சிங், நீங்கள் சொன்னதைப் போலெல்லாம் நாய் செய்தது. ஆனால், பெரிய புலியின் எதிரில் நாயின் தோற்றத்தையும் பார்வையையும் புலியின் பார்வையையும் கண்ட எனக்கு உடம்பெல்லாம் நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நிமிஷம்கூட நான் அங்கே இல்லை. உடனே ஒரே ஓட்டமாக ஓடி வந்து காரில் ஏறிக் கொண்டேன்'' என்று சொல்லி முடிப்பதற்குமுன் ரூப்சிங்கின் கண்கள் சிவந்தன. உடனே, ''வீண் பேச்சு வேண்டாம். நாய் இருக்கும் இடத்தைக் காட்டும்'' என்று உடனே தம் துப்பாக்கியுடன் பறந்தார்.

ரூப்சிங்கின் வேகத்தையும் கோபத்தையும் கண்ட நான், அவருடன் போகாமல், வீட்டில் தங்கிவிட்டேன்.

சில மணி நேரத்திற்குப் பின் ஜெயசீலன் தம் தொடையில் கட்டுடன் வருவதைக் கண்டேன். நாயின் உடல் முழுவதும் காயங்களும் குருதியும் படிந்திருந்தன. இவற்றைக் கண்டதும், ஒன்றும் தோன்றா வனாய் நான் நின்றேன்.

''நான் ஓடியிராவிட்டால் நாயை இழந்திருப்பேன். நான் நாயின் அருகில் போகப் போக அது மோப்பத்தின் மூலம் நான் வருகிறேன் என்று தெரிந்துகொண்டு தன் வாலை மட்டும் லேசாக ஆட்டியது. ஆனால் தன் தலையை மட்டும் ஒரே பார்வையில் வைத்திருந்தது. வாலை ஆட்டும் காட்சியைக் கண்டதும் எனக்குக் கண்கள் கலங்கின. உடனே புலி ஒரு விநாடி திரும்பியது. அடுத்த விநாடி. என் நாய் புலியின் கழுத்தைப் பிடித்திருப்பதைக் கண்டேன்.

''புலி என்ன என்னவோ செய்தது. நாயின் உடலில் தன் நகங்களால் பல காயங்கள் செய்தது. சுமார் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பின் புலியின் வேகம் குறைந்தது. சமயம் கிடைத்ததும் புலியின் நெற்றியைப் பார்த்துச் சுட்டேன். புலி தரையில் சாய்ந்தது.

''அடுத்த நிமிஷம் நண்பர் திரு. ஜெயசீலனின் அலறல் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் நாய் நண்பரை என்ன செய்தது தெரியுமா? ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவருடைய தொடையைக் கடித்துவிட்டது. நான் மட்டும் நாய்க்குக் குரல் கொடுத்திரா விட்டால் அவர் பாடு ஆபத்தாகத்தான் முடிந்திருக்கும்' என்று ரூப்சிங் கூறி முடித்தார்.

''ஆபத்தில் உதவாத நண்பனே'' என்று நாய் பாடம் கற்பித்தது போலும் என்று கூறி நானும் வருந்தினேன்.

19

நாகத்தைக் கடித்த மனிதன்!

அன்று காலை சுமார் பத்து மணி இருக்கும். உதகையிலிருந்து மைசூரிலிருந்து பெங்களூரிலிருந்து பல பஸ்கள் குண்டல் பேட்டையில் வந்து நின்றன. சிறிது நேரம் பிரயாணிகளுக்கு ஓய்வு கொடுத்தபின் மறுபடியும் அந்தப் பஸ்கள் எல்லாம் அந்த அந்த ஊர்களுக்குப் புறப்படவேண்டும். அப்பொழுது பிரயாணிகள் கூட்டங் கூட்டமாக இங்கும் அங்கும் நடந்துகொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு பெரிய கும்பல் ஒரு பெரிய பாம்புப் புற்றைச் சுற்றி நின்றுகொண்டிருந்தது. சிலர், 'பாம்பு! பாம்பு!' என்றனர். ''எங்கே, 'நாயக்கைக்' காணோமே 'நாயக்கைக் காணோமே' என்று பலர் இங்கு அங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள்.

'பாம்பு, பாம்பு!-நாயக், நாயக்!' என்று கூறியதும் நானும் அந்தப் புற்றின் அருகில், என் காமிராவுடன் ஓடினேன். ''யாரைக் கூப்பிடுகிறீர்கள்? அவன் ஒருவன் வந்து மட்டும் என்ன செய்யப் போகிறான்? நாம்தான் இவ்வளவு பேர் இருக்கிறோமே'' என்று கூறினேன்.

''நாம் நூறு பேர் இருப்பதும் சரி; அந்த 'நாயக்' ஒருவன் இருப்பதும் சரி. அது பத்துத் தலை நாகமாக இருந்தாலும் சரி, அவன்

ஒருவனே போதும்'' என்று கூறினார்கள் அங்கிருந்தோர். எனக்கு அவர்கள் கூற்று விளங்கவில்லை. எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போமே என்று நானும் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

குண்டல்பேட்டை வாசிகள் எல்லோரும், 'அதோ-அதோ' என்று கையைக் காட்டினார்கள். சிலர், 'ஓடி வா' என்று கையைக் காட்டினார்கள். நானும் ஆவலுடன் பார்த்தேன். அங்கே பிச்சைக் காரன் போலத் தோற்றமளித்த ஒருவன் வந்துகொண்டிருந்தான்.

அவனை அங்கிருந்தோர் அனைவரும் வரவேற்று மரியாதையுடன் சூழ்ந்துகொண்டனர். சிலர் கன்னட மொழியிலும் சிலர் உருது மொழியிலும் அவனிடம் ஏதோ கூறினார்கள். ''இவர்தான் நாயக்கா!'' என்று வினவினேன்.

''ஆமாம்! ஆமாம்!'' என்றனர் சிலர்.

'பிச்சைக்காரனைப்போல இருக்கும் இந்தக் கூலிக்காரனுக்கா இவ்வளவு வரவேற்பு!' என்று என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. மேலும் அவன்தான் முதல் நாள் என்னுடைய பெட்டியைப் பஸ்ஸிலிருந்து கூலிக்குத் தூக்கிக் கொண்டு வந்தவன். அப்போது அவனும் கூலி பேசவில்லை. நானும் 'கூலி எவ்வளவு?' என்று கேட்கவில்லை. கடைசியில் நான் கொடுத்த கூலியையும் எண்ணிப் பார்க்காமலேயே தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். அதைக் கண்ட நான் அவன் திமிர் பிடித்தவன், அல்லது பைத்தியக்காரனாகத் தான் இருக்க வேண்டுமென முடிவு கட்டிவிட்டேன். அப்படிப் பட்டவனுக்கு அத்தகைய வரவேற்பு என்றால் எனக்கு ஆச்சரிமாக இருக்காதா? ஐயத்தைப் போக்கிக் கொள்ள அருகிலிருந்த ஒருவரிடம் அவனைப்பற்றி விசாரித்தேன்.

''இந்த ஊரில் யாருக்காவது பாம்பு கடித்தால், உடனே இவனைக் காரில் அழைத்துச் செல்லுவார்கள். இவன் ஏறாத காரும் உண்டா? இவன் இப்படி ஏழையாக இருப்பதற்குக் காரணம் பாம்புக்கடிக்கும் வைத்தியம் செய்யப் பணமே வாங்காமல் இருப்பதுதான். கடிபட்டோரிடமிருந்து ஒரு டீ கூட வாங்கிச் சாப்பிடமாட்டான். இவன் மட்டும் பணம் வாங்க வேண்டுமென்று மனம் வைத்தால் இந்த மைசூரையே வாங்கியிருக்கலாம். சரி வாங்க, போய்ப் பார்க்கலாம்...!'' என்று அவர் என்னைப் புற்றிடம் அழைத்துப் போனார்.

'வா! வெளியில்' என்று கூறிப் புற்றின்மேல் கையை நீட்டினான் நாயக். புற்றிலிருந்து சுமார் ஆறு அடி நீளமுள்ள பெரிய நாகம் ஒன்று வெளியில் வந்தது. அது மெதுவாக நகர்ந்து வருவதைக் கண்டு, அது இறந்துவிட்டதாகவே நினைத்துவிட்டேன். அது ஆகாரத்தைக் கண்டு பல நாட்கள் ஆனதைப்போல் உடல் துவண்டு, வெளியில் வந்து, அந்த நாயக்கின் கால்களின் அருகில் படுத்துக் கொண்டது.

படுத்த பாம்பை நாயக் மெல்லத் தூக்கினான். வாயைத் திறக்கச் செய்து, அதனுடைய விஷப்பற்கள் இரண்டையும் நீக்கினான். பிறகு அதைத் தன் வாயில் வைத்துக் கடிப்பதைப் போல் பாவனை செய்து பின் தூரத்தில் எறிந்தான். மற்றவர்கள் உடனே அதை அடித்துக் கொலை செய்தார்கள். இறந்த பின் மறுபடியும் நாயக் தன் கையில் பாம்பை எடுத்துக்கொண்டு சுற்றுச் சுற்றி வந்தான்.

உடனே புகைப்படம் எடுக்க அவனைக் கூப்பிட்டேன். ''என்னைப் புகைப்படம் பிடிக்கவேண்டாம். புகைப்படம் எடுத்து எடுத்துத்தான் என் தோள் மச்சமும் குறைந்து கொண்டே வருகிறது'' என்ற தன் தோளைக் காட்டினான். அவனுடைய இடத் தோளில் ஒரு பறவையின் உருவத்தில் மச்சமிருப்பதைக் கண்டேன்.

''இதுதான் கருடனுடைய மச்சம். நான் பிறந்ததும் என் தாயார் இறந்துவிட்டாள். இந்தக் கருட மச்சம் இருப்பதால்தான் எந்தப் பாம்பும் என்னைக் கண்டதும், அப்படியே படுத்துக்கொண்டு விடுகிறது. மற்றப்படி எனக்கு மந்திரமோ தந்திரமோ தெரியாது'' என்றான் அவன்.

''இதைப் போலவே என்னுடைய தாயாருக்கும் இடத் தோளில் கருட மச்சம் இருந்தது. பாம்புக்குடி முதலிய எல்லா விஷ கடிகளுக்கும் அவர் கை வைத்தால் போதும். அவர்கள் உடனே சுகமடைவார்கள். ஆனால், சுகமடைந்தவர்களிடமிருந்து ஒரு சல்லிக்காசுகூட வாங்கமாட்டார். அதைப் போலவே நானும் ஒன்றும் வாங்குவதில்லை. கூலி வேலை செய்துதான் பிழைக் கின்றேன். என் பெயர் 'சிங்கிரி நாயக்' என்பது. எடத்தல அள்ளியில் பிறந்தேன். (அள்ளி-கிராமம்) பள்ளிக்கூடம் எப்படி இருக்கும் என்பதுகூட எனக்குத் தெரியாது. சிறு வயது முதல் இந்தக் குண்டல் பேட்டையில் தான் கூலி வேலை செய்கிறேன். என்னுடைய இடக் கையைப் பாம்பின்மேல் நீட்டினால், ஓடும் பாம்பும் நின்றுவிடும். பாம்பு கடித்தவர்களது தலையின்மேல் நெருப்புச் சட்டியை வைப்பேன். பிறகு சில பச்சிலையை என்னுடைய இடக் கையால் அவர்களுடைய வாயில் கொடுப்பேன். அதை அவர்கள் மென்று தின்றதும், எந்தப் பாம்பு கடித்திருந்தாலும் சரி, உடனே விஷம் நீங்கிவிடும்'' என்றான்.

என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே யாரோ ஒருவர் காரில் வந்து அவனை அழைத்துச் சென்றார். அதை ஆச்சரியத்துடன் கண்ட நான், அவன் ஏறிச்சென்ற காரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இந்த மைசூர்ப் பகுதியில் பாம்புகள் அதிகம், சார்! இவனைப் பார்ப்பதே மிகவும் சிரமம். ஏதோ இன்று இவன் உங்களுக்குக் கிடைத்ததே மிகவும் பாக்கியம். நானும் அந்தக் கடைக்காரரும் அதைத்தான் பேசிக்கொண்டிருந்தோம். இவனை மறுபடியும் காரிலேயே கொண்டுவந்து விட்டு விடுவார்கள். இவன் இங்கே காரில் கால் வைத்ததும், பாம்பு கடித்தவர்களுக்கு விஷம் தானாகவே இறங்கிவிடுகிறது. அதுதான் ஆண்டவன் இவனிடம் மறைத்து வைத்திருக்கும் சக்தி'' என்று அந்தக் குணடல்பேட்டை வாசி கூறினார். நேரில் கண்ட இக்காட்சிகள் என்னை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தின.

எவ்வளவு நேரம் அவன் ஏறிய கார் சென்ற திசையையே நோக்கிக் கொண்டிருந்தேன் என்பது எனக்குத் தெரியாது. ''சார்! நீங்கள் போகும் பஸ் வந்துவிட்டது. கவனிக்கவில்லையா?'' என்று ஒருவர் கூறி என் சிந்தனையைக் கலைத்தார். உடனே மைசூருக்கு டிக்கெட் வாங்க ஓடினேன்.

20

மரத்தில் ஒளி

'ராப்ராய்' எஸ்டேட்டு என்பது கோத்தகிரியில் இருக்கும் ஒரு தேயிலைத் தோட்டம். அங்கு ஒரு நாள் இரவு என் நண்பரின் இல்லத்தில் குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்தேன். திடீரென்று தோட்டத்து மக்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து, நெருப்பு! நெருப்பு!!' என்று கூக்குரல்கள் கேட்டன. நானும் என் நண்பரும் வெளியில் ஓடி வந்தோம். மக்கள் கூட்டமாக மேஸ்திரியின் வீட்டின் எதிரில் நின்றுகொண்டிருந்தனர். அக்கூக்குரலைக் கேட்ட மேஸ்திரியும் வீட்டினுள்ளிருந்து கதவைத் திறந்து கொண்டு, விளக்குடன் வெளியில் வந்தார். இதற்குள் நாங்களும் அங்கே சென்றோம். வெளித் திண்ணையில் விறகைப் போராகப் போட்டிருந்தனர். அவை இருளில், மின் மினிப் பூச்சிபோல் ஒளிகொடுத்தன. மேஸ்திரி விளக்கைக் கொண்டு வந்ததும், அந்த மாயாஜால ஒளி திடீரென மறைந்துவிட்டது. மறுபடியும் விளக்கின் ஒளி மறைந்ததும் அந்த விறகின் போரிலிருந்து உளி வீசத் தொடங்கியது. அந்த அதிசயத்தைக் கண்ட நான் மலைத்து மரம்போல் நின்றேன். அதில் பல கட்டைகளை மூட்டையாகக் கட்டிக் கோத்தகிரியில் நான் தங்கியிருந்த அறைக்குக் கொண்டு வந்தேன்.

கோத்தகிரி, 'கரும்பாலம்' என்ற பாலத்தின் வழியாக ஓடும் தண்ணீரில் நடந்து அநேக பாறைகளைக் கடந்து சென்றோம். அங்ஙனம் சில பாறைகளின் மேல் நடந்தும் தாண்டியும் சென்ற போது, நான் கால் வழுக்கி விழப் பார்த்தேன். ஆனால் அதற்குள் என்னுடன் வந்த திரு கிறிஸ்டோபர் என்னைப் பிடித்துக் கொண்டார். இல்லாவிட்டால் புளி மூட்டையைப் போல் பாறையில் உருண்டிருப்பேன்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த பின் அந்த அதிசய மரத்தைக் கண்டோம். பிறகு எங்களுடன் அன்று வந்த மேஸ்திரி மரத்தைக் காட்டித் தன் கதையை ஆரம்பித்தார்.

''நேற்று மாலை, 'வீட்டில் விறகு இல்லை' என்று என் மனைவி கூறினாள். நான் கோடரியைத் தூக்கிக்கொண்டு ஏதாவது விறகு கிடைக்குமா என்று கரும்பாலத்தின் கீழ் ஓடிவரும் இந்த ஓடையின் வழியாக நடந்தேன்.

''பல்லாண்டுகளாக இந்த முற்றின மரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்று எப்படியாவது, விறகுக்காக அதைக் கொஞ்சம் வெட்ட வேண்டும் என்று சிந்தித்தபடியே கொஞ்சம் விறகு வெட்டினேன். வெட்டிய விறகைக் கொண்டுவந்து என் வீட்டுத் திண்ணையில் போட்டேன். விறகு ஈரமாக இருந்ததால், மறுநாள் வெயிலில் வைக்கலாமென்று வெளித் திண்ணையில் போட்டேன்.

''அந்த மரத்தின் கட்டைகளின் மேல் ஒருவித ஈரப் பசை இருக்கிறது. அதுதான் இருளில் விளக்குப்போல் ஒளி கொடுக்கிறது. அம்மரத்திலிருந்து ஓரடிச் சுற்றளவு வரையில் வெளிச்சமாகவே இருக்கிறது. இதன் பெயர் தெரியாது. ஆனால் எல்லோரும், 'காட்டுமரம்' என்றே கூறுகின்றனர். இந்த மரம் சுமார் ஐந்நூறு

ஆண்டுகளாக இருக்கலாமென்று வயதில் பெரியவர்கள் கூறுகின்றனர்'' என்று அந்த மேஸ்திரி தம் அனுபவத்தைக் கூறினார்.

அந்தத் தாய் மரத்தின் சுற்றளவு சுமார் பத்தடி இருக்கிறது. அதன் வேர்களில் படிந்திருக்கும் மண்ணின் சாயல், 'காப்பித்தூள்' நிறத்தில் இருக்கிறது.

அந்த மரத்தை வெட்டிச் சிறு சிறு துண்டுகளாக ஆக்கி ஓர் 'ஆர்லிக்ஸ்' புட்டியில் போட்டு, என் மேஜையின் மேல் வைத்து விட்டுப் படுத்துக்கொண்டேன். இரவு தூக்கத்தில் எழுந்து பார்த்தபோது நான் காண்பது கனவா நனவா என்ற பிரமிப்புத் தோன்றுகிறது. ஏனென்றால் என் அறையின் மேஜையின் மேல் பிரகாசமான ஒளி தெரிந்தது. சிறிது நேரம் புட்டியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

இக்கட்டையின் ஒளி பத்து நாட்கள் வரையில் தொடர்ந்து தெரிகிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்த மரத்தின் எண்ணெய்ப் பசை குறையக் குறைய, ஒளியும் குறைந்து விடுகிறது.

அன்று நான் கொண்டுவந்த கட்டைத் துண்டுகளிலிருந்து பல சிறிய துண்டுகளை, கோத்தகிரியில் வாழும் பலரிடம் கொடுத்தேன். இக்கட்டைகளை மேஸ்திரி விட்டார் பத்துப் பதினைந்து தினங்கள் சமையல் வேலைக்கு விறகாக உபயோகப்படுத்திக் கொண்டார் களாம். இதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால் கட்டை எரிந்து கரியாக மாறுவதில்லை. எல்லாம் சாம்பலாகவே ஆகிவிடுகின்றன.

21

யானை தட்டிய குடை

'சோழ, சேர, பாண்டியவர்களாகிய மூவேந்தர்களின் சந்ததியார்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?' என்று அடிக்கடி நான் நினைத்துக்கொள்வதுண்டு. ஆனால் அவர்களை எப்படித் தெரிந்துகொள்வது என்ற சிந்தனையோடு பல இடங்களில் அலைந்தேன். அப்படி அலைந்த பொழுது, சில இடங்களில், 'கச்சையும் மயிலையும்' என்று சில காடர்கள் தங்கள் நடனப் பாடல்களில் சேர்த்துப் பாடுவதையும், 'சோளா, பண்டா' என்றும் 'சோள' தெய்வம், 'பண்டு' தெய்வம் என்றும் வணங்குவதையும் கண்டேன்.

ஒரு சமயம் கோழிக்கோட்டிலிருந்து அதிகாலையில் மீன் பஸ் ஒன்று நிலம்பூர், சுல்தான் பத்தேரிப் பிள்ளையார் கோவில், நலாக் கோட்டை வழியாகப் போகிறது. அதில் சென்றால் அங்கே 'சோளகர்' என்ற ஒருவகைக் காட்டு மக்கள் வாழ்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. உடனே கோழிக்கோட்டில் வேலைகளை முடித்துக்கொண்டு மறுநாள் அதிகாலையில் அந்த மீன் பஸ்ஸில் நலாக் கோட்டைக்குப் பிரயாணமானேன். நலாக்கோட்டைக்குப் பெயர், 'கொம்புத்தூக்கி' என்பது. இதற்கு இப்பெயர் வந்த காரணம் என்ன?

''மைசூரை ஆண்ட அரசர்கள் இந்த இடத்திற்கு வந்தால் அன்று இங்கு வாழ்ந்த மக்கள், 'கொம்பு' என்று கூறும் ஒரு வளைந்த ஊது குழாயைத் தூக்கிப் பிடித்துப் 'பூம்பூம்' என்று ஊதி அரசனின் வருகையை

எல்லா மலை மக்களுக்கும் தெரியப்படுத்துவார்களாம். அதனால்தான் நலாக்கோட்டைக்கு இந்தப் பெயர் உண்டானது. மேலும் அரசன் வந்து இங்கே தங்கி மக்களின் நலன்களை விசாரிப்பதற்காக ஒரு சிறிய கோட்டை (மனை) கட்டப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் நிலக்கடலை இங்கே பயிர் செய்யப்பட்டு, அந்த அரசனுக்காகக் கட்டிய மனையில் (கோட்டையில்) சேர்த்து வைக்கப்பட்டதன் காரணமாக, இதற்கு 'நலாக்கோட்டை' என்ற பெயரை இக்காலத்தில் இட்டுள்ளனர்.

''இன்று, அன்று காட்டிய கோட்டை இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. ஆனால் மைசூர் சுல்தான் இங்கே வந்த காரணத்தால், இங்கே இருக்கும். ஓரிடத்தின், 'சுல்தான் பத்தேரி பிள்ளையார் கோவில்' என்ற பெயர் அவர் தொடர்வை இன்றும் நினைவுறுத்துகிறது. 'நலாக்கோட்டை யிலிருந்து சென்றால் புதர் புதராக அடர்ந்து வளர்ந்திருக்கும் ஒரு மூங்கிற் காட்டில்தான் சோழ அரசர்களின் பரம்பரை மக்கள் மறைந்து வாழ்கிறார்கள்'' என்று பஸ்ஸில் சிலர் கூறியதும் எங்கே இறங்க வேண்டுமோ அங்கேயே நடுவழியில் நானும் வழிகாட்டி நண்பர்களும் இறங்கி நடக்க ஆரம்பித்தோம்.

அது பெரிய மூங்கிற்காடு. சாதாரணமாய் மூங்கிற் காட்டில் யானைகள் அதிகம் என்று எங்களுக்குத் தெரிந்திருந்ததால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பார்த்துக் கொண்டேதான் சென்றோம். காட்டில் ஆங்காங்கே 'யானைக்கு ஊஷார்' என்று எழுதப்பட்ட பலகைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அப்பலகைகளைப் பார்த்ததும் என் வயிற்றில் பகீர் என்ற ஓரிடிவிழும். இப்படிப் பயந்து பயந்து பைனாக்குலரின் உதவியால் பார்த்துக்கொண்டே நடந்தபொழுது, திடீரென்று, 'ஐயோ! யானை, வராதே ஓடு-ஓடு! ஐயோ-யானை வராதே ஓடு!' என்று பலத்த குரலின் எதிரொலியைப் போல் காட்டில் ஒரொலி கேட்டது.

மறு பேச்சு ஒன்றும் பேசாமல் வந்த வழியே திரும்பி வேகமாக நடக்க ஆரம்பித்தோம். 'வராதே' என்ற குரல் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது. கடைசியில் ரோட்டை வந்து அடைந்தோம். ஆனால் அங்கே மட்டும் ஆபத்து இல்லையா என்ன? அங்கேயும் யானைகளின் நடமாட்டம் இருந்தது என்பதைக் காட்டுவதற்காக, யானைகளின் லத்திகள் ஆங்காங்கே தரையில் கடந்தன.

ரோட்டை அடைந்ததும் உரத்த குரலில், 'ஓஹா - ஓஹா - வா!' என்று நாங்கள் குரல் கொடுத்தோம். ஏனென்றால் யானையிடம் சிக்கியவன் வரும் வரையில் அங்கேயே இருப்பது தான் எங்கள் கடமை.

மேலும் யானையிடம் சிக்கியவன் கட்டாயம் காட்டு மக்களுள் ஒருவனான சோளகனாகத்தான் இருக்கவேண்டும் என்றும் நாங்கள் ஊகித்தோம். ஆகையால் அவன் மூலம் ஏதாவது செய்தி கிடைக்கும் என்ற என் உள்ளம் அதனை அறியத் துடியாகத் துடித்தது.

காலை சுமார் ஒன்பது மணியிலிருந்து பகல் சுமார் பன்னிரண்டுமணி வரையில் ரோட்டில் நாங்கள் தனிமையில் தான் உட்கார்ந்திருந்தோம். காட்டில் கிடைத்த சுள்ளிகளை எல்லாம் சேர்த்துச் சுமார் முப்பது அடி தூரம் வரை ரோட்டில் இரண்டு பக்கங்களிலும் பரப்பி, நன்றாகப் புகையும் தீயும் உண்டாக்கிவிட்டு நாங்கள் அந்தத் தீக்குப் பதினைந்தடி தூரத்தில் உட்கார்ந்து கொண்டோம்.

ஒன்று தீயைக் கண்டால் யானைகள் வாரா. மற்றொன்று காட்டில் சிக்கியவன் தீயைக் கண்டு யாரோ அங்கே இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதற்காக ஒரு 'சிக்னல்' ஆகவும் அது இருக்கும்.

இன்னும் அரை மணியில் நாங்கள் வந்த பஸ் திரும்பி வரும் என்ற எண்ணம் உண்டானது. இந்தச் சிந்தனையில் இருக்கும் பொழுது திடீரென்று, 'ஓஹா' என்று ஒரு குரல் கேட்டது. உடனே நாங்கள், 'ஓஹா வா' என்று குரல் கொடுத்து இரண்டு பக்கங்களிலும் இருவராக ஓடிச் சென்று நெருப்பை இன்னும் சிறிது புகையுடன் எரியும்படி செய்தோம். பிறகு சுமார் பகல் மணி ஒன்று இருக்கும்பொழுது கையில் ஒரு குடையுடன் ஓர் ஆள் வந்தான். அவன் நிலை பரிதாபமாக இருந்தது. ஏனென்றால் அவன் உடம்பெல்லாம் வேர்த்திருந்தது. முகமெல்லாம் திகிலின் அடையாளம் தெரிந்தது. கைகால்களெல்லாம் நடுங்கின. அவனை உட்காரவைத்து எங்களிடமிருந்த காபியையும் ரொட்டியையும் அவனுக்குக் கொடுத்தோம். அவற்றை அவன் சாப்பிட்ட பிறகு அந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் காட்டுக்குள் மறுபடியும் சென்று மூங்கிற் புதரையும் நண்பர்களையும் சேர்த்துப் புகைப்படம் பிடித்துக்கொண்டு வேகமாக மறுபடியும் ரோட்டை அடைந்தோம். அந்த யானையிடம் சிக்கிய சோளகனையும் பஸ்ஸில் அழைத்துக்கொண்டு வந்து நான் தங்கி இருந்த இல்லத்தில் இரண்டு நாட்கள் அவனை வைத்திருந்தேன்.

அப்போது அவன் என்னிடம் கூறியது:

''ரோட்டிலிருந்து சுமார் எட்டு அல்லது பத்துக் கல் தூரம் இருக்கிறது எங்கள் அம்சம்; (அம்சம்-ஊர்). நான் காலையில் பக்கத்துக் கிராமத்துக்கு ஒரு வேலையாகப் புறப்பட்டேன். காட்டில், 'பிசு பிசு' என்று மழை பெய்ய ஆரம்பித்தது. ஆகையால் குடையைச் சாய்த்துப் பிடித்துக்கொண்டு வேகமாக நடந்து வந்தேன். காட்டு வழியில் எங்கே பார்த்தாலும் யானையின் லத்திகளும் காலடிகளும் தெரிந்தன. மரங்களின் கிளைகள் எல்லாம் சின்னபின்ன மாக்கப்பட்டிருப்பது தெரிந்தது. ஒரு பக்கத்தில் பயம், மற்றொரு பக்கத்தில் காற்று மழை. இந்தக் காற்று மழையின் ஓசையாலும் மூங்கிற் புதர்களின் ஓசையாலும் மற்ற எந்த ஓசையும் மற்றவர்களின் காலடி ஓசையும் மிருகங்கள் கத்தும் ஓசையும் என் காதில் விழவில்லை. இந்தக் காரணத்தால் நான் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டேதான் நடந்தேன். மழையின் காரணமாக நான் என் இடுப்புக்குக் கீழே கறுப்புக் கம்பளத்தைச் சுருட்டி வளைத்து வேட்டிபோல் கட்டிக்கொண்டிருந்தேன். மேலும் மழைக் காற்றின் காரணமாகப் பனி மொகஸ் மூடிக்கொண்டது. எதிரில் வருகிறவர்கள் தெரியவில்லை. சிறிது தூரம் நடந்ததும் யாரோ பின்னாலிருந்து கொண்டு என் குடையைத் தட்டுவதைப் போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. உடனே குடையை நீக்கித் திரும்பிப் பார்த்தேன். இரண்டு புதர்களின் இடையில் நான், வந்தபொழுது ஒரு புதரின் பக்கதில் ஓர் யானை நின்றுகொண்டு துதிக்கையை மட்டும் நீட்டி என் குடையைத் தட்டியது. ஏனென்றால், யானையின் உடல் இரு மூங்கிற் புதர்களில் நுழையாது. அந்த யானை வரவேண்டியதாக இருந்தால் ஏதாவது ஒரு மூங்கிற் புதரைச் சுற்றிக்கொண்டுதான் இந்தப் பக்கம் வரவேண்டும். என் கீழுடையான கம்பளம் கறுப்பாக இருந்தது. குடையும் கறுப்பு. இதனால் மனிதவாடை யானைக்குத் தெரிந்தாலும் புதரில் வர வழி இல்லாததால், இரண்டு புதர்களுக்கிடையில் நின்று குடையைப் பிடிக்க முயற்சி செய்தது.

''யானையைக் கண்டதும் நான் ஓடவில்லை. சமயம் போல் ஓடவும் வேண்டும். ஏனென்றால் யானைகளுக்குக் கோபம் வந்தால் ஒரு குதிரை ஓட்டத்தையும் அது பிடித்துவிடும் என்பது எனக்குத் தெரியம். ஆகையால் நான் சற்று நிதானித்து உடனே எதிரிலிருந்த மற்றொரு மூங்கிற் புதரில் மறைந்து மறைந்து பனி மொகலின் உதவியால் ஓடிவரும் பொழுதுதான் தூரத்தில் யாரோ பேசிக் கொண்டு வருவது என் காதில் விழுந்தது. 'ஐயோ பாவம்' அவர்களும் யானையிடம் சிக்கிக்கொண்டால் என்ன செய்வது? என்று நினைத்துத் தான், 'யானை! ஓடு' என்று குரல் கொடுத்தேன். அப்படிப் பேசிக்கொண்டு வந்தவர்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று இப்பொழுது உங்கள் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன்'' என்று யானையிடம் சிக்கிய சோளகன் கூறி முடித்தான். பிறகு அவனுடைய உதவியைக் கொண்டே மறுநாள் நான் நலாக் கோட்டைக் காட்டில் பல இடங்களைக் காண முடிந்தது.

22

சிட்டல பெட்டு உக்கில பெட்டு

கோத்தகிரியில் பிரபல டாக்டர் எம்.எஸ். ராவ் அவர்களும் நானும் கோத்தகிரியிலிருந்து குன்னூருக்கும் உதகைக்கும் போகும் பாதையில் சுமார் ஐந்துமைல் சென்றோம். அங்கே பாதையின் ஓரமாகக் காரை நிறுத்தி, எதிரிலிருக்கும் மலைப்பிராந்தியத்தைக் காட்டி, இந்த மலைகளில்தான் பண்டைக்கால மக்களின் பல நினைவுச் சின்னங்கள் இருந்தன. அரசாங்கம் அவைகளை எல்லாம் கண் காணிக்காததால், பலர் அவற்றைக் கையாண்டார்கள்.

''அது தான் 'சிட்டல பெட்டு', இதுதான் 'உக்கில பெட்டு'. இந்த இரண்டு மலைகளில் பண்டைக் காலத்திய பற்பல நினைவுச்சின்னங்கள் இருந்தன. இன்று அவைகளில் பல மறைந்து போயின. இன்று இந்தச் 'சிட்டல பெட்டுவில் மட்டும் சில சின்னங்கள் இருக்கின்றன'' என்று கூறி நடக்க ஆரம்பித்தார் டாக்டர்.

நானும் டாக்டர் ராவும், அவர் மகன் கார் ஓட்டியும் திரு. முனுசாமி எஸ்டேட்டு வழியாக நடத்தோம். எஸ்டெட்டின் எல்லை முடிந்ததும் கரடுமுரடான பாறைகளின் மேல் எங்கள் கைத்தடிகளை ஊன்றி நடக்க ஆரம்பித்தோம். ஒற்றையடிப்பாதை கூட இல்லை. புதர்களை நீக்கிக்கொண்டு போகும் பொழுது, அப்புதர்களில் ஏதாவது, 'சல சல' வென்று ஒசை கேட்டதும் எங்கள் உடல், 'கிடு கிடு' வென்று ஆடியது. மேல்மூச்சு வாங்க வேகமாக ஏறிச் சென்றோம். கடைசியில் மலையின் உச்சியை அடைந்ததும் அது ஒரே பாறையாக இருந்தது. நாங்கள் வந்த மலைக்குப் பக்கத்தில் மற்றொரு மலை இருக்கிறது. அதுதான் 'உக்கில பெட்டு'. மலையின் உச்சியில் சூறாவளி போல் காற்று வீசித் தாக்கியது. கீழே விழுந்தால்...?

கடைசியில் காற்றையும் சமாளித்துக்கொண்டு மலையின் உச்சிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே நாங்கள் கண்டது.

அந்த மலைப் பாறையின் மேல் சிறு சிறு தட்டை வடிவமான பாறைத் துண்டுகளைக் கொண்டு சுமார் பத்தடி சுற்றளவுக்குக் கிணறுபோல் கட்டியிருக்கிறார்கள். கிணற்றின் ஆழம் மூன்றடி யிருக்கலாம். அந்தக் கிணற்றின் உள்ளே மனிதர் உயரத்தில் மூன்று பாறைகள் தெற்கு வடக்காகப் படுக்கப் போடப் பட்டிருக்கின்றன. அந்த இரண்டு பாறைகளுக்கும் மத்தியில் இருப்பது தடித்த பாறை; சுமார் ஐந்தடி நீளமுள்ளது. மற்ற இரு பக்கங்களிலும் இருக்கும் பாறைகள் சிறுத்தும் வெண்மையாகவும் இருக்கின்றன. ஆகமொத்தம் மூன்று பாறைகள் படுத்திருப்பதுபோல் காட்சி அளிக் கின்றன. அந்த மலையை நன்றாகச் சுற்றிப் பார்த்த பின் நண்பர் களுடன் புகைப்படம் பிடித்துக்கொண்டு கீழே வந்துவிட்டோம். பிறகு அந்த மலைகளைப் பற்றிய செய்திகளைப்பற்றிக் கோத்கிரி மணியக்காரர் கூறிய கதை இது:

''வெகு காலத்திற்கு முன் நீலகிரியின் பூர்விகத் குடிகளாகிய தோதுவர்கள் இம்மலையடியில் வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவன் மிகவும் அழகாகவும் உடல் கட்டுடனும் இருந்தானாம். அவனுடைய உடற்கட்டைக் கொண்டு அவனை இரு யௌவனப் பெண்கள் காதலித்தார்களாம்.

''காதலின் முடிவு, அவர்கள் இருவரையும் தோதுவன் திருமணம் செய்துகொண்டான். நீண்ட காலம் இல்லற வாழ்க்கை யில் சுகமாக வாழ்ந்தான். அவனுக்கு ஏராளமான எருமைகள் இருந்தன. தோதுவர்களின் சொத்து 'எருமைகள்' தான். கோத்த கிரியின் வட்டாரத்திற்கே அந்தத் தோதுவன் தான் தலைவன். அவன் இட்டதே சட்டம். தோதுவனும் அவன் மனைவிகளும் காலமான பின் அப்பிணங்கள் இந்த மலையில் கொண்டுவந்து தகனம் செய்தார்கள். அவர்களுடைய நினைவுச் சின்னம்தான் இந்த மூன்று பாறைகள்'' என்று கூறினார் மணியக்காரர்.

இந்த கர்ண பரம்பரையான கதையை வைத்துக் கொண்டு நான் அப்பாறைகளைக் கவனித்தபோது நடுகல் பெரியதாகவும் மற்ற இரண்டு பக்கத்தில் இருக்கும் கற்களும் சிறியவையாகவும் இருந்ததை அறிந்தேன். மேலும் அந்த இரண்டு கல்லும் ஜாதியில், 'பெண்ஜாதி' போலக் காணப்பட்டன. மேலும் அந்த இருபக்கப் பாறைகளில் சிற்பங்கள் ஒன்றும் இல்லாவிட்டாலும், அவற்றைக் காணும்பொழுதே அவை பெண் வடிவமாகத்தான் தோன்றுகின்றன.

''சில சமயங்களில் பகலில் உச்சி நேரத்தில் ஓசையுடன் பயங்கரச் சுழல் காற்று அடிக்கிறது. அந்தக் காற்று, 'சிட்டல பெட்டு' மலையிலிருந்து 'உக்கில பெட்டு' மலை உச்சிக்குப் போய் மறைந்துவிடுகிறது. நான் அதை நேரில் கண்டேன்'' என்று மேலும் மணியக்காரர் கூறினார்.

''பண்டைக் காலத்தில் நம்முடைய தமிழ் நாட்டில் மரணம் அடைந்தவர்களைப் புதைத்த இடத்தில் அடையாளங்கள் வைப்பது உண்டு. அந்த அடையாளங்கள் இருக்கும் இடத்தில் முதுமக்களின் தாழிகள் இன்று கிடைத்திருக்கின்றன. இன்று இந்த முதுமக்கள் தாழிகளின் அடியில், அன்று மூப்பன் மார்கள் உபயோகப்படுத்திய பலபொருள்கள் கிடைக்கின்றன. இதைப் போலுள்ள பல கோடிக்

கணக்கான பாறைகளை, இன்று நான் மலைகளிலும் காடுகளிலும் கண்டேன்.

''ஆதியில் மரண்மடைந்தவர்களை நினைத்து மூன்று நாட்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு புலம்புவார்கள். மரணமடைந்தவர்கள் அந்த மூன்று நாட்களில் யாரையாவது இரவில் வந்து கழுத்தைப் பிடித்து விடுவார்களாம். ஆகையால் அந்த மூன்று நாட்கள் இரவு முழுவதும் தூங்காமல் பண்டை மக்கள் பாட்டுப்பாடிக் கொண்டிருப்பார்கள். நான்காம் நாள் காலையில் மரணம் ஏற்பட்ட இடத்தை அந்தக் கூட்டத்தினர் காலி செய்துவிடுவார்க்ள. இந்தப் பண்டைக்காலப் பழக்கமே இன்றும் சில காடுகளில் இருக்கின்றது. மேலும், இதே பழக்கம் இன்றும் நகரங்களில் நம்முடன் வாழும் எல்லாக் குருவிக்காரர் களிடத்திலும் இருக்கின்றது. (குருவிக்காரர்களை-நரிக் குறவர் என்பர் பலர். இது முற்றும் குற்றம்)

இவைகளுக்குப் பின் பல்லாண்டுகளுக்கு முன் மரணம் அடைந்தவர்களைத் தகனம் செய்த இடங்களில் நினைவுச் சின்னமாகப் பாறைகளை வைத்தோ மரங்களை வளர்த்தோ வணங்கி வந்தனர்.

பல்லாண்டுகளுக்குப் பின் இந்த ஒற்றைப் பாறைகளின் மேல் சிறு சிற பாறைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிப் பந்துபோல் வைத்தார்கள். இவற்றை இன்றும் சிலி கிராமங்களிலும் காட்டுப் பாதையிலும் காணலாம். இந்தப் பழக்கத்திற்குப் பின், பெரிய பெரிய சால்கள் (பானை) செய்தார்கள். அவற்றில் சிறு சிறு துவாரங்களையும் செய்தார்கள். அவற்றில் மரணடமடைந்த வர்களை உட்காரவைத்து அவர்கள் உடனிருக்கும்பொழுது உபயோகப்படுத்திய பல பொருள்களையும் அந்தச் சால்களுக்குள் வைத்து அப்படியே புதைத்துவிடுவார்கள். இவைதாம் இன்று கிடைக்கும் பல முதுமக்கள் தாழிகள் எனப்படுவன. இந்தப் பழக்கத்திற்குப் பின் பத்தினிப் பெண்களையும் வீரர்களையும் நினைத்து அவர்களது உருவத்தையும் புனிதமான பாறையில் செருக்கிப் புனிதமானதோர் இடத்தில் நட்டு 'வீரக்கல்' சிலை என்று வணங்கினார்கள். இது 'வீர வணக்கம்' எனப்படும்.

வீரனையும் வீரபத்தினையையும் கல்நட்டு வழிபடும் பழக்கம் நம் தமிழ்நாட்டில் மிகவும் பழமையானது? வீரனுக்கும் பத்தினிகளுக்கும் கல் நட முதன் முதலில் நல்ல மலையில் ஏற்ற கல்லைத் தேர்ந்தெடுப்பார்கள். அப்படி மலையைத் தேர்ந் தெடுக்கும் முறையைப் பற்றியும் உலகப் புகழ் பெற்ற வீரனுக்குக் கல் கொடுக்கும் பாக்கியத்தைப் பெற்ற மலையைப் பற்றியும் பாராட்டிப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.

''தாழி கவிப்பத் தவம்செய்வார் மண்ணாக
வாழிய நோற்றனை மால்வரை - ஆழிசூழ்
மண்டலம் ஆற்றா மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனென் நின்மாட்டோர் கல்''

என்று போற்றிப் பாடியதைக் கண்டால் உள்ளம் இன்பத்தில் ஆழ்ந்துவிடுகிறது.

இந்தப் பழக்கம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பல மதத்தினர்களிடமும் பல இன மக்கிடமும் பலவாறாகப் பிரிந்து, 'நீத்தர் வழிபாடுகள்' பலவிதமாக மாறிவிட்டன.

நீத்தார்களை நினைப்பதற்காகக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் இரண்டாம் தேதியை நிர்ணயித் திருக்கிறார்கள். அன்று எல்லாக் கிருஸ்துவர்களும் அவர்களது குடும்பத்தில் மரணமடைந்தவர்களை நினைத்து வீட்டில் அன்னதானம் செய்தபின், மாலையில் விரும்புகிறவர்கள், மயானத்திற்குச் சென்று சமாதிக்கு பூ, வத்தி, ஊதுவத்தி, சாம்பிராணி தூபம் முதலியவைகளைப் போடுவார்கள். மரித்தவர்கள் ஆத்துமா சாந்தியடைய ஜபம், பிரார்த்தனை செய்வர். அன்று மாலையே, கிறிஸ்தவ குருவானவர் ஜபம் செய்து கொண்டே மயானத்தைச் சுற்றிச் சுற்றி வருவார். சுற்றி வரும் போது கையில் இருக்கும் பரிசுத்த நீரை எல்லாக் கல்லறை மேலும் தெளிப்பார். இது கிருஸ்தவர்களின் நீத்தார் சடங்கு. இந்துக்கள் நீத்தார் சடங்கை மற்றொரு விதமாகச் செய்கின்றனர். ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மயானத்துக்குச் சென்று, 'மயானக் கொள்ளை' கொண்டாடுகின்றனர். அன்று இறைச்சி, காய்கறிகள், காசு, பலவிதப் பலகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு போய், 'அங்காளம்மன்' என்று கூறும், 'அங்காள பரமேச்வரி'க்குப் படைப்பார்கள். சிலர் இதை, 'மயானக் காளி' என்றும் கூறுகின்றனர். சிலர் தாங்கள் கொண்டுபோன பலகாரங் களை மயானத்தில் எறிவார்கள். யார் யார் எப்படிப் பிரார்த்தனை செய்துகொண்டார்களோ அப்படி எல்லாம் மாயனத்தில் செய்வார்கள். இப்படி மயானத்தில் செய்துகொண்டிருக்கும் பொழுதே, பலர் மயானத்தில் எறியப்பட்டதை அள்ளிக்கொண்டு ஓடுவார்கள். அப்படி அள்ளிக்கொண்டு போகும் காட்சியைத் தூரத்திலிருந்து காணும்பொழுது கொள்ளையடிப்பதைப் போல் இருப்பதால் இதற்கு, 'மயானக் கொள்ளை' என்று பிற்காலத்தில் பெயர் உண்டானது என்பர் சிலர்.

முகம்மதியர்களோ மற்றொரு விதமாக நீத்தார் நினைவுச் சடங்கைச் செய்கின்றனர். முகம்மதிய மாதமாகிய 'ஷாபான்' மாதத்தில் மரணமடைந்தவர்களுக்கு நீத்தார் சடங்கு செய்கின்றனர். அன்று பூ, பழம், பாயசம், மல்லிகைப்பூ, ஊதுவத்தி, சாம்பிராணி தூபம் முதலியவைகளை ஒரு தனி இடத்தில் வைத்து 'பாத்தியா' (ஜபம்) செய்வார்கள். பிறகு அன்று அந்தப் பூவைக் கொண்டுபோய் முகம்மதியர் சமாதியின் மேல் போடுவார்கள். சமாதியிலும் சிலர் 'பாத்தியா' செய்வதுண்டு. இதனை உர்துவில் 'ஷபேபராத்' என்று கூறுவார்கள். அன்று பணவசதி இருப்பவர்கள், அன்னதானம் செய்வதுண்டு. வீட்டில் செய்து வைத்த பலகாரங்களைப் 'பாத்தியா' படித்த பின் வீட்டிலுள்ளவர்கள் சாப்பிடுவதும் உண்டு.

சில இந்துக்கள் நீத்தார் சடங்கை ஆண்டு தோறும் 'திதி' என்று செய்வதுண்டு. இவைகளை எல்லாம் ஆராய்ந்து காணும்பொழுது, நீத்தார்களுக்காக ஒவ்வொரு மதத்தினரும் இனத்தாரும் செய்யும் சடங்குகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வாழையடி வாழையாகப் பழக்கத்தில் வருகின்றன என்பத தெளிவு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த நீத்தார் நினைவுச் சின்னங்களில் ஒன்றுதான்

இந்த, 'சிட்டல பெட்டு, உக்கில பெட்டு' மலையில் இருககும் பாறைச் சிற்பம் போலும். உதகைக்குச் செல்லும் நண்பர்கள் இதைக் காணத் தவறாதீர்கள்!

23

நகரும் கல்

இவ்வாண்டு நான் நீலகிரிக்குச் சென்றிருந்தபோது ஓர் அதிசயமான விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். கோத்தகிரி யிலிருந்து ஆறு மைல் பஸ்ஸிலும் அங்கிருந்து ஆறு மைல் ஒற்றை யடிப் பாதையில் மலையின் மேலும் நடந்து சென்று, கோத்தர்களின் ஊராகிய, திருச்சிக்கடி என்றதோர் குக்கிராமத்தை அடைந்தேன். அங்கே சுமார் நூறு கோத்தர்களின் வீடுகள் இருக்கின்றன. என்னைக் கண்டதும், அவர்கள் உபசரித்து, 'இன்று எங்கள் ஊரில் நடக்கும் ஒரு விசேஷத்திற்கு நீங்கள் தெய்வாதீனமாக வந்தீர்கள். அதில் நீங்களும் கலந்துகொள்ள வேண்டும்' என்று கூறினார்கள்.

'உங்களுடன் கலந்துகொள்வதைவிட எனக்கு வேறொரு இன்பம் உண்டா?' என்று மகிழ்ச்சியுடன் கூறினேன் நான்.

அன்று பகல் சுமார் ஒரு மணி இருக்கும். 'ஓவ்-ஓவ்' என்று எல்லோரும் கூவிக்கொண்டே அவர்கள் இருக்கும் மலையைச் சுற்றிக்கொண்டு மலையின் மேலே வந்தார்கள். நானும் அவர்களுடன் குறுக்கு வழியில், குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன்.

அங்கே சுமார் இரண்டடி நீளம், இரண்டடி அகலம் முக்காலடி உயரமுள்ள கல்லொன்று பரந்த ஒரு மைதானத்திலே கிடந்தது. இக்கல்லைக் காண வந்த கோத்தர் கூட்டத்தாரில்-ஒருவருக்குத் 'தெய்வம்' வந்து, சற்றுத் தூரத்திலிருந்து ஆடிக்கொண்டே, அந்தக் கல் இருக்கும் இடத்திற்கு வந்தார் அவர். அவரை நீராடச் செய்து, பிறகு குறிப்பிட்ட மைதானத்திற்கு அழைத்து வாந்தார்கள். அவர் ஆடும்போது, ஊரில் உண்டாகப் போகும் இன்ப துன்பங்களைப் பற்றிக் கூறினார்.

''இந்தச் சக்திவாய்ந்த கல், மாதத்திற்கு ஒருமுறை இடம் விட்டு இடம் மாறுகிறது. சாதாரணமாக அமாவாசைக்கு முன், நள்ளிரவில் இடி இடிப்பதுபோல் ஓர் ஓசை கேட்கிறது. அவ்வோசை கேட்ட மறுநாள் காலை, இந்தக் கல் இடம் விட்டு இடம் மாறி இருக்கிறது. உடனே நாங்கள் மறு நாளோ அல்லது அதற்கடுத்த நாளோ இன்று வந்ததைப்போல் இங்கு வருவோம். ஒவ்வோராண்டும், முதல் அமாவாசைக்கு முன், இந்தக் கல், புல்தரையின் மேல் நகர்ந்துகொண்டே போய், கீழே இருக்கும் குளத்திலே, நீராடி விட்டு, இங்கு வருகிறது. அப்படி வரும்போது போகும்போது, ஏற்படும் புல் தேய்வுகள் மறுநாள் நன்றாகத் தெரியும்!'' என்று கூறி விளக்கினார்கள் பக்கத்தில் இருந்தவர்கள்.

இச்சம்பவம் பல்லாண்டுகளாக நடந்துவருகிறது என்றும், பல ஆண்டுகளுக்கு முன் வேலி அடித்து வைத்தபோது, கல், வேலியை விட்டு வெளியே வந்துவிட்டது என்றும்கூடக் கூறினார்கள்.

இதன் பிறகு, கல் இருக்கும் இடத்திற்குச் சுமார் ஆறு கஜ தூரத்தில் எல்லோரும் நின்று, கல்லைப் பார்த்த வண்ணமாக ஏதோ அவர்கள் மொழியில் ஜபம் செய்த பின் எல்லோரும் தரையில் விழுந்து வணங்கினார்கள். எவ்விதமான பண்டங்களோ பலிகளோ பூக்களோ படைக்கவில்லை. விருப்பம் இருந்தால், ஒற்றை நாலணாவை ஏதாவது ஓர் இலையிலோ மரப்பட்டையிலோ பூசாரி வாங்கி, அதைத் தரையில் வைக்கிறார். பிறகு கொடுத்தவர் கல்லை நோக்கித் தரையில் விழுந்து கும்பிடுகிறார்.

கல் வணக்கம் முடிந்ததும், கல்லைச் சுற்றி நின்று, கோத்தர்கள் சிறிது நேரம் வாத்தியங்கள் வாசிக்கிறார்கள். பின்பு வட்டமாக நின்று, குடையைத் தோளின் மேல் வைத்துக்கொண்டு நடனமாடுகிறார்கள். நடனத்திற்குப் பின் மறுபடியும் வந்த வழியாகவே தங்கள் இல்லங்களுக்குத் திரும்புகிறார்கள். 'அக் கல்லில் என்ன சக்தி மறைந்திருக்கிறது? இதைக் காணாதவர்களுக்கு எப்படி விளக்குவது?'' என்ற சிந்தனையாகவே நான் வருவதைக் கண்ட அவர்கள், 'பக்தியால் நெருப்பை மிதிப்பதையும் கையில் அள்ளுவதையும், தேகமெல்லாம் குண்டூசி குத்திக்கொள்வதையும் கண்டிருக்கிறீர்களா? அதைப் போலத்தான் இதுவும் ஒரு வகை வழிபாடு' என்று கூறினார்கள். 'நாம் ஒருவிதத்தில் கடவுளை வழிபாடுகிறோம்; அவர்கள் ஒருவிதமாக வழிபடுகிறார்கள் போலும்' என்று எண்ணிக்கொண்டே ஊர் திரும்பினேன் நான்.

24

கள்ளன் எறிந்த கல்

உதகையிலிருந்து, மைசூர் போழும்பொழுது கூடலூரில் ஒரு நண்பரின் இல்லத்தில் ஐந்து நாட்கள் தங்கினேன். நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன் என்று என்னைத் தனியாக ஓர் அறையில் படுக்கும்படி செய்தார்கள். நீலகிரியில் சாதாரணமாக நடுத்தர மானவர்கள் தங்கள் இல்லங்களின் கூரைகளின்மேல், தகரத்தை வாரையுடன் இணைத்து, அதன் மேல் ஓடுகளை அடுக்கி வைத்திருப்பது வழக்கம். சில சமயங்களில் ஓடுகள் மழையினால் கலைந்தும் நகர்ந்தும் விலகியும் இருக்கும். அவ்விதமானதோர் வீட்டில், நான் தங்க ஏற்பாடு செய்தார்கள். அன்றிரவு திருடர்களின் கதைகள், காட்டில் நடந்த பல சம்பவங்கள் முதலியவை பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு என் அறையில் தனியாகப் படுத்துக்கொண்டேன். ஊரோ புதிது; இடமோ தனி இடம். தூக்கம் வரவில்லை. அரைத் தூக்கத்தில் என்னவோ வாரையில் ஓடுவதைப் போல இருந்தது.

'இரவு நேரத்தில் பெட்டியையாவது அவர்கள் இருக்கும் இடத்தில் வைத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். திருடர்கள் பயமின்றித் தூங்கலாமல்லவா?' என்று சிந்தனை செய்தேன். திடீரென்று ஓட்டின் மேல் ஒரு கல் வந்து விழுந்தது. எழுந்து உட்கார்ந்தேன்.

'என்ன முட்டாள் வேலை செய்தோம். அவர்களிடம் பெட்டியை யும் காமிராவையும் கொடுத்திருக்கலாமே! அவற்றையும் நம்முடன்

வைத்துக்கொண்டோமே' என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, மறுபடியும் மற்றொரு கல் ஓட்டின்மேல் வந்து விழுந்தது. ஒரு வகையாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, 'ஊம்' என்று கனைத்துக் காட்டினேன். உடனே ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மூன்று கற்கள் வந்து விழுந்தன. 'சரி! திருடர்கள் கூட்டமாக வந்திருக்கிறார்கள்போல் இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டேன். கை கால்கள் எல்லாம் ஒரே நடுக்கம். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பலகணியை மெதுவாகத் திறந்து பார்த்தேன்.

பேச நா எழவில்லை. நான் பலகணியின் மூலம் பார்க்கிறேன் என்று தெரிந்துகொண்டு, ஒருவர் பின் ஒருவராக வெள்ளை உடையில் மூன்று நான்கு பேர் செடிகளின் மறைவில் நகர்ந்து சென்றதைப்போல் இருந்தது. நான் வாய் திறக்காமல் பலகணியின் கதவை மூடிவிட்டேன். மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்தேன். கற்கள் அதிகமாக விழ ஆரம்பித்தன. அத்துடன் மழையும் கொட்டு கொட்டென்று கொட்டியது. 'மழையில் நின்றுகொண்டே கல் எறிகிறார்களே' என்று நினைத்துக்கொண்டிருந்த போது, திடீரென்று பலமாகப் பல கற்கள் கதவின் மேலும் கூரையின் மேலும் பலகணியின் மேலும் வந்து விழுந்தன.

'சரி, இனி பேசாமல் இருப்பது முட்டாள்தனம்' என்று நினைத்துக்கொண்டு, ''ஐயா! ஐயா! ஐயா'' என்று பலமாகக் கத்தினேன். யாரோ ஓடும் ஓசையும் நடக்கும் ஓசையும் கேட்டன. 'திருடர்கள் ஓடுகிறார்கள்' என்று நினைத்துக் கொண்டேன். சிறிது நேரத்திற்கெல்லாம் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. பேசாமல் இருந்தேன். உடனே எனக்குத் தெரிந்த குரலில், ''அண்ணே!'' என்று கூப்பிட்டார்கள்.

''யார் அது?'' என்று பதிலுக்குக் குரல் கொடுத்தேன்.

''நாங்கள்தான். கதவைத் திறவுங்கள்'' என்று சொன்னார்கள்.

தடுமாறிக்கொண்டு கதவைத் திறந்தேன். ''ஏன் ஐயா ஐயா என்று கத்தினீர்கள்? கை கால்கள் எல்லாம் ஏன் நடுங்குகின்றன? ஏதாவது கனவு கண்டீர்களா?'' என்று கேட்டார்கள்.

''உங்கள் வீடுகளில் கல் விழவில்லையா?'' என்று கேட்டேன். ''ஆமாம்'' என்று சர்வ சாதாரணமாய்ச் சொன்னார்கள்.

''பிறகு என்ன? காரணம் கேட்கிறீர்களே? திருடன் முதலில் ஒரு கல் போட்டான். பிறகு பலகணியின் மேல் போட்டான். சரியென்று பலகணியைத் திறந்து பார்த்தால், வெள்ளை உடையில் மூன்று நான்கு பேர் நகர்ந்து போகிறார்கள். இவற்றை எல்லாம் கண்டபின் தான் நான் உங்களைக் கூவி அழைத்தேன்!'' என்று கூறிக்கொண்டு வரும்போது ஒருவருக்கொருவர் புன்னகை செய்துகொண்டார்கள்.

''சரி! எங்களுடன் வந்து படுத்துக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு அந்த இடம் வசதியாக இருக்காது என்று தான் எண்ணுகிறோம்'' என்றார்கள்.

அவர்கள் சொல்லி முடிப்பதற்கு முன் நான் மூட்டைகளையும் பெட்டியையும் தூக்கிக்கொண்டு, ''உங்களுடனேயே படுத்துக் கொள்ளுகிறேன். அங்கு வசதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை''

என்று அவர்களுக்கு முன் நடந்தேன். புதிய இடத்தில் படுக்கை போடப்பட்டது.

''உங்கள் ஊரில், கல் மழை கிடையாதா?'' என்று மெதுவாக ஆரம்பித்தார்கள். ''இல்லை'' என்றேன்.

''திருடர்கள் கல் எறியவில்லை. கல் மழைதான் பெய்தது. பலகணியின் பக்கம் நீங்கள் பார்த்ததும், 'பனிமொகல்' தான். அது தரையோடு தரையாகத்தான் யாரோ நகர்ந்து போவது போல் இருக்கும்'' என்று விளக்கினார்கள். ''அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற கதையில் உங்கள் விஷயம் முடிந்தது. சரி படுத்துக்கொள்ளுங்கள். மீதி நாளை பேசலாம்'' என்று சொல்ல எல்லோரும் படுத்துக்கொண்டோம்.

நல்ல தூக்கத்தில் மறுபடியும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு எழுந்து பார்த்தால் வெயில் தெரிந்தது. மணியைப் பார்த்தால், மணியும் ஒன்பதாக இருந்தது. ''திருடனைப் பிடித்து விட்டுத் தூங்குகிறீர்களா?'' என்று கிண்டலாக ஒரு குரல் கேட்டது.

25

யானைப் பாறை!

உதகையிலிருந்து பஸ்ஸில் கோத்தகிரி வழியாக 'கேர்பெட்டா' எஸ்டேட்டுக்குச் சென்று, அங்கிருந்து தேயிலைக் காட்டின் வழியாக நடந்து சென்றால் ஒரு பிரம்மாண்டமான மலையைப் பார்க்கலாம். அதன்மீது ஏறுகையில் ஏமாந்தால், அபாயம்தான் என்று மனம் அடித்துக்கொண்டு எச்சரிக்கை செய்து'கொண்டே இருந்தது. அங்கேதான் இருக்கிறது யானைப் பாறை. நீலகிரி வாசிகள் இதை, 'எழுத்துப் பாறை' என்றும் கூறுகின்றனர். ஆனால் மக்கள் கூறுவதைப்போல் இங்கு ஏதாவது எழுத்துக்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சி செய்ததில் எவ்விதமான எழுத்தும் அங்கில்லை. ஆனால் அந்தப் பாறையைத் தூரத்திலிருந்து பார்த்தால் யானையின் முதுகில் அம்பாரி கட்டியிருப்பதுபோல் தெரிகிறது. பாறையின் முன் பகுதி யானையின் தும்பிக்கையுடன் இணைந்த தலை போலவும் பின்பகுதி யானையின் முதுகு போலவும் காணப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் மேல் நாட்டினரும் நீலகிரிவாசிகளும் உல்லாசப் பிரயாணத்திற்காக இங்கே சென்று வருவார்களாம்.

இந்த யானைப்பாறையைப் பற்றி ஒரு சுவையான விஷயத்தைக் கூறுகின்றனர். பஞ்ச பாண்டவர்கள் கலியுகம் பிறப்பதற்கு முன் குதிரை, யானை முதலிய பரிவாரங்களுடன் கிழக்குத் திசையிலிருந்து வந்தார்கள். அவர்கள் கலியுகம் பிறப்பதற்கு முன் வடநாடு போய்ச் சேரவேண்டும். ஆகையால் வேகமாக வரும்பொழுது அவர்களுக்கு முன் துர்க்கை இங்கே தங்கி இருந்தாளாம். அவர்கள் அவளுடைய ஆசியைப் பெற்றுப் போவதற்கு முன், பொழுது விடிந்துவிட்டது. இந்தக் கலியுகத்தில் இருப்பதற்கும் தங்களுடைய பரிவாரங்களைக் கொண்டுபோவ தற்கும் பஞ்சபாண்வடர்கள் விரும்பவில்லை. ஆகையால் அவர்கள்

கொண்டுவந்த சாமான்கள் கல்லாக வேண்டுமென்றும் தங்களுடைய பரிவாரங்கள் பாறையாக வேண்டுமென்றும் சபித்தார்கள். இன்றும் அந்த இடத்தில் கும்பல் கும்பலாக இருக்கும் பல பாறைகளைக் காணலாம். தங்களுடைய பரிவாரங்களைப் பாறைகளாக்கிய பின், மேற்கொண்டு அவர்கள் நடக்கப் பிரியப்படவில்லை. ஆகையால் பஞ்சபாண்டவர்களெல்லோரும் கோவணக் கரைக்குப் போகும் பாதையில் இருக்கும் ஒரு சுரங்கத்தில் சென்று மறைந்துவிட்டார்கள். தங்களுடன் அன்று கொண்டுவந்த பணத்தை ஒரு பெரிய பாறையின் இடுக்கில் போட்டுவிட்டார்கள். பண்டைக் காலத்தில் இந்தக் கிராமவாசிகள் பூசாரி பஞ்சபாண்டவர்களுக்கு ஆடு பலி கொடுத்துவிட்டு, ஆட்டை வெட்டிய கத்தியை அந்தப் பாறையின் இடுக்கில் விட்டதும், ஆட்டின் விலை எவ்வளவோ அவ்வளவு பணம் அந்தக் கத்தியில் ஒட்டிக்கொண்டு வரும். பேராசை பிடித்த பண்டைப் பூசாரி ஒருவன் இரண்டு மூன்று முறை கத்தியை அந்தப் பாறை இடுக்கில் விட்டான். இந்த தீச் செயலால் கோபமடைந்த பஞ்சபாண்டவர்கள், பாம்பு வடிவில் வந்து, அந்தப் பூசாரியைத் தீண்டிச் சென்றார்கள்.

பூசாரி மரணமடைந்த அன்றே அந்தப் பலியும் பூசையும் நின்றுவிட்டன. இந்த யானைப் பாறையில் இருந்த எழுத்துக்களை 1939 ஆம் ஆண்டில்கூடப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் நாளாக ஆகப் பாறைகளில் வளர்ச்சியால் அவை மறைந்துவிட்டன.

'நீலகிரிக்கும் பஞ்சபாண்டவர்களுக்கும் பண்டைக் காலத்தில் தொடர்பு இருந்திருக்கிறது என்பது உண்மை. பஞ்சபாண்டவர் கலியுகத்தைக் காணாமல் அன்று மறைந்த சுரங்கத்தை இன்றும் காணலாம். பஞ்சபாண்டவர்கள் தங்கிய இடமொன்றும், முதுமக்கள் தாழிகளைப் புதைத்த இடங்கள் போல், உதகை - கோத்தகிரியில் பேட்லாடாவில் இருக்கின்றது. பல கல் வெட்டுக்கள் அங்கே இருக்கின்றன. 'இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது' என்பதுபோல் தலைமுறை தலைமுறையாக இந்த ஊர் மக்கள் இந்தக் கதையைக் கூறுகிறார்கள்.

அவை எந்த அளவில் இன்று நமக்குப் பண்டைச் சரித்திரங்களை நினைவுபடுத்துகின்றனவோ அப்படியே இந்தச் சுரங்கமும் இந்த யானைப்பாறையும் நமக்குப் பண்டைச் சரித்திரங்களை நினைவு படுத்துகின்றன. ஆனால் ஊர் மக்கள் கூறும் சரித்திரங்களை அப்படியே நம்பாவிட்டாலும் அவர்கள் தலைமுறை தலைமுறையாகக் கூறும் சரித்திரங்களில் ஓரளவாவது உண்மை இருக்கும் என்றேனும் கருதலாம் அல்லவா?

26

முயன்றனர் முடித்தனர்

நான் பழகிய ஆதிவாசிகளில் நீலகிரியில் வாழும் பூர்விகக் குடிகளாகிய கோத்தர்களிடம் பழகியது போல், மற்ற ஆதிவாசிகளிடம் நான் அதிகமாகப் பழிகியதில்லை. காரணம், அவர்களிடம் இருக்கும்

சக்தியோ விடா முயற்சியோ சகோதர வாஞ்சையோ பக்தியோ ஏதோ ஒன்று என்னைக் கவர்ந்திருக்க வேண்டும். அது இன்னதென்று எனக்குத் தெரியாது.

அவர்கள் விடாமுயற்சியில் செய்த பல காரியங்கள் மூன்றில் நானும் கலந்துகொண்டேன். அவற்றுள் ஒன்றில் நேருவும் முன்பு சென்னைக் கவர்னராக இருந்த ஸ்ரீபிரகாசாவும் பங்கெடுத்துக் கொண்டார்கென்றால், அவர்களின் முயற்சி எவ்வளவு உயர்ந்தது என்பதை நான் கூற வேண்டுமா?

நீலகிரியிலிருந்து ஐம்பத்திரண்டு கோத்தர்கள் ஒரு விழாவில் நடனமாடுவதற்காகச் சென்னைக்கு வந்திருந்தார்கள். அந்த நாட்களில், அவர்கள் ஒரு நாள் காலையில் என் இல்லத்திற்கு வந்து, ''இன்றிரவு நாங்கள் நீலகிரிக்குப் போகிறோம். ஆகையால் ஐந்து நிமிடங்கள் நாங்கள் நேருவைச் சென்னை இராசபவனில் கண்டு, எங்கள் நடனத்தை ஆடிக் காட்ட வேண்டும். அதற்கு எங்களுடன் நீங்களும் வரவேண்டும்'' என்று கூறினார்கள்.

''இந்த நெருக்கடியான நேரத்திலா நேருவைக் காணப் போகிறீர்கள். அவர் இங்கும் அங்கும் அலைந்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலா நீங்கள் அவரைக் காணத் திட்டமிட்டிருக் கிறீர்கள். அது நம்மாலாகும் காரியமா?'' என்று கூறினேன்.

''நீங்கள் எங்களுடன் வந்தால் போதும். மற்றக் காரியங்களை நாங்கள் கவனித்துக்கொள்ளுகிறோம்'' என்று ஒரே பிடிவாதம் செய்தார்கள். நானும் ஒன்றும் பேசாமல் அவர்களுடன் கிண்டிக்குச் சென்றேன்.

நாங்கள், 'இராச பவனம்' போய்ச் சேர்ந்தபோது, பகல் சுமார் பன்னிரண்டு மணி இருக்கும். நாங்கள் வந்திருக்கிறோம் என்று காரியதரிசி மூலம் சொல்லி அனுப்பினோம். நானும் கோத்தர்களும் ஒரு மரத்தடியில் இருந்தோம்.

''நேருவைப் பார்க்காமல், நாங்கள் சென்னையில் பல்கூடத் துலக்கக் கூடாது' என்று ஒரு வைராக்கியம் வைத்திருக்கிறோம்'' என்று கோத்தர்கள் கூறினார்கள். 'அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த காரியம் ஆகாது' என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ஆகையால், இந்தக் காரியம் முடியுமா? முடியாதா என்று தெரியாமல் முயன்றோம். பிறகு நேருவைப் பார்ப்பதற்கு ஐந்து நிமிஷங்கள்தான் கிடைத்தன. 'சரி' என்று ஒப்புக் கொண்டோம்.

நேரு எங்களைக் காண வரும்போது பகல் இரண்டு மணி. அவர் எதிரில் நடனங்களும் பாட்டுகளும் வாத்திய இசையும் நடைபெற்றன. பிறகு நேருவையும் ஸ்ரீபிரகாசாவையும் நடுவில் நிற்க வைத்துக் கோத்தர்களைப் புகைப்படம் எடுத்தேன். நேரு அன்று எங்களுடன் கழித்த நேரம் நாற்பத்தைந்து நிமிடங்கள். ஆனால் எங்களுக்கு சிப்பந்திகள் கொடுத்த நேரமோ ஐந்து நிமிடங்கள்தான். அதை அவரிடம் எந்தச் சிப்பந்திக்கும் சொல்லத் தைரியம் இல்லை போலும்.

கடைசியில், ஸ்ரீபிரகாசாவை, ''நீங்கள் கட்டாயம் எங்கள் ஊராகிய கோத்தகிரி-அக்காலுக்கு வரவேண்டும். எங்கள் ஊர்ப் பெண்கள், எங்களை விட மிக எழிலுடன் நடனமாடுவார்கள்'' என்று கூறி அழைத்தார்கள். அவரும் கோடைக்காலத்தில் நீலகிரிக்கு வரும்பொழுது

கோத்தகிரி அக்காலுக்கு வருவதாக வாக்களித்தார். கோடைக்காலமும் வந்தது. கவர்னர் திட்டத்தில் அக்காலுக்குப் போவதாகவும் ஏற்பாடானது. கோத்தகிரியிலிருந்து-கோத்தர் ஊராகிய அக்காலுக்கு வண்டிப் பாதை இல்லை. செங்குத்தான ஒற்றையடிப் பாதையில் தான் ஏறவேண்டும்; இறங்க வேண்டும். இந்த நிலையில் ஸ்ரீ பிரகாசாவை ஜீப்பில் அழைக்கவேண்டும் என்று கோத்தர்கள் தீர்மானித்தார்கள். அத்திட்டத்தை நிறைவேற்று வதற்காகச் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் பஞ்சாயத்துப் பேச ஓர் இரவைத் தேர்ந்தெடுத்தார்கள். அன்றிரவு இரண்டு காரியங்களைப் பற்றிப் பேசி முடிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்; ஒன்று அவர்கள் பாடியில் ஏழை விதவைகளைப் பற்றியது, மற்றொன்று ஸ்ரீபிரகாசாவை எப்படி அழைப்பது என்பதைப் பற்றியது.

ஆகையால் அன்று மாலை சுமார் ஏழு மணிக்கு வட்டமாக உட்கார்ந்து பேசத் தொடங்கினார்கள். காட்டில் காடர்களிடம் பஞ்சாயத்து நடைபெற்றால் அதில் நானும் கலந்துகொள்வதுண்டு. பாடியில் அநாதை விதவைகள் பிழைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு எருமைகளோ பசுக்களோ ஆடுகளோ கொடுக்க வேண்டும். சிறிய நிலப் பகுதியும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த விவகாரங்களை முதலில் சிலர் எதிர்த்தனர். ஏனென்றால் விதவை மறுமணம் செய்துகொண்டால் கொடுத்த பொருள்களைத் திருப்பி வாங்குவதா? அல்லது அவளிடமே விட்டுவிடுதா? என்றும் தீர்மானம் செய்ய வேண்டும் என்று சிலர் கூறினாரகள்.

''அந்த அந்த விதவைகளின் சூழ்நிலைக்கு குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் தகுந்தாற்போல் அவ்வப்பொழுது பஞ்சாயத்துக் கூடிப் பேசுவதே நலம்'' என்றனர் மற்றொரு சாரார்.

இந்த விவகாரங்களில் கலந்துகொண்டு நானும் உட்கார்ந்திருந்தேன். மணியும் இரவு ஒன்று, இரண்டு, மூன்று என்று ஓடிக்கொண்டே இருந்தது. 'அவ்வப்பொழுது, விதவைகளின் நிலைமையைக் கண்டு தீர்ப்புச் செய்யலாம்' என்று முடிவு செய்தனர்.

பிறகு ஸ்ரீபிரகாசா வருவதற்குக் கோத்தகிரிச் சந்தை கூடும் இடத்திலிருந்து, அக்கால் வரையில் அவர்களே சாலை போட வேண்டும் என்றும், சாலையில் குறுக்கிடும் தேயிலைத் தோட்டங் களைச் சொந்தக்காரருக்குப் பணம் கொடுத்துக் கேட்டு வாங்க வேண்டும் என்றும், அக்காலில் வாழும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து சுமார் பத்துப் பதினைந்து நாட்களுக்கு, வயல் வேலைகளுக்குச் செல்லாமல், இந்த வேலையில் ஈடுபட வேண்டும் என்றும் பேசி ஒரு முடிவு செய்தனர். இவ்வாறு, மறுநாள் காலை ஆறு மணிக்குப் பஞ்சாயத்துக் கூட்டம் முடிந்தது. கூட்டம் முடிந்ததும் எல்லோரும் காபி அருந்திவிட்டுக் கொஞ்சமும் களைப்பின்றி வயல் வேலைகளுக்குச் சென்றார்கள். நான் மட்டும் படுக்கைக்குச் சென்றேன்.

அன்று அவர்களைக் கண்ட நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன். ஏனென்றால், எப்பொழுதும் போலவே அவர்கள் இருந்தார்கள். எல்லோருடைய முகமும் மலர்ந்திருந்தன. காரணம் பஞ்சாயத்து மிகவும் நல்ல விதமான முடிவு செய்ததே ஆகும்.

என்னே அவர்களின் கட்டுப்பாடு! நாமோ என்றால் இரவெல்லாம் கண் விழித்தால் மறுநாள் வேலைக்கே போகமாட்டோம்.

கோடை மாதமும் வந்தது. கனம் திரு. ஸ்ரீபிரகாசா கோத்தா ஊராகிய அக்காலுக்குப் போகத் திட்டமிட்டார். அச்செய்தியையும் அவர்களுக்குச் சொல்லி அனுப்பினார். ஆனால், 'அக்காலுக்குச் செல்ல சாலை வசதி இல்லாததால் எப்படி வருவார்கள்' என்ற ஒரு பிரச்னை உண்டாகியது. சுமார் ஒரு மைல் தூரம் மேட்டிலும் பளத்திலும் பாறையிலும் வளைவு வளைவாகச் சாலையை வெட்ட ஆரம்பித்தார்கள். 'அவ்வழியில் சாலை போட இயலாது' என்று பெரிய பெரிய மேதாவிகள் எல்லாம் கூறினார்கள். ஆனால் எஞ்சினீர்யர்களலும் இயலாத அளவுக்குக் குறுகிய கால அளவில் சுமார் பத்துப் பதினைந்து நாட்களில் மலைகளிலும் காடுகளிலும் சாலை அமைப்பதில் அநுபவமுள்ளவர்களாகிய கோத்தார்கள். 'லாரி வருவதற்கே நல்ல சாலை அமைத்துவிடுவோம்' என்று தங்கள் குல தெய்வமாகிய கம்பட்டீசுவரன்மேல் சத்தியம் செய்து, அன்று பஞ்சாயத்தில் தீர்மானித்தப்படி ஆண்களும் பெண்களும் சாலை அமைக்கும் வேலையில் இறங்கினார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அங்கு இருந்தேன். தங்கள் சொந்த வேலைக்கு அக்கால் மக்கள் ஒருவரும் போகவில்லை. எல்லாரும் ஒரே மனமாகச் சாலை போடும் வேலையில் ஈடுபட்டார்கள். அக்கால் மங்கையர்கள் கேடயம் கையில் ஏந்திப் போர்க்களத்திற்குப் போவதுபோல், தங்கள் தலையில் கற்கள் நிறைந்த கூடையும் ஒரு கையில் பந்தமும் ஏந்திக்கொண்டு இரவில் ஆண்களுக்கு உதவி செய்த அக்காட்சியை ஏட்டில் எடுத்துக் கூற இயலாது. பெண்கள் தங்கள் கரங்களில் பந்தம் பிடித்து, நடமாடிய எழில்மிக்க அக்காட்சி, பண்டைக் காலத்தில் பந்தம் பிடித்து நாட்டைக் காத்த மங்கையர்களின் படைகளோ என்ற அச்சத்தை உள்ளத்தில் உண்டாக்கியது.

ஒரு பக்கத்தில் மழை வராதிருக்க இரவும் பகலும் பக்தியுடனும் பிடிவாதத்துடனும் வருண பகவானுக்குப் பூசை செய்தார் பூசாரி. அக்காலுக்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய ஓடை ஓடுகிறது? எங்கேயோ மழை பெய்து, அதில் அன்று வெள்ளம் ஓடிவர ஆரம்பித்தது. அதைக் கண்டு நான் சற்றுக் சஞ்சலம் கொண்டேன். ஆனால் கோத்தர்களோ மனம் தளராமல் முன்னைவிட ஊக்கத்துடனும் பிடிவாதத்துடனும் பெரிய பெரிய பாறைகளை உடைத்து 'பாறைய பாலமோ?' என்று காண்போர் ஆச்சரியப்படும்படி பாறையாலேயே பாலமும் கட்டி முடித்தார்கள். ஓடைத் தண்ணீரும் பாறைப் பாலத்தின் அடியில் பாறையின் இடுக்குகளில் ஓட ஆரம்பித்தது. சாலையும் மலைப் பாம்பின் வடிவில் வளைந்து வளைந்து அழகாக அமைக்கப்பட்டது. லாரிகளும் ஜீப்களும் கார்களும் கோத்த கிரிக் கடை வீதியிலிருந்து- அக்காலுக்கு இரவும் பகலும் பறந்தன. இதை நம்பாத சில சந்தேகப் பேர்வழிகளின் படைகள், அக்கால நோக்கிக் கூட்டம் கூட்டமாக நடந்தன.

காண்போர், 'இது கனவா? அல்லது நனவா?' என்று நினைத்து மலைத்துச் சிலையாய் நின்றனர். நானும் அதை நேரில் காணாதவனாக இருந்து, யாரவது என்னிடம் கூறியிருப்பார்களே யானால், கூறுகிறவர்களுக்குப் 'பைத்தியம் ஆரம்பம்' என்று எண்ணியிருப்பேன்.

சிலர், 'முயன்றார்கள்! அதை முடித்தே காட்டிவிட்டார்கள் கோத்தர்கள்' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

குறிப்பிட்ட நாளில், குறித்த நேரம் ஓடிவந்தது. திரு. ஸ்ரீபிரகாஸாவின் காரும் அச்சாலையை நோக்கிப் பறந்தது. ஸ்ரீபிரகாசாவுக்குக் கோத்தர்கள் தங்கள் நடனங்களையும் வேடிக்கைகளையும் காட்டித் தங்களால் இயன்ற அளவு மரியாதைகளும் செய்தார்கள். கோத்தர்கள் காட்டிய அன்பைக் கண்டு அவர்களை சாலை அமைக்க எடுத்துக் கொண்ட இன்னல்களைக் கேள்விப்பட்ட ஸ்ரீபிரகாசா கோத்தர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்யும்படி உத்தரவு பிறப்பித்தார். கனவிலும் நினைக்க முடியாத ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடித்த கோத்தர்களை நீலகிரி வாசிகள் வாயார வாழ்த்திப் புகழ்ந்தார்கள்.

27

பேயைக் காணும் மக்கள்

பொதுவாகக் குருவிக்காரர்கள் ஒரே இடத்தில் நிலைத்து வாழ்வதில்லை. சில கூட்டங்கள் ஒரே இடத்தில் ஐந்து ஆறு நாட்கள் கூட வாழ்வதில்லை. வேறு நாடோடி இனத்தைச் சேர்ந்த மக்கள் இவர்களைப்போல், மோசமான நாடோடிகளாக இல்லை.

கடந்த பல்லாண்டுகளாக இவர்களிடம் பழகும் நான் இந்தக் கருத்தை நெடு நாட்களாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தேன். ஆதிவாசிகளுக்கென்று உழைக்கும் பல அரசாங்கச் சங்கங்களிடத்தில் இதனுடைய காரணத்தைப் பற்றிக் கேட்டதற்கு, அவர்களும், 'அவர்கள் மோசமான நாடோடியர்; எங்கு வேண்டுமானாலும் அவர்கள் போவார்கள்; வருவார்கள். பிச்சை கிடைக்கும் இடம் அவர்களுக்கு உகந்த ஊர்' என்று கூறி விட்டார்கள். நானும் அதுதான் காரணமென்று இருந்துவிட்டேன்.

பல்லாண்டுகள் இவர்களிடம் நெருங்கிப் பழகும் எனக்கு இதன் காரணம் தெரியவில்லையே என்று வருந்தியதும் உண்டு.

இதைப் பற்றிப் பல குருவிக்காரர்களிடத்திலும் கேட்டேன். அவர்களும் அதற்குச் சரியான விடை சொல்லவில்லை. இதற்காகப் பல நாட்கள் அவர்களுடைய குடிசைகளை இரவிலும் பகலிலும் பார்வையிடுவதுண்டு.

ஓர் நாள் இரவு அவர்களின் குடிசையில் ஒருவனைக் காணச் சென்றேன். அன்று அங்கே கண்ட காட்சி என்னை அப்படியே சிலையாக்கிவிட்டது. முதலில் பெண்களுக்குள் சண்டை போலும் என்று நினைத்துக்கொண்டேன். சிறிது நேரத்திற்குப் பின்தான் எனக்கு முழுவதும் தெரிய வந்தது? நான் கண்ட காட்சியாவது: 'குருவிக்காரப் பெண்கள் எல்லாரும் ஒரே குடிசையில் வட்டமாக உட்கார்ந்து ஒருத்தியின் கையை, மற்றொருத்தி கோத்துப் பிடித்துக்கொண்டிருந்தாள். இந்தக் கூட்டத்திற்கு மத்தியில் திருமணமாகாத பெண்களும் அதற்கு மத்தியில் குழந்தைகளும் உட்கார்ந்திருந்தார்கள்.

பக்கத்தில் குருவிக்காரர்களும் தனியே ஒரு கூட்டமாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அன்று இரவு எல்லோரும்

பேசிக்கொண்டும் பாட்டுப்பாடிக்கொண்டு இருப்பார்களாம். மறுநாள் சூரியன் உதயமானதும் எல்லோரும் பழையபடி பிச்சைக்குப் போவார்களாம். இதனுடைய உட்கருத்தை முதலில் என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அன்றிரவு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் காமிராப் பெட்டியுடன் அவர்களுடைய குடிசைக்குச் சென்றேன். அப்பொழுதுதான் ஒவ்வொருவராகத் தூங்கி எழுந்தார்கள். என்னைக் கண்டதும், ''காலையில்தான் தூங்க ஆரம்பித்தோம்'' என்று கூறினார்கள்.

இரகசியம் அம்பலம்

நீண்ட நாட்களாக எந்த இரகசியத்தைக் கண்டறிய முடியாமல் இருந்தேனோ, அந்த இரகசியத்தைக் குருவிக்காரனிடமிருந்து கண்டறிந்ததைப் பற்றி மிக்க சந்தோஷமடைந்தேன்.

இவர்களின் கூட்டத்தில் கைக்குழந்தை முதல் கிழவன் வரையில் யாராவது இறந்துவிட்டால், இறந்தவர்களைப் புதைத்து விடுவார்கள். புதைத்துவிட்டு, அன்று சூரியன் மறைவதற்குள் அந்த இடத்தைக் காலி செய்துவிட வேண்டும் என்பது ஒரு கொள்கை. பிறகு புதிய இடத்திற்குச் சென்ற அன்றிரவு முழுவதும் குழந்தை களையும் திருமணமாகாதவர் களையும் மத்தியில் படுக்க வைத்துவிட்டு, அவர்களைச் சுற்றிலும் மங்கையர்கள் தங்கள் கைகளைக் கோத்துக்கொண்டு உட்கார்ந் திருப்பார்கள். இதைப் போல் புதிய இடத்திற்கு வந்து மூன்று இரவுகள் உட்கார வேண்டுமாம். நான்காவது நாள் குளித்துவிட்டுப் பூசை செய்தபின், அன்றிரவு தனித்தனியாகத் தங்கள் குடிசையில் தூங்குவார்களாம். இப்படி இவர்கள் மூன்று இரவுகள் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா? இறந்தவர்கள் இந்த மூன்று இரவும் பேயாக வருவார்களாம். வந்த பேய் தனியாக இருந்தால் உடனே அவளையே அவனையோ பிடித்துக் கொள்ளுமாம். அங்ஙனம் பிடித்துக்கொண்டால் அன்று முதல் பேய் பிடிபட்டவர்கள் மெலிந்துகொண்டே வருவார்களாம். கடைசியில் மூன்றாவது மாதம் பேய் பிடிக்கப்பட்டவர்கள் இறந்துவிடுவார்களாம்.

ஒருவர் மரணமடைந்த பிறகு மூன்று நாட்கள் வரையில் இரவில் சங்கிலி போல் கையைக் கோத்துக்கொண்டே இருந்தால் பேயால் மொத்தமாக எல்லோரையும் பிடித்து இழுக்க இயலாது என்பது இவர்களுடைய நம்பிக்கையாம்.

ஒரு குருவிக்காரக் கூட்டத்தில் யாருக்கேனும் மரணம் ஏற்பட்டு அதனால் காலி செய்த அந்த இடத்தில், மற்றொரு குருவிக்காரக் கூட்டம் உடனேயே அல்லது மறுநாளே வந்து கூடாரம் அடித்துக்கொள்ளலாம். புதிய கூட்டத்தை அந்தப் பேய் ஒன்றும் செய்யாதாம்.

இந்த இடத்திலிருந்து பேய்க்காகப் பயந்து போன குருவிக்காரக் கூட்டம் மறுபடியும் பழைய இடத்திற்கு வரவேண்டுமானால், மூன்று அமாவாசைகளும் மூன்று பௌர்ணமிகளும் கடந்தபின் தான் வரலாம்.

இந்த மூட நம்பிக்கையால்தான் இவர்கள் இன்றும் நாடோடிகாளக இருக்கிறார்களே ஒழிய, நாம் நினைப்பது போல் இவர்கள் பிச்சைக்காகவோ அல்லது பெண்ணுக்காவோ அல்லது

இடவசதி இல்லை என்றோ, நாடோடிகளாக வாழவில்லை. மிகவும் தந்திரமாக இவர்களிடம் இந்தக் காரணத்தைத் தெரிந்துகொண்டேன்.

‘பேயைக் காட்டு’

அன்றிரவு ‘பேயைக் காட்டு’ என்று கூறி நானும் அவர்களின் குடிசையில் வெகு நேரம் இருந்தேன். அவர்கள் கும்பலாக இருந்த கூடத்தின் மத்தியிலிருந்த ஒரு பையன் கனாக் கண்டவன் போல், ‘வீர்’ என்று கத்தினான். உடனே அந்தக் குரவிக்காரக் கும்பலில் எல்லோரும், ‘லோய்’ என்று கத்தினார்கள். உடனே தூக்கத்தில், ‘வீர்’ என்று கத்திய பையன் விழித்துக்கொண்டான். இதைக் கண்ட ஒரு குருவிக்காரன், ‘பாத்தியா அண்ணே! பேய் வந்து இவனை இழுத்திருக்கிறது. அதைக் கண்ட நாங்கள், ‘லோய்’ என்று மிரட்டி ஓட்டினோம். எங்கள் கண்களுக்கு ஒரு புகை தெரிந்தது. அந்தப் புகையை நீங்கள் பார்க்கவில்லையா? என்று என்னைக் கேட்டார்கள்.

அவர்களுடைய நம்பிக்கையை நாம் ஏன் கெடுக்க வேண்டும் என்று நானும், ‘ஆமாம்! பையன் குரல் மட்டும் கேட்டேன். ஆனால் நகர்ந்து போன புகையை நான் கவனிக்கவில்லை. என் கண்களுக்கு அது தெரியவில்லை’ என்று கூறினேன்.

உடனே அதற்கு அவர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா?

‘‘நீங்கள் தீட்டோடு வந்திருப்பீர்கள். அதனால்தான் அது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை’’ என்று கூறினார்கள்.

நானும், ‘‘இருக்கலாம்’’ என்று சமாதானம் கூறிவிட்டு வீட்டுக்கு வந்தேன். ஒரு கூட்டத்தில் ஒருவர் மரணமடைந்தால் அந்த இடத்தையே காலி செய்து, ஒரு கூப்பிடு தூரமாவது தள்ளிப் போய்த் தங்கள் குடிசையை அமைத்துக்கொள்ள வேண்டுமாம். நகரமாக இருந்தால் ஒரு கூப்பிடு தூரத்தில் தங்கள் குடிசைகளை அமைத்துக்கொண்டால் அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் அங்கேயே கிடைக்கலாம். ஆனால் சிலர் குக்கிராமங்களில் வாழ்ந்தால், அவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? கிராமத்தை விட்டு ஒரு கூப்பிடு தூரம் சென்றால் அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கப் பழையபடி மரணமடைந்த இடத்தைத் தாண்டித்தான். வரவேண்டும்-அல்லவா? அப்படி வந்தால் அவர்கள் ‘தீட்டு’ என்று கூறுகிறார்கள். ஆகையால், கிராமங்களில் வாழும் குருவிக்காரர்கள், தங்கள் கூட்டத்தில் ஒரு நபர் மரணமடைந்தால், மேற்படி காரணத்திற்காக அந்தக் கிராமத்தையே காலி செய்துவிட்டு, அடுத்த கிராமத்திற்குக் குடிபோகிறார்கள்.

இச்சடங்கு எப்பொழுது உண்டானது? என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்பொழுது, இது பண்டைக் காலம் முதல் இன்று வரையில் எல்லா மதத்தினர்களிடத்திலும், எல்லா இன மக்களிடத்திலும் பலவிதமாக மாறி, மருவி இருந்து வருவதைக் காணலாம்.

அன்று

பண்டைய மக்கள் குகைகளில் வாழந்த காலத்திலும் மரங்களின் அடியில் வாழ்ந்த காலத்திலும் மக்களுடன் முதலில் பழகிய விலங்கு நாய். நாய், மனிதனுக்குத் துணையாக மாறியது. மரத்தடியில்

வாந்தவனுக்குப் பாம்பு துணையாக வாழ்ந்தது. பாம்பு மனிதனைத் தீண்டி, அவன் இறந்தான். ஆகையால் மனிதன் பாம்புடன் நட்புக் கொள்ளாமல் அதனிடம் பயம் கொண்டான். பயத்தின் காரணமாகப் பாம்பின் மேல் பக்தி உண்டாகி, அதனை வணங்க ஆரம்பித்தான். இதையே கிறித்துவ வேத நூலின் பழைய ஏற்பாட்டு ஆதியாகமத்தில் முதல் பெண்ணாகிய ஏவாளுக்குப் பழம் கொடுத்துப் பாம்பு வடிவத்தில் பிசாசு ஏமாற்றியதாகக் கூறப்படுகிறது.

ஒன்றிடம் தோன்றிய பயமே கடைசியில் அதனிடம் பக்தியை உண்டாக்குகிறது. 'தெவ்வுப் பகையாகும்' என்பது தொல்காப்பியம். 'தெவ்' என்பதற்குப் பகைமை, பயம் தருவது என்பது பொருள். பயத்திலிருந்து எழுந்துதான், 'தெய்வ பக்தி-பயபக்தி' என்பதை விளக்கவே, 'பயபக்தியாக இரு' என்ற வார்த்தை உலகில் உண்டானது. தனக்கு அபாயம் உண்டாகுமோ என்ற காரணத்தால் மனிதன் கடவுளை வணங்கினான். இக்காரணத்தைக் கொண்டு ஆராயும்போது உலகில் முதன்முதலில் உண்டானது பாம்பு வணக்கமேதான் என்று தெரிகிறது.

ஏவாளும் முதலில் ஆண்'_வன் தோட்டத்தில் பாம்பைக் கண்டதும் பாம்பு கூறுவதைக் கேட்ட பின், பாம்பு விடைபெற்றுப் போகும்போது, வணங்கித்தான் இருக்க வேண்டும். எனவே, பழைய மனிதன் பாம்பு கடித்து இறந்தபின் இறந்த மனிதனிடமும் அச்சம் கொண்டான். அந்த ஆவி மறுபடியும் வந்து, தன்னைப் பிடித்துக்கொள்ளும் என்று பயந்தான். இன்றும் காடர்களிடம் இந்தப் பயம் இருக்கிறது. இக்காரணத்தால், ஆதிமனிதன் இறந்தவனை மண் பெட்டியில் வைத்து அவனுக்கு வேண்டிய உணவுகளையும் அவன் ஆயுதங்களையும் உடன் வைத்து மூடிப் புதைத்து வந்தான். அதைத்தான், 'தாழி' என்று தமிழன் பெயரிட்டான். இவ்விதமாகத் தாழிகளையும் கல் அறைகளையும் இந்தியாவில் பல இடங்களில் காணலாம்.

அச்சம்

காலப் போக்கில் தாழி மறையவே, மரணமடைந்தவர் களுக்கு மரியாதை செய்யும் சிலை கட்டியும் வழிபட்டார்கள். காலம் மாற, மாற எல்லா மதத்தினர்களிடமும் எல்லா இனமக்களிடமும் பலவகையாக இவ்வழக்கம் காணப்படுகிறது. குடும்பத்தில் மரணமடைந்தவர்களுக்கு இந்துக்கள், கருமாதி என்று பதினாறாம் நாளும் ஆண்டுச் சடங்கு என்று ஆண்டு தோறும் மரியாதை செய்கின்றனர்.

கிறித்தவர்களோ மரித்தவர்களுக்குப் பதினாறாம் நாள் கோவிலில், 'ஆத்தும இளைப்பாறுதல் பூசை' என்றும் 'முதலாண்டு பூசை' என்றும் கோவிலில் சடங்கும், வீட்டில் தத்தம் சக்திக்கு ஏற்றாற்போல் பிச்சைக்காரருக்கு அன்ன தானமும் செய்கிறார்கள. முகம்மதியரோ மரித்தவருக்கு 3-ஆம் நாள் 'சியாரத்' என்றும், ஏழாம் நாள், 'சாத்வா' என்றும் பத்தாம் நாள் 'தஸ்வா' என்றும், இருபதாம் நாள், 'பீஸ்வா' என்றும் நாற்பதாம் நாள் 'சையிலம்' என்றும், ஓராண்டு முடிந்ததும் 'பர்சி' என்றும் ஆத்தும சாந்தி செய்கின்றனர். மேலும் கிறித்தவர்கள் ஒவ்வொரு நவம்பர் மாதமும் இரண்டாம் தேதியில் சாதாரணமாகக் குடும்பத்தில் மரித்த எல்லாருக்கும் 'கல்லறைத் திருவிழாக்' கொண்டாடுகிறார்கள். அதாவது அன்று கிறித்தவர்கள்

(மயானத்தில்) கல்லறைக்குச் சென்று தங்களுடைய மூதாதையர்களுக்காக ஜபம் செய்து, சமாதியில் பூப்போட்டு, அவர்களை நினைத்துக்கொள்வார்கள். இங்ஙனம், 'நீத்தார் வழிபாடு' ஒவ்வொரு மதத்திலும் இருக்கிறது. ஆனால் காலப் போக்கில் அது பலவிதமாக மாறிவிட்டது. பண்டைக் காலத்தில் பத்தினிப் பெண்களைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள் என்று சரிததிரம் சான்று கூறுகிறது.

இதைப் போலவே படிப்படியாக மாறிய வழக்கங்களில் ஒன்றுதான் இன்று ஒருவர் மரணமடைந்த இடத்தில், குருவிக்காரர்கள் வாழ்ந்தால் மரணமடைந்தவன் பேயாக வந்து பிடித்துக்கொள்ளுவான் என்று அந்த இடத்தை அன்றே காலிசெய்து வேறிடத்துக்குச் சென்றும்கூட, இறந்தவன் ஆவி பேயாக வரும் என்று நினைத்து இரவில் உட்கார்ந்திருப்பது.

அநாகரிகமான இந்த மாக்களுக்கு (விலங்கு) நாகரிகமாக நடந்துகொள்ளும்படி, யாரால் எப்படி எடுத்துக் கூற இயலும்? என்றும் இவர்கள் நாடோடிகளாகவே இருக்க வேண்டுமா? நம் சமுதாயத்தவரான இவர்களை, நம் சமுதாயத்துடன் கூடி வாழச் செய்வது நம்முடைய கடமையன்றோ!

28

தரையில் ஒட்டிய கால்கள்

மைசூரிலிருந்து உதகைக்குப் போகும் பஸ்ஸில், 'தோல்கேட் - மசிணிகுடி வழி' என்று கேட்டால் போதுமென்று நண்பர்கள் கூறினார்கள். நண்பர்களின் பேச்சைக்கேட்டு, நானும் என் நண்பரும் காலையில் மைசூரில் பஸ்ஸைப் பிடித்துப் பகல் சுமார் ஒரு மணிக்கு மசிணி குடி 'தோல்கேட்டை' வந்தடைந்தோம்.

எங்களை இறக்கிவிட்ட மைசூர் பஸ் உடனே புறப்பட்டு விட்டது. பஸ்ஸை விட்டு இறங்கியதும், பக்கத்திலிருக்கும் கடையில் ''மசிணிகுடி போக வேண்டும். எத்தனை மணிக்குப் பஸ் வரும்'' என்று கேட்டேன். அவர், 'ஐயையோ!' என்று ஆரம்பிக்கும் பொழுதே எங்கள் இருவருக்கும் இடி விழுந்தது போல் தோன்றியது.

''நீங்கள் இங்கே ஏன் இறங்கினீர்கள்? மசிணிகுடிக்குக் கூடலூரிலிருந்துதான் பஸ் வர வேண்டும். இந்த வழியாக, அந்தப் பாலத்தின் பக்கமாகத்தான் போகும். ஆனால் சில நேரங்களில், 'இடமில்லை' என்று கூறிவிடுவார்கள். ஆகையால் நீங்கள் மைசூர்ப் பஸ்ஸிலேயே கூடலூர் போயிருந்தால் அங்கு உணவு விடுதியில் தங்கியிருக்கலாம். உங்களுக்கு இப்பொழுது பஸ் கிடையாது. மாலை ஆறரை மணிக்குத்தான் பஸ் கிடைக்கும். அதில் இடமும் கிடைக்க வேண்டும். அது மசிணிகுடிக்கு மாலை சுமார் ஏழு மணிக்குப் போய்ச் சேரும்'' என்று அவர் கூறினார். அவரிடம் நாங்கள் பேசும்போது, பகல் ஒரு மணி நேரம். இன்னும் ஆறு மணி நேரம் நாம் இந்தக் காட்டில் உட்கார்ந்திருக்க வேண்டுமே, என்ன செய்வது என்று நினைத்துக்கொண்டு காட்டையாவது சுற்றிப் பார்க்கலாம் என்று கருதிச் சுற்றிப் பார்த்தோம். எங்கே பார்த்தாலும் முந்திரி மரங்களைக் காட்டு இலாகாவினர் பயிர் செய்திருக்கிறார்கள். காடோ, யானைக் காடு. இந்தக்

காட்டில் முந்திரிப் பழங்கள் உண்டானால் எவ்வளவு பழங்கள் யானைகளின் அட்டூழியத்திற்குப் பலியாகுமோ தெரியவில்லையே!

ஓடாதே

காட்டைச் சுற்றிக்கொண்டு வரும்பொழுது, ஓர் இடத்தில் சில குடிசைகள் இருந்தன. இருளும் கடுமையாக இருந்தது. திடீரென்று எங்களைக் கண்டதும், சுமார் நான்கடி உயரத்தில் ஓர் உருவம், 'டக்' கென்று தோன்றி மறைந்தது.

அது மனித உருவமா? அல்லது மிருகமா? என்பதே தெரியவில்லை. அதைப் பார்ப்பதற்காகக் காலை வீசி வைத்து ஓடினோம். பிறகு என்னுடன் வந்த வழிகாட்டி அவ்வுருவத்தைப் பார்த்துக் காட்டு மொழியில், 'ஓடாதே!' என்று கூறினான். அவ்வுருவம் ஒரு மனிதன்தான். அவன் நின்றதும், நாங்கள் அவன் அருகில் சென்று பார்த்தோம். அவன் முகத்தின் பக்கத்தில் மயிர் நரைத்துக் கொத்தாகத் தொங்குகிறது. தலையில் இருக்கும் மயிர் நான்கு பக்கங்களிலும் பரவிப் பறட்டையாக இருந்தது. இரவில் அவனைப் பார்த்தால் கட்டாயம் அவன் ஒரு மிருகம் என்றுதான் கருத நேரிடும். அவனைக் கண்டதும் உடனே அவனைப் புகைப்படம் பிடிப்பதற்காக என் காமிராவைத் தயார் செய்தேன்.

அதைக் கண்ட அவன், 'என்னைப் புகைப்படம் பிடிக்க வேண்டாம்'' என்று கூறி ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தான்.

''நீ ஓடினாலும், நான் புகைப்படம் பிடித்துவிடுவேன்'' என்று கூறினேன்.

''படம் பிடித்தால் உனக்குக் கால் விளங்காது'' என்று கூறி நின்றான். அதைக் கேட்டதும் எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவன் என்னுடைய கால்களைத் தரையில் ஒட்டிக் கொள்ளச் செய்வானாம்! ''சரி! படம் பிடிக்கவில்லை. ஆனால் என் காலைத் தரையில் ஒட்டும்படி செய் பார்க்கலாம்'' என்று கூறினேன். உடனே அவன் சில பச்சிலைகளை எடுத்துக் கசக்கி, என்னவோ, 'மொண - மொண' வென்று சொன்னான். உடனே எனக்குக் கால்களில் 'விறு-விறு' என்று ஓர் உணர்ச்சி தோன்றியது. பிறகு என்னால் கால்களை அசைக்க முடியவில்லை. உடனே, ''வேண்டாம்'' என்று கூறினேன்.

''ஏன் என்மேல் உமக்கு நம்பிக்கை இல்லையா? உங்கள் ஊரில் தேள் கொட்டினால், சாவியாலோ அல்லது கத்தியாலோ அல்லது குச்சியாலோ விஷம் இறக்குவதைக்கூட நீங்கள் பார்த்த தில்லையா?'' என்று என்னைக் கேட்டான். அதைக் கேட்டதும் என் சிந்தனைகள் சிதறின. ''பார்த்திருக்கிறேன். நீ இப்பொழுது செய்யும் சக்தியில் நம்பிக்கையும் இருக்கிறது. என் கால்களில் சக்தி இல்லாமல் செய்துவிட்டாயே அது எப்படி? நீ கையில் எடுத்த அந்தப் பச்சிலைகளுக்கும் நீ எதையோ ஓதினாயே அதற்கும் என்ன தொடர்பிருக்கிறது? அவைகளை எனக்குக் காட்டவும் சொல்லவும் முடியுமா?'' என்று கேட்டேன்.

''அவைகளை எல்லாம் காட்டக்கூடாதுங்கோ; சொல்லவும் கூடாதுங்கோ; மீறிச் செய்தால் எங்கள் குல தெய்வத்திற்குக் கோபம் வரும்'' என்று கூறி மறுத்துவிட்டான்.

நாங்கள் சிறிது நேரம் மௌனத்துடன் இருந்தோம். அவன் எங்களிடம் சொல்லாமலே நடந்தான். பிறகு உட்கார்ந்து உருண்டோடுவதைப் போல் ஓடி மறைந்துவிட்டான். அவனை மறுத்துப் பேச எங்களுக்குத் துணிவு ஏது?

அவன் உருண்டோடுவதைக் கண்டபோது பண்டைக்கால மனிதனின் தோற்றம் என் நினைவுக்கு வந்தது. பண்டை நாளில் மக்கள் நிற்கவும் நடக்கவும் அறியாமல் இருந்தார்கள். பறவை களிடமிருந்தும் மிருகங்களிடமிருந்தும் மீன்களிடமிருந்தும் நடக்கவும் பறக்கவும் நீந்தவும் கற்றுக்கொண்டான் மனிதன்'என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அவன் உருண்டு சென்ற தோற்றம், ஒரு பெரிய பாறை மலையிலிருந்து உருண்டால், காண்போருக்கு எப்படித் தோன்றுமோ அவ்வாறு இருந்தது.

''அவனை ஏன் புகைப்படம் பிடிக்க வேண்டுமென்று கேட்டீர்கள்?'' என்று கேட்டான் வழிகாட்டி.

''ஓ அதுவா! நெஞ்சை அள்ளும் தஞ்சையில்-சரபோஜி மன்னர் ஆயிரக்கணக்கான நூல்களைத் தம்முடைய நூல் நிலையத்தில் சேர்த்து வைத்தார். சில நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் பட்டுத் துணியில் மூட்டையைப்போல் சுற்றியும் வைத்திருந்தார். நான் சில ஆண்டுகளுக்கு முன் அவைகளைக் காண வேண்டு மென்றே சுமார் ஒரு வாரம் தஞ்சையில் தங்கி இருந்து அவற்றைக் கண்டபோது, அவர் சேகரித்த பல நூல்களில், 'மனிதனும் மிருகமும்' என்ற நூல் ஒன்றில் மனித முகத்தையும் மிருக முகத்தையும் மிகவும் அழகாகச் சித்திரத்தின் மூலம் ஒப்பிட்டுக் காட்டியிருப்பதைக் கண்டேன். அதைப் போல் இக்காலத்தில் யாராவது கிடைத்தால் உடனே புகைப்படம் எடுக்க வேண்டு மென்று நீண்ட நாட்களாக எண்ணிக் கொண்டிருந்தேன். அப்படி யாரையாவது காட்டிலோ நாட்டிலோ கண்டால் உடனே தஞ்சையில் அன்று கண்ட நூலின் மேல்தான் என் சிந்தனை ஓடுகிறது. இவனுடைய முகமும் வளர்ந்த ஒரு பெரிய ஆண் குரங்கின் வட்டமான முகமும் ஒத்திருக்கின்றன. உதட்டுப் பாகமும் தாடையும் முன்னால் நீண்டு இருப்பதைக் கண்டேன். ஆகையால் புகைப்படம் எடுக்கலாமென்று நினைத்தேன். ஆனால் மிஞ்சிப் புகைப்படம் எடுத்தால் நமக்கு என்ன ஆபத்து உண்டாகுமோ என்று தான் பேசாமல் இறந்துவிட்டேன். மேலும், இதைப்போல் அப்பாவிகளுக்கு விரோதமாக நம்முடைய அதிகாரத்தைக் காட்டி எதையாவது செய்ய நான் விரும்புவதில்லை. அவனே அதை விரும்பினால், இன்னும் ஏதாவது சில இரகசியங்களையும் நான் தெரிந்துகொண்டு அதைப் பத்திரிகையின் மூலம் தமிழ்நாட்டுக்குத் தெரியப்படுத்தலாம் அல்லவா? அதை எல்லாம் நினைத்துத்தான் நான் பேசாமல் இருந்தேன். எப்படியும் ஒரு நாளைக்கு அவனைப் புகைப்படம் பிடிக்காமல் இருக்க மாட்டேன்'' என்று கூறினேன். இவ்வாறு பேசிக்கொண்ட மைசூர்-உதகை பஸ் போகும் சாலையை அடைந்தோம். சிறிது நேரத்திற்கெல்லாம் ஆண்டவன் அருளால் ஒரு லாரி மசிணிகுடிக்குத் திரும்பியது. அதை நிறுத்தி, எங்கள் விருப்பத்தைக் கூறினோம். அவர்களின் உதவியால் நாங்கள் அன்று மாலை சுமார் நான்கு மணிக்கெல்லாம் மசிணி குடிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

பழைய ஊர்

மசிணிகுடி என்பது மிகப் பழைய ஊர். இன்று அது காடாக இருக்கிறது. முற்காலத்தில் மைசூர்ப் பகுதியில் வாழும் படகரும் சுக்காலியாரும் கோடங்கியரும் இந்த மசிணி குடியின் வழியாகத்தான் உதகைக்குப் போனதாகக் கூறுகிறார்கள். 'மசிணி' என்பது அவர்களின் தெய்வம். அதைக் கொண்டுவந்து மரத்தடியில் வைத்துவிட்டு, அதற்கு ஒரு கோவிலைக் கட்டினார்கள். பண்டைக் காலத்தில் இவ்விடம் பெரிய காடாக இருந்ததாம். வியாபாரிகள் சந்தைக்கு வரும் பொழுது, இந்தத் தெய்வத்தின் அருகில்தான் தங்கினார்களாம். நாளடைவில், இந்த இடத்தில் வியாபாரி களுக்காகக் கடைகளும் வீடுகளும் உண்டானதாலும் மசிணிக்கும் ஒரு 'குடி' (கோயில்) கட்டப்பட்டதாலும் 'மசிணி+குடி' என்று பெயர் உண்டாயிற்று. மசிணி குடியில் வாழும் ஆதிவாசிகள் அங்கிருந்து சுமார் பத்து மைல் தூரத்தில் மலையடிவாரத்தில் இருப்பதாலும், அங்குச் செல்லப் போக்குவரத்து வசதி இல்லாததாலும், நானும் நண்பரும் மறுநாள் நடந்தே சென்றோம்.

மசிணிகுடி ஆதிவாசிகளுடன் ஏழு நாட்கள் தங்கினோம். அந்த ஏழு நாட்களும் எங்களுக்குச் சரியான உணவும் குடி தண்ணீரும் கிடைக்கவில்லை; மேலும் அந்த ஆதிவாசிகளில் ஒருவனுக்குத் திடீரென்று தொத்து வியாதி உண்டானதால், நாங்கள் அந்த வினாடியிலேயே காட்டை விட்டு வெளியேற ஆயத்தமானோம். அந்த நேரத்தில் பஸ் வசதி கிடையாது. ஆதிவாசிகள் வாழுமிடத் திலிருந்து இருபத்துநான்கு மைல்கள் நடந்தால்தான் நாங்கள் மைசூர் உதகை பஸ் சாலையை வந்து அடைய முடியும். ஆகையால் அந்த ஆதிவாசிகள் எங்களுக்கு வழிப் பிராயணத்திற்குக் கொஞ்சம் கட்டி வெல்லமும் கட்டுச் சோறும் கட்டிக்கொடுத்தார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்டு ஏழாம் நாள் காலை ஐந்து மணிக்கெல்லாம் நடக்க ஆரம்பித்தோம். மாரிக் காலத்தில் இவ்விதமான பிரயாணத்தை மேற்கொண்டது மிகவும் தவறு என்று பலர் கூறினார்கள். தொத்துவியாதிக்குப் பயந்து, 'நடக்கலாம்' என்று முடிவு கட்டினோம்.

இரண்டு மூன்று மைல் நடந்துவந்ததும், வழிகாட்டி குறுக்கு வழியில் போகலாமென்று கூற, அவ்வழியாக நடக்க ஆரம்பித்தோம். சிறிது தூரம் காட்டு வழியாகச் சென்றதும் அங்கு இரண்டு வழிகள் பிரிந்தன. அங்ஙனம் இரு பாதைகள் பிரியும் இடங்களில் என் பாடு கொஞ்சம் திண்டாட்டம்தான். அவன் வழி தெரிந்தவன் போல, ஒரு வழியில் நடக்க ஆரம்பித்தான். நானும் அவன் பின்னே நடந்து சென்றேன்.

காட்டுப் பாதையில் மேடும் பள்ளமும் நீர் ஓடைகளும் உயரமான மரங்களும் கரடிகளைப் போல் காட்சிதரும் இடிவிழுந்து கருகிய மரங்களும் இருக்கக் கண்டோம். ஆங்காங்கே இருந்த தேன்கூடுகள் பெரிய அறைகளைப் போல் காட்சி கொடுத்தன. வெகு தூரம் சென்ற பின் ஓர் ஓடையை அடைந்தோம். அங்கே சென்றதும் சுற்றும் முற்றும் பார்த்தான் வழிகாட்டி.

''நல்ல காலம், நாம் சரியான வழியில்தான் வந்திருக்கிறோம். சரி! இங்கேயே சாப்பிடுவோம்'' என்று இருவரும் அந்த ஓடையின் அருகில்

உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு ஓடையின் தண்ணீரைக் குடித்தோம். சிறிது நேரம் இளைப்பாறியபின் மறுபடியும் நடக்க ஆரம்பித்தோம். நெடிய மலைத் தொடர், கடுமையான ஏற்றம். வயிற்றிலும் கனம் இறங்கி இருக்கிறது. என்ன செய்ய முடியும்? மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்க நடக்க ஆரம்பித்தோம். எங்கள் கையில் இருப்பது அச்சு வெல்லம் ஒன்றுதான். சிறிது தூரம் சென்றதும், அங்கும் இரண்டு ஒற்றையடிப் பாதைகள் பிரிந்தன. வழிகாட்டி சிறிது நேரம் அவ்வழியில் நின்று யோசித்துக் கொண்டிருந்தான். ''என்ன யோசனை?'' என்று கேட்டேன். ஒன்றுமில்லை. யாராவது வந்தால் சரியான வழி எது என்று கேட்டுத் தெரிந்துகொண்டு மேலே நடக்கலாம். இவற்றுள் ஒன்று காட்டுக்குச் செல்லும் வழி. வேட்டையாடுவோர் வேட்டைக்குச் செல்லும் போது நானும் அவர்களுடன் வந்துள்ளேன்'' என்று கூறினான். இந்த வழி எங்கு முடிகிறதோ தெரியவில்லை. நடுக்காட்டில் சிந்தனை செய்து என்ன பயன்? யாரிடம் சீற்றம் கொள்ள முடியும்? கடைசியில் ஏதோ ஒரு வழியில் நடக்கலாமென்று நடந்தோம்.

வழி வளர்ந்தது

நடக்க நடக்க வழி வளர்ந்தது. வழியில் மிருகங்களின் எலும்புக் கூடுகளும் துர்நாற்றமும்தான் அதிகமாக இருந்தன. சில இடங்களில் ஆடு மாடுகளின் உடல்களையும் கண்டு கலங்கினோம். இவைகளைக் கண்ட பின்தான், ''நல்ல வழியை விட்டுக் காட்டுப் பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டோம்'' என்று வழிகாட்டி உணர்ந்தான். சிறிது தூரம் சென்றதும், ''உங்களுக்கு வேகமாக மரமேறத் தெரியுமா?'' என்று வழிகாட்டி திடீரென்று கேட்டான்.

''எனக்குச் சாதாரணமாக மரமேறத் தெரியுமே தவிர, வேக மாகவோ அல்லது எல்லாவித மரங்களிலுமே ஏறத்தெரியாது!'' என்று கூறினேன். ''ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் நான் உடனே எந்த விதமான மரத்திலும் ஏறி விடுவேன். நீங்களும் மரமேறி விடுங்களா'' என்று அவன் சாதாரணமாய்க் கூறினான். இதைக் கேட்டதும் என் உடல் நடுங்கியது. தாகம் நாக்கைப் பிடுங்கியது. ஒருபுறம் பசியும் எடுக்க ஆரம்பித்தது. வழியில் அச்சு வெல்லமும் ஒரு வழியாகத் தீர்ந்துவிட்டது. என்ன செய்வதென்று தோன்றாதவனாய்த் திகிலடைந்த உள்ளத்துடன் வழிகாட்டி காட்டிய வழியிலேயே பின்னால் நடந்தேன். கால் வலி தாங்க முடியவில்லை. நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேல் சுமார் பத்து மைல் அதிகமாக நடந்துவிட்டோம். எந்த ஓசையைக் கேட்டாலும் உடனே வழிகாட்டி நின்று பதுங்கினான். நானும் அவன் என்ன என்ன செய்தானோ அவற்றை எல்லாம் செய்ய ஆரம்பித்தேன். நடந்து சென்ற களைப்பிலும் இரவு வருவதற்குள் காட்டைக் கடந்து சென்றால் போதுமென்ற எண்ணத்திலும் பசி, தாகம், எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிட்டன. சில இடங்களில் வழிகாட்டி மரத்தின் மேல் ஏறி, நான்கு திசைகளிலும் பார்த்து மிருக வாடை அடிக்கிறதா? என்று மோப்பம் பிடிப்பான். பிறகு மேலே நடக்க ஆரம்பிப்பான். சில இடங்களில் வழிகாட்டி ஓடினான்; வேகமாக நடக்கத் தொடங்கினான். நானும் அவன் பின்னால் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே நடக்கிறீர்கள்? முன்னால் கற்களும் மரத்தின் வேர்களும் பாதையின்

குறுக்கே இருப்பதால் கால் இடறி விழாமல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறினான்.

அதுவும் முக்கியமானதுதான். ஏனென்றால் கால் இடறி விழுந்து, காலோ, கையோ சுளுக்குப் பிடித்துக்கொண்டால்...? அதற்கு மேல் நினைக்கவே என் மனம் இடம் கொடுக்கவில்லை. அறத்குள் கண்களில் கண்ணீரும் வந்து விட்டது.

'என் பின்னால் ஏதாவது வந்தால் என்ன செய்வது என்ற பயமே பெரியதாக இருக்கிறது!' என்று கூறுவதற்குள், திரும்பிப் பார்த்ததால் புளிமூட்டையைப் போல் காலிடறி விழுந்தேன்.

இங்ஙனம் திகிலடைந்து நடக்கும்போது, காட்டில் புலி, சிங்கம், கரடி, முள்ளம்பன்றி, நரி இவற்றால் மனிதர்களுக்கு ஏற்பட்ட பல ஆபத்துக்களை வழிகாட்டி சொல்லிக்கொண்டே நடந்தான். என் உள்ளத்தில் பல விதமான பயங்கள் குடிகொண்டன.

''இருட்டிவிட்டால் என்ன செய்வது'' என்று வழிகாட்டியைக் கேட்டேன்.

''ஏதாவது ஒரு மரத்தின்மேலேறி உட்கார்ந்தால் போதும். குளிருக்காக மரத்தின் அடியில் காட்டு விறகுகளை எடுத்துத் தீ மூட்டிப் படுத்துக்கொள்ளலாம்'' என்று மிகவும் சாதாரணமாகக் கூறிவிட்டான். இவ்விதமாகப் பயப்பட்டவாறே அவனுக்கு முன்னால் மிகவும் வேகமாக மூச்சைப் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

எப்படியோ ஒரு வகையாகப் பஸ் போகும் சாலையை வந்து அடைந்தோம். பிறகுதான் சற்று நிதானமாக நடந்தோம். தெய்வாதீனமாக ஒரு லாரி வந்தது, லாரிக்கு ஒரு வணக்கம் செய்தேன், லாரி நின்றது. அதில் ஏறிக்கொண்டு இரவு சுமார் பதினொரு மணிக்குத் தாற்காலிகமாகத் தங்கி இருந்த வீட்டைப் போய்ச் சேர்ந்தோம். மறுநாள் காலையில் தூக்க முடியாத அளவுக்குக் கால்களில் வீக்கம் கண்டது. ஒருவாரம் வரையில் கால்களுக்கு வெந்நீர் ஊற்றினேன். நடக்க முடியாமல் துன்புற்றுப் பின் சுகமடைந்தேன். இந்நிகழ்ச்சியை நான் எளிதில் மறக்க முடியுமா?

29

ஏழு அறுத்தான் காணி எட்டிப் பார்த்தான் பள்ளம்

பழைய காலத்தில் மேலை நாடுகளில் வாழ்ந்த 'கிர் ஜீஸ்' என்ற நாடோடி மக்களைப் பற்றிப் பல கதைகள் நாம் படித்திருக்கிறோம். 'கிர்ஜீஸ்' என்பது 'திருட்டு நாடோடி' என்று பொருள்படும். இந்தக் 'கிர்ஜீஸ்' மக்கள் தங்கள் கால்நடைகளுக்காக மற்றொரு கிராமத்தில் போய்ப் புற்சுமைகளைத் திருடிச் செல்வார்களாம்.

'ஏமாந்தால் கால்நடைகளையும்கூட திருடிக்கொண்டு ஓடுவார்களாம்.' இதை நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

நான் சமீபத்தில் கோடைக்கானல் மலைப் பிராந்தியத்தில் சுற்றிக்கொண்டிருந்தபொழுது, 'கண்கரட்டு சாப்புமலை' அடிவாரத்தில், 'குடும்பப் பள்ளர்' இனத்தாரிடம் தங்கினேன். அங்ஙனம் தங்கியபோது சுமார் 120 ஆண்டுக்குமேல் வயதான ஒரு கிழவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னது:

'மாலையில் சூரியன் மறைவதற்குமுன் எல்லோரும் கிராமங்களுக்கு வந்துவிடுவார்கள். கொள்ளைக் கூட்டத்தினர் குதிரையின் மேல் வருவதையும் கொள்ளையடிப்பதையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் பெண்களையும் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு போவதையும், காப்பாற்றச் சென்ற ஆண்களைத் துடிதுடிக்க வெட்டி வீழ்த்து வதையும் கண்டிருக்கிறேன்.

மேலும் புலி, சிங்கம், சிறுத்தை, ஓநாய் முதலியவை களையும் நேரில் கண்டு அவைகளுடன் ஈட்டியால் சண்டையும் செய்திருக்கிறேன்! இப்படிப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே வந்தவர், ''அதுதான் மலை; ஏழு அறுத்தான் காணி, எட்டிப் பார்த்தான் பள்ளம் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

இந்தச் சொல்லை நான் முதலில் ஏதோ ஒரு பழமொழி என்று நினைத்துக்கொண்டு, ''எனக்குத் தெரியாது! அது என்ன பழமொழி?'' என்று கேட்டேன்.

''அது பழமொழி அன்று. இந்தக் காட்டில் நான் வாலிபனாக இருந்தபொழுது நடந்த பல சம்பவங்களில் மறக்க முடியாததொரு சம்பவம்.''

பழைய காலத்தில் இந்த மலைப் பிராந்தியத்தில் சுமார் ஐம்பது அல்லது அறுபது பேர்தான் இருந்தோம். அன்று எங்களிடம் இருந்த ஏர் உழும் மாடுகள் மொத்தம் ஏழு ஜதைகள்தாம். அந்த ஏழு ஜதை மாடுகளையும் காட்டு விலங்குகளுக்குப் பயந்து ஒரே இடத்தில் கட்டிவிடுவதுண்டு. நாங்கள் பல நாய்களையும் வளர்ப்பதுண்டு. ஏனென்றால், சில சமயங்களில் குள்ளநரிகள் வந்து ஆடுகளைத் தூக்கிக்கொண்டு போய்விடும். திருடர்களுக்குப் பயந்தும் சிலர் நாய்களை வளர்ப்பதுண்டு. இந்த மலையின்மேல் ஏறி அப்பக்கத்தில் இறங்கினால் கோடைக்கானல் மலைப் பகுதியை அடையலாம்.

ஒரு நாள் இரவு எங்களுடைய நாய்கள் விடாமல் குரைத்தன. நரிகளும் ஊளையிட்டன. எங்கள் குடிசைகள் நாங்கள் ஒன்றுக் கொன்று சற்றுத் தொலையில் கட்டி வைத்திருந்ததால், அந்தப் பயங்கர இருளில் எழுந்து வெளியில் எங்களுக்குப் பயமாக இருந்தது.

தைரியத்துடன் எழுந்து சென்று பக்கத்துக் குடிசையில் இருப்பவர்களைக் கூப்பிடலாமென்றாலும் சுமார் இரண்டு கூப்பிடு தூரம் போகவேண்டும். (ஒரு கூப்பிடு தூரம் பர்லாங்கு)

ஆகையால் நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்டு, அன்று அவரவர்கள் தத்தம் குடிசைக்குள்ளேயே இருந்துவிட்டோம். ஆனால், யாரும் அன்றிரவு தூங்கவில்லை. நாங்களும் கையில் பட்டாக் கத்தியுடன், மண்ணெண்ணெய் விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டுத் தைரியமாகத்தான் உட்கார்ந்திருந்தோம். ஏனென்றால் காட்டு விலங்குகள் வந்தால் நாய்கள் குரைக்கும். அப்பொழுது எல்லோருமே வெளியில் பந்தங்களைப் பிடித்துக்

கொண்டு போய், 'ஓபா! ஓஹா!' என்று குரல் கொடுத்தால், விலங்குள் ஓடிவிடும். மேலும் நாங்கள் ''வெங்காய வெடியை உபயோகப்படுத்துவதுண்டு. ஆனால் அன்று நாய்கள் குரைத்தது மட்டுமன்று. சில நாய்கள் கல்லால் அடியும் வாங்கிக்கொண்டு, 'கியா - கியா என்று கத்தியதால், எங்களுக்குச் சந்தேகம் உண்டானது. வந்தவர்கள் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று முடிவு செய்து விட்டோம். அப்படிக் கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் நமக்கு அபாயம் உண்டாகும். அவர்களுக்கு நெல்லும் ஆடுமாடும் கிடைக்காவிட்டால்தான் நம்முடைய குடிசையை நோக்கி வந்து இம்சை செய்வார்கள். நம்முடைய குடிசையின அருகில் வராமலிருக்கப் பண்டைக் காலத்தில் நம்முடைய முன்னோர்கள் பல தந்திரங்களைக் கையாண்டார்கள். நெல்லையும் ஆடுமாடுகளையும் குடும்பங்கள் வாழுமிடத்தில் வைப்பதில்லை. வாழும் குடிசைக்கும் ஆடுமாடுகளின் தங்குமிடம், நெற்களஞ்சியம் இவற்றிற்கும் இடையே குறைந்தது ஒரு கூப்பிடு தூரமாவது இருக்கும். மேலும் பெரிய பெரிய பள்ளங்களைப் பண்டைக் காலத்தில் மூடுவதில்லை. இரண்டாவது இந்த மலைப் பிராந்தியத்திலிருக்கும் மலைப்பாம்பு களையும் பண்டைக்காலத்தில் அடித்துக் கொல்லாமல், வீட்டின் அருகில் வராதபடி மந்திரத்தால் எல்லைகட்டி வைப்போம். ஆனால் எங்கள் குடும்பத்தினர்களுக்கு மட்டும் எல்லைக்கோடு தெரியும். மலைப்பாம்புகள் எங்கே இருக்கின்றன வென்றும் தெரியும். குழந்தைகளுக்கும் அவற்றைக் குழந்தைப் பருவம் முற்கொண்டே பழக்கி விடுவதுண்டு. ஆனால் அன்னியர்களும் கள்ளர்களும் பலர் அந்தப் பள்ளங்களிலும் மலைப்பாம்பின் வாயிலும் சிக்குண்டு மரணமடைவதை நானே கண்டிருக்கிறேன். ஆகையால் நாங்கள் மலைப்பாம்புகளைக் கொல்வதில்லை.

அன்றிரவு நாங்கள் யாவரும் வெளியில் வரவில்லை அல்லவா? மறுநாள் காலையில் சேவல் கூவும்பொழுது வீர சூரப் புலிகள்போல் ஒவ்வொருவராக வெளியில் வந்தோம். கண்டது என்ன?

நாங்கள் எல்லோரும் வயல் வேலைகளுக்கு வைத்திருந்த ஏழு ஜதை மாடுகளையும் சில ஆடுகளையும் பல கோழிகளையும் நெல் மூட்டைகளையும் காணவில்லை. எல்லோரும் மிகவும் விசனத்துடன் இருந்ததால், அன்று முழுவதும் யாரும் வயல் வேலைகளுக்குப் போகவில்லை. அன்றுமாலை, 'கண்கரட்டு சாம்புமலை'யின் மேல் சேவல்கள் கூவும் ஓசையும் ஆடுகள் சில கத்தும் ஓசையும் கேட்டன. ஆனால், மாலைப்பொழுதாகி விட்டதால், அந்த மலைக்குப் போகத் தைரியமில்லாமல் இருந்தோம். மறுநாள் காலையில் நாங்கள் தடிகளையும் கத்திகளையும் எடுத்துக்கொண்டு போய்ப் பார்த்தோம்.

சில கோழிகள் நாங்கள் போவதற்குள் எங்கள் குடிசைகளைத் தேடிக்கொண்டு வந்துவிட்டன. பிறகு நாங்கள் எல்லோரும் மலையின்மேல் ஏறிச் சென்றோம். அங்கே சில ஆடுகள் மட்டும் மரத்தில் கட்டப்பட்டிருந்தன. மற்ற ஆடுகளைக் காணோம். அத்துடன் துர்நாற்றமும் அடித்தது. சுற்று முற்றும் பார்த்தபோது ஒரு பெரிய பள்ளத்திலிருந்து அந்த நாற்றம் வருவது தெரிந்தது. எங்களுக்கு ஒன்றும்

விளங்கவில்லை. பிறகு பள்ளத்தை எட்டிப் பார்த்தபோது, அந்தப் பள்ளத்தில் ஏழு ஜதை எருதுகளும் ஒன்றோடொன்றாக இணைக்கப்பட்டுப் பள்ளத்தில் இறந்து கிடந்ததைக் கண்டோம். பிறகு பள்ளத்தின் மேலே சுற்றிப் பார்த்தபோது பள்ளத்திற்குச் சற்றுத் தூரத்தில் இரவு தீ மூட்டிய சில கற்கள் தெரிந்தன. அவற்றின் பக்கத்தில் ஒரு பெரிய மலைப்பாம்பும் உடம்பெல்லாம் தீப்புண்களுடன் காணப்பட்டது. இவைகளைக் கண்டதும், அன்றிருந்த ஓர் அனுபவசாலியான பெரியவர், 'நம்முடைய மாடுகளை எல்லாம் ஒரே கயிற்றால் இணைத்துக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். வந்தவர்கள் ஆக்களை மரத்தில் கட்டியிருக்கிறார்கள். கோழிகளை மொத்தமாகக் கூடையில் போட்டிருக்கின்றனர். மாடுகளையும் பக்கத்தில் கட்டியிருக்கிறார்கள். பிறகு கோழிகளைச் சமைப்பதற்காகத் தீ மூட்டியிருக்கிறார்கள். இப்படி வரும் கள்ளர்களில் ஒருவன் அந்தக் காலத்தில் பாத்திரங்களையும் தூக்கிக்கொண்டு வருவானாம். மலைப்பாம்பை மரம் என்று கருதி அத்துடன் இணைத்துக் கல்லை வைத்துத் தீ மூட்டியதும் அது புரண்டு வாலால் அடித்திருக்கிறது. அந்தச் சமயத்தில்தான் கள்ளர்கள் கத்தியிருக்க வேண்டும். அந்தக் கத்தலைக் கேட்டு மிரண்ட மாடு ஒன்று வெகு அருகிலிருக்கும் பள்ளத்தில் விழுந்திருக்க வேண்டும். மாடுகள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்ததால் எல்லாம் பள்ளத்தில் விழுந்துவிட்டன. மலைப்பாம்பின் தோற்றத்தைக் கண்டு, மாடுகள் விழும் ஓசையைக் கேட்டும் அஞ்சிய கள்ளர்கள் எல்லோரும் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடியிருக்கவேண்டும். அப்படி ஓடியதால்தான் சில கோழிகளும் சில ஆடுகளும் நமக்குக் கிடைத்தன. மேலும், சில கோழிகளையும் ஆடுகளையும் நேற்றிரவு விலங்குகள் கொண்டு போயிருக்கின்றன. ஏனென்றால் அவற்றின் காலடிகளும் இருக்கின்றன' என்ற விளக்கி அன்று முதல் அந்தப் பள்ளத்திற்கு, 'ஏழு அறுத்தான் காணி, எட்டிப்பார்த்தால் நாற்றம்' என்று பெயர் இட்டிந்ததை இன்று, 'ஏழு அறுத்தான் காணி, எட்டிப்பார்த்தான் பள்ளம்' என்று சொல்லுகிறார்கள் என்று கூறி முடித்தார் பெரியவர்.

30

சுக்காலித்தனம்

ஐதராபாத்தில் சுமார் ஐந்து நாட்கள் தங்கியிருந்தேன் ஒருமுறை. அங்கே தங்கிய நாட்களில்தான் லம்பாடிகளின் ஊர்களுக்குச் சென்று பார்க்கப் புறப்பட்டேன். நண்பர்கள் சிலரும் என்னுடன் வந்தனர். லம்பாடிகளின் கூடாரத்தில் இரண்டு நாட்கள் தங்கலாமென்று முடிவு செய்து, எங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டு புறப்பட்டோம்.

லம்பாடிகளை இங்கே 'சுக்காலிகள்' என்று அழைக்கின்றனர்.

எங்களைக் கண்டதும் லம்பாடிய ஆண்களும் பெண்களும் வரவேற்றார்கள். அவர்கள்து ஆகாரத்தையே எங்களுக்குக் கொடுத்தார்கள்.

லம்பாடிப் பெண்கள் அணியும் ஜாக்கெட்டு விசித்திரமானது. அதை எதிர்ப்பக்கமாக அணிய வேண்டும். முதுகு முழுவதும் திறந்திருக்கும்.

அந்த ஜாக்கெட்டில் ஒன்றை வாங்கிக்கொண்டு போய் என் மனைவியிடம் காட்ட வேண்டும் என்று எனக்கு ஆசை.

லம்பாடியப் பெண்கள் என்னிடம் சகோதர வாஞ்சையுடன் பழகுவதைக் கண்ட நான், ஒரு பெண்ணிடம், ''எனக்கு நீங்கள் அணிந்து கொண்டிருப்பதைப்போல், ஒரு ஜாக்கெட்டு வேண்டும்,'' என்றேன்.

உடனே, 'பளீர்' என்று ஓர் ஆறை என் கன்னத்தில் விழுந்தது.

என் நண்பர்களில் சிலர் என்னை விலக்கிச் சென்று விட்டார்கள்.

எல்லாரையும் அமைதியாக இருக்கும்படி கை காட்டினேன் நான்.

லம்பாடி மொழியில், 'ஏன் அடித்தாய் என்று கோபப்படாமல் கேள்' என்றேன் வழிகாட்டியிடம்.

அவனும் கேட்டான்.

அதற்கு அவள், ''ஜாக்கெட்டுக் கோட்டால் எங்கள் சம்பிரதாயத்தில், 'உன்னை நான் காதலிக்கிறேன். திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று பொருள். என்னுடைய கணவன் எதிரில் இங்ஙனம் கேட்டால், நான் என்ன செய்வது? அவர் என்ன நினைப்பார்? அங்ஙனம் நான் அறை கொடுக்காமல் இருந்தால், என்னை விவாகரத்துச் செய்துவிடுவார். அவர் என்னை மெச்சவே அப்படிச் செய்தேன்'' என்று கூறினாள்.

வழிகாட்டி எனக்கு மனைவி மக்கள் உண்டு என்று கூறியதையும், அவர்களுக்குக் காட்டவே நான் கேட்டதாய்க் கூறியதையும் னள முகவாட்டத்தையும் மற்ற நண்பர்களின் தோற்றத்தையும் கவனித்த அந்தப் பெண், குரல் அடைக்க, ''பாபு - பாபு!'' என்று கூறிக்கொண்டே, ''நான் தெரியாமல் அறைந்து விட்டேன். மன்னியுங்கள்'' என்றாள்.

இதுதான் சமயமென்று, ''உன் கணவனைக் கேட்டாவது எனக்கு ஒரு ஜாக்கெட்டுக் கொண்டுவந்து கொடுக்க முடியுமா?'' என்று கேட்டேன்.

உடனே அவள் அணிந்திருந்த ஜாக்கெட்டைப்போல் ஒன்று கொடுத்தாள். அது இன்னும் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அதைப் பார்க்கும்போதெல்லாம் அறைபட்ட என் கன்னத்தைத் தடவிக் கொள்கிறேன்.

31

சீதோஷ்ண நிலையைக் காட்டு வீடு

கோத்தகிரி - கேர்பெட்டா எஸ்டேட்டில் திரு. ஜோஸப் சாலமன் இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்தேன். எனக்காக அவர் பலரிடம் பல செய்திகளைச் சேகரிப்பதுண்டு. ஒருநாள் அவர், தம்முடன் எஸ்டேட்டில் வேலை செய்யும் ஜான் என்பவரிடம் பதினேழாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதக் கூடிய சில எழுத்து வரை படங்கள் இருப்பதைக் குறிப்பிட்டு என்னை அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

திரு. ஜான் மைசூரைச் சேர்ந்தவர். அவர் இப்பொழுது நீலகிரி கோத்தகிரியில் குடியிருக்கிறார். அவர் இல்லத்திற்கு நாங்கள் சென்றதும்,

என் கருத்தைத் தெரிந்துகொண்டு உடனே ஓர் ஆல்பத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அந்த ஆல்பம் முழுவதிலும் ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறும் இருந்தன. அவை பல வடிவத்தில், பல கலைகளில், பல கோணங்களில் எழுதப்பட்டிருந்தன. அது ஒரு பழைமைச் செல்வம் என்றே எனக்குத் தோன்றியது.

அவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்தபோது, திடீரென்று அங்கே கொலுபெம்மைபோன்று இருந்த ஒரு சிறிய மர வீட்டின் மேல் என் கண்கள் சென்றன. சாதாரணமான ஒரு மர வீட்டை எதற்காக இவ்வளவு உயர்ந்த சிறந்த பலகையில் மாடம் செய்து அதில் பத்திரமாக வைத்திருக்கிறார்கள் என்ற சிந்தனை என் உள்ளத்தில் உண்டானது. அந்த விஷயத்தை மனத்திலேயே வைத்துக்கொள்ளலாம். திரு. ஜானிடமே கேட்டு விட்டேன். உடனே அவர் அந்த மர வீடு சம்பந்தமான ருசிகரமான விஷயங்களைக் கூறத் தொடங்கினார்:

அந்த மரவீட்டை திரு. ஜான் ஓர் அதிசயப் பொருளாகவே கருதினார் என்பது அவர் அதைப்பற்றி வியந்தும் புகழ்ந்தும் கூறிய சொற்களிலிருந்து வெளிப்பட்டது. கடைசியில் அவர், ''இந்த மரவீடு சீதோஷ்ண நிலையைத் தெளிவாகக் காட்டும் அருமையான ஆற்றல் உடையது'' என்று குறிப்பிட்டபோது மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன்.

''என்ன, சீதோஷ்ண நிலையை அறிவிக்கும் மரவீடா? என்ன ஆச்சரியம்! இதை எப்படிச் செய்தீர்கள்?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

''இதனை நான செய்யவில்லை. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் காப்டன் பார்லோ என்ற ஜெர்மானியக் கிழவர் ஒருவர் என் மனைவியின் முப்பாட்டனாருக்கு இதைக் கொடுத்தாராம். அந்த ஜெர்மானியார் வாலிபராக இருந்தபொழுது, ஏதோ வேலையின் நிமித்தம் இந்தியாவுக்கு வந்தவராம். அவர் வரும் பொழுது தம்முடன் தம் மனைவியையும் அழைத்து வந்தார். காப்டன் பார்லோ கப்பலிலும் இராணுவத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். ஆகையால் 1914 ஆம் ஆண்ல் நடந்த சண்டையில் மிகுந்த திறமையுடன் பணியாற்றினார். யுத்தம் முடிந்ததும் இந்தியாவிலேயே தம் மனைவியுடன் தங்கி, ஹிந்து மதத்தைப் பற்றியும் இந்தியக் கலாசாரத்தைப் பற்றியும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு உழைக்கலானார். அவர் தம் மனைவியுடன் இந்தியாவில் இருக்கும் பல மலைப் பகுதிகளுக்கும் பிரயாணம் செய்து, அந்த அந்த மலையில் இருந்த சாதுக்களைச் சந்திப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இமயம் முதல் குமரி வரையில் இருக்கும் எல்லா மலைகளிலும்முள்ள பல சாதுக்கள் அவருக்கு நண்பர்களாம். அவர்களில் ஒரு சாது மட்டும் குறிப்பிடத்தக்க நண்பர். அவர் ஒரு நாள் பார்லோவைத் தேடிக்கொண்டு நீலகிரிக்கு வந்தார். அவர் தாம் பெற்றுள்ள அனுபவங்களையெல்லாம் திருமதி பார்லோவிடமும் திரு. பார்லோவிடமும் கூறிக்கொண்டிருந்தார். அப்படிப் பேசிக்கொண்டே யிருந்த சாது, பார்லோவின் மனைவியைப் பார்த்து, 'அம்மணி, தங்களுக்கு நான் ஓர் அன்பளிப்பு வழங்க விரும்புகிறேன். தாங்கள் தாய்நாடு போகும்பொழுது என்ன கொண்டு போக ஆசைப் படுகிறீர்கள்? சொல்லுங்கள். அதையே நான் அன்பளிப்பாக அளிக்கிறேன்' என்றார்.

''சாதுவிடம் ஒன்றும் கிடைக்காது. அவர் எதைக் கொடுக்கப் போகிறார் என்று நினைத்து, 'சுவாமிஜி, நீங்கள் எனக்குக் கொடுக்கும் பொருள் ஆச்சரியப்படத்தக்கதாக இருக்க வேண்டும். அதற்கு உயிர் இருக்கக்கூடாது. மின்சாரத்தாலும் மற்ற இயந்திரத்தாலும் இயங்கக் கூடியதாக இருக்கக் கூடாது. மனிதர்கள் அதைத் தள்ளி ஓட்டவும் கூடாது. சூரியனும் சந்திரனும் தாமாகவே பகலையும் இரவையும் காட்டுவதுபோல் அதுவும் இயற்கையைக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும்' என்று சாதுவிதம் கூறினாள் திருமதி பார்லோ.

''அதைக் கேட்ட சாது, 'அத்தகைய அன்பளிப்பு ஒன்றையே வழங்க முயல்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சில நாட்களுக்குப் பின்னர் பார்லோவின் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

''நாட்கள், மாதங்கள், ஆண்டு மறைந்தன. ஒரு நாள் திடீரென்று அந்தச் சாது பார்லோவைத் தேடிக்கொண்டு நீலகிரிக்கு வந்தார். வந்தவர், முதல் காரியமாக திருமதி பார்லோவைப் பார்த்துத் தாம் கொண்டுவந்த மரவீட்டை அவரிடம் தமது அன்பளிப்பாக வழங்கினார். அந்த அம்மாள் அதை வாங்கி, இப்படியும் அப்படியும் பார்த்தார். அவருக்கு ஒன்றும் விளங்க வில்லை.

''இது என்ன பொருள்?'' என்று அவர் சாதுவைக் கேட்டார்.

''அதற்குச் சாது, 'இது என் அன்பளிப்பு. நீங்கள் விதித்த நிபந்தனைப்படி இயற்கை நிலையைக் காட்டும் அற்புதமான சக்தி வாய்ந்ததாகும் இது. என் போன்ற ஒரு சாது இதை எனக்குச் செய்து கொடுத்தார். நீங்கள் மேலை நாட்டினராயிற்றே என்று நினைத்து, இதனைச் செய்த சாதுவிடம், ஒரு பக்கத்தில் நீங்களும், மற்றொரு பக்கத்தில் திரு. பார்லோவும் நிற்பதைப்போல் செய்ய ஏற்பாடுகள் செய்தேன். இது மரத்தலான ஒரு சிறிய வீடு. இதனுள் இரண்டு பொம்மைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆண்; அதன் நிறம் சிவப்பு. அதற்கு மேலை நாட்டினரைப்போல் உடை அணிவிக்கப் பட்டிருக்கிறது? மற்றொன்று பெண் உருவம். அதன் நிறம் பச்சை. இதற்கும் மேலை நாட்டினரைப்போல் உடை அணிவிக்கப் பட்டிருக்கிறது. சீதோஷ்ண நிலையில் வெயில் அதிகமாக இருக்கும் சமயத்தில் பச்சை உடை அணிந்த பெண் பொம்மை தானாகவே வெளியில் வந்து நின்றுவிடும். குளிராக இருக்கும் சமயத்தில் சிவப்பு உடை அணிந்த ஆண் பொம்மை வெளியில் வந்து நிற்கும். சம சீதோஷ்ண நிலை இருக்கும்பொழுது அந்த ஆண் பொம்மை, பெண் பொம்மை ஆகிய இரண்டு பொம்மைகளும் இந்த மரப்பெட்டியின் இரண்டு சிறு மரக்கதவுகள் போன்ற வழிகள் உள்ளன. இந்த இரண்டு பொம்மைகளும் மரவீட்டில் உள்ள ஒரு சிறு பலகையின்மேல் நின்றுகொண்டிருக்கின்றன. அந்தப் பலகையின் நடுப்பாகத்தையும் அந்த மரவீட்டுக் கூரையையும் ஒரு வேர் இணைக்கிறது. அது (கூரை இடிக்கும்படியாக) கூரையைத் துளைத்துக்கொண்டு வெளியில் நீட்டிக்கொண்டிருக்கிறது. அப்படி வெளியில் நீட்டிக் கொண்டிருக்கும் அந்த வேரின் மேல் மற்றொரு துண்டுக்கட்டை செருகப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டையின் மூலம் உள்ளே இருக்கும் கம்பிவேரின் வழியாக இது சீதோஷ்ண நிலையைக் காட்டுகிறது. சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி, அந்தக் கம்பிவேர் இப்படியும் அப்படியும் பொம்மைகளைத் திரும்பச்

செய்வதால் பொம்மைகள் இடம் மாறும். இவ்வாறாக, இந்தச் சீதோஷ்ண நிலை மரவீட்டில் நீங்கள் கேட்ட எல்லா அம்சங்களும் பொருந்தி இருக்கின்றன. ஆகவே, இதனை என்னுடைய அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறி, அதை திருமதி பார்லோவிடம் கொடுத்தார். அம்மையாரும் அதை மிகவும் மகிழ்ச்சியுடனும் நன்றியறிதலுடனும் வாங்கிக் கொண்டார்.

''பல்லாண்டுகளுக்குப் பின்பு திருமதி பார்லோ மரணமடைந்தார். மனைவி இறந்த பின் திரு. பார்லோ இந்தியாவில் இருக்க விருமப்வில்லை யாகையால், அவர் தம் தாய் நாடான ஜெர்மனிக்குக் கிளம்பினார். போகும்பொழுது அவர் தம் நண்பரான என் மனைவியினுடைய கொள்ளுப்பாட்டனாரை அழைத்து, 'அன்பரே, நான் இந்தியாவில் பல ஆண்டுகள் வாழ்ந்தேன். இந்த மரவீடு இந்தியாவின் சொத்து. இந்த மரவீட்டைக் காலஞ் சென்ற என் மனைவியின் நினைவுச் சின்னமாக வைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறி, அவரிடம் அதைக் கொடுத்தார். என் மனைவி வழியினரின் பரம்பரைச் சொத்தாகத் தொடர்ந்து நிலவி வந்த இந்த அரிய பொக்கிஷம், எங்கள் திருமணத்தின்போது எங்களுக்கு அன்பளிப்பாக வந்தது. அதை நாங்கள் கருத்துடன் பாதுகாத்து வருகிறோம்.'' என்றார் திரு. ஜான்.

கோத்தகிரி-கேர்பெட்டாவில் பணியாற்றும் ஜான் இவ்வாறு சீதோஷ்ண நிலை அறிவிக்கும் அந்த மரவீட்டின் வரலாற்றை என்னிடம் கூறினார். அந்த மரவீட்டை நான் கூர்ந்து கவனித்தேன். அது இன்றும் அந்தச் சாது குறிப்பிட்டபடியே வேலை செய்து வருகிறது. உண்மையில் நம்மவர்களின் திட்டமான கைத்திறனுக்கு அது ஓர் எடுத்துக்காட்டு என்றே நான் கருதுகிறேன்.

இந்தியக் கைத்திறனின் அருமையான பழைமைச் சின்னமான அந்தச் சிறு மரவீட்டைக் கண்டபோது, 'இந்தியாவின் சொத்து இந்தியாவிலேயே இருக்க வேண்டும்' என்று உறுதியாகக் கூறி அதை இங்கேயே விட்டுச் சென்ற வெளிநாட்டுப் பெரியார் பார்லோவின் பெருந்தன்மை என் உள்ளத்தில் மிகுந்த நன்றியறி தலைத் தோற்றுவித்தது. அதே சமயத்தில், இந்தியாவிலிருந்து பல காலமாகக் கொள்ளை போயிருக்கும் நமது புராதனக் கலைச் செல்வங்களுக்காவும் என் உள்ளம் கசிந்தது.

நீலகிரிக்குச் செல்லும் அன்பர்கள் கோத்தகிரியில் திரு ஜானின் இல்லத்திலிருக்கும் மரவீட்டை இப்போதும் காணலாம்.

32

மாமனார் தோளில் சவாரி

சமீபத்தில் கோவாவிலிருந்து பூனாவுக்குச் சென்றேன். புனாவில் சில நாட்கள் தங்கியபின், அங்கிருந்து நாற்பது மைல் தூரத்தில் இருக்கும் மலோடி ஸ்டேஷன் அடைந்தேன். இரயிலை விட்டு இறங்கியதும் நானும் பூனா நண்பர் ஒருவரும் மலைகளின் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டே சென்றோம். மலைகளைச் சுற்றிச் சுற்றி

மலைப்பாம்பு வளைந்து செல்வதைப் போல் நாங்கள் போகும் வழி காணப்பட்டது.

''இந்தக் கிராமத்தில் திருமணம் நடக்கிறது போலும்'' என்று மராட்டி மொழியில் ஒருவரிடம் கூறினார் நண்பர்.

''நாளைக்கு இந்தக் கிராமத்தில் திருமணமாம். அவர்களின் இல்லத்திலேயே தங்கலாமா?'' என்று என்னிடம் கேட்டார் நண்பர்.

''சரி! நான் சொல்வதை நீர் மராட்டி மொழியில் சொல்லும்'' என்றேன்.

''நாங்கள் பூனாவிலிருந்து அவர்களின் திருமணத்தைக் காண வந்துள்ளோம்'' என்று கூறி அன்றிரவு அவர்களின் இல்லத்தில் தங்கினோம்.

திருமண வீட்டில் நடந்த விஷயங்களைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். தமிழ் நாட்டில் காணாத பல சடங்குகளை நான் அங்கு கண்டேன். பெரியவர்கள் கூடி இரவு முழுவதும் மணப் பெண்ணுக்குப் பல புத்திமதிகள் கூறினார்கள். பெண்ணைச் சரியானபடி பல வேலைகளைச் செய்யச் சொன்னார்கள்.

விடியற்காலை மூன்று மணிக்குப் பெண்கள் பலர் கூடிப் மணப்பெண்ணைக் குளிப்பாட்டுவதற்காக ஒரு பெரிய மணையில் உட்கார வைத்தார்கள்.

மணமகளின் தலைக்குமேல் தாய் குனிந்துகொண்டாள். தண்ணீரை மொண்டு ஏழு சுமங்கலிகள் ஒவ்வொரு குவளையாகப் பெண்ணின் தாயின் முதுகில் கொட்டினார்கள். பிறகு மணப்பெண் தானே குளித்துவிட்டு வெளியில் வந்தாள். இதைப் போலவே மற்றொரு வீட்டில் மணமகனை ஒரு பெரிய மணயில் உட்கார வைத்து, தகப்பனாரோ அல்லது தாய் மாமனோ மணமகன் தலைக்குமேல் குனிந்துகொண்டார். வயதில் பெரியவர்கள் ஒவ்வொரு குவளையில் மொண்டு தங்கள் சம்பிரதாயப்படி கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் ஊற்றினார்கள்.

அதற்குப் பிறகு மணமகன் தானே குளித்தார். மணமகன் குளித்தபின் மணமகளுக்குச் சிவப்புக் கூறைப் புடைவையைக் கீழ்ப்பாய்ச்சி (மடிசார்) வைத்துக் காட்டினார்கள். மராட்டியர்களில் பெண்கள் திருமணமானது முதல் விதவை ஆகும் வரையில் கீழ்ப்பாய்ச்சி வைத்துத்தான் (மடிசார்தான்) புடைவை கட்ட வேண்டும்.

அதைப்போல் மணமகனுக்கும் வேட்டியும் தலைப் பாகையும் கட்டப்பட்டன். முகம்மதியர்களைப் போல் பூவால் (சேரா என்பது) மணமகனின் முகத்தை மறைத்து விட்டார்கள்.

பிறகு மணமகன் தன்னுடைய கிராமத்தை (ஊர்) வலம் வருகிறார்.

மணமகன் எதன்மேல் பவனி வருகிறார் தெரியுமா? அதில் ஒரு கருத்து அடங்கி இருக்கிறது. மணமகன் இரட்டை மாடுகள் பூட்டிய திறந்த மாட்டு வண்டியில்தான் பவனி வருகிறார். அந்த வண்டியின் ஒரு பக்கத்திலே பசுவும் மற்றொரு பக்கத்தில் எருதும் கட்டி இருக்கின்றார்கள். இந்த வித்தியாசத்தைக் கண்டதும் எனக்கு ஆச்சரியம் மட்டுமன்று, 'இதில் ஏதாவது கருத்து அடங்கி இருக்கும்?' என்ற

எண்ணமும் தோன்றியது. நண்பரிடம் அதைப் பற்றிக் கேட்டேன். ''உம், அப்படி ஒன்றுமில்லை'' என்று அவர் பதில் கூறினார்.

''ஆனால் எனக்கு என்னவோ சந்தேகமாக இருக்கிறது!'' என்று கூறி ஒருவரிடம் அதனைப்பற்றி கேட்கச் சொன்னேன். நண்பரும் மராட்டி மொழியில் கேட்டார். அவருடைய முகம் மிகவும் ஆச்சரியத்தால் மலர்ந்தது.

''நல்ல காலம்; உங்களால் நான் இன்று ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். இஃது இப்பகுதியில் மட்டுமன்று பலருக்குத் தெரியாது போலும்!'' என்று கூறினார்.

பிறகு வண்டியை எப்படிப் பசுவும் எருதும் ஒற்றுமையுடன் சேர்ந்து இழுக்க வேண்டுமோ அப்படியேதான், குடும்பம் என்ற வண்டியை ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாகிய தம்பதிகள் சேர்ந்து நன்மையிலும் தீமையிலும் கலந்து இழுக்க வேண்டும்.

பசுவோ எருதோ கோணலாக இழுத்தால் வண்டி பள்ளத்தில் விழுவது போல், குடும்பத்திலும் ஒற்றுமை குறைந்தால் குடும்பம் என்ற வண்டி பள்ளத்தில் விழும் என்பதற்காகவே அந்தப் பவனி வரும் வண்டியில் முன்னால் உட்கார வைத்து மாப்பிள்ளையை அழைத்து வருவது வழக்கமாம்.

மேலும், இதில் மற்றொரு கருத்தையும் கிராமத்துப் பெரியவர்கள் கவனிப்பார்கள். அப்படி மணமகன் பவனி வரும் அந்த அலங்காரமான வண்டியில் கட்டப்பட்ட பசுவும் எருதும் பவனி வரும்பொழுது வழியில் மக்கர் செய்யாமல் போக வேண்டுமாம்.

மாப்பிள்ளை பவனி போகும்பொழுது, அந்த வண்டி மாடுகள் மக்கர் செய்தால் அவருடைய வாழ்க்கையிலும் சிறு சிறு பூசல்கள் இருக்கும் என்று பெரியவர்கள் தெரிந்துகொள்ளுவர்களாம். அந்தச் சந்தர்ப்பத்தில் அடிக்கடி தம்பதிகளுக்குப் புத்திமதி கூறுவார்களாம். மணமகனும் மனத்திற்குப் பிடித்தவனாயிருக்க, அவன் பவனி வந்த வண்டி மாடுகள் வழியில் தகராறு இல்லாமல் திருமணப்பந்தலை வந்து சேர்ந்து விட்டால் சொல்ல வேண்டுமோ? பெண் வீட்டாருக்குச் சொல்ல முடியாத சந்தோஷம் உண்டாகிறது. ஆகையால் உடனே மாமனார், மாப்பிள்ளையைத் தம் தோளில் தூக்கிக்கொண்டு கூத்தாடுகிறார். அவ்வாறு கூத்தாடும்பொழுது பெண்களும் ஆண்களும் சூழ்ந்துக்கொண்டு வேடிக்கை பார்த்தாலும் அவருக்குக் கவலை இல்லை. அன்று இப்படி கூத்தாடிய பொழுது மணமகனின் முகத்திலிருக்கும் சேராப்பூவைச் சற்ற நீக்கும்படி சொல்லி, 'கிளிக்' என்று புகைப்படம் பிடித்துக் கொண்டேன். இப்படி ஒற்றுமையாக இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தம்பதிகள் காலையில் மூன்று மணிக்கெல்லாம் எழுந்து சிக்கீரி (வாளியில் அடுப்பு) மூட்டிச் சோள ரொட்டி தயார் செய்துகொண்டு போய் காலை ஆறுமணிக்கெல்லாம் வயிலில் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குச் சோள ரொட்டிதான் முக்கிய உணவு.

33

என்ன வாழ்க்கையோ இது!

அன்று ஞாயிற்றுக் கிழமை. நண்பர் திரு. நாகி அவர்கள் என் இல்லத்திற்கு வந்திருந்தார். நானும் திரு. நாகி அவர்களும் பேசிக்கொண்டிருந்தோம். நண்பர் வயதில் சிறியவர், ஆனாலும் நல்ல சிந்தனையாளர். பெரியவர்களிடம் தான் அவருக்குப் பழக்கம் அதிகம். பெரியவர்களாக இருந்தாலும் சரி, சிறியவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு மிகவும் மரியாதை காட்டுவார். அவருக்கு ஈடான வயதுடைய வாலிபர்கள் பலர் எவ்வளவோ திமிருடன் நடப்பதைக் கண்டிருக்கிறேன். ஆனால், நண்பர் வீண் பேச்சுப் பேசத் தெரியாதவர். அப்படிப்பட்ட வீண் பேச்சுப் பேசபவரிடமும் போக்கிரிகளிடமும் அதிகப் பேச்சு வைத்துக் கொள்ளமாட்டார். நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த பொழுது தெருவில் பறை அறையும் ஓசை கேட்டது. என் மகள் பிரேமலாநாத் உடனே பலகணியின் அருகில் ஓடி வந்தாள்.

''அப்பா! பறை அறைவதால் இவர்களுக்குப், 'பறை அறையர்கள்' என்ற பெயர் உண்டானதா?'' என்று கேட்டாள். நானும், 'ஆமாம்' என்று கூறினேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பறையின் ஓசையுடன் கால் சலங்கையின் ஓசையும் சேர்ந்து கேட்டது. சலங்கையின் ஓசை கேட்டதும், எனக்குச் சந்தேகம் உண்டானது. உடனே நானும், திரு. நாதி அவர்களும் பல கணியின் வழியாக எட்டிப் பார்த்தோம். எனக்கே தெரியாமல், ''அட!'' என்றது என் வாய்.

''என்ன சிந்தனை! உங்கள் நெற்றியில் சுருக்கம் விழுகிறதே. அவளைப்பற்றிய சிந்தனை பலகமாகத்தான் இருக்கிறது'' என்று கூறினார் நாகி.

''இந்த மங்கையை எங்கேயோ கண்டிருக்கிறேன். அதுவும், சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கண்டதாக நினைவு இருக்கிறது. ஆனால் எங்கே எந்தக் காட்டில்? எப்பொழுது? என்றெல்லாம் சரியாக நினைவு வரவில்லை. சரி! நான் வெளியில் போய் நிற்கிறேன். அவளே ஏதாவது கூறுகிறாளா என்று பார்க்கலாம்?'' என்று நண்பர் நாகியிடம் கூறிவிட்டு நான் வெளியில் போய் நின்றேன். அவள் என்னைக் கண்டதும், ''அண்ணே! உன்னைத்தான் தேடிக்கொண்டு பல நாள் இந்த மதராசிலே அலைந்தேன். இங்கேயா இருக்கிறாய்?'' என்று கூறி என் அருகில் வந்தாள். நானும் அவளை அடையாளம் தெரிந்துகொண்டு, உள்ளே அழைத்தேன்.

''இந்த இரண்டு குழந்தைகளும் உன்னுடையனவா?'' என்று கேட்டேன்.

''ஆமாம் அண்ணே. இந்த இரண்டு குழந்தைகளுடன், அடுத்த மாதம் இன்னொன்றும் வந்து சேரும். இந்த மூன்று குழந்தைகளையும் காப்பாற்று என்று, என் தலையில் சுமத்திவிட்டு அவர்...'' என்று கூறிக் கண் கலங்கினாள்.

''என்ன சங்கதி? உன் கணவன் எங்கே? நீ விரும்பின அவனையேதான் திருமணம் செய்துகொண்டாயா?'' என்று கேட்டேன். இதைக் கேட்ட நண்பர்,

''தேவலையே, நீங்கள்! ஒரு குடும்பத்தைப்பற்றி அதிலும், ஒரு நாடோடிக் குடும்பத்தைப்பற்றி இவ்வளவு ஆண்டுகளாகத் தொடர்பு வைத்துக்கொண்டு மேலை நாட்டினர்களைப் போல், 'வாச்' செய்துகொண்டு வருகிறீர்களே. இந்தப் பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்காது சார்! உண்மையிலேயே இப்படிப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாகத் தொடர்பு வைத்துக்கொண்டு, ஓர் இனத்தாரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதே சிரமம், அதிலும், ஓர் இனத்தாரின் தனிப்பட்ட குடும்பத்தைப் பற்றிப் பல்லாண்டுகள் பழகி எழுதுவதென்றால் அது மிகவும் சிரமமான காரியம். இவைகளுக்கெல்லாம் ஆண்டவன் அருள் வேண்டும்'' என்று கூறினார்.

''ஆமாம் அண்ணே! எல்லாரும் வேண்டாம், என்று கூறினார்கள். ஆனாலும், ''அவரையேதான் திருமணம் செய்வேன்'' என்று கூறுத் திருமணமும் செய்துகொண்டேன். நாங்கள் வாழ்ந்த காலம் சிறிதாக இருந்தாலும் சந்தோஷமாகவும் இன்பமாகவும் ஒரு சிறு சண்டைகூட இல்லாமல் வாழ்ந்தோம். கடைசியில் நான்கு மாதங்களுக்கு முன்தான், அவர், பாரிசவாயு வியாதியால் மரணமடைந்தார். அவர் இருக்கும் வரையில் தெருவில் பிச்சைக்கே வந்ததில்லை அவருக்குப்பின் 'பழைய குருடி கதவைத் திறடி' என்பது போலத் தெருவில் வந்தவிட்டேன்.

''அன்று தெருத் தெருவாக நடனமாடிப் பிச்சை எடுதுது என் பெற்றோர்களைக் காப்பாற்றினேன். இன்று என் இடுப்பில் ஒன்றும் வயிற்றில் ஒன்றுமாக வைத்துக்கொண்டு உடன் செல்ல, இந்த ஐந்து வயறுச் சிறுமி சரோஜா, -அன்று நான் செய்தது போல்-இன்றும் நடனமாடி என்னைக் காப்பாற்றுகிறாள், என்ன வாழ்க்கையோ இது!'' என்று கூறினாள். அவள் கூறும்பொழுது என் கண்கள் கலங்கின. கலங்கிய கண்கள் என் சிந்தனையைச் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஓட்டின.

சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன், இவள் சுமார் பத்து வயதுச் சிறுமியாக இருந்தாள். காலில் சலங்கையைக் கட்டிக்கொண்டு, தோளில் பையை வைத்துக்கொண்டு என்னை எங்கே கண்டாலும் உடனே, ''அண்ணே! ' என்று ஆட ஆரம்பித்து விடுவாள். இவள் இப்படி ஒரு நாள் ஆடிக்கொண்டிருக்கும் பொழுது மற்றோர் தெருப்பக்கமாக, முகமூடி அணிந்த 'போஜி' இனத்தைச் சேர்ந்த ஒருவன் வந்தான். அவனைக் கண்டதும், இவள் அன்று சற்று வெட்கமடைந்தவள்போல் நாணி நின்றாள். உடனே, ''அண்ணே! அவரையும் படம் பிடி'' என்று கூறினாள்.

அவனும் முகமூடியுடன் ஆட, இவள் பாட, படம் பிடித்துக் கொண்டேன். இவர்கள் 'போஜி' இனத்தைச் சேர்ந்தவர்கள். நாடோடி வாழ்க்கை உடையவர்கள். இவர்கள் இனத்தில். சிலர் இப்படி நடனமாடிப் பிச்சை எடுப்பதுண்டு. சிலர் கழுத்தில் பாம்பை அணிந்துகொண்டும், சிலர் முகமூடி அணிந்துகொண்டும், சில சவுக்கால் முதுகில் அடித்துக்கொண்டும், சிலர் கோவிந்தாவென்று தெருவில் உருண்டு கொண்டும், பிச்சை எடுத்தாலும் இவர்கள் அனைவரும் ஒரே

குலத்தவர்கள். காலப்போக்கில் விரோதி களுக்குப் பயந்து பல விதமாகப் பிரிந்து சிதறுண்டவர்கள். அன்று இவள் பேச்சைக் கேட்டு, அந்தப் போஜி நடனமாடும் முகமூடியையும் படம் பிடித்தேன். அவன் பெயர் சுப்பிரமணியன். அவன், இந்தப் பெண்ணுக்கு மாமன் மகன். ''என்னைத் திருமணம் செய்ய இரண்டு மாமன்மார்கள் போட்டியிடுகிறார்கள். ஆனால், எனக்கு இந்தச் சுப்பிரமணி மாமா மேலதான் ஆசை. இவர் நல்லவர். இவர் எங்கள் குலதெய்வமாகிய 'முருகையாவின்' மேல் பக்தி அதிகம் உடையவர். முருகையா மிறலும் அவருக்கு வருவதுண்டு. ''மிறல்'' எல்லாருக்கும் வராது அண்ணே! பக்தி இருந்தால்தான் அது உண்டாகும். மற்றொரு மாமன் மிகவும் சண்டைக்காரன். பக்தி இல்லாதவன். முரடன். அவன்மேல் எனக்கு விருப்பம் இல்லை. இவரைத் திருமணம் செய்ய என் அப்பா தடை செய்வதற்குக் காரணம், இவருக்குத் திருமணமானால், ஆயுள் குறைவு என்று ஜோசியன் கூறியதுதான். ஆனால் எப்படியும் நான் இவரைத்தான் திருமணம் செய்வேன்'' என்று இவள் அன்று கூறினாள்.

அன்று இவளைச் சிறுமியாகக் கண்ட நான், இன்று மூன்று குழந்தைகளுக்குத் தாயாகக் கண்டதும், என்ககு ஆச்சரியம் உண்டாயிற்று. உலகம் வேகமாகச் சுழல்வதாகவும் தோன்றியது. விதி தன்னுடைய திருவிளையாடல்களைக் காட்டுகிறது என்று நினைத்தேன்.

முன்பு புகைப்படம் பிடித்த இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அதே சுப்பிரமணியைத் திருமணம் செய்து கொண்டு. காளஹஸ்தியில் வாழ்தாளாம். கணவனுடன் எட்டு ஆண்டுகள் இல்லற சுகங்களை அநுபவித்தாள். சுமார் நான்கு மாதங்களுக்கு முன்தான் அவன் மரணமடைந்தானாம். கணவன் மரணத்திற்குப் பின், இவள் காளஸ்தியை விட்டு ஆவடியில் தன் பெற்றோர்களிடம் வந்துவிட்டாளாம். இன்று அவள் கையில் ஓராண்டுக் குழந்தையான முருகையா என்ற பையன் இருக்கிறான்.

''இந்த மாமனைத் திருமணம் செய்தால் நான் விதவைக் கோலத்தை விரைவில் அடைவேன்'' என்று அன்று ஜோசியன் கூறியதை நான் நம்பவில்லை. ஆனால் இன்று நம்புகிறேன். எல்லாம் ஆண்டவன் செயல். நம்மிடம் என்ன இருக்கிறது? அன்று பிச்சை எடுத்து என் பெற்றோர்களைக் காப்பாற்றினேன். இன்று இந்த ஐந்து வயதுப் பெண் பிச்சை எடுத்து என்னையும் இந்தக் குழந்தைகளையும் காப்பாற்றுகிறாள்.

''விதம் விதமாக முகமூடி அணிந்து நல்ல நடனமாடுவதில் சுப்பிரமணிதான் கெட்டிக்காரர். இவற்றை எல்லாம் நினைத்துத்தான் நான் அவரைத் திருமணம் செய்தேன்'' என்று தன்னுடைய சோகக் கதையைக் கூறினாள்.

முகமூடி அணிந்து நடனமாடுவது இந் நாடோடியர்களின் வாழ்க்கையில் மட்டும் அன்று. இதைப்போல் அணிந்து பண்டைக் காலத்தில் இந்தியாவில் அரசர்களுடைய சபையில் வேடிக்கை காட்டுவது வழக்கம்.

இந்தியாவில் மட்டும்தான் இந்தப் பழக்கம் இருந்தது என்று கூறுவதற்கு இல்லை. நாகரிகத்தில் சிறந்த நாடு என்று பறை சாற்றும் மேலை நாடுகளிலும் இராஜ சபைகளில் இந்தப் பழக்கம் இருந்தது. பிரபல நாடகாசிரியரான, 'ஷேக்ஸ்பியர்' அவர்கள் தம்முடைய

நாடகத்தில், 'ரோமியா முகமூடி அணிந்துகொண்டுதான் அழகி ஜூலியட்டைப் பிடித்துக்கொண்டு நடனமாடினான்' என்று கூறுகிறார் அல்லவா?

இவர்கள் பண்டைக் காலத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விரோத அரசன் தங்களுடைய நாடுகளையும் தங்கள் அரசனையும் பிடித்துக்கொண்டதால் இவர்கள் அன்னிய அரசனுக்குப் பயந்து இப்படி நாடோடிகளாகத் தங்களுடைய பழக்க வழக்கங்களையும் மொழிகளையும் மாற்றிக்கொண்டு இன்று இங்ஙனம் திரிகிறார்கள்.

''இன்னும் சில இடங்களில் அரச பரம்பரையினரைக் காணலாம்'' என்று கூறினேன் திரு. நாகி அவர்களிடம்.

அந்த நாடோடிப்பெண் தன்னுடைய சோக வாழ்க்கையைக் கூறிவிட்டு, அன்று என்னால் எடுக்கப்பட்டு இவளுடைய புகைப் படத்தையும் அவளுடைய மாமன் முகமூடி சுப்பிரமணியனின் புகைப்படத்தையும் வாங்கிக்கொண்டு, கண்கலகத்துடன் என்னிடம், ''போகிறேன்'' என்று கூறினாள். அவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று தோன்றாதவனாய்ச் சிலையாக நானும் நின்றேன். அவள் கடைசியில் கூறிய, 'என்ன வாழ்க்கையோ இது!' என்ற வார்த்தைகள் மட்டும் என் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டே இருக்கின்றன.

34

பல் வாங்கிய பலி!

சில நாட்கள் கேரளாவின் வயநாட்டுப் பகுதியில் நான் தங்கினேன். நான் தங்கிய இடம் சுல்தான் பத்திரி என்பது. அது மைசூரிலிருந்து சுமார் 90 மைல் தூரத்தில் உள்ளது. அங்கு மலைகளும் காடுகளும் நீர் வீழ்ச்சிகளும்தான் அதிகம். அவற்றின் எழில்மிக்க காட்சிகளைக் கண்டால், நாம் தெய்வலோகத்தில் இருப்பதுபோல்தான் தோன்றும். காலையில் சூரியனுடைய கதிர்கள் காடுகளுக்குள் நுழைந்து வருவது காண மிக்க அழகாகத் தோன்றும். ஒரு பக்கத்தில் வயல்களும் மறு பக்கத்தில் மலைப் பகுதிகளும் வேறொரு பக்கத்தில் காடுகளும் ஆகிய இவற்றுக்கு மத்தியில் என்னுடைய நண்பர் வீடு கட்டியிருந்தார்.

நான் அவர் இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்தேன். நண்பருடைய இல்லம் பெரியதாக இருந்ததால், வீட்டின் சுவர் முழுவதும் காட்டெருமைகளின் கொம்புகளும் மானின் கொம்புகளும் புலியின் தலைகளும்தான் தொங்கவிடப்பட்டிருந்த, நாற்காலியிலும் தரையிலும் மானின் தோல்களையும் புலியின் தோல்களையும் சிறுத்தையின் தோல்களையும் பரப்பியிருந்தார்.

நண்பர் இராஜூவுக்குப் பாஸ்கரன், தினகரன் என்ற இரு குமாரர்கள் இருந்தனர். இருவரும் தங்கள் தகப்பனாரை விடவும் பாட்டனாரை விடவும் வேட்டையில் மிகவும் கெட்டிக்காரர்கள். வாழையடி வாழையாக, வேட்டையாடுவதால், இவர்கள் துப்பாக்கி வைப்பதற்கே ஒரு தனி அறை உண்டு. ஏராளமான ஆடுமாடுகளும்

வயல்களும் இருப்பதால் இவர்களுக்கு வேலைக்காரர்களும் ஏராளமாக இருக்கிறார்கள்.

நண்பர் ராஜூ தம் வீட்டில் நடந்த ஒரு துயரமான செய்தியைச் சொல்லத் தொடங்கினார். அதைச் சொல்லத் தொடங்கும்போதே அவருடைய கணட்கள் கலங்கின.

''கடந்த ஒரு வாரமாக ஒரு புலியின் கொடுமையைத் தாங்க முடியவில்லை. அது மாடுகளையும் மனிதர்களையும் அடித்துக் கொலை செய்கிறது'' என்று பலர் வந்து கூறினார்கள். அதை கேள்விப்பட்டதும் சுற்றுப்பக்கங்களில் இருக்கும் பல சிக்காரிகள் அந்தப் புலியை வேட்டையாடச் சென்றார்கள். அதை கடைசியில் எங்கள் காதுகளுக்கும் எட்டியது. முதல் நாள், 'அந்தப் புலியை வேட்டையாடுகிறேன்' என்று பாஸ்கரன் சென்றான். காட்டில் தனிமையில் அலைந்த பின் கடைசியில் புலியின் பாதச்சுவடு புதியதாகப் பதிந்திருப்பதைக் கண்டு அந்த அடையாளத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான் பாஸ்கரனின் பாதச் சுவட்டை மோப்பம் பிடித்துக் கொண்டே அவனுக்குப் பின்னால் சென்றது. அதை அறிந்த பாஸ்கரன், 'சரி! நாம் உடனே இந்த வழியை மாற்ற வேண்டும்' என்ற தீர்மானித்தான். அவன் ஊருக்குள் வீட்டை நாடிப் போவதைக் கண்ட புலி காட்டில் மறைந்து விட்டது. பாஸ்கரன், 'மனிதனைத் தின்னும் புலியாக அது மாறிவிட்டது. ஆகையால் நாம் ஜாக்கிரதையாகத்தான் போக வேண்டும். எப்பொழுது ஒரு புலி மனிதனுடைய பாதச்சுவட்டை மோப்பம் பிடிக்க ஆரம்பித்து விட்டதோ அது மனிதனுடைய ருசியைக் கண்ட புலியாகத்தான் இருக்கம்' என்று தன் தம்பி தினகரனிடம் கூறினான்.

''மனிதனைத் தின்னும் புலியை வேட்டையாடுவது என்ன அவ்வளவு கஷ்டமா?'' என்று நான் குறுக்கே பெரியவர் இராஜூவைக் கேடடேன்.

அதற்கு அவர், 'நல்ல கேள்வி கேட்டீர்கள். மனிதனைத் தின்னும் புலி மனிதனைவிடப் புத்திசாலித்தனமாக மனிதனை வேட்டையாடும். சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் தம் மனைவி யுடன் எங்கள் இல்லத்திற்கு வந்திருந்தார். இராக்காலங்களில் வெளியில் போகவேண்டாம். மலஜலம் கழிப்பதாக இருந்தாலும் அறையின் உள்ளே இட வசதி இருக்கிறது' என்று கூறினோம். அன்றிரவு அவர்கள் புதியதாக வந்திருக்கிறார்கள் என்பதைப் புலி தெரிந்துகொண்டது. வீட்டுத் திண்ணையின் அடியில் அது மறைந்து படுத்திருந்தது. புதியதாக வந்த இடத்தில் அறையினுள்ளே அசுத்தம் செயற்ய வேண்டாமென்று, சுமார் இரவு எட்டு மணிக்குச் சிறுநீர் கழிக்க வெளியில் சென்றாள் அந்த அம்மாள். சென்றவளை ஒரு சத்தம்கூடப் போடாதவாறு தொண்டையைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போய்விட்டது புலி. உடனே நாங்கள் தீப்பந்தங்களுடன் சென்றோம். துணியாவது, புடைவையாவது புதரில் இருக்கு மென்று நினைத்தோம். ஆனால் அதுகூட இல்லை. புதர்களைத் தாண்டித் தாண்டித் தூக்கிச் சென்றுவிட்டது.

''இந்தச் சம்பவத்திற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு ஏதோ ஓர் ஊரிலிருந்து உல்லாசப் பிரயாணத்திற்காகச் சமார் முப்பதுபேர் வந்திருந்தார்கள். அவர்களிடம் இந்தச் சம்பவத்தைச் கூறி அவர்களையும்

மிகவும் எச்சரிகையாக இரவில் படுத்துக் கொள்ளும்படி கூறினோம். அவர்கள் மிகவும் எச்சரிகையாகத்தான் இருந்தார்கள். கதவை மாலை ஆறு மணிக்கே அடைத்து விட்டார்கள். ஆனால் இந்த மலைப்பிராந்தியத்தில் கதவுகளுக்குத் தாழ்ப்பாள் கிடையாது. கதவை அடைத்துவிட்டு, கதவுகளின் பின் குறுக்கே உலக்கையைப்போல் நீண்ட கட்டையைப் பக்கவாட்டச் சுவர்களில் செருகினால் வெளியிலிருந்து கதவைத் தள்ள முடியாது.

இதை எப்படியோ கவனித்து விட்டது அன்றிருந்த மனிதப் புலி. கதவை அடைத்துக்கொண்டு உள்ளே நன்றாகத் தூங்கி விட்டார்கள் அந்த உல்லாசப் பிரயாணிகள். ஆனால் அந்த மனிதப் புலி என்ன செய்தது தெரியுமா?

''உள்ளே கதவுக்குப் போட்ட கட்டைக்கு எதிரில், வெளிப்பக்கத்தில் சுவரைச் சுரண்டிச் சுரண்டித் துவாரம் செய்தது. துவாரம் செய்த பின் மெதுவாகக் கதவுக்குப் போட்டிருக்கும் கட்டை அதனுடைய காலில் பட்டது. உடனே அதை மெதுவாக மறுபக்கத்தில் தள்ளியது. தள்ளியதும் கட்டை கீழே விழுந்து விட்டது. கட்டை விழுந்ததும் கதவு சாதாரணமாய்த் திறந்து விட்டது. கதவு திறந்ததும் மனிதப் புலி உள்ளே சென்று எதிரில் படுத்திருக்கும் நபரைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. இந்த நிகழ்ச்சியை மறுநாள் காலையில்தான் மற்றவர்கள் பார்த்தார்கள். கடைசியில் அந்த நபருடைய துணியும் போர்வையும் குருதியுடன் புதரில் கிடந்ததைக் கண்டார்கள்.

''மனிதப் புலி (Man Eater) மனிதனைப் பார்த்துவிட்டால் அதன் பின்னாலேயே சுமார் ஆறுமைல்கள் கூட அவனுக்குத் தெரியாமல் தொடர்ந்து செல்லும். மனிதனைத் தின்னும் இத்தகைய புலியை வேட்டையாடப் பாஸ்கரனால் முடியவில்லை என்று நினைத்து, தம்பி தினகரனும் பாஸ்கரனுடன் சென்றான். மறுநாள் சகோதரர்கள் இருவரும் வேட்டைக்குச் செல்வதைக் கண்டேன். பிள்ளைகள் வேட்டைக்குப் போகும்பொழுது தடை ஒன்றும் செய்யக்கூடாது என்று நினைத்து, ''காட்டில் இருவரும் பிரிந்து வேட்டையாட வேண்டாம். மேலும், இன்றைக்கு அமாவாசை, ஆகையால் மிகவும் பயங்கரமான இருள் காட்டில் சூழ்ந்துவிடுமே' என்று தடை செய்வதைப் போல் கூறினேன்.

''நாங்கள் கவனமாகத்தான் வேட்டை ஆடுவோம்'' என்று கூறி என்னிடம் விடைபெற்றுக்கொண்டு இரு சகோதரர்களும் மனிதப் புலியை வேட்டையாடக் கிளம்பி விட்டார்கள். காட்டுக்குள் சிறிது தூரம் சென்றதும், ''நான் இந்தப் பக்கம் போகிறேன்'' என்று கூறினான் தினகரன். ''தம்பி! வேண்டாம். சூரியன் மறையும் சமயம். நம்மை நாமே சுட்டுக்கொளுவோம். நம்முடைய கொள்ளுத்தாத்தாவும் இப்படித்தான் காட்டில் பிரிந்து, தம் தம்பியையே சுட்டுவிட்டாராம். நாம் வரும்பொழுதும்கூட அதைச் சொல்லி அனுப்பினார்கள். அல்லவா? அப்படிப் போவதை என் உள்ளத்தில் ஏதோ ஒன்று தடை செய்கிறது! வேண்டாம்'' என்று கூறினான் பாஸ்கரன்.

''என்ன அண்ணா! நாம் கல்லூரியில் தத்துவஞானம் படிக்க வில்லையா? இந்த இருபதாவது நூற்றாண்டிலும் இவற்றை எல்லாம் நம்புகிறாயே! இன்னும் இவற்றை எல்லாம் நம்பிக் கொண்டே இருந்தால் எப்பொழுதுதான் நம் நாடு முன்னேற்ற மடையும்?'' என்று

தத்துவம் பேச ஆரம்பசித்து விட்டான் தினரகரன். பிறகு இருவரும் காட்டில் பிரிந்து போய்ப் புலியைத் தேட ஆரம்பித்தார்கள். பாஸ்கரனும் தினகரனும் வேட்டையில் நல்ல பெயர் வாங்கியவர்கள். இந்தச் சகோதரர்கள் பல அரசர்களிடமும் ஜமீன்தார்களிடமும் அரசாங்கத்தாரிடமும் பல வெகுமதிகளும் சிக்காரிப் பதக்கங்களும் வாங்கியிருக்கிறார்கள். இவ்வளவு கெட்டிக்காரர்கள் அந்தப் புலி வேட்டைக்குப் போவதை யறிந்து எல்லாரும் மகிழ்ந்தார்கள். மறுநாள் காலை புலியுடன் வருவார்கள் என்று எல்லாரும் எண்ணியிருந்தார்கள். காட்டில் வெக நேரம் காத்திருந்தும் புலி வரவில்லை. தினகரன் ஒரு மரத்திலும் பாஸ்கரன் மற்றொரு மரத்திலும் உட்கார்ந்து கொண்டார்கள். தம்பி தினகரன் உட்கார்ந்திருந்த மரத்தின் அருகிலிருக்கும் புதரில் புலி நகரும் ஓசை கேட்டது. 'மனிதப் புலிகளில் இது மிகவும் கள்ளத்தனமானது' என்று தினகரன் தீர்மானித்தான். ஏனென்றால் மங்கின ஒளியில் தன்னுடைய கண்களைப் பளிச்சென்று காட்டாமல் குனிந்துகொண்டே போகிறது. இந்தப் புலியின் தந்திரத்தைக் கண்டதும் தினகரன், தான் உட்கார்ந்திருந்த மரத்தின் பட்டைகளைத் தன் விரல்களால் மெதுவாகச் சுரண்டினான். இந்தச் சுரண்டல் ஓசையைக் கேட்டதும், புதரில் நகரும் புலி நின்றது. தினகரன் இரண்டு மூன்று முறை இப்படிச் செய்தான். புலியும் புதரில் இரண்டு மூன்று முறை நின்றது.

தினகரன், 'சரி! இது புலிதான். வேறுவிதக் காட்டு மிருகம் அன்று' என்று தீர்மானித்துத் தன் துப்பாக்கியை எடுத்தான். 'டுமீல்' என்று சுட்டான். உடனே புதரிலிருந்து, 'ஐயோ!' என்று மனிதனுடைய குரல் கேட்டது. அது அண்ணன் பாஸ்கரனின் குரல். ஓடிச்சென்று, ''ஐயோ அண்ணா!'' என்று கதறினான் தினகரன்.

இருள் சூழ்ந்த காட்டில் தன்னந் தனிமையில் தினகரனின் மடியில் பாஸ்கரனுடைய பூத உடல் கிடந்தது. எங்கும் ஒரே குருதி வெள்ளம், காடே ஓலமிடுவதைப்போல் இருந்தது அக்காட்சி.

''அண்ணா! அண்ணா!'' என்று கதறினான் தினகரன். பாஸ்கரன் உயிருடன் போராடிக்கொண்டிருந்தான். கண்ணைத் திறந்தான்.

''தம்பி! எனக்கு முன்னால் புலி போனது. ஆனால் என்னை அது உன் மரத்தடியில் அழைத்து வந்தது. நீ இருக்கும் மரத்திற்கு முன்னால் புலி வளைந்து வளைந்து வந்து தன் இரண்டு கால்களைத் தரையில் ஊன்றி நின்றதைப்போல் காட்டியது. மங்கலான இருளில் அக்காட்சியைக் கண்டு, அது நீயாக இருந்தால் என்ன செய்வது என்ற சிந்தனையில் இருந்தேன். நீயும் இந்தப் புலியைத்தான் தேடுகிறாயோ என்று சிந்தனை செய்தேன். புலி வேண்டுமென்றே என்னை உன் மரத்தடியில் கொண்டு வந்தது போலும். நீ என்னைச் சுடவேண்டும் என்று புலி செய்த சூழ்ச்சியே இது. உன் பக்கத்திலே தான் புலி இருக்கிறது. ஜாக்கிரதை!'' அதோ அதனுடைய பாதம். தா...ம...தம் செய்யா! என்தபற்குள் அவன் தலை சாய்ந்தது. உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

''அண்ணா!'' என்று அவன் உடலை அணைத்துக்கொண்டான் தினகரன். அவன் பக்கத்திலிருந்த புதரில் ஏதோ சலசல வென்று ஓசை கேட்டுத் திரும்பினான்.